Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 24-9-2012 Issued : 24-9-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஏப்ரல் 11, 2012—தொகுதி 23—எண் 1**

**Wednesday, the 11th April 2012—Volume 23—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

# 11–4–2012

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. இரங்கற்குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 1-2 |
| **2. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-38 |
| **3. தகவல் கோரல்—** | 38-43 |
| (அ) கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனத்தில் முறைகேடு | 38 |
| திரு. எம். ஆறுமுகம் | 38 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 39-40 |
| மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 41-43 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 38, 40 |
| 4. **மானியக் கோரிக்கைகள் 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 43-162 |
| (அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 43-162 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 43,52,60-67, 71,75-76,86,88, 89,90,97-98, 100,115,119,120, 132-160 |

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள் 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை
(ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை } தொடர்ச்சி

| | |
|---|---|
| *திரு. க. தமிழழகன் | 61-64,67,70-79 |
| திரு. என். ஆர். ரெங்கராஜன் | 50,59,65,66,69 |
| திரு. வி.சி. சந்திரகுமார் | 44,53,66 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 67-68,75,118 |
| மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 68-69 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 69,70,90-91, 98-99,121 |
| திரு. கே. கோபிநாத் | 70-71 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 72-73,74-75,101, 119,124-131 |
| *திருமதி எஸ். கணிதா சம்பத் | 80-84 |
| திரு. இரா. அண்ணாதுரை | 84-91 |
| *திருமதி ம. சக்தி | 91-96 |
| திரு. கே. உலகநாதன் | 96-102 |
| திரு. சு. குணசேகரன் | 101 |
| *திரு. பொன். ராஜா | 102-114 |
| திரு. எஸ். ஜாண் ஜேக்கப் | 47,57,114-115, 118-119,120-124 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 117,161 |
| மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 121-122 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 51-52,123 |
| *திரு. க. பாண்டியராஜன் | 48,58,159-160 |

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 163-164

**ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| **1. முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**<br>பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை |
| **2. நிதி அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**<br>நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள் |
| **3. வருவாய்த் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு .கே.ஏ. செங்கோட்டையன்:**<br>வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு |
| **4. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**<br>மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு |
| **5. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**<br>நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல் |

**6. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு



**10. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**11. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**12. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**13. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**16. ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் மற்றும் சத்துணவுத் திட்டம்

**17. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

*பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்*

**18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**19. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**20. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**21. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*



**24. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

**25. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

**26. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

**27. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு*

**28. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

*தகவல் தொழில்நுட்பம்*

**29. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

| | | |
|---|---|---|
| 30. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு |
| 31. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன் |
| 32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன் |
| 33. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள் |



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home |
| 2. **Minister for Finance** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Finance, Planning, Legislative Assembly, Elections and Passports |
| 3. **Minister for Revenue** | .. | **The Hon. Thiru K.A. Sengottaiyan:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies |
| 4. **Minister for Electricity & Prohibition and Excise** | .. | **The Hon. Thiru Natham R. Viswanathan:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses |
| 5. **Minister for Municipal Administration & Rural Development** | .. | **The Hon. Thiru K.P. Munusamy:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply |

**6. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

**7. Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms

**8. Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

**9. Minister for Commercial Taxes & Registration, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Commercial Taxes & Registration and Stamp Act, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

**10. Minister for Agriculture** .. **The Hon. Thiru S. Damodaran:**

Agricultre, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

**11. Minister for Co-operation** .. **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare



**12. Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests and Cinchona

**13. Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

Highways & Minor Ports

**14. Minister for Food** .. **The Hon. Thiru R. Kamaraj:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

**15. Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru V. Moorthy:**

Milk and Dairy Development

**16. Minister for Rural Industries and Nutritious Noon Meal** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Rural Industries including Cottage Industries and Small Industries and Nutritious Noon Meal

**17. Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

**18. Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Animal Husbandry

**19. Minister for Industries** .. **The Hon. Thiru P. Thangamani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

**20. Minister for Handlooms & Textiles** .. **The Hon. Dr. S. Sundararaj:**

Handlooms & Textiles

**21. Minister for Khadi and Village Industries ..** **The Hon. Thiru P. Sendur Pandian:**

Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan

**22. Minister for Tourism ..** **The Hon. Tmt. S. Gokula Indira:**

Tourism, Tourism Development Corporation

**23. Minister for Environment ..** **The Hon. Thiru B.V. Ramanaa:**

Environment and Pollution Control

**24. Minister for Adi Dravidar & Tribal Welfare ..** **The Hon. Thiru N. Subramanian:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**25. Minister for Transport ..** **The Hon. Thiru V. Senthil Balaji:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act

**26. Minister for Fisheries ..** **The Hon. Thiru K.A. Jayapal:**

Fisheries and Fisheries Development Corporation

**27. Minister for School Education and Sports and Youth Welfare ..** **The Hon. Thiru N.R. Sivapathi:**

School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture

**28. Minister for Information Technology ..** **The Hon. Thiru N. Subramanian:**

Information Technology



**29. Minister for Information and Special Programme Implementation ..** **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

**30. Minister for Labour ..** **The Hon. Thiru S.T. Chellapandian:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

**31. Minister for Health ..** **The Hon. Dr. V.S. Vijay:**

Health, Medical Education and Family Welfare

**32. Minister for Backward Classes and Minorities Welfare ..** **The Hon. Thiru A. Mohammedjan:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

**33. Minister for Hindu Religious and Charitable Endowments ..** **The Hon. Thiru M.S.M. Anandan:**

Hindu Religious and Charitable Endowments

---

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

## செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

---

*# 28—3—2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. | குழு அலுவலர் |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |



| | | |
|---|---|---|
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |

| | | |
|---|---|---|
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. சுரேஷ் குமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா. சுப்பிரமணியன், பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி |
| 15. அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.. | .. | திருப்பூர் வடக்கு |
| 19. இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜூ, திரு. .. கோவில்பட்டி
31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
48. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
49. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
50. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
51. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
52. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
53. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
54. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
56. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
57. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
58. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
59. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
60. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
62. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
63. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
64. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு
65. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
67. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி
68. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு
69. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி
70. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்
71. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
72. சாமி, திரு. ஆர். .. மேலூர்
73. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி
74. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
75. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி
76. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி
77. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
78. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
79. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்
80. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு
81. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)
82. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)
83. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி
84. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)
85. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு
86. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்
87. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)
88. சுரேஷ்குமார், திரு. டி .. செங்கம் (செ.வ.)



89. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
90. செங்கோட்டையன், திரு. கே.ஏ... கோபிசெட்டிப்பாளையம்
91. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
92. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
93. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
94. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
95. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
96. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
97. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
98. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
99. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
100. செழியன், திரு. கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
101. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
102. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
103. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
104. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
105. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
106. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
107. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
108. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை
109. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
110. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு
111. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)

112. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)

113. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)

114. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி

115. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)

116. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்

117. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்

118. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

119. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)

120. தினகரன், திரு. க. .. சூலூர்

121. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

122. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு

123. துரைமுருகன், திரு. .. காட்பாடி

124. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

125. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்

126. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்

127. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்

128. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

129. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)

130. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்

131. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)

132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்

133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி

135. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)

136. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி

137. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு

138. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்

139. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்

140. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி

141. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்

142. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி

143. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

144. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்

145. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி

146. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

147. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்

148. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்

149. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்

150. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

151. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி

152. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

153. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்

154. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

155. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்

156. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

157. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்
158. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
162. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)
163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை
164. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)
165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
166. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு
167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)
168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்
169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு
170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு
171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்
172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்
173. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)
174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)
175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்
176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி
177. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்



178. முத்துச்செல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)
179. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
180. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்
181. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
182. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு
183. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி
184. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை
185. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்
186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்
189. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்
190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்
191. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்
192. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)
193. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)
194. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்
195. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி
196. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி
197. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்
198. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்
199. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

| | | |
|---|---|---|
| 200. ராஜா, திரு. பொன். | .. | பொன்னேரி (செ.வ.) |
| 201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. | .. | சிவகாசி |
| 202. ரெங்கசாமி, திரு. எம். | .. | தஞ்சாவூர் |
| 203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். | .. | பட்டுக்கோட்டை |
| 204. ரெத்தினசாமி, திரு. மு. | .. | திருவையாறு |
| 205. லாசர், திரு. ஏ. | .. | பெரியகுளம் (செ.வ.) |
| 206. லிங்கமுத்து, திரு. கு. | .. | குடியாத்தம் (செ.வ.) |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆயிரம் விளக்கு |
| 208. விஜயகாந்த், திரு. | .. | ரிஷிவந்தியம் |
| 209. விஜயதரணி, திருமதி எஸ். | .. | விளவங்கோடு |
| 210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | விராலிமலை |
| 211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. | .. | சங்கரி |
| 212. விஜய், டாக்டர் வி.எஸ். | .. | வேலூர் |
| 213. வீரமணி, திரு. கே.சி. | .. | ஜோலார்பேட்டை |
| 214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. | .. | பெருந்துறை |
| 215. வெங்கடாஜலம், திரு. கோ. | .. | சேலம் மேற்கு |
| 216. வெங்கடேசன், திரு. எல். | .. | திருக்கோவிலூர் |
| 217. வெற்றிவேல், திரு. பு. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 218. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். | .. | பழனி |
| 219. வேதாச்சலம், திரு. எஸ். | .. | அம்பத்தூர் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | திருவண்ணாமலை |



| | | |
|---|---|---|
| 221. வேலுமணி, திரு. எஸ்.பி. | .. | தொண்டாமுத்தூர் |
| 222. வைகைச்செல்வன், டாக்டர் | .. | அருப்புக்கோட்டை |
| 223. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 224. வைரமுத்து, திரு. பி.கே. | .. | திருமயம் |
| 225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். | .. | இராமநாதபுரம் |
| 226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. | கிள்ளியூர் |
| 227. ஜானகிராமன், திரு. ஐ. | .. | வானூர் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயசுதா, திருமதி எல். | .. | போளூர் |
| 230. ஜெயபால், திரு. கே.ஏ. | .. | நாகப்பட்டினம் |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஸ்ரீரங்கம் |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | கொளத்தூர் |
| 233. ஹரிதாஸ், டாக்டர் த. | .. | திண்டிவனம் (செ.வ.) |
| 234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் | .. | நியமனம் |
| 235. வெற்றிடம் | .. | புதுக்கோட்டை |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, பங்குனி 29

## 2012 ஏப்ரல் 11, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்."

செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாகச் சிந்தித்து தக்க இடம் அறிந்து செய்தால், அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.

## 1. இரங்கற்குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. நா. வரதராசன் அவர்கள் 10–4–2012 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வரதராசன் அவர்கள், 1967 முதல் 1971 வரை வேடசந்தூர் தொகுதியிலிருந்தும், 1977 முதல் 1980 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை திண்டுக்கல் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(பேரவைத் தலைவர்) [2012 ஏப்ரல் 11

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**71—**

### குடிநீர்

*__1715—திரு. அ. சௌந்தரபாண்டியன்:__

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, லால்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்குவதற்கான திட்டம் எதுவும் இந்த நிதியாண்டில் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள், இருக்கையில் இல்லை.



2012 ஏப்ரல் 11]

வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**72—**

### சொந்தக் கட்டடம்

*__8726—திரு. ப. மோகன்:__

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, வடக்கனந்தல் சார்—பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் வருவாய் மாவட்டம், கள்ளக்குறிச்சி பதிவு வட்டத்தில் இயங்கி வருகின்ற வடக்கனந்தல் சார்—பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு நிலம் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன், சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு முன்னுரிமை அடிப்படையிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி, வடக்கனந்தல் சார்—பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்த இடம் ஒதுக்கப்பட்டு, பேரூர் மன்றத்தின் சார்பாகத் தீர்மானமும் கொடுக்கப்பட்டு, வருவாய்த் துறையினுடைய அலுவலகத்திலே அது பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் இருக்குமேயானால், கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்னார். நம்முடைய அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியிலே இயங்கி வரும் சார்–பதிவாளர் அலுவலகம், பழைய கட்டடத்திலே, ஒரு சிறிய கட்டடத்திலே இயங்கி வருகிறது. அங்கு ஒரு நாளைக்கு 500 பேர் அல்லது 1,000 பேருக்கு மேலே பொது மக்கள் பத்திரப் பதிவுக்கு வருவதால் இடம் நெரிசலாக இருக்கிறது. எனவே, விரிவான பகுதியிலே, மேலூர் தொகுதியிலே சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2011–2012 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலே தமிழகத்திலே தனியார் கட்டடத்திலே இயங்கி வருகின்ற அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களும் இந்த 5 ஆண்டுக் காலத்திற்குள்ளாக சொந்தக் கட்டடத்திலே இயங்குவதற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அதன்படி, 2011–2012 ஆம் ஆண்டு 52 சார்–பதிவாளர் அலுவலகங்கள், சொந்தக் கட்டடத்திலே இயங்க, 26 கோடி ரூபாயிலே கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே, சார்–பதிவாளர் அலுவலகம் சிறிய கட்டடத்திலே இயங்கி வருகிறது என்று கூறி இருக்கின்றார்கள்; அப்படி இருக்கின்றபட்சத்திலே, அங்கே சொந்தக் கட்டடம் கட்டுவதற்குப் போதிய இட வசதிகொண்ட நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுத்தால், ஆவணப் பதிவுகளின் அடிப்படையிலும், வருவாயின் அடிப்படையிலும் முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 11]

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, கருங்கல்பாளையத்தில் சார்–பதிவாளர் அலுவலகம், வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டடத்தினுடைய உரிமையாளரும் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார். இட நெருக்கடியின் காரணமாக அந்த இடத்திற்குப் பொது மக்கள் வந்து போவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, அதைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது சார்–பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிற பகுதியில் பொது மக்களுக்கும், அலுவலர்களுக்கும் இட வசதி போதவில்லை என்கிறார்; மேலும் அந்தக் கட்டடத்தினுடைய உரிமையாளரும் அந்த இடத்தைத் திருப்பிக் கேட்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே சார்–பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு உரிய இடத்தை வட்டாட்சியர்மூலம் தேர்வு செய்து துறைக்கு ஒப்படைக்கும்பட்சத்தில், முன்னுரிமை அடிப்படையில் அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், ஜன நெருக்கடி மிகுந்த பகுதியில் இப்போது சார்–பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. ஒரு நாளைக்கு ஆயிரம் பத்திரங்களுக்கு மேல் அங்கே பதிவாகிறது. சொந்தக் கட்டடம் இல்லாத காரணத்தால்

அங்கே நெருக்கடி ஏற்பட்டு, வந்து போகிற பொது மக்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, ஒரு சொந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நாளைக்கு ஆயிரம் ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதாகக் கூறுகின்றார்கள்; இட நெருக்கடி இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கின்றபட்சத்தில் அந்தப் பகுதியிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருந்தபடி— 5 ஆண்டுக் காலத்திலே அனைத்து அலுவலகங்களுக்கும்—தற்போது தமிழ்நாட்டிலே 578 சார்–பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன; அவற்றிலே, 239 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன; அந்த 239 அலுவலகங்களுக்கும்—சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பின்படி, கடந்த ஆண்டு 52 கட்டடங்களும், இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் அம்மா அவர்கள் தொடர்ந்து அனுமதி அளிக்க இருக்கின்றார்கள். அதன்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வருவாய்த் துறையின்மூலம் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், கண்டிப்பாக அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

**திருமதி செல்வி ராமஜெயம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கம்மாபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள சார்–பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில், ஒரு சந்தில் இருக்கிறது. இதனால் பொது மக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. சொந்தக் கட்டடம் கட்ட அரசு இடமும் உள்ளது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூறியதுபோல, வாடகைக் கட்டடத்தில் இருக்கின்ற சார்–பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்பதுதான் அம்மாவினுடைய குறிக்கோள். பத்திரப் பதிவுத் துறை மட்டுமல்ல; 2023 என்ற தொலைநோக்குத் திட்டத்தின்படி தமிழகத்தில் அனைத்து உள்கட்டமைப்பும் ஏற்படுத்தப்பட வேண்டும்; அனைத்து அரசு அலுவலகங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்பதுதான் அம்மாவினுடைய இலட்சியம். அதன் அடிப்படையில்தான், இப்போது பதிவுத் துறையில் இருக்கிற அத்தனை அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டு, கடந்த ஆண்டு, 52 கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே, ஆவணப் பதிவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். எவ்வளவு ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன; அதிலே எவ்வளவு வருவாய் வருகிறது; அதன் அடிப்படையிலே படிப்படியாக முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகிறது. 239 அலுவலகங்கள் இப்போது வாடகைக் கட்டடத்தில் இருக்கின்றன. அதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

*முற்பகல் 10–10*

**திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன், வேளச்சேரி தொகுதியில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது; மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில், சொந்தக் கட்டடம் இல்லாத அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; அதற்கு நன்றி கூறி அமைகிறேன்.*

[2012 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் சார்–பதிவாளர் அலுவலகம், வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம், அதே பகுதியில் அவ்வலுவலகத்திற்கு அருகில் உள்ளது. அவ்விடத்தில் சொந்தக் கட்டடம் கட்ட, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் என்று சொல்கிறார்கள். அவ்விடத்தினை வருவாய்த் துறையிடம் இருந்து பத்திரப் பதிவுத் துறைக்கு மாற்றிக் கொடுத்து ஒப்படைத்தால் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட பகுதியில் 1, 2, 3 ஆகிய சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்றன. வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அனைத்து அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுவும் வருமானம் கூடுதலாக வரக்கூடிய அலுவலகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வளர்ந்துவரும் நகரமாக இருக்கக்கூடிய காரைக்குடியில், மூன்றுமே அதிக வருமானம் உள்ள சார்–பதிவாளர் அலுவலகங்களாக இயங்கி வருகின்றன. எனவே, அதற்கு முன்னுரிமை கொடுத்து புதிய கட்டடங்கள் கட்டித் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



2012 ஏப்ரல் 11]

முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உள்ள அலுவலகங்கள் அதிக வருவாய் உள்ள அலுவலகங்கள் என்று கூறுகிறார்கள். அப்படியிருக்கும்பட்சத்தில், கண்டிப்பாக அதில் வரும் ஆவணப் பதிவுகளின் எண்ணிக்கை மற்றும் வருவாய் ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**73—**

## வேளாண்மைப் பல்கலைக்கழகம்

***7928—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறை விவசாயப் பண்ணையை வேளாண்மைப் பல்கலைக்கழகமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறை விவசாயப் பண்ணையை விவசாயப் பல்கலைக்கழகமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், ஆடுதுறையிலுள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் என்பது உலகப் புகழ் பெற்ற ஒரு நிறுவனம். 1911 ஆம் ஆண்டு மயிலாடுதுறை அருகில் உள்ள மங்கைநல்லூரில் தொடங்கப்பட்டு, பிறகு 1922–இல் ஆடுதுறைக்கு மாற்றப்பட்டு, 100 ஆண்டுகளைக் கடந்துவிட்டது. இந்த நிறுவனம் 1964–1965–இல் A.D.T. 27 என்ற நெல் இரகத்தினைக் கண்டுபிடித்து, அதை . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, history எல்லாம் சொல்லி நீங்கள் நேரத்தினை வீணாக்காதீர்கள். இந்தக் கேள்விக்கு துணைக் கேள்வி கேட்க ஐந்து பேர் கை தூக்கியுள்ளார்கள். அவர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டும் சிறிது யோசனை செய்து பாருங்கள். எனது கஷ்டத்தினை நான்தான் சொல்லமுடியும். தயவுசெய்து co-operate செய்யுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். முதலாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட நெல் வகையான A.D.T. 27–ஐ இந்த ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம்தான் கண்டுபிடித்தது. இப்போது இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திடவேண்டும் என்று இந்த அரசு முயன்றுகொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், கடந்த தி.மு.க. ஆட்சியில் இந்த நெல் ஆராய்ச்சி நிலையத்தைக் கல்லூரியாக மாற்றுவதற்கு முயற்சி செய்து அதைக் கைவிட்டுவிட்டார்கள். எனவே, உலகப்புகழ் பெற்ற இந்த ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தைக் குறைந்தபட்சம் கல்லூரியாகவாவது மாற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்கலைக்கழகமாக மாற்ற முடியுமா என்றுதான் கேட்டிருந்தார்கள்.



2012 ஏப்ரல் 11]

தற்போது கல்லூரியாக மாற்றமுடியுமா என்று கேட்கிறார்கள். ஆடுதுறை விவசாயப் பண்ணையின் மொத்தப் பரப்பு 165 ஏக்கர் ஆகும். இப்பண்ணையில் நெல், சிறுதானியங்கள், காய்கறிகள், பருத்தி முதலிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. தற்போது இந்தப் பண்ணையில் அந்தப் பகுதிக்கேற்ற 36 ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கோவையில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 11 கல்லூரிகளும், 6 பட்டயப் படிப்பு நிறுவனங்களும் இயங்கிவருகின்றன. இவற்றில் வேளாண்மை இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்புகளும் என, வேளாண்மைப் பட்டப் படிப்புகளுக்குத் தேவையான இடங்கள் ஒதுக்கப்பட்டு, மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

முற்பகல் 10–15

மேலும், இந்தப் பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்று, 6 கல்லூரிகளும், 5 பட்டயப் படிப்பு நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் தற்போதுள்ள 36 ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டு, புதிய இரகங்கல் வெளியிடப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள 14 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் இதர ஆராய்ச்சி நிலையங்கள்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துத் தொழில்நுட்பங்களை அளிப்பதுடன், தேவையான பயிற்சிகளையும் கொடுத்து, சிறப்பாக அவை செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்ட மாணவ மாணவியர் சேர்ந்து படிக்க ஏதுவாக இம்மாவட்டத்திற்கு அருகில் உள்ள திருச்சி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டில் உள்ள வேளாண்மைக் கல்லூரி, கடந்த ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் குமலூரில் வேளாண் பொறியியல் கல்லூரி ஆகியவை உள்ளன. தற்போது வேளாண்மைக் கல்லூரிகள், பட்டயப் படிப்பு நிறுவனங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றை நிருவகிக்க கோவையில் சிறப்பாகச் செயல்படும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றே போதுமானது. மேலும், ஒரு புதிய வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்க சுமார் 500 கோடி ரூபாய் முதலீடும், சுமார் 1,000 ஏக்கர் விவசாய நிலமும் தேவைப்படும் என்பதால், ஆடுதுறை விவசாயப் பண்ணையைப் பல்கலைக்கழகமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கீழ்வேளூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படுமென சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அன்றைய தமிழக முதல்வர் இந்த மாமன்றத்திலே அறிவித்தார். இதற்கான இடம் கீழ்வேளூர் வட்டம், வடக்குவெளி மற்றும் அகரக்கடம்பனூர் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டு, கீழ்வேளூர் அருள்மிகு அட்சயலிங்கசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 103.32 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, ஒரு கருத்துரு அனுப்பப்பட்டதாகச் சொல்கிறார்கள். எனவே, இந்த வேளாண்மைக் கல்லூரி கீழ்வேளூரில் உருவாக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே தேவையான அளவிற்கு வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன. போதுமான அளவிற்கு மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். கடந்த காலத்திலே இப்படி ஒரு கல்லூரி அமைக்கப்படும் என்று சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதுபற்றி முழுமையாகத் தெரிந்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி, திராட்சைக்கு அதிகமான விளைச்சலைக் கொடுக்கக்கூடிய பகுதி. அந்தப் பகுதியில் திராட்சை ஆராய்ச்சி மையம் வேண்டுமென்று பல நாட்களாக விவசாயிகள் கோரி வந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் திராட்சை ஆராய்ச்சி மையம் அமைத்து, திராட்சை விவசாயிகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியானது பல்கலைக்கழகம் பற்றியது. ஏற்கெனவே அவர் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார். இருந்தாலும், உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்தக் கூட்டத் தொடரிலேயே அதுபற்றிப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளம் நிறைந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை அழிந்து போகக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. அதைப் பாதுகாப்பதற்கு எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவிதமான விவசாயக் கல்லூரியும் இல்லாத சூழ்நிலையில், வேளாண்மைப் பல்கலைக்கழகமோ அல்லது கல்லூரியோ தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியதுபோல போதுமான வேளாண்மைக் கல்லூரிகள் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றிலே போதுமான அளவிற்கு மாணவ, மாணவிகளுக்கு இடமும் இருக்கிறது. அவற்றிலே அவர்கள் நல்ல முறையிலே பயின்றும் வருகிறார்கள். தேவையிருப்பின், பிற்காலத்தில் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்.

[2012 ஏப்ரல் 11

**திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே, வம்பனிலே வேளாண்மைத் துறைக்கு என்று ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அதே இடத்திலே தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமாக வல்லத்திராக்கோட்டையிலே பல்கலைக்கழகத்தினுடைய பண்ணை இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே, குடுமியான்மலையிலே அண்ணா பண்ணை இருக்கிறது. ஆக, வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டிலே சிறப்பாகச் செயல்பட்டு வந்தாலும், இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு வித்திட்டிருக்கக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தோட்டக்கலைத் துறைக்கு என்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. எனவே, வம்பன் பகுதியிலோ அல்லது வல்லத்திராக்கோட்டைப் பகுதியிலோ அல்லது குடுமியான்மலைப் பகுதியிலோ தோட்டக்கலைத் துறைக்கென்று ஒரு தனிப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு முன்வருமா என்பதனைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** தனியாகப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்றால், அதுகுறித்து கொள்கை முடிவெடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால், இதுபற்றி நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேவையிருப்பின் அதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 11]

**74—**

### மாற்றுப் பாதை

***1519—திரு. சு. ரவி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் அமைந்துள்ள மூன்று இரயில்வே மேம்பாலங்களில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால், மாற்றுப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கு CRIDP திட்டத்தின்கீழ் போக்குவரத்துச் செறிவைக் கண்டறிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உரிய காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்காததால், ஆய்வுப் பணி இரத்து செய்யப்பட்டுள்ளது. தற்போது, மேம்பாலங்களில் விபத்துகள் ஏற்படாமல் இருக்க வேகத் தடை மற்றும் எச்சரிக்கைப் பலகை அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எங்களுடைய அரக்கோணம் நகர் மக்கள் எவரும் எண்ணிப் பார்க்கமுடியாத அளவில், அரக்கோணம் நகருக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம், நகர ஆரம்பச் சுகாதார நிலையம், நவீன எரிதகன மேடை போன்ற திட்டங்கள் வழங்கி, தமிழகத்தில் தினந்தோறும் சாதனைகள் நிகழ்த்திவரும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என் தொகுதி மக்களின்

[2012 ஏப்ரல் 11

சார்பிலும், எனது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகர எல்லைக்குள் மூன்று இரயில்வே மேம்பாலங்கள், அதாவது, அரக்கோணம்–காஞ்சிபுரம் சாலையில் ஒரு மேம்பாலமும், அரக்கோணம்–சோளிங்கர் சாலையில் ஒரு மேம்பாலமும், அரக்கோணம்–திருத்தணி சாலையில் ஒரு மேம்பாலமும் உள்ளன. இந்த மூன்று மேம்பாலங்களிலும் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அந்த மேம்பாலங்களுக்குச் செல்லும் சாலைகளுக்கிடையே இணைப்புச் சாலை ஏதும் இல்லாததால், விபத்து ஏற்படும் நேரத்திலே மணிக் கணக்கிலே போக்குவரத்துப் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால், பொது மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. ரவி, கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சு. ரவி:** இதற்கு மாற்றுப் பாதை அல்லது புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்பது தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் புறவழிச் சாலை அமைப்பதற்கு D.P.R. -Detailed Project Report எடுக்க டெண்டர் விடப்பட்டு, அது கிடப்பிலே போடப்பட்டு, வேலை செய்யாததால் டெண்டர் இரத்து செய்யப்பட்டிருக்கிறது. எனவே, கேட்காமலே கொடுக்கும் அட்சயப் பாத்திரமாக விளங்கும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசில், D.P.R.–க்கு டெண்டர் விட்டு, எங்களுக்கு விரைவாக ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010–2011 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அரக்கோணம் நகருக்குப் புறவழிச் சாலை அமைப்பதற்குத் தனியார் ஆலோசனைமூலம் போக்குவரத்துச் செறிவைக் கண்டறிய, 1–3–2011 அன்று பணி ஒப்படைக்கப்பட்டது. அந்நிறுவனம் திட்ட



2012 ஏப்ரல் 11]

அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பிக்காமல் காலதாமதம் செய்த காரணத்தினால், அவர்களது ஒப்பந்தம் 26–3–2012 அன்று இரத்து செய்யப்பட்டுள்ளது. மீண்டும் தகுந்த ஆலோசனைமூலம் போக்குவரத்துச் செறிவைக் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேம்பாலங்களில் விபத்துகள் ஏற்படாவண்ணம் பாலத்தின் இருபுறமும் வேகத் தடையும், எச்சரிக்கைப் பலகையும் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி செல்லக்கூடிய குறிச்சி இரயில்வே மேம்பாலப் பணி கடந்த மூன்றாண்டுக் காலமாக ஆமை வேகத்திலே நடைபெற்று வருகின்றது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன. எனவே, அந்த மேம்பாலத்தை உடனடியாகக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாலத்தை விரைந்து முடிப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

முற்பகல் 10–25

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட, தியாகதுருகம் ஒன்றியத்தில் உள்ள கொங்கராப்பாளையம், அசகளத்தூர் ஆகிய ஊர்களில் மணிமுக்தா நதி குறுக்கேயும்,

[2012 ஏப்ரல் 11

*மயூரா நதியின் குறுக்கேயும் உள்ள தரைப் பாலங்கள், 'தானே' புயலின் காரணமாக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. அந்தப் பாலங்களில் ஒவ்வொரு வருடமும் குறைந்தபட்சம் 3 அல்லது 4 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறார்கள். கடந்த வருடம்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு பேருக்குத் தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணத் தொகை கொடுத்தார்கள். அசகளத்தூரைப் பொறுத்தவரைக்கும், பாலத்தைத் தாண்டித்தான் மாணவர்கள் பள்ளிக்குப் போகவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மழைக் காலங்களில் ஒரு மாதத்திற்கு அந்த ஆற்றைக் கடக்க முடியாத சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அங்கே உயர்மட்ட பாலம் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரைமட்ட பாலத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மழைக் காலங்களிலே அதிகம் வெள்ளம் வருவதால், அதிலே பள்ளி மாணவர்கள் கடந்து செல்கின்றபொழுது அந்த ஆற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்படுவதாக இங்கே தெரிவித்தார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, நிதிநிலைக்கேற்ப இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள், மனிதனால் மனிதனுக்காகப் படைக்கப்பெற்றது; திருவாசகம், மனிதனால் ஆண்டவனுக்காகப் படைக்கப்பெற்றது; பகவத்கீதை, ஆண்டவனால் மனிதனுக்காகப் படைக்கப்பெற்றது; அந்தத் தெய்வப் படைப்புகளின் வரிசையிலே இந்தத் தலைமுறை மட்டுமல்ல; வருகின்ற எல்லாத் தலைமுறையையும் வாழ வைத்திட, தமிழ்நாடு தொலைநோக்குத்*



2012 ஏப்ரல் 11]

*திட்டம் 2023–ஐப் படைத்து மனித குலத்தைக் காத்திட வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, வணங்குகிறேன். மதுரை–கன்னியாகுமரி செல்கின்ற நான்கு வழிச் சாலையில் அமைந்துள்ள சாத்தூர் தொகுதிக்குட்பட்ட படந்தாள்விலக்கு, தாயில்பட்டிவிலக்குச் சந்திப்பில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகின்றது. மாற்றத்தைத் தந்திட்ட அன்னைத் தமிழக மக்களுக்கு, ஏற்றத்தைத் தந்துகொண்டிருக்கின்ற இந்தியத் திருநாட்டின் வழிகாட்டி, வாழும் மனித தெய்வம் அம்மாவினுடைய அரசு, இந்தப் பாலத்தினைக் கட்டி உயிரிழப்பைத் தடுத்திட ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாத்தூர் நகரத்திற்கு அருகிலேயே அங்கிருக்கின்ற போக்குவரத்து நெரிசலின் காரணமாக விபத்து ஏற்படுவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அடுத்த ஆண்டு அங்கு உயர்மட்ட பாலம் கட்டுவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் கேட்கிற கேள்வி குறித்து மாண்புமிகு அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே வினாக்கள் நேரத்திலே இந்தக் கேள்வியைக் கேட்டேன். சேலம், தேசிய நெடுஞ்சாலையில் வருகின்ற ஏ.வி.ஆர். ரவுண்டானா, திருவாகவுண்டனூர் ரவுண்டானா, சிவதாபுரம் பிரிவு ரோடு ரவுண்டானாவில் மேம்பாலம் கட்டப்படுமா என்று சென்ற கூட்டத் தொடரில் கேள்வி கேட்டிருந்தேன். பொது மக்கள் . . .

[2012 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மோகன்ராஜ், நான் தங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன் என்றால், நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரு துணைக் கேள்வியைக் கேட்டு, அடுத்தவருக்குக் கேள்வி கேட்கிற அளவுக்கு நீங்கள் நேரத்தை save செய்து கொடுத்தீர்களேயென்றால், I will be happy. அதை விடுத்து, நேற்று கேட்டேன், முந்தையதினம் கேட்டேன், அன்றைக்குக் கேட்டேன், இன்றைக்குக் கேட்டேன் என்றெல்லாம் சொல்லாமல், இந்தக் கேள்வி குறித்து உங்களுடைய துணைக் கேள்வி என்ன? அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டுவிடுகிறேன். அந்த மேம்பாலங்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் வீட்டுக்கு அருகில் வருவதால், மக்களெல்லாம் விரைவில் மேம்பாலம் கட்டுவார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் விரைந்து நடவடிக்கை எடுத்து மேம்பாலம் கட்டப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது; அதற்குப் பக்கத்தில் இருக்கிறது என்ற கதையெல்லாம் சட்டமன்றத்திலே பேசக்கூடாது. துணைக் கேள்விக்கு வாருங்கள். 'நச்'சென்று கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** சிவதாபுரம் பிரிவு சாலையில் இருக்கின்ற இடத்திலே அடிக்கடி உயிர்ப் பலி ஏற்படுகின்றது. அந்த இடத்திலும், திருவாகவுண்டனூர் ரவுண்டானா மற்றும் ஏ.வி.ஆர் ரவுண்டானாவும் தேசிய நெடுஞ்சாலையில்தான் வருகின்றன. அந்த இடங்களிலும் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக விரைந்து நடவடிக்கை எடுத்து மேம்பாலங்கள் கட்டப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் வருகின்ற சாலை. ஏற்கெனவே இங்கே சுங்கச் சாவடி அமைக்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையிலே அது



2012 ஏப்ரல் 11]

பராமரிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இதே கேள்வியை அவையிலே கேட்டிருக்கின்றார்கள். நாங்களும் பதில் கொடுத்திருக்கின்றோம். ஆகவே, இது மாநில அரசுக் கட்டுப்பாட்டில் இல்லாத காரணத்தால், இந்த உயர்மட்ட பாலம் கட்டுவதற்காக இந்திய தேசிய ஆணையத்திடம் ஏற்கெனவே கடிதம் அனுப்பப்பட்டு இருக்கின்றது. பதில் கிடைத்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறப்படும்.

*முற்பகல் 10–30*

அதுமட்டுமல்லாமல், இந்த உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு பல கோடி ரூபாய் நிதி தேவைப்படும் என்ற கருத்துரு ஏற்கெனவே இருக்கின்றது. ஆகவே, இந்திய தேசிய ஆணையம்தான் இந்தத் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்த வேண்டியுள்ளது. இது மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத காரணத்தினாலே, அவர்களுக்கு நாங்கள் கடிதம்தான் எழுதியிருக்கின்றோம். ஆகவே, மத்திய அரசுதான் இதற்கு இசைவளித்து, உயர்மட்ட பாலம் கட்டித் தர முடியும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி, ராஜபாளையம்–சத்திரப்பட்டி செல்லும் சாலையில் ஒரு இரயில்வே கடவு உள்ளது. இரயில்வே கடவு மூடப்படுகின்ற நேரத்திலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது. அந்த இடத்திலே ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டி, போக்குவரத்து நெரிசலைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே கடவின் குறுக்கே பாலம் கட்டவேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரு விதி இருக்கிறது. ஒரு இலட்சம் யூனிட்டுக்குமேல் வாகனங்கள் சென்றால்தான்,

[2012 ஏப்ரல் 11

அந்த இரயில்வே கடவின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டமுடியும். ஆகவே, அப்படி அதிக வாகனங்கள் அந்த இருப்புப் பாதையிலே செல்வதைக் கணக்கிட்டு, எதிர் வருகின்ற காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துச்செல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துச்செல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட குருவிகுளம் ஒன்றியத்தில், மலையடிப்பட்டி முதல் தெற்கு மலையடிப்பட்டி வரை நிசேப நதி ஓடுகிறது. மழை வெள்ளக் காலங்களில் அங்குள்ள பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் அந்த ஆற்றுப் பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும். அந்தப் பாதை வழியாக நடந்து செல்வது மிகவும் சிரமம். எனவே, அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தால் சம்சிகாபுரம், புதுசுப்லாபுரம், பாறைப்பட்டி, காரிசாத்தான் ஆகிய கிராமங்கள் பயன்பெறும். எனவே, அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மழைக் காலங்களில் அதிக தண்ணீர் வரும் ஆற்றின் குறுக்கே செல்வதால், அதிலே பள்ளிக் குழந்தைகள், பொது மக்கள் செல்வதற்குச் சிரமமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். இதை ஆய்வு செய்து, எதிர் வருகின்ற காலத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அங்கே உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 74 குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சின்னசாமி, திரு. ம. குணசேகரன், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், திரு. ஓ.கே. சின்னராஜ், திரு. மு.வீ. கருப்பையா, திரு. வி. சோமசுந்தரம், திரு. ஏ.கே.டி. ராஜா, திரு. கே. உலகநாதன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகிய உறுப்பினர்கள் வினாக்கள் தொடுக்க உள்ள நிலையில், காலத்தின் அருமை கருதி நாளை இவர்களுக்கு துணை வினா கேட்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 11]

வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**75—**

## தொழிற்பேட்டை

**6690—திரு. அ. பாஸ்கர்:*

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கடகத்தூரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கடகத்தூரில் ஏற்கெனவே சிட்கோ தொழிற்பேட்டை துவக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கடகத்தூர் ஊராட்சிக்குட்பட்ட சிட்கோ சிறு தொழிற்பேட்டைக்குக் கடந்த ஆட்சியில் நிலம் ஒதுக்கப்பட்டு, இப்பொழுதுதான் மிகத் தாமதமாக சில நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களுக்கு அரசு மானியம் கொடுத்து, சிறு தொழில் நிறுவனங்களை

அமைத்தால், அங்குள்ள மக்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுத்து இந்த நிறுவனங்கள் வேலை கொடுக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடகத்தூர் கிராமத்தில் சிட்கோ தொழிற்பேட்டைக்காக 7.2 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, 25 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டன. இதில் 7 தொழில் மனைகள்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ளன. மீதமுள்ள காலி மனைகளை ஒதுக்கீடு செய்யத்தக்க நடவடிக்கை சிட்கோ நிறுவனத்தால் எடுக்கப்பட்டு வருகிறது. சிட்கோ நிறுவனத்தால் மீதமுள்ள மனைகளும் விரைந்து ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி–ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் உருவகப்பள்ளி என்ற இடத்தில் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் 100 ஏக்கர் பரப்பளவில் சிட்கோ தொழிற்சாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, சாலை அமைக்கும் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணிகள் எல்லாம் நிலுவையில் உள்ளன. அங்கே சிட்கோ தொழிற்சாலை அமைப்பதன்மூலம் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, நிலுவையில் உள்ள அந்தப் பணிகளை மேற்கொண்டு அங்கே சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி–ஓசூர் பகுதியில் இருக்கிற சிட்கோ தொழிற்பேட்டையில் உடனடியாகத் தொழில்முனைவோர் தொழில் தொடங்க முன்வருவார்கள் என்ற பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்து, அந்தத் தொழில்முனைவோருக்கு உரிய ஆதரவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் ஏறக்குறைய 15 வருடங்களுக்கு முன்பே சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கப்பெற்றும்கூட, அங்கு இதுவரையிலும் ஓரிரு தொழிற்சாலைகளைத் தவிர, பெரிய அளவுக்கு அங்கே எந்தவிதமான தொழிலும் தொடங்குவதற்குத் தொழில்முனைவோர் முன்வரவில்லை. எனவே, அதற்குண்டான காரணத்தைக் கண்டறிந்து, உடனடியாக அங்கே பெரிய அளவில் தொழில்களைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி குறிப்பிட்டதைப்போல், அந்தத் தொழிற்பேட்டையில் ஏன் தொழில்முனைவோர் வரவில்லை என்ற காரணத்தைக் கண்டறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்கு உண்டான பணியை அரசு முழுமையாக மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவரை துணைக் கேள்வி கேட்காமல் இருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை என்ற

[2012 ஏப்ரல் 11

அடிப்படையில் முதலாவதாக துணைக் கேள்வி கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில், அந்தியூர் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தமாக 94 சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அரசுத் தொழிற்பேட்டைகள் (Government Estate) 35 ஆகும். மேலும், அந்தியூர் பகுதிக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொழிற்பேட்டை வேண்டுமென்று கேள்வி கேட்டுள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, அந்தியூர் பகுதியில் தொழில் முனைவோர் அதிகப்படியான எண்ணிக்கையில் இருக்கும்பட்சத்தில், அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெற்று அரசு நிலம் இருப்பதாகத் தெரிய வந்தால், தொழிற்பேட்டை அமைப்பதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

## மணல் குவாரிகள்

*__7766—திரு. கே. தங்கவேல்:__

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணல் குவாரிகளை அரசுடைமையாக்க அரசு ஆவன செய்யுமா?



2012 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி நுகர்வோருக்குச் சரியான விலையில் மணல் கிடைத்திடவும், வளர்ச்சி மற்றும் கட்டுமானப் பணிகள் தடையின்றி நடந்திடவும் அரசு, பொதுப் பணித் துறையின் வாயிலாக 2–10–2003 முதல் மணல் எடுத்து விநியோகம் செய்து வருகிறது என்பதை இந்தப் பேரவையின் வாயிலாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் மணல் குவாரிகளை அரசுடைமையாக்குவதன்மூலமாக, அரசுக்கு அதிகமாகக் கூடுதல் வருமானம் கிடைக்கும். பல இடங்களில், திருச்சி, கொள்ளிடம், திருவள்ளூர் மாவட்டம் மெய்யூர் ஆகிய இடங்களிலிருந்து அரசு நிர்ணயித்திருக்கின்ற அந்தக் கட்டணத்திற்கு மேலாக அல்லது 50 லாரிகள் அனுமதி பெற்றால், 10 லாரிகள் அனுமதியின்றி எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமைகளும் தொடர்கின்றபட்சத்தில், அரசே மணல் குவாரிகளை அரசுடைமையாக்க முன்வருமா? இதன்மூலம் அரசு கூடுதல் வருமானத்தை ஈட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இதை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே கூறிய பதிலில் சொல்லியிருக்கிறேன். 2003 ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், 2011–2012 ஆம் ஆண்டு இதுவரை இல்லாத அளவிற்கு அரசினுடைய வருமானமாக ரூ.188 கோடி கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2012 ஏப்ரல் 11

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில், மதுரை மாவட்டம், கட்டுமானத் தொழிலுக்கு மணல் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. திருச்சியிலிருந்தோ, கரூரிலிருந்தோதான் மணல் மதுரைக்கு வந்து, அங்கிருந்து வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் அங்குள்ள மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்கி, மதுரை மாவட்டத்திலேயே ஒரு மணல் குவாரியை அரசின் சார்பில் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, மதுரையில் ஒரு புதிய மணல் குவாரி அமைப்பதற்குண்டான ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் பேசுகின்றபோது, அனுமதி இல்லாமல் லாரிகளில் மணல் எடுத்துச் செல்லப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதுபோல் இல்லை. 2011–2012 ஆம் ஆண்டு 5,315 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 11]

**77—**

## தேன் ஆராய்ச்சி மையம்

***825*—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதியில் தேன் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையளிக்கிறேன்.

அரசியல் அறிவுச் சுரங்கம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதியில் தேன் ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் வருங்காலங்களில் அவசியம் ஏற்படின், அரசு அதுகுறித்து ஆராய்ந்து பரிசீலிக்கும் என்பதைப் பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு வட்டாரத்தில் சுமார் 25,000 ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் தேன் வளர்த்து, தேன் சேகரித்து விற்பனை செய்து வாழ்கிறார்கள். மார்த்தாண்டம் பகுதியில் தொற்றுநோய் தாக்கி தேனீக்கள் கொத்துக் கொத்தாக மடிந்துவிடுகின்றன. இதனால், விவசாயிகள் மற்றும் கூலிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, இழப்புகளைத் தவிர்க்கவும், தேன் தொழில் அபிவிருத்தி அடையவும் புனேயில் அமைந்துள்ளதுபோன்று தேன் ஆராய்ச்சி நிறுவனம் மார்த்தாண்டத்தில் அமைத்திட வேண்டும். தேனில் ஈரப்பதம், நீரின் அளவு (Moisture content level) கண்டறிந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், தமிழ்நாட்டில் தேன் வளர்ப்புக் குழுமம்

[2012 ஏப்ரல் 11

(Bee Keeping Mission) உருவாக்கி அதற்குத் தேவையான நிதியை தேசிய தேனீ வாரியத்திட (National Bee Board)-மிருந்து பெறலாம். தமிழகத்தில் தேன் ஆராய்ச்சிக் குழுமம் இதுவரை அமைக்கப்படாமல் இருக்கிறது. அதைப் பரிசீலிக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, கேள்விக்கு வாருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** எனவே, இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேன் ஆராய்ச்சி மையத்தை மார்த்தாண்டம் பகுதியில் பரிசீலித்துக் கொண்டுவருவார்களேயானால், அந்தத் தொழிலில் இருக்கும் அனைவருக்கும், விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் அம்சி என்ற இடத்திலும், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலை ஜமுனாமரத்தூர் என்ற இடத்திலும் தேன் நிரப்பும் மற்றும் பதப்படுத்தும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. அச்சங்கத்தின்மூலம் தேன் கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், திருப்பூர், திருச்சி, திருநெல்வேலி, சென்னை குறளகம் ஆகிய இடங்களில் உள்ள தேன் நிரப்பும் நிலையங்கள்மூலம் பாட்டில்களில் தேன் நிரப்பப்பட்டு, கதர் அங்காடிகளின்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தேனீ வளர்ப்போருக்கு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் பயிற்சி வழங்கப்படாமல் விட்டாலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பூச்சியியல் துறை மூலமாக ஒவ்வொரு மாதமும் 6 ஆம் தேதியில் குறைந்தபட்சம்



2012 ஏப்ரல் 11]

25 நபர்களுக்கு ஒரு நாள் தேனீ வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட நபர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

முற்பகல் 10—45

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற ஆராய்ச்சி நிலையம் குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருகின்ற காலங்களில் தேவைப்படின் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**78—**

**சுற்றுலாத் தலம்**

***5455—டாக்டர் வைகைச்செல்வன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட சாத்தூரிலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் வைப்பாறு மற்றும் அர்ஜுனா ஆறு ஆகிய இரண்டு ஆறுகளுக்கு இடையே இருகங்கைக்குடி என்ற பெயரால் அழைக்கப்பட்டு, பின்னாளில் அப்பெயர் மருவி, இருக்கன்குடி

என்று பெயர் பெற்ற ஊரில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் தென் மாவட்டங்களிலுள்ள அம்மன் கோயில்களில் மிகவும் புகழ்பெற்ற ஒன்று என்பதால், ஆன்மிக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் அதிகமாகக் கூடும் ஆன்மிக சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, பக்தர்கள் ஓய்வு மண்டபம், கழிவறை வசதி, குடிநீர் வசதி ஆகிய பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், கடந்த 2011–2012 ஆம் நிதியாண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 26–11–2011 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அங்கே அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் விரைவிலே தொடங்கப்படவுள்ளன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

**டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு வித்தாக, விதையாக, உரமாகத் திகழ்ந்து, எதிரிகளுக்கு வில்லாக, வேலாக அம்பாகச் செயல்பட்டு, ஏணியாக, தோணியாக இருந்து எங்களைக் கரையேற்றி, தாயாக, தந்தையாக, தலைவராக, நல்லாசானாக நின்று, இவ்வாறாக எல்லாமுமாகத் திகழும் மாண்பமை அம்மா அவர்களை வணங்கி, அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இருக்கன்குடி பகுதியைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்குத் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதோடு மாத்திரமல்லாமல், இந்தப் பகுதியிலே இருக்கிற இருக்கன்குடி அணைப் பகுதியில் ஒரு படகுக் குழாம் மற்றும் ஒரு பூங்கா—சோலைவனமாக இருக்கிற இந்தப் பகுதியில்—ஒரு மிகப் பெரிய பூங்காவையும் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நதியின் பெயரே அர்ஜுனா நதி; இது புராதனப் பெருமைபெற்ற ஒரு நதியாகும். வரலாற்றிலே வத்திராயிருப்பு மலையிலிருந்து இந்த நதிக்கு நீர் வருகின்றது என்றும், பஞ்ச பாண்டவர்கள் அந்தக் காலத்திலே அங்கே வரும்பொழுது தண்ணீர் இல்லாத காரணத்தினால் பூமியிலே இறைவனை வேண்டி அம்பை விட்டதிலே அங்கே தண்ணீர் வந்ததாகவும், அதனால் அந்த நதிக்கு அர்ஜுனா நதி என்று பெயர் உள்ளது என்றும் ஒரு வரலாறு இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வரும் காலங்களில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள். (குறுக்கீடு) திரு. பாண்டியராஜன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் இன்னும் ஒரு துணைக் கேள்வி கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

**டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அமைத்துத் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தருணத்திலே தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நாடு என்பது மக்களாலும், கட்டடங்களாலும் தொழிற்சாலைகளாலும் ஆக்கப்பட்டது மட்டுமின்றி, ஆறுகளாலும், குளங்களாலும், காடுகளாலும், மலைகளாலும், பாலைவனங்களாலும், சோலைவனங்களாலும் ஆக்கப்பட்டுள்ளது என்கிற ஒரு செய்தியைச் சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து இதற்குரிய பணிகளைச் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தக பூமியிலே வெந்து கிடக்கும் விருதுநகர் மாவட்ட மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு நிவாரணமாக விருதுநகர்

[2012 ஏப்ரல் 11

அருகிலுள்ள குல்லூர்சந்தை மற்றும் ஆனைக்குட்டம் ஆகிய இரு அணைகளைச் சுற்றியிருக்கும் இடத்தினைச் சீர்படுத்தி படகுக் குழாம் மற்றும் பூங்கா, தனியார், அரசுப் பங்களிப்புடன் அளித்திட அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கடந்த நிதியாண்டில், விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டும் பகவான் ரமண மகரிஷி பிறந்த ஊரான திருச்சுழிக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் அடிப்படை வசதிக்காக, சுற்றுலாத் துறையின் பங்காக 24.78 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதைப்போல, அருள்மிகு திருவண்ணாமலை தென் திருப்பதி கோயிலில் மூன்று கிலோ மீட்டர் கிரிவலப் பாதையை மேம்படுத்த சுற்றுலாத் துறையின்மூலமாக சுமார் ரூ.1.60 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பணிகள் நெடுஞ்சாலைத் துறைமூலமாக நடைபெற்று வருகின்றன. திருத்தங்கல் திருநின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு பக்தர்களுடைய வசதிக்காக 20 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்படியாக விருதுநகர் மாவட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குல்லூர்சந்தைப் பகுதியிலே படகுக் குழாம் அமைக்க வேண்டுமென்றும் மற்ற கோரிக்கைகளையும் சொல்லியிருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சியரிடம் அதற்கு உரிய கருத்துரு பெறப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். அங்கே தேசிய நெடுஞ்சாலை இருப்பதால், மத்திய அரசு நிதி உதவி மூலமாக பயண வழித்தட வசதிகள் அமைக்க மாவட்ட ஆட்சியர் 4 ஏக்கர் நிலத்தை, பரிந்துரைக்கு அனுப்பி இருக்கின்றார். ஆகவே, விருதுநகர் மாவட்டம் வளம் பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.



2012 ஏப்ரல் 11]

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியிலே திருக்குன்றம் மலை வாலீஸ்வரன் திருக்கோயில் உள்ளது. அதைச் சுற்றுலாத் தலமாக அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்தவாசி தொகுதியில் உள்ள திருக்குன்றம் மலைப் பகுதியிலே அடிப்படை வசதிகள் வேண்டுமென்று நேற்றையதினம் அவர் ஒரு கோரிக்கையை என்னிடம் கொடுத்திருக்கின்றார்கள். அதற்கு உரிய கருத்துரு பெற்று, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கும்மிடிப்பூண்டி தொகுதியில் பிரசித்திபெற்ற பெரியபாளையத்தம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலுக்கு ஆடி மாதத்தில் பல இலட்சம் மக்கள் வந்து செல்கின்றனர். ஆகையால், சுற்றுலாத் துறை சார்பாக இங்கு ஒரு தங்கும் விடுதி கட்டவும், இந்தப் பகுதியை ஒரு சுற்றுலாத் தலமாக ஆக்கவும் இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியில் உள்ள பெரியபாளையத்தம்மன் கோயிலுக்கு அதிகமாக ஆன்மிக சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள். குறிப்பாகப் பௌர்ணமி, அமாவாசை தினத்திலே அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள் என்று சுற்றுலாத் துறைக்குக் கருத்துரு வரப்பெற்றுள்ளது. வரும் நிதியாண்டிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**79—**

**பேருந்துப் பணிமனை**

***5457—திரு. கு. லிங்கமுத்து:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி பேர்ணாம்பட்டில் 22 பேருந்துகளுடன் வாடகைக் கட்டடத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை செயல்பட்டு வருகிறது. மேற்படி பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட, பேர்ணாம்பட்டு கிராமம் சர்வே எண் 376/2 மற்றும் 299—இல் நிலம் தேர்வு செய்யப்பட்டு, 1.8 ஏக்கர் நிலம் உரிமம் மாற்றம் செய்யக் கோரி, வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 30—1—2012 ஆம் நாளிட்ட கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி நிலம் வருவாய்த் துறையின்மூலம் ஒப்படை செய்யப்பட்டபின், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

**திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்துப் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*



2012 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**80—**

**கல்லூரி விடுதி**

***4242—திரு. பி.வி. கதிரவன்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

*2011—2012 ஆம் ஆண்டில் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகிய மாணவ மாணவிகளுக்காக 28 விடுதிகளைப் புதிதாகத் திறப்பதற்கு ஆணையிடப்பட்டது. உசிலம்பட்டியில் ஆய்வு செய்ததில் அங்குள்ள கல்லூரியில் பயிலும் மாணவிகள், கல்லூரியைச் சுற்றியுள்ள உள்ளூர்ப் பகுதியிலிருந்து வந்து கல்வி பயின்று வருகின்றனர். தொலைதூரத்திலிருந்து எவரும் வரவில்லை. எனவே, மாணவிகளுக்கெனக் கல்லூரி விடுதி தொடங்கவேண்டிய அவசியம் அங்கே எழவில்லை. எனினும், ஆண்களுக்கான கல்லூரி விடுதி தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2012 ஏப்ரல் 11

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 3. தகவல் கோரல்

### (அ) கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனத்தில் முறைகேடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன, திரு. ஆறுமுகம்? ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் 35 உதவிப் பேராசிரியர்கள் நியமனம் சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநில எல்லையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஒரு* check dam *கட்டியிருக்கிறார்கள். அதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் அதுகுறித்து எடுத்துக்கொள்ளலாம். தயவு செய்து உட்காருங்கள்.*



2012 ஏப்ரல் 11]

### (அ) கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனத்தில் முறைகேடு—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகம் ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டுவரக்கூடிய ஒரு பல்கலைக்கழகம். தமிழகத்திலே உயர் கல்வியை வழங்குவதிலே பல்கலைக்கழகங்களுக்கு மிகப் பெரிய முக்கியமான பங்கு உண்டு. அந்த அடிப்படையில் பல்கலைக்கழக மானியக் குழுக்கள் அவ்வப்போது மாணவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்கவும், ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும்பொருட்டும், உதவிப் பேராசிரியர், பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு மானியங்களைக் கொடுத்து, அந்தப் பணியிடங்களை இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிரப்புவதற்கு அனுமதி அளிக்கிறது. அந்த அடிப்படையில் ஏறக்குறைய 33 பணியிடங்களுக்கு ஓராண்டுக் காலத்திற்கு மட்டுமே 2012 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையிலும்* U.G.C., *அதாவது, பல்கலைக்கழக மானியக் குழு 21 பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு அனுமதி அளித்தது. ஆனால்,...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று கூறி அமருங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *ஆனால், பாரதியார் பல்கலைக்கழகம் அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு அவர்களுடைய பணியிடங்களை நீட்டித்து இப்பொழுது தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. மானியக் குழு எந்தக் காரணத்தைக்கொண்டும் ஓராண்டுக் காலத்திற்கு மேலாக அந்தப் பணியிடங்களை நீட்டிக்கக்கூடாது என்று சொன்ன பிறகும், இப்பொழுது பல்கலைக்கழகம் அந்தப் பணியிடங்களை ஐந்தாண்டுக் காலத்திற்கு நீட்டித்தால், தமிழ்நாடு அரசுதான் அதற்குண்டான முழுமையான சம்பளத்தைக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அரசினுடைய அனுமதியில்லாமல் இந்தப் பணியிடங்களை எப்படி ஒரு பல்கலைக்கழகம் உருவாக்க முடியும்? அதிலும் இட ஒதுக்கீட்டை முற்றாகப் புறக்கணித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான*

*[டாக்டர் க. கிருஷ்ணசாமி]* [2012 ஏப்ரல் 11

*5 இடங்களையும் அவர்கள் கொடுக்கவில்லை. எனவே, இந்தத் தவறான நடவடிக்கையை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.*

**(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2–4–2012 அன்று இராமேஸ்வரம் மீனவர்கள் நடுக்கடலிலே மீன் பிடித்துக்கொண்டிருந்த நேரத்தில் இலங்கைக் கடற்படையினர் கல்வீசி தாக்குதல் ஏற்படுத்தியிருக்கக்கூடிய ஒரு சம்பவம், அந்தப் பகுதி மக்களிடத்திலே, குறிப்பாக இராமேஸ்வரம், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகள் முழுவதும் இருக்கக்கூடிய மீனவர்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள அச்சத்தைத் தவிர்த்து, அந்த மக்களுக்குப் பாதிப்பைத் தவிர்க்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறீர்கள். அது அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆய்வில் இருக்கிறது. பதில் வந்தவுடன் அதை எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 17 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணியாற்றிவரும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், வேலை நிறுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுகுறித்துத் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதுகுறித்து இன்று காலையிலேதான் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளீர்கள். துறையிடமிருந்து பதில் வந்தவுடன் அதனை எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.*



2012 ஏப்ரல் 11]

**(அ) கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனத்தில் முறைகேடு**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக் குழுவின் 11–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 35 உதவிப் பேராசிரியர்களைப் பணியமர்த்த ரூ.200 இலட்சம் ஊதியம் மானியமாக வழங்கப்பட்டது. மேலும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் ஊதிய செலவினத்தை மாநில அரசோ அல்லது பல்கலைக்கழகமோ ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற பல்கலைக்கழக மானியக் குழுவின் நிபந்தனைக்குட்பட்டு, பாரதியார் பல்கலைக்கழகம் இந்நிதியினைப் பெற்றது. 35 உதவிப் பேராசிரியர்களைப் பணியமர்த்த வழங்கப்பட்ட ஒப்புதலின்பேரில், தமிழக அரசின் 200 புள்ளி நியமன இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 27–1–2011 நாளிட்ட 'தினமலர்' நாளிதழில் உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்களைப் பற்றிய விளம்பரம் வெளியிடப்பட்டது. விளம்பரத்தின் அடிப்படையில் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பல்கலைக்கழக சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தகுதியுடைய பேராசிரியர்களை உள்ளடக்கிய கூர்ந்தாய்வுக் குழு,* Scrutiny Committee *மூலம் 16–2–2011 மற்றும் 17–2–2011 ஆகிய தேதிகளில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கண்டறியப்பட்டனர். அதன் தொடர்ச்சியாகப் பல்கலைக்கழகச் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அனைவரும், துறைவாரியாக 21–2–2011 முதல் 27–2–2011 வரை நடைபெற்ற நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தேர்வுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட நபர்களின் பட்டியலுக்கு 28–2–2012 அன்று நடைபெற்ற ஆட்சிக் குழு ஒப்புதல் அளித்தது. தேர்வு செய்யப்பட்டு, பணி நியமன ஆணை வழங்கப்பட்ட 26 நபர்களில், 24 நபர்கள் மட்டுமே பணியில் சேர்ந்தனர்.*

*முற்பகல் 11–00*

*இத்தருணத்தில், அங்கீகரிக்கப்படாத ஆசிரியர் அலுவலக நலச் சங்கத்தின் சார்பாக, உதவிப் பேராசிரியர்களின் பணி நியமனத்தில்*

[திரு. பி. பழனியப்பன்] [2012 ஏப்ரல் 11

இட ஒதுக்கீட்டு முறை, முறையாகச் செயல்படவில்லை என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றம் இவ்வழக்கினைத் தள்ளுபடி செய்து, தனது தீர்ப்பில் பாரதியார் பல்கலைக்கழகம், பணி நியமனத்தில் சட்ட விதி மற்றும் தமிழக அரசின் பணி இட ஒதுக்கீடுகளை முழுமையாகச் செயல்படுத்தியுள்ளது எனவும், இதில் எவ்விதமான முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும் கூறியது. இதனை எதிர்த்து, அங்கீகரிக்கப்படாத ஆசிரியர் அலுவலகச் சங்கம் மேல் முறையீடு செய்துள்ளது. இதில் தீர்ப்பு எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதியில் பணியமர்த்தப்பட்ட உதவிப் பேராசிரியர்களின் பணிக் காலம் 31–3–2012–க்குப் பின்பு நீடிப்பு வழங்க வேண்டியதன் கருத்துரு, 6–2–2012 இல் நடைபெற்ற பல்கலைக்கழக நிதிக் குழுவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்நிதிக் குழுவில் 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி அனைத்தையும் செலவிட்ட பின்பு, பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து 12ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி பெற்று, அவர்களது பணிக் காலத்தை நீடிக்க அனுமதி பெறப்பட்டது.

மேலும், 10–3–2012 அன்று நடைபெற்ற ஆட்சிக் குழுவும் இதற்கு ஒப்புதல் வழங்கியது. அதற்குப்பிறகு 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பணியமர்த்தப்பட்ட உதவிப் பேராசிரியர்கள் பணியில் திறமை, செயலாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்து, மதிப்பீடுகளின் பரிந்துரையின் அடிப்படையில், நீடிப்பு வழங்கலாம் என அனுமதி அளித்தது. அதனடிப்படையில், துணைவேந்தர் தலைமையில், இரண்டு ஆட்சிக் குழு உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட துறை அகத் தலைவர்கள் மற்றும் துறைத் தலைவர்களைக் கொண்டு மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு, 27–3–2012 இல் கூடி மேற்கூறிய 24 உதவிப் பேராசிரியர்களின் பணித் திறனை ஆய்வு செய்தது. இந்த 24 நபர்களில், ஒருவர் ஏறத்தாழ 11 மாத காலங்கள் பணிக்கு வராமல் இருந்தது தெரிகிறது. மீதமுள்ள 23 நபர்களுக்கு மீள பணி நீடிப்புக் கொடுப்பதில் எவ்வித இடர்ப்பாடோ, சிக்கலோ இருக்காது எனக் கருதப்படுகிறது. 35 பணியிடங்களுக்கு நடைபெற்ற அந்தத் தேர்வில், 100 நபர்கள் மட்டுமே விண்ணப்பம் செய்திருந்தார்கள். தேர்வுக் குழுவால் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, அதனால் 35 பணியிடங்களுக்கு 26 நபர்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்ட நிலையில், இதில் 24 நபர்கள் மட்டுமே பணியில் சேர்ந்தார்கள்.



2012 ஏப்ரல் 11] [திரு. பி. பழனியப்பன்]

இந்த 24 நபர்களில் ஒருவர் தொடர்ந்து பணிக்கு வரவில்லை. 11ஆவது ஐந்தாண்டுத் திட்டம் 31–3–2012 உடன் முடிவடைகிறது. 12ஆவது ஐந்தாண்டுத் திட்டம், 1–4–2012 முதல் தொடங்குகிறது. ஆகவே, 31–3–2012–க்குப் பிறகு 1–4–2012 முதல் 23 நபர்கள் மட்டுமே பணியில் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர்களுடைய பணிக் காலத்தை நீடிக்க மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது; பணி நிரந்தரம் செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

—

### (அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) டாக்டர், no clarification. அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதிலளித்த பிறகு, நீங்கள் அதன்மீது விவாதிக்க முடியாது. Please sit down. (குறுக்கீடு) No, No. I am not allowing. Please sit down.

மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 45, திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 624, திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 576, திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 217, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.



**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகர்ப்புறப் பெண்களைப் பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் மேம்படுத்தப்படும்வண்ணம் அவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகளை அரசு மற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்கள்மூலமாகச் செயல்படுத்தவும், அதற்கு அதிக அளவில் நிதியுதவி அளிக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 486, திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரையும் (ஆயாக்கள் உள்ளிட்ட) அரசுப் பணியாளர்களாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 524, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர் உதவித் தொகை, விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் உதவியைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1123, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 565, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 600, திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் காலியாக உள்ள சத்துணவுப் பணியாளர்களின் நிலையினை அறிய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 609, திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.



**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர் உதவித் தொகை பெறுவதில் மக்களுக்கு ஏற்படும் நடைமுறைச் சிக்கலைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 657, திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காலியாக உள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர் பணியிடங்களை விரைந்து நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 670, திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுத் திட்டத்தில் இளநீர் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 690, திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சி 127, 138 ஆகிய வட்டங்களில் சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடிக் கட்டடங்கள் கட்டித்தர சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துதர பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனை விரைவில் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 773, திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் தொகுதியில் பராமரிப்பு இல்லாமல் இருக்கும் அங்கன்வாடிக் கட்டடங்களைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 784, திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் பராமரிப்பு இல்லாமல் இருக்கும் அங்கன்வாடிக் கட்டடங்களைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 945, திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட சமூக நல அலுவலகத்தின்கீழ் விருத்தாச்சலம் நகரில் கோட்ட அளவிலான ஓர் அலுவலகம் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 950, திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், பாலூர் பஞ்சாயத்து, பேர்ணாம்பட்டு ஒன்றியம், வடச்சேரி, சின்னப்பள்ளிக்குப்பம் பஞ்சாயத்துகளில் சமுதாயக் கூடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 953, திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் திருமணம் ஆகாத 50 வயதான பெண்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகை பெறுவதற்கு வயது சான்றாக ரேஷன் கார்டு, மருத்துவர் சான்று ஆகியவற்றை நிர்ணயிப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 955, திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட சத்துணவு மையங்களில் காலியாக உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சத்துணவுப் பணியாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ/2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 986, திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவில் கோடைக் காலங்களில் வாரம் ஒருமுறை இளநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1016, திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சத்துணவுக் கூடங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1080, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1101, திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க.உவரி ஊராட்சி குண்டலி, விநாயபதி ஊராட்சி, குறிஞ்சிகுளம், கல்லூரி ரெங்காபுரம் ஊராட்சி, முடவன்குளம் ஆகிய ஊர்களில் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1166, டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினரால் மே 2011 முதல் பெறப்பட்ட 20,000–க்கும் மேற்பட்ட

முதியோர் மற்றும் விதவைகளுக்கான உதவித் தொகை மனுக்கள் பரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1417, திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காலியாகவுள்ள சத்துணவுப் பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.206,11,77,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 52, திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 979, திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 586, திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1032, திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1126, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 234, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊனமுற்ற பெண்ணின்/ஊனமுற்ற நபரின் மனைவியின் பிரசவத்திற்கு ரூபாய் இருபதாயிரமும், கருக் கலைப்பிற்கு ரூபாய் பத்தாயிரமும், கருச் சிதைவிற்கு ரூபாய் பத்தாயிரமும் உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 494, திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.



**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் 5% ஒதுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 525, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகராட்சியில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள அரசு அலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்றவாறு சிறிய பெட்டிக் கடை, ஜெராக்ஸ், டைப்பிங் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 567, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 601, திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை பெறுவதில் ஏற்படும் குளறுபடிகளைக் களைய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 610, திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “45% மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 617, திரு. ப. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. ப. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் அரசு உதவித் தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 656, திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகள் வங்கிகளில் கடன் பெற உள்ள நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 671, திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் துறையில் 10% இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 692, திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சென்னை மாநகராட்சி, 130–வது வட்டத்தில் கே.கே. நகர் மாற்றுத் திறனாளிகள் நல மையத்திற்குத் தேவையான வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 731, திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு சிறப்புத் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 772, திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் தொகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கென்று தொழிற்பயிற்சி மையம் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 783, திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டியில் மாற்றுத் திறனாளிகளுக்கென்று தொழிற்பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 968, திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு தனியார் வேலைவாய்ப்புகளில் அதிக இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



*"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 975, திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் எங்கும் 3 மாதங்களுக்கு ஒருமுறை மாற்றுத் திறனாளிகள் முகாம் வட்டார மற்றும் நகர அளவில் நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 985, திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் ரூபாய் 5 இலட்சத்தில் மூன்று சக்கர மோட்டார் வாகனத்தை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1081, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1097, திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றுத் திறனாளிகள் தொழில் தொடங்க பிணையம் இல்லாமல் வங்கிக் கடன் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1185, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1415, திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெற உடல் ஊனத்தின் சதவீதத்தைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக



ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

***திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். போற்றுவோர் போற்றட்டும்; புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும்; ஏற்றதோர் பணி என எனதுள்ளம் ஏற்கின் அஞ்சினேனில்லேன் எனக் கொள்கைச் சிங்கமாக விளங்கும் தேசிய முற்போக்குத் திராவிடக் கழகமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் இதயமே! எங்களின் வாழ்வே! புரட்சிக் கலைஞரே! தங்களை வணங்கி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம், மாற்றுத் திறனாளிகளின் நலன் ஆகிய துறைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி எனது பேச்சைத் தொடங்குகிறேன்.

உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ உரிமை உண்டு. வளமாக, நலமாக வாழ வழி செய்து தர வேண்டியது ஓர் அரசின் கடமையாகும். ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு, அந்த நாட்டின் மனிதவள மேம்பாட்டைப் பொறுத்தே அமைகிறது. ஒரு நாட்டின் சமுதாய மேம்பாடு அந்த அரசாங்கத்தைப் பொறுத்தே அமைகிறது. மாற்றுத் திறனாளிகள் அவர்களின் உரிமைகளைப் பெறவேண்டும். வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி என அனைத்துத் துறைகளிலும் மாற்றுத் திறனாளிகளின்

---

@ 165 முதல் 301 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

திறமைக்கேற்ப தொழிற்பயிற்சி உள்ளிட்ட தேவையான பயிற்சிகளை அரசு அவர்களுக்கு அளிக்க வேண்டிய அவசியம் இப்பொழுது உள்ளது.

மாற்றுத் திறனாளிகள் வங்கியில் கடன் பெறும்பொழுது செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகையையும் அரசு செலுத்தத் தயாராக உள்ளது. ஆனால், வங்கிகள் அவர்களுக்குக் கடன் அளிப்பதில்லை. காலதாமதம் செய்து, 10 பேர் கடன் கேட்டால், ஒன்று அல்லது இரண்டு பேருக்குக் கடன் கொடுத்துவிட்டு, அதோடு அந்த ஆண்டினுடைய கடன் வழங்கும் இலக்கையே முடிவுக்குக் கொண்டுவந்து விடுகிறார்கள். நல்ல உடல்நிலை உள்ளவர்களே பல முறை போராடிப் பார்த்தும் வங்கியில் அவர்களால் கடன் பெற முடியவில்லை. இப்படியிருக்க, மாற்றுத் திறனாளிகள் என்ன செய்வார்கள்? எனவே, மாற்றுத் திறனாளிகளுக்குப் பயிற்சி அளித்தவுடன் கடன் பெறுவதற்கான விண்ணப்பத்தினை, பயிற்சி அளித்த துறையே பெற்று, கடன் பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகள் நலன் கருதி அரசு மனது வைத்தால், அவர்கள் தொழில் செய்திடத் தேவையான ஆரம்ப கட்ட முதலீட்டை அரசே முழு மானியமாக வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அரசின் உதவி. . .

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் 1994 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கென்று ஒரு சட்டத்தையே போட்டு, அந்தச் சட்டத்தைச் செயலாக்கம் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களுக்கு எல்லா நிலைகளிலேயும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பில் மட்டுமல்ல; மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரையின் அடிப்படையிலே மாற்றுத் திறனாளிகளுக்குப் பல்வேறு துறைகளிலே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையின் மூலமாகப் பார்வையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய உத்தரவுப் பத்திரத்தைக் கொடுத்த புகைப்படத்தை சமீபத்திலேகூட தாங்கள் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்து இருக்கமாட்டார் என்று கருதுகிறேன். ஒரு வார காலத்திற்கு முன்னால்தான் பார்வையற்றர்களை நேரிலேயே அழைத்து அந்த உத்தரவை அளித்தார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்திலேதான் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, வங்கிகளில் கடன் பெறுகிறபோது, மூன்றில் ஒரு பங்கு மானியத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் உதவிக் கரம் மாற்றுத் திறனாளிகளுக்குச் சென்று, தாம் ஒரு மாற்றுத் திறனாளி என்பதையே மறந்து, அவர்கள் மகிழ்ச்சியோடு வாழவும், அவர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு சரிவர அமல்படுத்தப்படுகிறதா என்பதையும் அரசு கவனித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கல்லூரி செல்லும் மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வண்டிகளை ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட அளவே வழங்கப்படுவதை மாற்றி, கல்லூரியில் முதலாண்டுப் படிப்பில் சேரும்போதே அவர்களுக்கு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நெருப்புக்கு நடுவிலேகூட நிம்மதியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தற்போதுதான் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது பேட்டரி பொருத்தப்பட்ட வண்டி. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகள் வேலைக்குச் செல்வதற்கு வசதியாக, அவர்கள் கல்லூரிக்குச் செல்வதற்கு வசதியாக, பெட்ரோலிலே ஓடக்கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட அல்ல; அவர்களுக்குப் பெட்ரோல் ஊற்றி ஓட்டக்கூடிய ஸ்கூட்டர்கள் வழங்கவேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, 2 கோடி ரூபாயை இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்து, அதன் அடிப்படையிலே பெட்ரோலிலே ஓடக்கூடிய வண்டிகளை வழங்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நெருப்புக்கு நடுவில்கூட நிம்மதியாக ஒருவன் தூக்கம் போடலாமாம். ஆனால், வறுமைக்கு நடுவில் ஒருவன் தூங்குவது என்பது இயலாத ஒன்றாகும். நெருப்பைவிட வறுமை கொடியதாகும். அதிலும் உடல் அளவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, கை, கால் செயலிழந்து, நடமாட முடியாத மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகையினைக் குறைந்தபட்சம் 2,000 ரூபாயாக அரசு வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்கள் தமிழகத்தில் இருந்தும், குழந்தைகள் ஏன் பள்ளிக்குப் படிக்க வரவில்லையே, என்ன காரணம் என்று படிக்காத மேதை கர்ம வீரர் காமராஜர் அவர்கள் ஆராய்ந்தபோது, அதற்கு வறுமைதான் காரணம் எனக் கண்டறிந்து, பிள்ளைகளைப் பள்ளிக்குப் படிக்க வாருங்கள்; உங்களுக்கு மதிய உணவு அளிக்கிறேன் என்று கூறி, உயர்ந்த உள்ளத்துடன் பள்ளிக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்தைத் தனியார் பங்களிப்போடு காமராஜர் அவர்கள் காலத்திலே கொண்டுவந்தது



ஒரு சில இடத்திலே மட்டும்தான். சென்னை மாநகரத்திலே இருக்கக்கூடிய ஒரு சில இடத்திலே மட்டும்தான் கொண்டுவரப்பட்டது அந்தத் திட்டம். ஒரு சில குடிசைப் பகுதிகளிலே. *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டமாகக் கொண்டுவரப்பட்டது 1982–இலே புன்னகை மன்னன், பூவிழிக் கண்ணன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே கொண்டுவந்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுதான் சத்துணவுத் திட்டம். அதுமட்டுமல்ல; அந்தத் திட்டத்தை ஆராய்ச்சி செய்வதற்காக, சத்துணவுத் திட்டத்தினுடைய உயர்மட்டக் குழுவிலே எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நியமித்து, அவர் தமிழ்நாடு முழுவதும் போய், ஒவ்வொரு பகுதியாக ஆய்வு செய்து, இராமநாதபுரம் மாவட்டத்திலே தேவிப்பட்டணத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய சொந்த செலவிலே சத்துணவுக் கூடத்தைக் கட்டித் தந்தார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன். *(குறுக்கீடு)* what is your point of order?

*முற்பகல் 11–15*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தை ஏற்றுக்கொள்கின்றோம். மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டது. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், 1967–இலே காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, காங்கிரஸ் ஆட்சி மாற்றத்தின்போது 28,000 பள்ளிகளிலே சத்துணவு கொடுக்கப்பட்டது என்பதைத்தான் நான் சொல்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மதிய உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டமல்ல. அதுகூட தனியார் பங்களிப்பிலே, CARE என்கிற

நிறுவனத்தின்மூலமாக அவர்களும் தங்களுடைய பங்களிப்பைத் தந்து, அதன்மூலம் கொண்டுவரப்பட்டதுதான் மதிய உணவுத் திட்டம். படிப்படியாகத் தனியார் பங்களிப்பு நிறுத்தப்பட்டு, அந்தத் திட்டமே முடங்கிப் போனது. பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே, அந்தத் திட்டத்திற்கு உயிரோட்டம் கொடுக்கப்பட்டு, அரசின் திட்டமாகக் கொண்டுவரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு திட்டம் கொண்டுவருகிறபொழுது, அது அரசின் திட்டமாகச் செயல்படுகிறபோதுதான் அதில் உரிமை கொண்டாட முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை. காமராஜர் காலத்திலே அவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையைச் சொல்கிறார்கள். அன்றைக்கு காமராஜர் அவர்கள் பதவியைவிட்டு இறங்கியபோது, 28,000 பள்ளிகளிலே மதிய உணவுத் திட்டம் நடைபெற்று வந்தது. அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் காமராஜர் என்பதைத்தான் நாங்கள் சொல்கிறோம். வேறு எதையும் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் மாண்புமிகு அமைச்சரிடம் பேசினார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாக எண்ணிவிடக்கூடாது. எங்களுடைய உறுப்பினர் என்ன பேசவிருக்கிறார் என்பதைக்கூட அவர்கள் அறிந்துகொள்ள முயற்சிக்காமல், நாங்கள் ஏதோ தவறாகச் சொன்னதைப்போல அவர் நினைக்கிறார். நாங்கள் சொல்ல வந்த கருத்து, 'பள்ளிகளுக்கு வாருங்கள், உணவு கொடுக்கிறேன்' என்று கர்ம வீரர் காமராஜர் சொன்னார். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'உணவு கொடுக்கிறேன், வாருங்கள் என்று அழைத்து அவர்களுக்குக் கல்வியைக் கொடுத்தார்' என்று சொல்ல வருகிறோம். அதற்குள்ளாக அவசரப்பட்டு தவறாக நினைக்கிறார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற பேரறிஞர் அண்ணா வழியில் வந்த, பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்திலுள்ள நன்மைகளைக் கருத்தில்கொண்டு, அந்தத் திட்டத்திற்கு மெருகேற்றும் வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சத்தான உணவு அளிக்கிறேன் வாருங்கள் என்று சொல்லி, பள்ளிக்கூடம் இல்லாத ஒவ்வொரு கிராமத்திலும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) உணவு உண்ண வந்த குழந்தைகளுக்குக் கல்வி கற்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறபோது, அந்தத் திட்டத்தை அரசின் திட்டமாகக் கொண்டுவந்து செயல்படுத்தினால்தான், அது நிலையான திட்டமே தவிர, தனியார் பங்களிப்போடு ஏதாவது ஒரு திட்டம் நடைபெற்றால், அதை நிலையான திட்டம் என்று சொல்ல முடியாது. அது இடையிலே நிறுத்தப்படலாம்; பணவீக்கம் ஏற்படலாம்; அதை அரசின் திட்டமாகக் கொண்டுவந்தது எப்போது? அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த திட்டம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Hon'ble members, please sit down. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்களுடைய புகழைப் பரப்புவதைப்போல பரப்பி, புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த திட்டம், உலகத்திலே மிக தலைசிறந்த திட்டம். இந்தத் திட்டத்தை இன்னொருவருக்கு பங்கு போடுகின்ற வகையிலே, கருத்தைச் சொல்கிறார். கர்ம வீரர் காமராஜர் கொண்டு வந்த திட்டத்தை மெருகேற்றி என்று

சொன்னாலே, அது continuity அல்ல. அவர்கள் தனியார் பங்களிப்போடு பள்ளிகளுக்கு அமெரிக்காவிலிருந்து கோதுமை வந்தது; பால் வந்தது; பள்ளிகளில் குழந்தைகளுக்குப் பால் கொடுத்தார்கள். அந்தக் காலத்திலே ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுத்தது. ஆனால், தொலைநோக்குப் பார்வையோடு கிராமப்புறங்களிலே இருக்கின்ற குழந்தைகள் பள்ளிக்கு வர வேண்டுமென practical–ஆகப் பார்த்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். கிராமத்திலிருக்கும் குழந்தைகள் ஏன் பள்ளிக்கு வருவதில்லை? மதிய உணவு சாப்பிடுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பில்லை. அங்கேயிருக்கின்ற தாய்மார்கள் கூலி வேலைக்குப் போகிறார்கள். கூலி வேலைக்குப் போகும்போது, அந்தப் பிள்ளைகளைக்கூட கூட்டிக் கொண்டு போய்விடுகிறார்கள். ஏனென்றால், பள்ளிகளில் மதிய சாப்பாடு போடுவதற்கு ஆளில்லை என்பதைப் புரட்சித் தலைவர் அவர்கள் தெரிந்துக்கொண்டார். சாப்பாடு போட்டால் அப்போது குழந்தைகள் பள்ளிக்கு வருவார்கள் என்று அறிந்து, மதிய சாப்பாடு நான் போடுகிறேன்; பள்ளிக்கு அனுப்புங்கள் என்றார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டம், சத்துணவுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அதற்கு யாரும் கூட்டோ, ஆதரவோ தெரிவித்துக்கொள்வதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தயவு, செய்து உட்கார வேண்டும். (குறுக்கீடு) Please sit down. திரு. கோபிநாத், திரு. ரெங்கராஜன், திருமதி எஸ். விஜயதரணி, அனைவரும் உட்காருங்கள். திரு. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடு). நீங்கள் வினா எழுப்பினீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினரும் பேசிவிட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கோபிநாத், உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் கோதுமையையும், பால் பவுடரையும் அமெரிக்காவிலிருந்து கொடுத்தார்கள். அதுவும் சில பள்ளிகளில்தான். குறிப்பாக, பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 28 ஆயிரம் பள்ளிகள் என்று சொன்னார். அந்த அளவிற்குக் கிடையாது. ஆனால், இப்போது புரட்சித் தலைவருடைய சத்துணவுத் திட்டம் 45 ஆயிரம் பள்ளிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றி. எங்களைவிட, அமைச்சர்கள் நினைத்தால், இன்னும் ஒருசில நிமிடங்களிலே அந்த விவரங்களையெல்லாம் அரசு அதிகாரிகள் மூலமாகப் பெற்றுவிடலாம். காமராஜர் ஆட்சியைவிட்டு இறங்கியபோது, சுமார் 28 ஆயிரம் பள்ளிகளில் சத்துணவு கொடுக்கப்பட்டது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டத்தையும், காமராஜர் அவர்களுடைய திட்டத்தையும் ஒன்றோடு ஒன்று சேர்த்து விடக்கூடாது. அன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே இருக்கிற நேரத்தில், இந்தத் திட்டத்தை அறிவிக்கின்றபோது, எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், "ஏழைக் குழந்தைகளை மதியம் பிச்சை எடுக்க வைக்கிற திட்டமாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறீர்களே; இதற்கு எங்கே நிதி இருக்கிறது?" என்று கேட்டபோது, "நிதி இந்த அரசிடத்திலே இல்லையென்றாலும், நான் மடியேந்தி பிச்சை எடுத்தாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் காட்டுவேன்" என்று சொன்னவர் புரட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு நாங்களெல்லாம் சட்டமன்றத்திலே இருந்தோம்; அப்பொழுது நீங்கள் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன். (குறுக்கீடு) திரு. கே. கோபிநாத், போதும். (குறுக்கீடு) இதற்கு மேலே இதிலே no discussion. Please sit down. (குறுக்கீடு). உங்களுடைய உறுப்பினர் அவருடைய கருத்தைப் பதிவு செய்துவிட்டார். Please sit down. (குறுக்கீடுகள்) திரு. க. தமிழழகன், நீங்கள் பேசுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. க. தமிழழகன்:** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தமிழக அரசின் நிரந்தரமான திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்) திட்டம் நிரந்தரமாக உள்ளது. ஆனால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Mr. Gopinath? குறுக்கீடு திரு. க. தமிழழகன், நீங்கள் இருங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன நடுவிலே எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு), நான் உங்களைப் பேச அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கட்சிக் கொறடா இங்கே இருக்கிறீர்கள். நீங்கள் control செய்யுங்கள். உங்கள் உறுப்பினர்களை நீங்கள் control செய்யுங்கள். (குறுக்கீடு) As a Whip, it is your duty to control your party members கொறடா நீங்கள்தான் அவர்களை control செய்ய வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் இப்படி எழுந்து நின்றால், நான் எப்படி அவையை ஒழுங்காக நடத்த முடியும்? (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டே இதுபற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. எனவே, இதைப்பற்றித் தொடர்ந்து விவாதிப்பது சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே. கோபிநாத், இறுதியாகப் பேசி முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்குள் வரவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் கருத்தைச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) திரு. கே. கோபிநாத், listen here. (Interruption) Look at me. (Interruption) என்னைப் பாருங்கள். (குறுக்கீடு) இங்கே என்னைப் பாருங்கள். உங்களுடைய உறுப்பினர் பேசிய கருத்து இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது; அமைச்சர்கள் சொன்ன கருத்துகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலே நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்? இதையே பேசிக் கொண்டிருந்தால் நேரம் வீணாகிவிடும். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்குள் வரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, எங்களுடைய உறுப்பினரும் பதில் சொன்னார். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இந்தத் திட்டத்தை introduce செய்தவர் கல்விக் கண் திறந்த காமராஜர் அவர்கள் என்பதைத்தான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை காமராஜர் அவர்கள்தான் introduce செய்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்பாகவே, நீதிக் கட்சியின் சார்பிலே, அக்கட்சியிலே இருந்த பெரியவர்கள் எல்லாம், சென்னை மாகாணத்திலே, ஒருசில பகுதிகளிலே இதுபோன்று (குறுக்கீடு) அப்போது சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்ட சில பகுதிகளிலே, அவர்களால் தரப்பட்ட உணவுதான், மதிய உணவு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தமிழக அரசின் நிரந்தரமான திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் நிரந்தரமாக உள்ளது. ஆனால், அதில் பணியாற்றும் அமைப்பாளர்கள், பணியாளர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. தமிழழகன், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) அந்த சப்ஜெக்ட் முடிந்து போய்விட்டது. நீங்கள் அதை எழுப்பி, அதற்கு அமைச்சரும் பதில் சொல்லிவிட்டார். அதோடு அதை விடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. க. தமிழழகன்:** அதில் பணியாற்றும் அமைப்பாளர்களையும், பணியாளர்களையும் நிரந்தரம் ஆக்க வேண்டும். 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் இவர்களில் பலர் பணி நிரந்தரமாகாமலேயே, ஓய்வு பெற்று விட்டார்கள். இதில் பணிபுரியும் அமைப்பாளர்களையும், பணியாளர்களையும் முழுநேர அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இவர்கள் பெற்றோர்களைப்போல, குழந்தைகளுடன் நெருங்கிப் பழகி, அவர்களது உள்ளத்தை நன்கு அறிந்தவர்களாக உள்ளனர். இப்படிப்பட்ட அனுபவம் வாய்ந்தவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், காலையிலிருந்து மதியம் வரை சத்துணவு மையப் பணிகளையும், மதியத்திற்கு மேல் அரசு சம்பந்தப்பட்ட பன்முகப் பணிகளிலும், தகுந்த. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்கள் அனைவருக்கும் சிறப்புக் காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு, சம்பளம் மற்றும் பிற படிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் அநேக மாநிலங்களில், சத்துணவுத் திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் சத்துணவுப் பணியாளர்கள் சிறப்புக் காலமுறை ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர். சத்துணவுத் திட்ட அமைப்பாளருக்கு சிறப்புக் காலமுறை ஊதியமாக ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/– வரையும், ரூ.500/– தர ஊதியமும் வழங்கப்படுகிறது. சமையலருக்கு ஊதியமாக ரூ.1,500/–லிருந்து ரூ.3,000/– வரையும், ரூ.300/– தர ஊதியமும், சமையல் உதவியாளருக்கு ரூ.950/–லிருந்து ரூ.2,000/– வரையும், ரூ.200/– தர ஊதியமும் வழங்கப்படுகிறது.



முற்பகல் 11–25

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1–4–2005 முதல் சத்துணவு அமைப்பாளருக்கு 50,000/– ரூபாயும், சமையலருக்கு 20,000 ரூபாயும் ஓய்வுபெறும் தொகையாக வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். அதன்படி, அவர்களுக்கு அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அதன் அடிப்படையில், அவர்களுக்குச் சிறப்பு ஓய்வூதியமாக முறையே ரூ.700/–, ரூ.600/– மற்றும் ரூ.500/–ம் வழங்கப்படுகிறது.

சத்துணவுப் பணியாளர்கள் அனைவருக்கும் சிறப்புக் காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு, சம்பளம் மற்றும் பிற படிகளைப் பெறுகின்றனர். மேலும், சத்துணவுப் பணியாளர்கள் அனைவரும் பகுதிநேரப் பணியாளர்களாக இருந்தபோதிலும், பிற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டில் அவர்கள் நல்லமுறையில் உள்ளார்கள் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும், இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது 150 ரூபாய் சம்பளம் வாங்கிய பணியாளர்கள், 30 ஆண்டுகள் பணி முடித்தும் ரூ.5,000/– முதல் ரூ.6,000/– வரையே சம்பளம் பெறுகின்றனர். இப்பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் ரூ.700/–, ரூ.600/–, ரூ.500/– என ஓய்வூதியம் பெறுகின்றனர். இந்த அரசு பல்வேறு உதவித் தொகைகளுக்காக ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியுள்ளபோது, இது மிகவும் குறைவான தொகையாகவே உள்ளது. எனவே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியம் குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இதேபோல், அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணி நிரந்தரமாக்கப்படுகின்ற வகையில், அங்கன்வாடி மையங்களில் சிறு குழந்தைகளுக்கெனக் கல்வி கற்பிக்கும் வகுப்புகளைத் தொடங்கி, ஆரம்பப் பள்ளிக்குச் செல்லும் நுழைவு வாயிலாக இம்மையங்களைச் செயல்பட வைத்து, இவர்களையும் முழுநேர அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள் கட்ட வேண்டும் என்பதற்காக என்னுடைய சொந்த ஊரான பெண்ணாடம் பேரூராட்சிக்கு நிதி ஒதுக்கியும், கட்டடம் கட்ட இடம் கிடைக்காததால் கட்ட முடியவில்லை. இதேபோல், ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு நிதி ஒதுக்கியும், இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலே கட்டடம் கட்ட இயலவில்லை. எனவே, இதுபோன்ற சூழ்நிலையில் இடத்தை விலைக்கு வாங்கி, அந்தப் பகுதியில் அங்கன்வாடி மையங்கள், சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதியளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினைகள் அனைத்துத் தொகுதிகளிலும் உள்ளதாகவே நான் அறிகிறேன். எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இடத்தையும் வாங்குவதற்கு அனுமதி வழங்க தக்க நடவடிக்கையினை அவசியம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு மையங்களில், தினந்தோறும் முட்டை வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப் பழம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், எந்தப் பள்ளிகளிலும் வாழைப் பழம் இதுவரை வழங்கப்படவில்லை. தினந்தோறும் பெண்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 50,14,245 மாணவ, மாணவியர் சத்துணவு



உட்கொள்கிறார்கள். அவர்களுள், முட்டை சாப்பிடாத 22,169 மாணவ, மாணவியருக்கு, அனைத்துப் பள்ளிகளிலும் வாழைப் பழம் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திட்டக்குடி தொகுதியில், நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட எந்தப் பள்ளிக்கூடத்திலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிலத்தை வாங்கிக் கொடுப்பதற்குரிய நிதி ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார். வியாபார ரீதியாக செயல்படுகின்ற செயல்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதியைக் கொடுக்க முடியாது. அரசு ஒரு வேலையை ஒப்படைக்கின்றபொழுது, அந்த வேலைக்கு அரசே நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் முறையாக சட்டமன்ற உறுப்பினருடைய நிதி சென்றடையும். அவ்வாறு இல்லாமல், வெளி இடத்தில் வியாபாரம் செய்தோ அல்லது அதனுடைய விலையை நிர்ணயம் செய்தோ கொடுக்கக்கூடிய நிலை வந்தால் அதில் தவறு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இவ்வாறு வழங்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாழைப் பழத் திட்டம் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில்

கொண்டுவந்த திட்டம் அல்ல. அது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவந்த வாழைப் பழம். அந்த வாழைப் பழங்களை, கவுண்டமணி செந்தில் வாழைப் பழம் கதை மாதிரி எல்லோரும் மொத்தமாக எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதனால், மாண்புமிகு அம்மா அதற்குப் பதிலாகத்தான் கொண்டைக் கடலை, உருளைக் கிழங்கு, பச்சைப் பயறு மூன்றையும் சேர்த்து சத்தான உணவாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டு, இப்பொழுது அந்த மூன்றும் வழங்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஊட்டச் சத்து அதிகமாக உள்ள உணவு தரப்படுகிறது. அப்படி எங்கேயாவது தரவில்லையென்றால்—உட்கார்ந்து கொண்டே சைகை காட்டிக் கொண்டிருந்தால், நாங்கள் பதில் சொல்ல முடியாது—எந்தப் பள்ளியிலாவது தரப்படவில்லை என்று குற்றச்சாட்டுகளைச் சொன்னால், உடனே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன், சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வகையான உணவு வகைகளை, விதவிதமாக அனைத்துச் சத்துக்களும் குழந்தைகளுக்குக் கிடைக்கும் வகையில், சுவையான உணவைக் குழந்தைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக, 2010–2011 நிதியாண்டில் பயன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 66,41,557 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2011–2012 நிதியாண்டில் 61,62,911 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால், 4,78,644 பயனாளிகள் குறைந்துள்ளதாகவும், இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி கூடுதலாக இருப்பதை அரசு கவனமுடன் பரிசீலிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பெண் திருமண உதவித் திட்டங்களில், ஆண்டு வருமானம் ரூ.24,000/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக ஒரு விதவைப் பெண்மணி, கட்டடம் கட்டும் சித்தாள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்



திரு. க. தமிழழகன், நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து இருபது நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு மாண்புமிகு அமைச்சர்கள், பதிலுரையாற்ற இருக்கின்றார்கள். திரு. க. தமிழழகன், உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். சாதரணமாக ஒரு பெண்மணி கட்டடம் கட்டும் சித்தாள் வேலைக்குச் சென்றால்கூட, குறைந்தபட்சமாக ஒரு நாளைக்கு ரூ.200/– சம்பளமாகப் பெறுகிறார். இதனால் இந்தத் திட்டத்தில் பயனடையும் அனைவருக்கும் குறைந்தபட்ச ஆண்டு வருமானம் ரூ.60,000/– ஆக உயர்த்தித் தர வேண்டும். மேலும், பத்தாம் வகுப்பு வரை படிக்காத பெண்கள் அதிக அளவில் உள்ளனர். எனவே, அரசினுடைய விதிமுறைகளைக் கொஞ்சம் தளர்த்தி அவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன், நன்றி சொல்லி உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) திரு. க. தமிழழகன், நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் எனது தொகுதி பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திட்டக்குடி தொகுதியின் அடிப்படை தேவைகளைப்பற்றி இந்த மாமன்றத்தில் கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

திட்டக்குடி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இத்தொகுதி மாணவ, மாணவிகள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிப் படிப்பைத் தொடர வழியில்லாமல் உள்ளனர். இவர்களின் பரிதாப நிலையைக் கருதி இத்தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை அரசு கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி தொகுதியில் பெண்கள் வன்கொடுமைகளாலும், வரதட்சணை கொடுமைகளாலும் பாதிக்கக்கூடிய சூழலில் உள்ளனர். மகளிரைக் காக்கும்பொருட்டு இத்தொகுதியில் மகளிர்

காவல் நிலையம் மிகவும் அவசியமாக அமைக்க வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி தொகுதி மக்கள், மாவட்டத் தலைமை இடமான கடலூர் செல்ல பல சிரமங்களை அடைகின்றனர். மக்களின் தேவைகளையும், நன்மைகளையும் கருத்தில்கொண்டு கடலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கடலூரை ஒரு தலைமையிடமாகவும், விருத்தாசலத்தை ஒரு தலைமையிடமாகவும் கொண்டு செயல்பட ஏற்கெனவே பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதனை அரசின் பார்வைக்குக் கொண்டு வருகின்றேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு தக்க நடவடிக்கையினை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், திட்டக்குடி தொகுதியில் உள்ள மங்களூர் மற்றும் நல்லூர் ஒன்றியங்களை நிருவாக நலன் கருதி, மூன்று ஒன்றியங்களாகப் பிரித்து புதிய ஒன்றியமாகப் பெண்ணாடம் ஒன்றியத்தை உருவாக்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி தொகுதியில் திட்டக்குடியில் உள்ள நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லை. பொதுமக்கள் பல்வேறு வழிகளில் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர். நானும் சென்ற வரவு–செலவுக் கூட்டத் தொடரிலே இந்தக் கோரிக்கையினை முன்வைத்துள்ளேன். மீண்டும் அரசிடம் இந்தக் கோரிக்கையினை முன்வைக்கின்றேன். இதுகுறித்து ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி தொகுதியில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுவதால் அரசுக் கூட்டுறவுக் காகித ஆலை ஒன்றை இங்கு அமைத்திடவும், அதன்மூலம் மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திடவும், அரசு முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி தொகுதியிலுள்ள வெலிங்டன் ஏரி, கடலூர் மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரியாகும். பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் இதனால் பாசன வசதி அடைந்து வருகின்றன. இந்த ஏரியின் கரை மிகவும் பலவீனம் அடைந்து வருகிறது. பல வருடங்களுக்கு முன், டான்டன் குழுவினர் இந்த ஏரியை ஆய்வு செய்து ஏரிக்கரையைப் பலப்படுத்த பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. இருந்தும் பலன் கிடைக்கவில்லை. இன்றைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த ஏரிக்கரையைப் பலப்படுத்தவும், ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்திக் கொடுக்கவும் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் பல ஆயிரம் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள வழிகிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



திட்டக்குடி தொகுதியில் திட்டக்குடியிலிருந்து ஆவட்டி வழியாக சிறுபாக்கம் செல்லும் சாலையில் புலிவலம் அருகே உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டித் தரவும், வேப்பூரிலிருந்து இறையூர் செல்லும் சாலையில் மேலூர் ஓடையில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைத்திடவும், பெண்ணாடத்திலிருந்து தீவளூர் வழியாக விருத்தாசலம் செல்லும் சாலையில், தீவளூர் ஓடை தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டித் தரவும், அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டக்குடி தொகுதியில் உள்ள கிராமங்களில் தரமான தார்ச் சாலை அமைக்கவும், தொகுதி மக்களுக்குத் துவர்ப்பில்லாத நல்ல குடிதண்ணீர் கிடைக்கவும், தொகுதியில் புதிய பேருந்து இயக்கவும், நவீன வசதிகளுடன்கூடிய 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனைகளாக இத்தொகுதியில் உள்ள மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தவும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத கிராமங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும், வீட்டு மனை வழங்கப்படாமல் இருக்கும் பல கிராம ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கவும், சீர்செய்யப்படாமல் கிடக்கும் தொகுப்பு வீடுகளைச் சீர் செய்யவும், தீயணைப்பு நிலையங்களைப் பெண்ணாடம் மற்றும் தொழுதூரில் அமைத்திடவும் அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன், நன்றி சொல்லி உரையை முடித்து விடுங்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கு உரையாற்ற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த எங்கள் Captain அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

***திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கழக நிரந்தர பொதுச் செயலாளரும், தமிழகத்தின் நிரந்தர முதல்வருமான டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் இதய தெய்வம் அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் தீய சக்திகளை வீழ்த்தி மீண்டும் தமிழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.–இன் ஆட்சியினை மலரச் செய்து, தமிழர்களின் வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டிய எங்கள் கழகத்தின் காவல் தெய்வமே! கடைகோடி தொண்டனுக்கும் பதவி தரும் கழகத்தின் அணையா விளக்கே! பெண்ணின் உரிமைக்காகப் போராடும் மாதர் குல மாணிக்கமே! இந்திய நாட்டின் எதிர்க்காலத்தை நிர்ணயிக்கப் போகும் எங்கள் தேசியத் தலைவியே! ‘தானே’ புயலால் தவித்த மக்களைக் காப்பாற்றிய எங்கள் முதலமைச்சரே! உன்னதமான பல திட்டங்களைச் செயலாற்றுவதில் உலகிற்கே முன்னோடியாக திகழும் எங்கள் அன்னையே! தமிழகம் வணங்கும் தலைமகளே, எங்களைத் தலை நிமிரச் செய்திட்ட எங்கள் தமிழ் அன்னையே! விடியலை நோக்கி எங்கள் பயணத்தில் வெளிச்சம் காட்டிய வேதா நிலையத்து வீரத் தாயே! இந்திய அரசியல் வானின் நம்பிக்கை நட்சத்திரமாய், தென்னக அரசியல் வானின் விடிவெள்ளியாய், தமிழக அரசியல் வானின் ஒரு முழு நிலவாய் உலாவரும் எங்கள் அன்னையே! அம்மா நீங்கள் இருக்கும் காலம் எங்களுக்கு அளித்த கற்பக விருட்சம்! காணக் கிடைக்காத காலப் பெட்டகம்! “எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற உயரிய எண்ணத்தோடு எந்நாளும் எந்நேரமும் இந்நாட்டு மக்களுக்கு அல்லும், பகலும் அயராது பாடுபடும் அன்புத் தாயே! நீங்கள் வீற்றுள்ள இந்த அவையில் நாங்களும் அமர்ந்து பணியாற்றக்கூடிய, நாங்கள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அரிய வாய்ப்பை வழங்கியிருக்கிறீர்கள் அம்மா! உங்கள் திருப்பாதங்களுக்குக் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

*முற்பகல் 11–35*

ஆன்றோர்களும், சான்றோர்களும் அமையப்பெற்ற இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மீண்டும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.



மத யானைகளைக்கூட வீழ்த்தும் மகத்துவத்தை எங்களுக்கு ஏற்படுத்தும் மாதரசியே! தாகம் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தல்களையும், அன்பைப் பெருக்கும் அன்னதான திட்டங்களையும், வாடிய விவசாயிகளுக்கு வட்டித் தள்ளுபடியையும், மக்கள் வளம்பெற ஏட்டில் அடங்கா எழுச்சிமிகு திட்டங்களைச் செயல்படுத்தும் எங்கள் அன்னையே! உங்களின் வெற்றிச் சுவடுகள் மறைவதும் இல்லை; மக்கள் வேதா நிலையத்தை மறப்பதும் இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதச் சுவடுகளை வேதச் சுவடுகளாக நினைத்து வணங்கி, சமூக நலன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றுகிறார், தயவுசெய்து உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் உரையைத் தொடருங்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு அம்மாவின் வழிகாட்டுதலுடன் உருவாக்கப்பட்டு, அவரது நல்லாசியுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை நாட்டில் உள்ள சான்றோர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகிறார்கள். நமது மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் தலைமுறை மட்டுமல்ல; அடுத்த தலைமுறையும் சிறப்பாக வாழ வேண்டுமென இன்றைக்குத் திட்டம் தீட்டித் தந்துள்ளதைப் பார்த்து உலகமே வியக்கின்றது; போற்றிப் பாராட்டுகின்றது.

பெண்கள் கல்வியறிவு பெற்றால், சமுதாயமே கல்வி பெறும் எனப் பெண்கள் கல்வியை ஊக்குவிக்கும் முறையில், 10 ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண்ணின் திருமணத்திற்குத் தாலிக்கு 4 கிராம் தங்கமும், அதனுடன் ரூ.25 ஆயிரமும், (மேசையைத் தட்டும் ஒலி) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்ணின் திருமணத்திற்கு 4 கிராம் தங்கமும், ரூ.50 ஆயிரம் ரொக்கமும் அளித்து, ஏழைப் பெற்றோர்களின் சுமையை இறக்கிவைத்த எங்கள் நடமாடும் மனித தெய்வமே! மாண்புமிகு

அம்மாவின் ஆட்சியை நன்றியுடன் பெண்கள் சமுதாயம் போற்றி வாழ்த்துகின்றது.

தென் மாவட்டங்களில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே இருப்பின் அக்குழந்தைக்கு வழங்கப்பட்ட வைப்புத் தொகையை 22,200 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இரு பெண் குழந்தைகள் இருப்பின் ரூ.15,200–லிருந்து ரூ.25,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தற்போது வந்த 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்புத் தொகுப்புத் திட்டம் அறிவித்து, ரூ.790 கோடியே 18 இலட்சம் செலவில் முழுமையான நிலவரி இரத்து மற்றும் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் ரூபாய் 1,000 கோடியில் அறிவித்து ஆணையிட்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மாவே!

நடந்து முடிந்த இடைத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்துக் கட்சிகளையும் டெபாசிட் இழக்க வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டமே வியக்கின்ற வகையில் மாபெரும் வெற்றிக் கனியை அம்மாவிற்கு பரிசாகத் தந்தார்கள், சங்கரன்கோவில் தொகுதி மக்கள் அம்மா.

மேலும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 4 ஜோடி சீருடைகள் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்துப் பள்ளிக் குழந்தைகளுக்கும் விலையில்லாக் காலணிகள், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவச் செல்வங்களுக்குப் புத்தகப் பை மற்றும் விலையில்லா நோட்டுப் புத்தகமும் வழங்குகின்ற இத்தகைய சிறப்பு தமிழகத்தில் இதுவரை கல்வித் துறை வரலாற்றில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எந்தவொரு மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு இந்த நிதியாண்டில் 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதைப் போற்றிப் பாராட்டாத தாய் உள்ளங்களே இல்லை அம்மா.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநங்கையர்களுக்கு சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக திருநங்கையர் நல வாரியத்திற்கு ரூபாய் ஒரு கோடியை ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஆதரவற்ற ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக ரூ.25 ஆயிரம் நிதியுதவியும், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும், மேலும் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும், 4 கிராம் தங்கமும் வழங்கப்படும் என அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 11–40

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டு வரும் பராமரிப்புத் தொகையை 500/– ரூபாயிலிருந்து 1,000/– ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அறிவித்துள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணம் ஏதுமின்றி பயணச் சலுகையினை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். மேலும், சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளிகளாகச் சேர்க்கப்படுவர் என்று அறிவித்த மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மதுராந்தகம் தொகுதியில் அடங்கிய மதுராந்தகம் ஒன்றியத்தின் மூன்றே மூன்று கோரிக்கைகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மதுராந்தகம் ஒன்றியத்தில் சுமார் 15 கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையான 'கத்ரிச்சேரி' பாலம் மழைக் காலங்களில் மூன்று மாத காலத்திற்குப் போக்குவரத்து செல்லமுடியாத அளவிற்குப் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, பள்ளி மாணவ, மாணவியர்கள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். அப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, நடப்பு நிதியாண்டில் இந்தத் தரைப் பாலத்தை மேம்பாலமாக மாற்றித்தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவன்புடன்

கேட்டுக்கொள்கிறேன். மேலும், மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் போதிய இட வசதி இல்லாமல் பழமையான கட்டடத்தில் இயங்குவதால், மக்களின் பணி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. ஆகவே, அலுவலக நெருக்கடியைப் போக்க புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியிலுள்ள மக்கள் பெரிதும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றார்கள். இன்னும் அங்குள்ள மக்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியே உள்ளனர். எனவே, தொகுதி மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் வகையில் அங்கு ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிவரும் காலங்களில் இந்திய தேசியத்தைக் காக்கவும், இந்திய தேசிய மக்கள் எல்லோர் வாழ்விலும் ஒளியேற்ற இருக்கும் எங்கள் தாயே! அல்லும் பகலும் நாட்டு மக்களின் நலனை தனது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அன்பு நெஞ்சம் உண்டு; யாருக்கும் அஞ்சிடாத வீரம் உண்டு; சொன்னதைச் செய்து முடிக்கும் துணிவும் உண்டு. இவையெல்லாம் ஒருங்கே பெற்றவர் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா நீங்கள் மட்டும்தான். எங்கள் அம்மா தன்னலம் இல்லாமல், தமிழக மக்களைக் கண் துஞ்சாமல், கண்ணை இமைபோல் காத்துவரும் பொன்மனத் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை மீண்டும் ஒரு முறை வணங்கி எனது வணக்கத்தையும், நன்றியையும் பணிவுடன் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் 10 ஆண்டுகளாக மாநிலச் செயலாளராகவும், மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றிய தோழர் திரு. என். வரதராசன் அவர்களின் மறைவிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். கடந்த ஆண்டு சமூக நலத் துறைக்கு ரூ.2,842 கோடி ஒதுக்கப்பட்டது. 2012–2013 ஆம் தற்போதைய ஆண்டில் ரூ.3,820.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மதிய உணவு, அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு 1,69,000 குடும்பங்களுக்கு திருமண உதவி என்ற இலக்கினை அறிவித்து, அதில் 1,72,000 குடும்பங்களுக்கு திருமண உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது போன்ற சில அம்சங்களை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், உயிர் வாழும் உரிமை, உயிரினம் அடிப்படை வசதிகளுக்கான உரிமை, கண்ணியமாக சமூகத்தில் வாழும் உரிமை, ஆகியவற்றை நமது தேசத்தில் உறுதிப்படுத்துவதில்தான் சமூகத்தில் குழந்தைகள் சிறந்த குடிமகன்களாக வளர முடியும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

2011 ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி 28 மாநிலங்களிலும், 7 யூனியன் பிரதேசத்திலும் 27,00,000 ஊழியர்களின் உழைப்பில் சுமார் 2,200 கோடி ரூபாய் செலவில் நடைபெற்றது. ஆண், பெண் சராசரி விகிதம் என்பது தேசிய சராசரியைவிடத் தமிழகத்தில் கூடுதலாக உள்ளது மகிழ்ச்சி. 0.6 வயதுக்குட்பட்ட ஆண், பெண் குழந்தைகளின் தேசிய சராசரி 1000–க்கு 914–ஆக உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் 1000–க்கு 946 என்று உள்ளது மகிழ்ச்சிக்குரியது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வாறு முன்னேறியுள்ள நமது மாநிலத்தில், சில மாவட்டங்களில் அந்த சதவீதம் தேசிய சராசரியைவிடக் குறைந்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடலூர் மாவட்டத்தில் 1000–க்கு 895, அரியலூர் மாவட்டத்தில் 1000–க்கு 892, தருமபுரியில் 1000–க்கு 909 என ஆண், பெண் குழந்தைகள் விகிதம் உள்ளது. இதைக் கவனத்தில்கொண்டு இந்த விகிதத்தை அந்த மாவட்டங்களிலே அதிகப்படுத்த, குறிப்பாகத் தொட்டில் குழந்தை திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு தகவலை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற பெண் சிசு சம்பந்தமான பிரச்சினைகள் அம்மா அவர்களின் கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அரியலூர், பெரம்பலூர், கடலூர் போன்ற 5 மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள் உருவாக்கப்பட்டு, அது இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, பெண் சிசுக் கொலை என்பது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் இப்போதுள்ள புள்ளிவிவரக் கணக்கைத்தான், இங்கே சராசரி கணக்கு எடுத்ததற்குப் பின்பு இந்த விவரத்தைத் தெரிவிக்கின்றேன். இருந்தாலும் நான் அதைச் சரிசெய்து பார்த்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் மாநில அரசு 10 சதமான நிதி என்பதை 2015–க்குள் 50 சதமான நிதியை ஏற்றுக்கொள்ளவேண்டுமென மத்திய அரசு, மத்திய திட்டக் குழுவிற்கு சிபாரிசு செய்துள்ளது. பொருள்களுக்குப் பதிலாக பணம் வழங்குவது என்ற உலக வங்கியின் பரிந்துரையை மத்திய அரசு அமலாக்க முயன்று வருகிறது.

மழலையர் பள்ளிகளைத் தனியார்மயம் ஆக்கவேண்டுமென்றும், தன்னார்வக் குழுக்கள்மூலம் நடத்தப்படவேண்டுமென்றும் மத்திய அரசு கூறுகிறது. இதனை நம்முடைய மாநில அரசாங்கம் எதிர்க்க முன்வரவேண்டும். குறிப்பாக, மத்தியில், ஆட்சியில் அங்கம் பெற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், இதுபோன்ற மக்கள் விரோத நடவடிக்கையை ஏன் எதிர்க்க மறுக்கிறது என்பதை



திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவுபடுத்த வேண்டும். இங்கேகூட மாண்புமிகு காங்கிரஸ் நண்பர்கள் சத்துணவு சம்பந்தமாக பல்வேறு வாதத்திலே ஈடுபட்டார்கள். இன்றைக்கு மத்திய அரசு தொடர்ச்சியாக மாநிலத்தினுடைய உரிமைகளைப் பறிப்பதும், மாநிலங்களுக்கு நிதியாதாரத்தைக் குறைப்பதும், கேட்ட நிதி தர மறுப்பதும் என்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் தமிழகத்திற்குப் பெறவேண்டிய நிதியையும், இதுபோன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளையும் தடுக்க முன்வரவேண்டுமென்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் பிள்ளைகள் இடைநிற்றல் விகிதம் 0.1 இலிருந்து 1.2 சதவீதமாக உயர்ந்துள்ளது 2010–2011 இல். எனவே, தமிழ்நாட்டில் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஆகியவற்றிலுள்ள அரசுப் பள்ளிகளில் எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகளைத் தொடங்கிட நடவடிக்கை எடுக்கவேண்டும். எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகள் முழுவதும் தனியார்தான் நடத்திவருகிறார்கள். இவ்வகுப்புகளை அரசுப் பள்ளிகளில் தொடங்குவதன்மூலம் இலவசமாகப் படிக்கும் வாய்ப்பை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உருவாக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலேகூட, மழலையர் பள்ளி என்பது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சமூக நலத் துறையின்கீழ் சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்கள் 50,433 செயல்படுகின்றன. குழந்தைகளுக்கு மாசற்ற சுற்றுச்சூழலை உருவாக்க, புகையில்லா சமையல் அறை கொண்டுவர, சமையல் எரிவாயு, குக்கர் உள்ளிட்டு, 9,940 குழந்தைகள் மையங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 3,232 என திட்டமிடப்பட்டது. அதனுடைய விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும், படிப்படியாக அனைத்து குழந்தைகள் நல மையங்களையும் மாசற்ற புகையில்லா சமையலறையாக கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும். அவர்களுக்கு முறையான ஊதியத்தினை வழங்கவேண்டும். ஓய்வூதியம் 3,500 ரூபாய் வழங்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கன்வாடி, சத்துணவில் 28,000 பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவித்தார்கள். அந்தப் பணியிடங்களில் எத்தனைப் பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால் விழுப்புரத்திலே இருக்கக்கூடிய மகேஸ்வரி என்கின்ற நபர் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்.

3 கி.மீ.க்குள் அங்கே சத்துணவு அங்கன்வாடிப் பணியாளர்கள் நியமிப்பது இரத்து செய்யப்படவேண்டுமென்று அவர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். மேல்முறையீட்டை தமிழக அரசு செய்திருக்கிறது. வெகு விரைவிலே அதற்குரிய தீர்ப்பு வந்தவுடன் அந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு இரா. அண்ணாதுரை அவர்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** 2011–2012 ஆம் ஆண்டு 25 இலட்சம் மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறிகள் வழங்குவது இலக்கென்று தீர்மானிக்கப்பட்டது. இதுவரை வழங்கப்பட்ட விவரம் நான் அறிந்த வரையில் அந்த அறிக்கையில் இடம்பெறவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மாற்றுத் திறனாளிகளுக்கான மனவளர்ச்சிக் குன்றிய நபர்களுக்கு திறன் வளர்ச்சி 60 சதவிகிதம் என்பதை 45 சதவிகிதம்



என்று அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். அதேநேரத்தில், அண்டை மாநிலங்களிலுள்ளதைப்போல, 40 சதவீதமாக மாற்ற வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கின்றேன். அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் அரசு வேலையில் 3 சதவீதம் ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளதைக் கண்காணிக்க, தலைமைச் செயலாளர் தலைமையில் குழுவோடு மாற்றுத் திறனாளிகள் பிரதிநிதிகளையும் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகளுடைய நல வாரியம் கூட்டப்படவில்லை. 2011 பிப்ரவரி மாதத்தில் கூட்டப்பட்டது. அதற்குப் பின்னால் இதுவரையிலும் அந்த நல வாரியம் கூட்டப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே அமைக்கப்பட்டிருந்த அந்த மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் செல்லரித்துப் போன செல்லாத வாரியமாக மாறிப் போனது. காரணம், தன்னுடைய குடும்ப உறுப்பினர் கனிமொழியை உறுப்பினராகச் சேர்ப்பதற்கே ஒரு புதிய சட்டத்தையே உருவாக்கி, அந்தக் கமிட்டி உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்தக் கூட்டம் கூட்டப்பட்டதே தவிர, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, மாற்றுத் திறனாளிக்குப் பயன்படாத இந்த வாரியம் தேவையில்லையென்று கலைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் இந்தப் புதிய வாரியம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு இரா. அண்ணாதுரை அவர்கள். உரையை முடியுங்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதைப்போல, நம்முடைய மாற்றுத் திறனாளிகளுக்கான அந்த உதவித் தொகையைப் பெறுவதிலே இருக்கக்கூடிய பல்வேறுவிதமான நிபந்தனைகளைத் தளர்த்தவேண்டும். குறிப்பாக, வருவாய்த் துறையோடு இணைக்கப்படும்போது அந்தத் தொகையைப் பெறுவதிலே பெரும் சிரமம் இருக்கிறது. நான்கூட

சமீபத்தில் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேன். இரண்டு மாதமான பிறகும்கூட இதுவரையில் 5 பேருக்குத்தான் வழங்கியிருக்கிறார்கள். எனவே, வருவாய்த் துறையிலேயிருந்து இது அடியோடு மாற்றப்படவேண்டும். சமூக நல வாரியத்தின்மூலமாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். திருநங்கையர்கள் நல வாரியம் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய அந்த உதவித் தொகையைப் பெறுவதிலே வருவாய்த் துறைக்கோ, மாற்றுத் திறனாளிகள் துறைக்கோ எந்தவிதமான சங்கடமும் இல்லை. அவர்கள் அங்கே நல வாரியத்தின்மூலமாக உதவித்தொகை பெறுவதிலே காட்டக்கூடிய ஊனத்தின் சதவீதம், மருத்துவர்களின் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் இப்படிப்பட்ட சான்றிதழ்கள் பெறுவதிலே காலதாமதம் ஏற்படுகிற காரணத்தால், அந்த நிதியுதவி வழங்கப்பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** என்னிடம் இப்போது கடிதம் இருக்கிறது. எல்லாத் தகுதியும் இருந்தும், நம்முடைய அமைச்சர் அவர்கள் தலையிட்டதற்குப் பின்னாலேயும் அந்தக் கடிதம் தகுதியானவருக்கென்று எல்லாம் சொன்னதற்குப் பின்பும், சமூக நல அதிகாரி தலையிட்டதற்குப் பின்பும், வருவாய்த் துறையின் காரணமாக, 9 பேருக்கு மதுரையில் நிறுத்தப்பட்டிருக்கிறது; இன்னும் வழங்கப்படவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற குறிப்புகள் அரசிற்கோ மற்றும் அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ நீங்கள் தந்திருப்பீர்களானால், உடனடியாக நடவடிக்கை



மேற்கொண்டிருக்க முடியும். ஆனால், 60 சதவீதம் திறன் வளர்ச்சி அவர்களுக்கு இருக்கப்படவேண்டுமென்ற விதிமுறைகள் இருக்கின்றன. 45 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதுபோன்ற ஊனமுற்றவர்கள் இருக்கின்றார்களேயானால், அதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரால், எங்கெங்கு கொடுக்கப்படவில்லையென்ற கடிதத்தைப் பேரவைத் தலைவர்மூலமாக எங்களுக்கு அனுப்பினீர்களானால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடித்துவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** திருநங்கைகளின் நல வாரியம் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்து சட்டமாக்கப்பட வேண்டும். திருநங்கையர்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஒரு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

***திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்றால், ஈகை தவழும் முகத்தால், இரக்கம் சுரக்கும் மனத்தால், வாரிக் கொடுக்கும் கரத்தால், வாகைசூடும் களத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) பரந்த கடலின் அறிவால், குளிர்ந்த நிலவின் பரிவால், பொழியும் மழையின் கருணையாய், எரியும் நெருப்பின் கர்ஜினையாய், உருகும் மெழுகின் தியாகத்தால், உருளும் பூமியின் உழைப்பால், எல்லாம் சேர்ந்ததோர் வடிவில், எங்கள் அம்மா என்னும் ஓர் உருவில். (மேசையைத் தட்டும் ஒலி) முறை செய்து காக்கும் முதல்வராய், மக்களை முன்நின்று காக்கும் மூலவராய்த் திகழ்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி)

“தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு”

என்ற வள்ளுவன் வாக்குக்கு இலக்கணமாய், ஓய்வுக்கு உறக்கம் தந்து, தொலைநோக்குத் திட்டம் தந்த தீர்க்கத்தரிசியே, தமிழகத்தின்

தலைமகளே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அனைத்திலும் எளியவளாகிய என்னை, இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக சமூக நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச அனுமதி அளித்த, நான் அனுதினமும் வணங்குகின்ற கடவுள், என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) வணங்கி, அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மங்கையராய்ப் பிறப்பதற்கே நாங்கள் மாதவம் செய்திருக்கின்றோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக, உலக அளவிலும், தேசிய அளவிலும் பெரிதும் பாராட்டப்பெற்ற 'தொட்டில் குழந்தைத் திட்டம்', 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' மூலம் பெண் சிசுக் கொலையைத் தடுத்து, குழந்தைகள் உயிரைக் காப்பாற்றியதோடு மட்டுமல்ல தாயே, அதையும் மீறி நடந்த தாயின் கருவறையைக் கல்லறையாக மாறியதைத் தடுக்க தடைச் சட்டத்தைத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) தங்கநிகர் தலைவியே, சிங்கநிகர் சிகரமே எங்கள் அம்மா.

முற்பகல் 11–55

குடும்பத்தில் ஒரு பெண் குழந்தையோடு குடும்ப நலம் ஏற்பின், அக்குழந்தையின் எதிர்கால உதவிக்குச் செய்யப்பட்ட முதலீடு 22,200 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியும், இரண்டு பெண் குழந்தைகள்மட்டும் இருந்து ஆண் குழந்தை இல்லாத பட்சத்தில் குடும்ப நலம் ஏற்பின், அந்த ஒவ்வொரு குழந்தையின் எதிர்காலத்திற்காக முதலீடு செய்யப்பட்ட 15,200 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தியும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு 105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் பெண் சமுதாயமே கடமைப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, நலிந்த மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமே, அடித்தட்டு மக்களின் அகம் மகிழ, ஏழை எளிய மக்களுக்கு ஏற்றம் தரும் புதிய வரலாற்றைப் படைத்து, தரணியில் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்து, தாலிக்குத் தங்கத்தைத் தாய்வீட்டுச் சீதனமாகத் தந்து, திருமண உதவித் தொகையாகப் பணமும் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) பார் புகழும் பாரதமே, பாரதி கண்ட புதுமையே, இதற்காக 740.39 கோடி ரூபாயை ஒதுக்கிட்ட உலகாளப் பிறந்த உன்னதத் தாயே, அம்மா (மேசையைத் தட்டும் ஒலி)



பாசத் தாயின் பரிவுகள், மகளிரின் சுகாதாரம் காக்க விலையில்லா சானிட்டரி நாப்கின் வழங்க 55 கோடி ரூபாயை ஒதுக்கியதோடு, மாணவச் செல்வங்களின் படிப்பிற்காகக் கணினியும், காலணியும், புத்தகத்தோடு பையும், வண்ணப் பென்சிலும், வரலாற்று வரைபடமும், சீருடையும், மிதிவண்டியும் அளவின்றி அள்ளித் தரும் (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி மாணவர்களுக்கு இது கழகத்தின் ஆட்சியோ! இல்லை, இல்லை எங்கள் கலைமகளின் ஆட்சிதான்! (மேசையைத் தட்டும் ஒலி) ஓலைக் குடிசைகளுக்கு ஒளி விளக்கைத் தந்ததுபோல், பசியால் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திய கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஒரு நாட்டின் எதிர்காலமே குழந்தைகள்தான்; அவர்களுக்குச் சுகாதாரமான சூழ்நிலையில் நல்ல உணவும், கல்வியும் அளிக்கப்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு சத்துணவு தந்த சரித்திர நாயகன் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர்களால் கண்டெடுக்கப்பட்ட அருந்தவப் புதல்வியாய், அட்சயப் பாத்திரமாய், சீரிய நோக்கத்தோடு சத்துணவுக்குப் புத்துயிர் தந்து 1,510.44 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து ஏழை மாணவர்களின் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற எங்கள் அம்மாவே!

> 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் – இங்கு
> இல்லாமை இல்லாத நிலை வேண்டும்
> வல்லான் பொருள்குவிக்கும் தனிவுடைமை – நீங்கி
> வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை'

என்கின்ற வகையில் மக்களும் இந்த மண்ணும் பயன்பெற வேண்டும் என அல்லும் பகலும் அயராது உழைத்திடும் எங்கள் அன்னையே! 35 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கிட 2,000 கோடி ரூபாயும், மேலும், 1.5 இலட்சம் நிலமற்ற ஏழை கிராமப்புற பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, தலா நான்கு வெள்ளாடுகளும், பால் உற்பத்தியை அதிகரிக்க இந்த ஆண்டு 12,000 பயனாளிகளுக்குக் கறவைப் பசுக்களும் வழங்க 244 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்து, பெண் குலத்தை வாழவைத்த கோ மாதாவைத் தந்த எங்கள் குல மாதாவே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) முதியோர் ஓய்வூதியத்தை 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி 26.41 இலட்சம் முதியோர்கள் பயன்பெறும் வகையில் 3,820.25 கோடி ரூபாயை ஒதுக்கி முதியோர்களுக்குக்கூட

தாயாக, மகளாக, தான் இருக்கின்றேன் என்று நிரூபித்துக் காட்டிய சமூக நீதி காத்த வீராங்கனையே, அன்னை தெரசாவின் அருள் வடிவே, ஔவை மூதாட்டியின் அறிவுருவே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

மாற்றுத் திறனாளிகள் நலன் காக்க 206.12 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ள, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும், மகத்தில் பிறந்து ஜெகத்தை ஆளும் எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, பரிதாபப்படும் இதயத்தைவிட உதவுகின்ற கரங்களே உன்னதமானது என்கின்ற கொள்கையை ஏந்தி வாழ்பவர் எங்கள் அம்மா. அதனால்தான் தன் மண்ணை, தன் உறவுகளை, தன் உடைமைகளை இழந்து, புகலிடம் தேடி வந்திருக்கும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கிட ஆணையிட்டு, அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையையும் உயர்த்தித் தந்து, அவர்களுடைய பிள்ளைகள் பட்டயப் படிப்பு படிப்பதற்கு ஏற்றமும் தந்து, குடியிருக்க 2,500 வீடுகள் கட்ட 25 கோடி ரூபாயை ஒதுக்கிய தமிழகத்தின் தலைவியே எங்கள் அம்மா! தமிழ், தமிழர் எனக் கபட நாடகம் ஆடி, ஒப்பாரி வைத்திட்ட மைனாரிட்டி ஆட்சி செய்த திரு. கருணாநிதி போன்ற கபட வேடதாரிகளிடையே, தமிழர்களுக்காகவும், தமிழ் இனத்திற்காகவும் தன்னையே அர்ப்பணித்திடும் தமிழினத்தின் தலைமகளே, தங்கத் தாரகையே எங்கள் அம்மா. அம்மா, சவால் விட்ட சாத்தான்களான துன்மார்க்கர்களுக்கு முடிவு துயரமே! பாவங்களை, விதைத்தவர்களே அறுத்துக் கொண்டிருக்கிறார்கள் அம்மா. எங்கும் ஊழல், எதிலும் ஊழல், ஊழலோ ஊழல் என்று ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தை ஊரெங்கும் உறங்க வைத்துவிட்டார்கள் அம்மா, தமிழக மக்கள். ஆனால், “நன்றி மறவாத நல்ல உள்ளம் போதும்; அதுவே என்றும் என் மூலதனம் ஆகும்” என்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதுபோல், நன்றி மறவாத தமிழக மக்கள் உங்கள் பக்கம் இருக்கும்வரை தாங்கள்தான் அம்மா தமிழகத்தின் நிரந்தர முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, முப்பெரும் தேவியராய் ஓர் உருவில் வந்திட்ட முதல்வரே, கல்லில் வடித்திட்ட



தெய்வமும், கனிந்து உதவிட, கருணை புரிந்திட, காலம் பிடிக்கும் என்றுதானோ கை கூப்பிய எங்கள் கரங்கள், கை கூப்பிய எங்கள் கரங்கள், விலகும் முன்னே வரம் தரும் எங்கள் அன்னையே! வரம் தரும் எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த எளியவள் அம்மா தங்களின் பாதத்தில் இருப்பது எனது வரமே! அன்னையை வணங்கி அமர்கின்றேன்.

எனது தொகுதி கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்ற தனித் தொகுதியில் கல்லூரிகள் இல்லாததால் மாணவ, மாணவிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அரசுக் கலைக் கல்லூரி ஒன்றும் மற்றும் பொறியியல் கல்லூரி ஒன்றும் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி வேண்டுகிறேன்.

அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி வேண்டுகிறேன்.

நீதிமன்றங்கள் தனித் தனியே பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன. எனவே, ஒருங்கிணைந்த புதிய நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்ட பரிந்துரை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி வேண்டுகின்றேன்.

மிகவும் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வரும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் வணங்கி வேண்டுகிறேன்.

சீர்காழி தொகுதி, விவசாய மக்கள் பயன்பெறும் வகையில் உள்ள பெருந்தோட்டம் ஏரியை தூர்வாரி ஆழப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி வேண்டுகிறேன்.

சீர்காழி தொகுதி கடலோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களான தென்னாம்பட்டினம், பெருந்தோட்டம், காட்டூர், மகேந்திரபள்ளி, பழையாறு போன்ற கிராமங்களில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி வேண்டுகிறேன்.

சீர்காழி அரசுப் பொது மருத்துவமனை மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால், அரசுப் பொது மருத்துவமனையை மக்களின் வசதிக்காக மேம்படுத்தித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கையின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலத் துறை என்பது தொட்டில் குழந்தை முதல் முதியோர் வரை தொடர்புள்ள மக்களோடு மிக நெருக்கமான துறையாகும். சமூக நலத் துறைமூலம்தான் வாழ்க்கையில் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட பல்வேறு நபர்களுக்கு உரிய நிவாரணம் கிடைத்து வருகிறது. சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மக்களும் இன்றைக்கு தங்கள் பெண் குழந்தைகளுக்கு உயர் கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என்பதை இந்தத் துறைதான் உணர்த்தியுள்ளது. தமிழக அரசால் இன்றைக்கு 10 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் உயர் நிலைக் கல்வி கற்ற பெண் குழந்தைகள் திருமணத்தின்போது நான்கு கிராம் தங்கத்துடன் உதவித் தொகை பெற முடிகிறது. பெண் குழந்தைகள் உதவித் தொகை பெற அரசு பல விதிமுறைகளை வகுத்துள்ளது. இதில் பெற்றோரின் ஆண்டு வருமானம் 24,000 ரூபாய்க்குள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் ஒன்று. கிராம நிருவாக அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் அவர்கள் இதை ஏற்க மறுப்பதால் பல பெற்றோர்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். எனவே இதைப் பெறுவதற்குச் சரியான முறையில் அரசு வழிகாட்ட வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன். கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்களுக்குச் சமூக நலத் துறைமூலம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதைப் பெறுவதற்கு 50 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



சமூகத்தில் திருமணம் ஆகாத பல பெண்களும், அதேபோல, திருமணமான பின்பும் பாதிக்கப்பட்டோரும் இதனால் பயன் அடைய முடியும். மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் முதியோர்கள் இன்றைக்குப் பராமரிப்பு இல்லாமல், அரசு உதவித் தொகை பெற, ஆயிரக்கணக்கில் விண்ணப்பம் செய்து வருகின்றனர். இவர்களின் நலன் கருதி, ஒரு மாவட்டத்திற்கு ஒரு மையம் என்ற அளவில், முதியோர் பராமரிப்பு மையங்களை ஏற்படுத்திட வேண்டும். தமிழகத்தில் சில சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்கள் செயல்படுவது...

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது சமீபத்திலே முதியோர், குழந்தைகளை ஒருங்கிணைத்து "முதியோர் ஒருங்கிணைந்த வளாகம்" என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்தத் திட்டம் வெகு விரைவிலே மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரத்தால் நிறைவேற்றப்படவிருக்கின்றது. அதுமட்டுமல்ல; முதியோர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயே வாரத்திற்கு ஒரு முறை, மாதத்திற்கு ஒரு முறை விண்ணப்பம் செய்து அவர்களுக்கு உரிய தகுதிகள் இருப்பின், அங்கேயே, மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாகவே வேண்டிய உதவிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தமிழக அரசால் 2012–2013 ஆம் ஆண்டு பள்ளிக் குழந்தைகளுக்கு 4 செட் பள்ளிச் சீருடைகள் வழங்க வேண்டும் என்ற அறிவிப்பு ஏழை மக்களை மகிழ்ச்சியுறச் செய்துள்ளது. இந்தச் சீருடைகள் தற்போது பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் நிலையில், தற்போதைய நிறங்களிலேயே தொடருமா என்ற சந்தேகம் பள்ளி

நிருவாகங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தேகத்தைப் போக்கி, பள்ளி தொடங்கும்போதே சீருடைகள் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தேகத்திற்கெல்லாம் ஓர் அரசாங்கம் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இது மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற உன்னதமான திட்டம். இதுவரை இந்திய துணைக் கண்டத்தில், எந்த மாநிலத்திலும் 4 சீருடைகள் தந்ததாக வரலாறு இல்லை, சரித்திரம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுத் திட்டம் இந்தத் திட்டம். இதில் போய் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தால், எப்படிச் சந்தேகத்திற்கு பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள். நீங்கள் இதைக் கவனிக்க வேண்டும். அந்த மாதிரி சந்தேகத்தின் அடிப்படையில் பேசக் கூடாது.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் ரூ.1,000 பெற, ஒவ்வொரு வட்டத்திலும் ஆயிரக்கணக்கில் விண்ணப்பித்து வருகின்றனர். வட்டாட்சியர் அலுவலகத்தில், ஒரே நபர் மீண்டும் மீண்டும் மனு கொடுத்துக்கொண்டிருக்கின்றார். எனவே, மனு செய்த ஒரு மாதத்திற்குள் விசாரணை செய்து, அவர்களுக்கு வழங்கலாம் அல்லது வழங்க இயலாது என்பதைத் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே 26,41,000 பேர்கள், முதியோர், விதவைகள், ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுகின்ற ஒரே மாநிலம், மனிதநேயமிக்கத் தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற மாநிலத்திலேதான்



பெறுகிறார்களே தவிர, வேறு எந்த மாநிலத்திலும் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) பெரிய மாநிலங்களாக இருக்கின்ற எந்த இடத்திலும் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படவில்லை. மனிதநேயத்தோடு இவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கரம் நீட்டிக் கொடுத்து வாழ வைக்கின்ற மனித தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறைமூலம் குறைந்தபட்சம் 3 மாதத்திற்கு ஒரு முறை நலத் திட்ட உதவிகள் வழங்குவதைப்போல, வருவாய் பிர்கா அளவில், முதியோர் ஓய்வூதியம், விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் உதவித் தொகை பெற இவற்றிற்காகச் சிறப்பு முகாம் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால், பொதுமக்களின் தேவையற்ற அலைச்சல் மிச்சமாவதுடன், பயனாளிகளுக்கு விரைவாகப் பயன் கிடைத்திடும்.

கலப்புத் திருமணம் மட்டுமே சரியான ரீதியான, சாதி ரீதியான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் என்பதை ஏற்று, கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்றாற்போல் கட்டாய அரசுப் பணி, ஓராண்டிற்குள் வழங்கிட விதிகளைத் திருத்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றக்கூடிய பணியாளர்களின் குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு முதல் பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டம் வரை கல்வித் தகுதி பெற்றவர்களாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். பிற துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகிறது. சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றுபவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படுவதில்லை. சத்துணவுப் பணியாளர்கள் வாழ்வில் முன்னேற்றம் காண, கல்வித் தகுதிக்கேற்ப அனைத்துப் பிற துறைகளில் இட ஒதுக்கீடு செய்து பதவி உயர்வு வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். முதியோர் ஓய்வூதியம் ஆயிரம் ரூபாய் என்று இருக்கும் நிலையில், சத்துணவுத் திட்டத்தில் 27 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றி ஓய்வு பெற்ற சத்துணவுப் பணியாளர்களுக்கு, பொறுப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர்

[திரு. கே. உலகநாதன்] [2012 ஏப்ரல் 11

ஆகியோருக்கு முறையே ரூ.700, ரூ.600, ரூ.500 என்ற முறையிலே ஒட்டுமொத்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. குறைந்த இந்த ஓய்வூதியத்தில் வாழ்க்கை நடத்த முடியவில்லை.

*பிற்பகல் 12–10*

ஓய்வு பெற்ற வயதான சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் எதிர்காலத்தினைக் கணக்கில்கொண்டு மாத ஓய்வூதியத்தை இரட்டிப்பாக்கி அகவிலைப் படியுடன் வழங்க வேண்டும். இனி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு, இறுதி மாத ஊதியத்தில் 50 சதவீதத்தை ஓய்வூதியமாக வழங்கிட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினர் நடத்தும் தாய் மொழிக் கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்குச் சத்துணவு வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் 3% இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தவும், அரசு சார்பில் தற்காலிகமாகச் செய்யப்படும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நான் சொன்னேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் ஒரு வார காலத்திற்கு முன்னால் கல்வித் துறையின் மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கக்கூடிய காட்சியைப் புகைப்படங்கள் மூலமாகப் பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள். தலைமைச் செயலாளரின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு, அதிலே 17 துறையினுடைய அதிகாரிகளை இணைத்து, அவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து வேலைவாய்ப்பிலே 3% இட ஒதுக்கீடு மாற்றுத் திறனாளிகளுக்குத் தரப்பட வேண்டுமென்று உறுதி செய்து, முதற்கட்டமாக ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 300–க்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



2012 ஏப்ரல் 11]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் கூறியதுபோல, சிறுபான்மையினர் தாய்மொழிக் கல்வி நிலையங்களை கிராமங்களில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் சத்துணவுத் திட்டம் இதுவரை செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தப் பள்ளிகளை இலவசமாக நடத்துகிறார்கள். எனவே, அந்தப் பள்ளிகளில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு சத்துணவு கிடைக்காமல் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அந்தக் குழந்தைகளுக்கும் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மைப் பிரிவினர் நடத்துகின்ற பள்ளிக்கூடங்களில் படிக்கின்றவர்களுக்குச் சத்துணவு கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டுள்ளார். இதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நடைமுறைக்கும், சட்டத்திற்கும் உட்பட்டு வரும் என்றால், அம்மாவுடைய அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலன் கருதி, அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. கல்வி கற்றவர்களுக்கு இன்றைக்கு இட ஒதுக்கீடுமூலம் வேலைவாய்ப்பு மற்றும் பல சலுகைகள் கிடைக்கின்றபோதிலும், கல்வி ஏதும் கற்காத 100 சதவீதம் ஊனமுற்றவர்கள்கூட, அரசுச் சலுகைகளைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இதுபோன்ற நபர்களுக்குச் சுய தொழில் தொடங்கிட எந்த நிபந்தனையும் இல்லாமல் கடன் வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள். (குறுக்கீடு) திரு. உலகநாதன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன், உரையை முடியுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளில் 60 சதவீதம் ஊனம், 40 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி, ஊனத்திற்கு ஏற்ற வகையில் உதவித் தொகைகளை வழங்கிட வேண்டும் என அன்போடு கேட்டு, பேச வாய்ப்பளித்தற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

***திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்திலே எனது முதல் உரையினைப் பதிவு செய்கிறேன்.

அளவில்லா கருணையும், ஆற்றல்மிகு சிந்தனையும், இணையில்லா போற்றலும், ஈழத் தமிழர் மக்களுக்குமே உரிமையில் சமம் என ஊரறிய தீர்மானம் போட்டு, எந்நாளும் உழைக்கின்றார், ஏழை எளியோர் உயர்வு பெற, ஐயமற்ற சிங்கமாய், ஒருவருக்கும் தீங்கு இழைக்காத எங்கள் தங்கமாய், ஓய்வின்றி உழைத்து வரும் ஔடதமாய், பகை நீக்கும் எங்களின் ஆயுத எழுத்தாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், எட்டுக் கோடித் தமிழர்களின் உயிர் நாடியாம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். ஏதோ ஒரு மூலையிலே சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைக் கிளைக் கழகச் செயலாளராகவும், சென்னை சட்டக் கல்லூரி கழக மாணவர் அணித் துணைத் தலைவராகவும், 2006 ஆம் ஆண்டு தைத் திங்கள் முதல் நாளிலே திருவள்ளூர் மாணவர் அணி மாவட்டச் செயலாளராகவும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே பொன்னேரி தொகுதியின் வேட்பாளராகவும் 32,210 வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெறச் செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா



அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இந்தப் பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) என்னையும் உறுப்பினராக அமர வைத்ததற்கு ஈரேழு ஜென்மத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நானும், என் சந்ததியினரும் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என்று கூறி, மாண்புமிகு தமிழக முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்கள் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

*பிற்பகல் 12–15*

வானத்தில் எத்தனை கோடி விண்மீன்கள் மின்னினாலும், ஒரு நிலவுக்கே சிறப்பு. நிலவினிலே பௌர்ணமிக்கோ தனிச் சிறப்பு. அப்படித்தான் எங்கள் அம்மா. விண்மீன்களில் நிலவாய், நிலவுகளில் என்றும் பௌர்ணமியாய் நின்று, அரசாட்சியிலே வளையாத செங்கோலாய், எல்லாருக்கும் பெய்யும் மழையென இல்லாமல் எப்பொழுது, எங்கு, யாருக்கு எவ்வளவு என்று அளவு அறிந்து, ஆராய்ந்து வழங்குவதிலே கருணைத் தாய் அம்மா. அம்மாவின் திட்டங்கள் அனைத்தும் மாணிக்கமாய் மின்னும் வேளையிலே, எதை எடுப்பது, எதை விடுவது என்ற திகைப்பிலே, மற்ற உறுப்பினர்களைப்போல நானும் திகைக்கின்றேன். என்றாலும் எனக்குக் கிடைத்த வாய்ப்பிலே ஒரு பானை சோற்றுக்கு சில சோறு பதம் (சிரிப்பு) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாய் ஒன்றிரண்டை இம்மாமன்றத்திலே பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா சொல்வது, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

**திரு. பொன். ராஜா**: 'தமிழ், தமிழ்' என்று போலி கோஷமிட்டு தமிழர்களை ஏமாற்றலாம் என்று, தள்ளாத வயதிலும் தடுமாறி, தமிழர்களின் திருநாள் தேதியை மாற்றியவர்கள், மத்தியிலே தமிழர்களின் உண்மையான உணர்வுகளைப் புரிந்துகொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் சித்திரை முதல் நாளைத் தமிழர் திருநாளாக அறிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) இத்திருநாளை உழவர் பெருவிழாவாக அறிவித்து, உலகுக்கே உணவளித்த உழவர் பெருமக்களுக்கு அறுசுவை உணவளிக்க உத்தரவிட்ட, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் இதய சிம்மாசனத்திலே நீங்காத

இடம்பெற்று தமிழகத்தின் இதய தெய்வம் அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

சமூக நலத் துறையிலே, சேவை இல்லங்களிலே பயிலும் மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டுக்கு பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் வழங்கியும், தொழில் படிப்புக்கு 50 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கியும், ரூ.34 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாணவச் சமுதாயம் என்றும் கடமையுணர்வோடு இருக்கும்.

இதேபோன்று ஆசிரியர் பயிற்சி பெறும் செவிலியர் பயிற்சி மாணவர்களின் நலனுக்காக ரூபாய் 25 இலட்சம் ரூபாய், தகவல் தொடர்பு கல்வி பயில்பவர்களுக்கு 32 மாவட்டங்களிலே இரண்டு இலட்சம் வீதம் 64 இலட்சம் ரூபாய், அரசுக் காப்பகங்களிலே உள்ள சமையல்கூடங்கள் சுகாதாரமான முறையிலே அமைய' 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுச் செயல்படுவதிலே சமூக நலனிலே அம்மா அவர்களின் பேரன்பைப் பறைசாற்றுவதாக உள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண நிதியுதவித் திட்டத்தின் உச்சவரம்பு நீக்கப்பட்டு அனைவருக்கும் திருமண உதவி என்ற வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழைகளின் ஏந்தலாகத் திகழ்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மனவளர்ச்சி குன்றிய 14 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் 10 மாவட்டங்களிலே தொழிற்பயிற்சியுடன் கூடிய இல்லங்கள் துவக்கவிருப்பது அவர்களைத் தன்னம்பிக்கை உள்ளவர்களாக ஆக்கவும் உதவும். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். பொன்னேரி தொகுதியிலே சுமார் 250–க்கும் மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியவர்கள் உள்ளார்கள். ஆகவே, பொன்னேரியில் ஒரு பயிற்சி மையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளையும் சமமாகப் பாவிக்க வேண்டும்; அவர்களுக்கும் சம வாய்ப்பு வழங்க வேண்டும்; அவர்களும் மற்றவர்களைப்போல வாழ்க்கையிலே உயர வேண்டுமென்ற உயரிய நோக்கத்திற்காக, மாணவ மாணவிகளுக்குச் சுமார் 44 இலட்சம் ரூபாய் செலவிலே மடிக் கணினி 560 மாணவ மாணவிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதும், செவித்திறன்



பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்குக் காதொலிக் கருவிகள் வெளியில் தெரியாதவண்ணம் எளிதாகப் பொருந்துமாறு வழங்கவும், மேலும் அவர்களின் படிப்பை ஊக்குவிக்கும் வகையிலே மாநில அளவிலே 12 ஆம் வகுப்பிலே முதலிடம் பெறுபவருக்கு முதல் பரிசாக ரூபாய் 18,000/–உம், இரண்டாம் இடம் பெறுபவருக்கு ரூ.12,000/–உம், மூன்றாம் இடம் பெறுபவருக்கு ரூபாய் 9,000/–உம் வழங்கப்படும் என்பதும் மிகச் சிறப்பான அம்சங்களாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கு ரூபாய் 35.70 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது தனிச் சிறப்பாகும். பூவிருந்தவல்லியிலே செயல்படும் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, விடுதி, சமையல் அறை, பிரெய்லி அச்சு இயந்திரம் பழுது பார்ப்பது உள்ளிட்டவற்றுக்கு ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்து, பார்வையற்றோர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கல்விக் கண் திறந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

இதேபோன்று தொழுநோயால் அவதியுறும் நோயாளிகள் மருத்துவ உதவி பெறவும், அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கவும் ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்தது சிறப்பு. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். பொன்னேரியில், தொழுநோயாளிக் காலனியில் சுமார் 250 தொழுநோயாளிகள் உள்ளார்கள். இவர்களுக்கு மருத்துவ உதவி மையம் அமைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சமூகப் பணி என்பது எப்பொழுதும் சகிப்புத் தன்மை கொண்டதாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் இருக்கும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து அரசு இல்லங்களுக்கும் விளையாட்டுப் பொருட்கள் வாங்க, ரூபாய் 1.30 இலட்சம் மற்றும் தியானம், சித்திரம் வரைதல், தோட்டம் அமைத்தல் உள்ளிட்ட அவர்களின் மன இறுக்கத்தைக் குறைப்பதற்கும், செயல்பாடுகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 2.60 கோடியையும் ஒதுக்கி, ஒரு சமூக அறிஞராகத் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவை தவிர, பெண்கள் கல்வியை ஊக்குவிக்கும் வகையிலே தாலிக்கு 4 கிராம் தங்கம், 10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு

ரூபாய் 25 ஆயிரமும், படித்து பட்டம் பெற்ற பெண்களுக்கு ரூபாய் 50 ஆயிரமும், முதியோர் உதவித் தொகை மாதம் ரூ.500/–லிருந்து ரூ.1,000/– என்ற (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, மக்கள் நலன்களை செயலாற்றுவதிலே ஒப்பற்றத் தலைவியாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, என் தொகுதிப் பிரச்சினைகளைச் சமர்ப்பித்து, அமர்கிறேன்.

**சாலை மேம்பாடு:** மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு, மீஞ்சூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட T.H சாலையிலிருந்து N.H.5 சாலைக்குச் செல்ல பொன்னேரி பேரூராட்சியின் வழியாகச் செல்ல வேண்டும். இந்தப் பகுதியானது பொதுமக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாகவும், இந்தப் பகுதியில் அதிகமான அளவிற்கு நீளமான கண்டைனர் லாரிகள், கனரக வாகனங்கள் செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க தடபெரும்பாக்கம் வழியாக கிருஷ்ணபுரம் பகுதியில் சுமார் 3 கி.மீ. தொலைவில் புறவழிச் சாலை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரி தொகுதி மீஞ்சூர் ஒன்றியத்தில் அத்திப்பட்டு, வட சென்னை அனல் மின் நிலையம் முதல் பழவேற்காடு சுற்றுலாத் தலம் வரை உள்ள சாலை சுமார் 12 கி.மீ. தொலைவு உள்ள யூனியன் சாலை குறுகிய சாலையாக உள்ளது. அந்தச் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி அகலப் பாதையாக அமைத்துத் தரும்படியும், இந்தச் சாலையின் வழியாக வட சென்னை அனல் மின் நிலையம், எண்ணூர் துறைமுகம் L&T கயல்கட்டும் நிலையம், பழவேற்காடு சுற்றுலாத் தலம் உள்ளது. தற்போது இந்தச் சாலையைச் சுற்றி வருவதற்கு சுமார் 45 கி.மீ. வரை சுற்றி வர வேண்டியுள்ளது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிக முக்கியமான தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ள இப்பகுதிக்கு, சென்னை பாரிமுனையிலிருந்து அத்திப்பட்டு, காட்டுப்பள்ளி வழியாக சுற்றுலாத் தலமாக உள்ள பழவேற்காடு பகுதிக்குப் புதிய வழித் தடத்தில் மாநகரப் பேருந்து வசதி செய்து தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



மீஞ்சூர் ஒன்றியத்தில் அண்ணாமலைசேரி வழியாக சுண்ணாம்புகுளம் செல்லும் சாலையில் சிறுவகால் தரைப் பாலம் உள்ளது. மழைக் காலங்களில் தண்ணீர் அதிகமாகச் செல்வதால் அந்த வழியாக பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் பள்ளிப் படிப்பு பாதிப்பதுடன், பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் அவர்கள் அந்தச் சாலை வழியாகச் செல்ல முடியாத நிலை உள்ளது. இந்தப் பகுதியில் மேம்பாலம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரியிலிருந்து ஆரணி ஆற்றின் குறுக்கே குன்னமசேரிக்கு மேம்பாலம் அமைக்கவும், ஆரணி மற்றும் பழவேற்காடு பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் அதிகம் வசிக்கும், மீன்பிடித் தொழிலைத் தவிர வேறு எதுவும் செய்யத் தெரியாத பழவேற்காடு மக்களின் தலைமுறை செழிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையில் பாலவாக்கம், காசிமேடு ஆகிய பகுதிகளில் செயல்படும் மீன் வளத்தைக் கண்டறியும் கடல் சார் மேலாண்மைத் திட்டத்தை பழவேற்காடு பகுதியில் அமைத்துத் தர, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, பொன்னேரி தொகுதி மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**புதிய குடிநீர் திட்டம்:** திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தனித் தொகுதியில் அடங்கியது மீஞ்சூர் ஒன்றியம். இங்கு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்புவரை சென்னை மாநகருக்கு சென்னை குடிநீர் வடிகால் வாரியம் ஆழ்துளை கிணறுகள்மூலம் இராட்சத பைப் லைன் அமைத்து குடிநீர் கொண்டு செல்லப்பட்டது. பெரும்பாலும், சென்னை நகர மக்களின் குடிநீர்த் தாகத்தைத் தீர்த்த பொன்னேரி தொகுதியில் அடங்கிய பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பேரூராட்சிகள் 55 கிராம ஊராட்சிகளின் கடல் பகுதிக்கு அருகில் குடிநீர் எடுக்கப்பட்டதால் நிலத்தடி நீர் வறண்ட நிலையில், கடல் நீரான உவர்ப்பு நீர் பூமியில் புகுந்து தண்ணீர்ப் பகுதி உவர்ப்புத் தன்மை கொண்டதாக மாறியது. சென்னைக்குக் குடிநீர் நீண்டகாலமாக இராட்சத கிணறுகள்மூலம் விநியோகம் செய்யப்பட்டு, இன்று குடிநீரின்றி

மீஞ்சூர் ஒன்றியத்தில் அடங்கிய 55 கிராம ஊராட்சிகள், பொன்னேரி, மீஞ்சூர் பேரூராட்சிகளின் சுமார் 2.50 இலட்சம் மக்கள் நல்ல குடி தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவர்களுக்காகப் பல்வேறு ஊராட்சிகளை உள்ளடக்கி கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு, கொசத்தலை ஆற்றின்மூலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டாலும் இந்நீர் உவர்ப்புத் தன்மை கொண்டதாக உள்ளது.

போதிய அளவு மக்களுக்குக் குடிநீர் வழங்குவது சிரமமாக உள்ளது. கருணை உள்ளம் படைத்த எங்கள் தாயே! நீங்கள் பொன்னேரி தொகுதியில் அடங்கிய மீஞ்சூர் ஒன்றியம், சோழவரம் ஒன்றியம் ஆகிய பகுதிகளுக்கு தங்களின் பொற்கால ஆட்சியில் தண்ணீருக்காக ஏங்கித் தவிக்கும் எங்கள் தொகுதி மக்களுக்குக் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் அல்லது எதிர்காலத்தையும் கணக்கில்கொண்டு நீண்டதொரு திட்டமான பொன்னேரி தொகுதிக்கு பெரியபாளையம் பகுதியில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து புதிய திட்டம் துவக்கி மக்களின் ஜீவாதாரத்திற்குப் பயன்படும் குடிநீரைத் தரமானதாகவும், சுவையானதாகவும் வழங்க தங்கள் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**கடலோரக் காவல் படை நிலையம் அமைக்க வேண்டும்:** திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியை உள்ளடக்கிய மைய பகுதியாக நீண்ட கடற்கரையைக் கொண்டது பழவேற்காடு பகுதி. இயற்கை வளங்கள் கொண்டதாக விளங்கும் இந்த இடத்திற்குப் பல்வேறு வெளிநாட்டைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் பகுதியைத் தன்னகத்தே கொண்ட இயற்கைச் சூழலைக் காண்பதற்காக, தமிழகம் மற்றும் இதர வெளி மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வந்தவண்ணம் உள்ளனர். இவர்களில் பலர் படகு வாயிலாகச் சென்று பார்வையிடுகின்றனர். மீனவர்களின் உதவியுடன் கடல் பகுதிக்கும் செல்கின்றனர்.

தற்போது தடை செய்யப்பட்டிருந்தாலும் பழவேற்காடு பகுதியிலுள்ள 35–க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களிலிருந்து மீன் பிடித்தல் தொழிலுக்காக விசைப் படகு, கட்டுமரங்கள், இயந்திரங்களைக் கொண்டு இயங்கும் படகுகள், நாட்டுப் படகுகள்மூலம் மீனவர்கள் கடலுக்குச் செல்கின்றனர். மீன்



பிடித்தல் தொழில் முடிந்தவுடன் திரும்பும்போது இடம் தவறி மீன்பிடி எல்லையைக் கடந்து செல்கின்றனர். இதனால் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். மேலும், இரு கோஷ்டிகளாகச் செல்லும் நிலையில் மீன்பிடித்தலின்போது ஏற்படக்கூடிய தகராறுகளால் மோதல் உருவாகும் வாய்ப்புகளைத் தவிர்க்கும் வகையிலும், கடலுக்குச் செல்லும் மீனவர்களின் விவரங்களை அறியும் வகையிலும் மீனவர்களின் நலன் கருதி, கடலோரக் காவல் படை அமைத்து மீனவர்களைக் கண்காணிக்க, பழவேற்காடு பகுதியான முகத்துவாரத்தில் கடலோரக் காவல் படை நிலையம் அமைக்க வேண்டும். மேலும், பக்கிங்காம் கால்வாய்ப் பகுதியிலிருந்து இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய உவர்ப்பு நீர் ஏரியாக விளங்கும் பழவேற்காடு ஏரியினுள் சென்று கடலில் மீன் பிடித்தலுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் மீனவர்களுக்கு உண்டு. அப்போது பழவேற்காடு ஏரியினுள் செல்லும்போது, ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட பக்கிங்காம் கால்வாயில் உள்ள சுங்கச்சாவடி மையத்தை அடைந்து அதன்வழியாக நீர்வழிப் போக்குவரத்தைத் துவக்கி, பல்வேறு தொழில்கள்மூலம் வருவாய் ஈட்டப்பட்ட பகுதியில் தினந்தோறும் மீன்பிடி தொழிலுக்கு செல்லும் மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் கொடுத்து அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்க வழிவகை செய்வதுடன் மீன்பிடி தொழில் மற்றும் நீர்வழி போக்குவரத்திற்கு உதவ வேண்டும். இதனால் கடலுக்குச் சென்று மீன்பிடி தொழில் செய்வோரும் இதர பணிகளுக்கு நீர்வழியைப் பயன்படுத்துவோரைக் கண்டறிவதுடன் பொருளாதாரத்தை உயர்த்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொன்னேரி கோட்டத்திற்கு சொந்த அரசு அலுவலகக் கட்டடங்கள்:** ஒருங்கிணைந்த செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 2 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. அன்று சைதாப்பேட்டை வருவாய்க் கோட்டத்தில் பொன்னேரி தாலுகா உள்ளடக்கிய பகுதியாக இருந்த நிலையில், மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டதால் பொன்னேரி வருவாய்க் கோட்டம் உருவாக்கப்பட்டது. அப்போதுமுதல் இந்தக் கோட்டத்தில் செயல்படும் அரசு அலுவலகங்கள் பல தனியார் கட்டடங்களில் வாடகையில் இயங்கி வருகின்றன.

மேலும், அரசு, திட்டங்கள் தீட்டி ஏழை எளியோருக்கு அரசின் உதவிகள், நன்மைகள் கிடைக்கும்வகையில் பல்வேறு அரசுத் துறைகள் புதிதாக உருவாக்கப்பட்டு, புதிய அரசு அலுவலகங்கள் தனியார் வாடகை இடத்தில் செயல்பட்டு, இட நெருக்கடிக்குள்ளாகி வருகின்றன. இதனால் அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைய காலதாமதம் ஏற்படுகிறது; பொதுமக்களுக்கும் சிரமங்கள் ஏற்படுகின்றது.

பொன்னேரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் தனித் தனியே ஐந்து இடங்களில், பொன்னேரி கல்வி மாவட்ட அலுவலர் அலுவலகம், மீன்வளத் துறை, புள்ளியல் துறை, கூட்டுறவுச் சங்கம், வேளாண்மைப் பொறியியல் துறை, தொழிலாளர் நலத் துறை, வணிக வரித் துறை, சுனாமிக்குப் பிறகு நிலைத்த வாழ்வாதாரம் அலுவலகம், கூட்டுறவுச் சரக அலுவலகம், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை உட்பட பல்வேறு மாநில அரசு அலுவலகங்கள், மத்திய அரசு அலுவலகங்கள் ஆகியவை தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

இட நெருக்கடியால் தவிக்கும் பொன்னேரி வருவாய்த் துறை வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம், நில அளவை அலுவலகம், இயற்கை இடர்ப்பாடு சிறப்பு தாசில்தார் அலுவலகம், பத்திரப் பதிவுத் துறை அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் ஆகிய பல அரசு அலுவலகங்களில் பொதுமக்கள் சென்று பல்வேறு அரசுத் திட்டங்களைப் பெறுவதிலும், முறையீடுகள் செய்வதிலும், சான்றிதழ்கள் பெறுவதிலும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். காலங்காலமாகச் செயல்பட்டுவரும் அரசு அலுவலகங்கள் பழுதடைந்து காணப்படுகின்றன. சுதந்தரமடைந்து எல்லைகள் பிரிக்கப்பட்டு மாநிலத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு வருவாய் மாவட்டத்தில் தாலுகா அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்ட அதே இடத்தில் குறைவான மக்கள்தொகை கொண்டநேரத்தில் உருவாக்கப்பட்ட அலுவலகங்களில் இப்போது அதே இடத்தில் இட நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன.

அரசு அலுவலர்கள் எண்ணிக்கை உயர்ந்தபோதும், பணியில் ஈடு கொடுக்கக்கூடியவகையில் மேஜைகள், நாற்காலிகள் அமைத்து பணி செய்ய இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது.



பொதுமக்கள் பயனடையும் வகையில் பொன்னேரி தொகுதி மக்களுக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் அ.தி.மு.க–வின் கோட்டையாக விளங்கும் எங்கள் தொகுதியில், தாயுள்ளம் கொண்ட அம்மா காட்டும் நபருக்கே வெற்றி வாகை சூட்டி மகிழும் மக்களின் பகுதியில் உள்ள உலகநாத நாராயணசாமி அரசுக் கலைக் கல்லூரிக்கு 64 ஏக்கர் தனியார் பட்டா நிலம் ஒதுக்கப்பட்டு 1962–இல் கல்லூரி துவக்கப்பட்டது.

இக்கல்லூரியின் அருகே சென்னையிலிருந்து பொன்னேரி பகுதிக்கு வருகைதரும் மக்களின் நன்மைக்காக சாலை வசதிக்காக நிலம் நெடுஞ்சாலை துறைக்கு சிறிய அளவில் ஒதுக்கப்பட்டது. இதன் கிழக்கு பகுதியில் அரசு நிலமும், தமிழ்நாடு மின்வாரியத்தின் மின் கம்பங்கள் அமைக்க சிமெண்ட் போஸ்ட் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அருகில் காலி இடங்கள் உள்ளன. இந்த அரசு இடங்களும், கல்லூரியின் நிலமும் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தி இப்பகுதியில் பொன்னேரி கோட்டம் மற்றும் தாலுகா அலுவலகம் உட்பட பல்வேறு அரசு அலுவலகங்கள் அமைத்து தொகுதி மக்கள் பயனடையும்வகையில் அன்பின் பிறப்பிடமாம் அரவணைப்பு கொண்ட ஏழை மக்களின் தாயே, நீங்கள் கருணை வைத்து தங்களின் பொற்கால ஆட்சியில் புதிய அரசு அலுவலகக் கட்டடங்களை உருவாக்கி பொன்னேரி தொகுதியின் வரலாற்றில் நீங்கா இடம் பெறச் செய்ய, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

**சட்டம்-ஒழுங்கு:** அன்பின் சிகரமாய் விளங்கி அரவணைக்கும் தாயே! உங்கள் பொற்கால ஆட்சி சமூக விரோத சக்திகளுக்கு அணு அளவும் இடம் கொடுக்காத சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுவதில் உள்ள தனது உறுதிப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ள நிலையில் 20.75 கோடி ரூபாய் செலவில் 39 நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்தியதற்கும், பல்வேறு மாவட்டங்களில் 30,071 புகார்களின்மூலம் 724.22 கோடி ரூபாய் மதிப்புடைய நிலங்களை மீட்டவதற்கும், வழக்குகளை விசாரிக்க 25 தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளதற்கும் கோடானு கோடி நன்றியினை அம்மாவின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பொன்னேரி தொகுதியில் அடங்கிய துணைக் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டில் இயங்கும் பொன்னேரி

உட்கோட்டத்தில் போதிய அளவு காவலர்களை நியமிக்கவும், பற்றாக்குறையைப் போக்கவும் தமிழக வரலாற்றில் முதன்முதலாக ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் பழவேற்காடு எனும் புலிகாட் பகுதியில் காவல் நிலையம் இருந்து, பின்னர் இந்த இடத்தில் இன்றுவரை காவல் நிலையம் இல்லை. அதிக மக்கள்தொகை கொண்ட பகுதியாகவும், சுற்றுலாத் தலமாகவும், வியாபாரத் தலமாகவும் விளங்கும் பழவேற்காட்டில் மீண்டும் புதிதாகக் காவல் நிலையம் அமைக்கவும், வளர்ந்து வரும் தொழிற்சாலைகள், கம்பெனிகள், அரசு நிறுவனங்கள் மற்றும் அத்திப்பட்டு பகுதியில் காவல் நிலையம் அமைக்கவும், சோழவரம் காவல் நிலைய எல்லையை வரையறை செய்து இரண்டாகப் பிரிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பில் சமர்ப்பிக்கிறேன்.

**பழவேற்காடு பகுதியில் மீன்பிடி துறைமுகம், தேசிய கடற்பூங்கா அமைத்தல்:** தமிழகத்தின் வட பகுதியாக திருவள்ளூர் மாவட்டம் விளங்குவதில் 27.9 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீண்ட அழகிய கடற்கரையாக விளங்குகின்றது. இம்மாவட்டத்தில் பொன்னேரி தொகுதியில் அடங்கிய பழவேற்காடு பகுதியை மையமாகக்கொண்டு செம்பாசி பள்ளிக்குப்பம், அரங்கன்குப்பம், அண்ணாமலைசேரி உட்பட 58 மீனவ கிராமங்களில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்துவரும் நிலையில் பெரும்பான்மையான தொழிலாக மீன்பிடித்தல் தொழில் அமைந்துள்ளது.

பழவேற்காடு பகுதியிலிருந்து தமிழகம் மற்றும் இதர மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் கடற்கரையில் பல்வேறு தொழிற்சாலைகள் அமைந்துள்ளதிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் உரச்சத்து அதிகரிப்பு, உப்பு தன்மையில் மாற்றம், கலைக்கொல்லிகள், அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் சாம்பல் துகள்கள் மற்றும் வெப்பமான நீர், சாக்கடைக் கழிவுகள், இயற்கை வளத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிப்படையச் செய்கின்றன.

மேலும், கடற்கரை ஓரத்திலும், பக்கிங்காம் கால்வாய் ஓரத்திலும் சதுப்பு நிலங்களை அழித்து பல்வேறு இறால் பண்ணை அமைந்துள்ளதாலும், மீன் வளம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.



மேலும், ஆரணி ஆறு, கொசத்தலை ஆறுகள்மூலம் தள்ளப்படும் திட மற்றும் திரவக் கழிவுகள் உப்பளங்களில் சேர்ந்து இயற்கைச் சூழல் கெட வழிவகை செய்கிறது. இதனால் மீன் வளம் குறைகிறது. இயற்கையாகவே அமைந்துள்ள பவளப்பாறை, கடற் புழுக்கள், சதுப்பு நிலங்கள் போன்ற இயற்கை வளம் மிகுந்த பகுதிகளைப் பாதுகாப்பதன்மூலம் மீன் வளத்தைக் குன்றாமல் காக்க முடியும்.

ஆகவே, பழவேற்காடு பகுதியை மையமாகக் கொண்டுள்ள நீண்ட கடற்கரையில் தேசிய அளவில் கடற்பூங்காக்கள் அமைத்து, மீன்பிடித் தொழிலை மேலும் வளப்படுத்தி, பொருளாதாரத்தை உயர்த்த நடவடிக்கை எடுப்பதுடன் கடற் பாதுகாப்புப் பகுதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கடற்பூங்கா என்பது, பல்வேறு தாவர மற்றும் விலங்கின உயிரினங்களைத் தன்னகத்தே கொண்ட தனித் தன்மையுடைய பாதுகாக்கப்பட்ட தனிச் சோலை வனங்கள் போன்றதாக இருக்கும். இந்தக் கடற்பூங்காக்களை அமைத்தால், புதிதாக மீன்குஞ்சுகள் உருவாகி மீன்வளத்தைக் காக்கவும், தேவையான அளவு இனப்பெருக்கம் இயற்கையாக நடைபெறவும் உதவும். அழியக்கூடிய உயிரினங்கள் மற்றும் இளம் மீன்குஞ்சுகள் உற்பத்தி, கடற்புற்கள், பவளப்பாறைகள் ஆகியவற்றை உருவாக்கி இயற்கையாக விளங்கக்கூடிய வகையில் கடற்பூங்காக்கள் விளங்கும். அன்பின் இருப்பிடத்தின் அணையா விளக்காகத் திகழும் தாயுள்ளம் கொண்ட அம்மா, நீங்கள் மீனவர்களின் வாழ்வில் ஒளி ஏற்ற வழிவகை செய்ய பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இதே பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பொருளாதாரத்தை உயர்த்தவும் வழிவகை செய்ய வேண்டுகின்றேன்.

**பக்கிங்காம் கால்வாய் மற்றும் பழவேற்காடு ஏரியைத் தூர் வாரவேண்டும்:** திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்கு உட்பட்ட பழவேற்காடு ஏரியில் பறவைகள் சரணாலயம் உள்ளது. இந்த ஏரி நீர் உவர் கலந்த கடல்நீர் ஏரியாகும். இந்த ஏரி தமிழ்நாடு, ஆந்திரா எல்லையில் கடலோடு ஒட்டிய நீர்ப்பரப்புப் பகுதியாகும். ஒடிசா மாநிலத்திலுள்ள சில்கா ஏரிக்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது உவர்ப்பு ஏரியாக

விளங்கும் வகையில் 15,367 ஏக்கர் கொண்டதாக உள்ளது. இந்த பழவேற்காடு ஏரியின் பறவைகள் சரணாலயத்திற்குப் பறவைகள், நவம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை வருகின்றன. இந்த ஏரியில் 160 வகையான மீன்கள், 25 வகையான மிதவைப்புழுக்கள், 12 வகையான பறவைகள் மற்றும் கடல் தாவரங்கள், கடல் உயிரினங்கள் காணப்படுகின்றன. வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் பழவேற்காடு நீர் நிரம்பி காணப்படுவதால் பறவைகள் இனப் பெருக்கத்திற்கு வரும் கடல்வாழ் உயிரினங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. இந்நிலையில் கால மாறுபாட்டாலும், ஆரணியாற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்காலும் அடித்து வரப்படும் கழிவுகளாலும், பழவேற்காடு ஏரி மாசு ஏற்படுவதுடன் மணல் திட்டுக்கள் ஆங்காங்கே உருவாகின்றன.

கோடைக் காலங்களில் ஏரி நீர் வற்றும் நிலை ஏற்பட்டால், பறவைகள் வெளியேறியும், கடல்வாழ் உயிரினங்கள் முகத்துவார வழியாகக் கடலில் சென்றும் விடுகின்றன. இந்த ஏரியை நம்பி, மீன்பிடித் தொழில் செய்து வரும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் கடலுக்குச் சென்று மீன்பிடி தொழில் செய்யும் நிலையில், கடல் மற்றும் ஆற்று நீர் மீனவர்களிடையே மோதல் உருவாகும் சூழல் ஏற்படுகின்றது. இதன் காரணமாக, பழவேற்காடு ஏரியின் நீரின் அளவு குறைந்து, வெப்பமாக மாறிவிடுவதால், ஏரி முழுவதும் காய்ந்து கிடக்கிறது. இந்நிலையை மாற்ற, மாசு படிந்து மணல் திட்டுகளாகக் காணப்படும் பழவேற்காடு ஏரியை கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்கள், தூர் வார நடவடிக்கை எடுத்து, ஆறு, ஏரிப் பகுதிகளில் மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்களையும், ஆறு, ஏரிகளில் உள்ள நீரில் கையால் தடவி மீன்பிடித் தொழில் செய்யும் கடற்கரை மீனவர்களின் குடும்பத்தினரையும், வாழ வகை செய்து, பொருளாதாரத்தை உயர்த்த வழிசெய்வதுடன், படகுத் துறை அமைத்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் பழவேற்காடு ஏரியைத் தூர் வாரவேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் இக்கோரிக்கையினைச் சமர்ப்பித்து தொகுதி மக்களின் சார்பாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன், சத்துணவு மற்றும் மாற்றுத் திறனாளிகள்



நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனது கிள்ளியூர் தொகுதி மக்களின் எண்ணங்களையும், சிந்தனைகளையும் இம்மாமன்றத்தில் எடுத்துரைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

"தனியொ ருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்"

என்றார் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி. மாணவச் செல்வங்கள் பசியினால் வாடக் கூடாது; வதங்கக் கூடாது; சத்தான உணவை உண்டு, சத்தான கல்வியைப் பெற்று, நாளைய உலகில் நல்லோர்களாக வலம் வர வேண்டுமென்ற உயரிய சிந்தனையில் கொண்டுவரப்பட்ட உன்னத திட்டம். இத்திட்டம் இன்று ஒரு முன்மாதிரி திட்டமாக பிற மாநிலங்களில் ஏற்றுக்கொள்கின்றனர் என்பது நமக்கு மகிழ்ச்சியான செய்தி.

இது ஒருபுறமிருக்க தமிழகத்தில் பல கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் உள்ள குழந்தைகள் இதை உண்ண முடியாத சூழ்நிலையும், பசியின் கொடுமையால் வேறு வழியின்றி உண்ணுகின்ற நிலைமையும், ** என்பதை வருத்தத்தோடும், வேதனையோடும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கிறார். சத்துணவு என்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பசியின் தன்மையை அறிந்து கொண்டுவந்த திட்டம். இன்றைக்கு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, பல்வேறு இணைப்பு உணவுகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலேயிருந்து அந்த வார்த்தையை எடுத்துவிட வேண்டும். இது ஒரு உன்னதமான திட்டம். அரசினுடைய திட்டம் இந்தத் திட்டம். ** தயவு செய்து, அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப், ஏற்கெனவே 2011–2012–இல் இதே மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாக பதில் கொடுத்திருக்கிறார்கள். நான் அதைப் படிக்கிறேன், கேளுங்கள்.

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவர்கள் பேசுகின்றபோது, காமராஜர் அவர்கள்தான் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்; அதைப் பார்த்துதான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதனைச் சத்துணவுத் திட்டம் ஆக்கினார் என்று கூறுகிறார். நான் மாறுபட விரும்புகிறேன்.

காமராஜர் அவர்கள் இருந்தபோது கொண்டுவந்த மதிய உணவுத் திட்டம் ஒருசில வகுப்புகளுக்கு, ஒருசில பள்ளிகளில், குறிப்பாக சென்னையிலுள்ள ஒருசில பள்ளிகளில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டது. ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் 1982 ஆம் ஆண்டில் 'இலவச மதிய உணவுத் திட்டம்' என்று கொண்டு வந்தபோது, 'தமிழ்நாட்டில் முதல் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும்,' (மேசையைத் தட்டும் ஒலி) 'தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஒருவேளை சத்துணவு வழங்கப்படும்' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்.

அதுமட்டுமல்ல; இந்தத் திட்டத்தின்கீழ், கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும் உணவு அளிக்கப்பட்டது, உணவு அளிக்கப்பட்டு வருகிறது; முதியோர் உதவித் தொகை பெறும் முதியோர்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று விரிவான ஒரு திட்டம் வேறு எங்குமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; அன்றையதினம், 1982 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியபோது, அனைவரும் கேலியும், கிண்டலும் 



பேசினார்கள். குறிப்பாக, காங்கிரஸ் நண்பர்கள் இந்தத் திட்டத்தை மிகவும் கேலியும், நையாண்டியும் செய்து பேசினார்கள். தி.மு.க.–வினர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பள்ளிக்குச் செல்லும் சிறார்களையெல்லாம் பிச்சைத் தட்டு ஏந்த வைத்துவிட்டார் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இன்றையதினம் "இந்தத் திட்டத்தை அவசியம், அனைத்து மாநில அரசுகளும் செயல்படுத்தியாக வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது, ஆணையிட்டுள்ளது." *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்போது மத்திய அரசு "அனைத்து மாநிலங்களிலும் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தியாக வேண்டு"மென்று அனைத்து மாநில அரசுகளுக்கும் உத்தரவிட்டுள்ளது. ஆகவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த முன்னோடித் திட்டமான சத்துணவுத் திட்டத்திற்கு ஈடு இணையான திட்டம் வேறு எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்." *(மேசையைத் தட்டும் ஒலி)*

இவ்வாறு தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 22–8–2011 அன்று இந்த அவையிலே உரையாற்றியிருக்கிறார்கள். அதற்கு உங்களுடைய உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி சொல்கிறேன் என்றே சொல்லியிருக்கின்றார். திரும்பவும் அதை raise செய்து கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தச் சொற்றொடரை ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று சொல்லிவிட்டேன். ஏற்கெனவே ஆர்டர் கொடுத்தாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் முதலில் சொன்ன சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதை ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் உரையை continue செய்யுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஒரு கோடியே 84 இலட்சம் கார்டுகளுக்கும் விலையில்லாத அரிசியைக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல, அந்த அரிசி central pool–இலிருந்து மத்திய அரசிடமிருந்தும் வாங்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. அனைத்து மக்களும் விரும்பி உண்டு கொண்டிருக்கிறார்கள். அதன் ஒரு படியாகத்தான் சத்துணவுத் திட்டங்களுக்கும் அந்த அரிசி சென்றுகொண்டிருக்கிறது. அந்த அரிசியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் சொல்கிறார் என்று சொன்னால், மத்திய அரசு கொடுக்கின்ற அரிசிமீதுதான் குற்றம் சுமத்தவேண்டியதாக இருக்கும். மைய அரசு கொடுக்கின்ற அரிசியைத்தான் நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நாமும் அரிசியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி இரண்டு அரசுகளும் கொடுத்து மக்கள் மகிழ்ச்சியாக உண்ணுகின்ற உணவை, தவறான ஒரு கருத்தைப் பரப்புகின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** அண்மையில் என்னுடைய கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், ஆதரவற்ற அல்லது பிள்ளைகளால் கண்டுகொள்ளப்படாத முதியவர்களைக் காப்பாற்றவும், குழந்தைகள் தங்குவதற்கும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்க 23 மாவட்டங்களில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மைக்கை சிறிது தொலைவில் வைத்துப் பேசுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** 46 வட்டங்களில் 7,33,17,500 ரூபாய் செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இதற்காக அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் எனது கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு காப்பகத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல, சிறிது நேரத்திற்கு முன்பு பேசிய சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் தற்பொழுது 21,000 மாணவர்களுக்கு வாழைப் பழம் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால், நமது சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது வாழைப் பழம் இப்பொழுது கொடுப்பதில்லை, அதற்குப் பதிலாக பயறு, பருப்பு வகைகள் கொடுக்கிறார்கள் என்று பதிவேட்டில் பதிவாகியிருக்கிறது.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். வாழைப் பழம் தருவதாக தே.மு.தி.க. உறுப்பினர் சொன்னார். சத்துணவுடன் வாழைப் பழம் வழங்கும் திட்டம் தி.மு.க.–வால் கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டு வரப்படவில்லை என்று சொல்லிவிட்டு, அதற்கு இணையாக உருளைக்கிழங்கு, கொண்டைக்கடலை, பச்சைப் பயறு மூன்றையும் சேர்த்து புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சிக் காலத்திலே கொண்டுவந்தார்கள் என்றுதான் சொன்னேன். அதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், இன்றைக்கு உங்களுக்கு என்னவாயிற்று? மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு இன்றுவரை வாழைப் பழம் வழங்கப்பட்டு வருகிறது. எங்கேயும் வழங்கப்படாமலில்லை. அந்தத் திட்டம் அப்படியே நடைமுறையில் உள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** அடுத்ததாக, திருமண உதவித் திட்டத்தைப் பொறுத்தவரை, குமரி மாவட்டத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களது மாவட்டத்தில் இரண்டு சென்ட், மூன்று சென்ட், ஐந்து சென்ட், 10 சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள்தான் மிக அதிகம். அவர்கள் இந்த நிலத்தில் ஒரு கான்கிரீட் வீட்டினை வைத்திருப்பார்கள். அவர்களது சொத்து, சுகம் எல்லாமே இந்த வீடு மட்டுமே. சொந்தமாக ஒரு கல்லறை வைக்கக்கூட வேறு நிலம் இருக்காது.

ஆனால், கான்கிரீட் வீடு இருக்கிறதென்ற ஒரே காரணத்திற்காக கிராம நிருவாக அதிகாரிகளும் கூடுதல் வருவாய் நிர்ணயித்து விடுகிறார்கள். சமூக நலத் துறை அதிகாரிகளும் பல அரசு உதவிகள் வழங்க அடம் பிடிக்கிறார்கள். நிலைமை என்னவென்றால், கான்கிரீட் வீடுகளில் வசிப்பவர்களுக்கு நாளைக்குக் கூலி வேலைக்குப் போனால்தான் அவர்களது வீட்டுச் சமையலறை அடுப்பில் தீ எரியும், எம்.ஏ. பட்டதாரிகளும், பி.இ. பட்டதாரிகளும் இன்று விவசாயக் கூலி வேலைக்குச் செல்வதை குமரி மாவட்டத்தில் காணலாம். ** என்பதை மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவிப்பதோடு, இதைக் கவனத்தில்கொண்டு உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாதிரி சலுகையை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்கிற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கவில்லை. படித்திருக்கிறார்கள், கான்கிரீட் வீடு இருக்கிறது, அவர்கள் ஏழைகள், இப்படியே சொல்லிக் கொண்டிருக்காமல் என்ன சலுகையை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும். முதியோர் உதவித் தொகையா, திருமண உதவித் திட்டமா, என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் இந்தத் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறார்கள். தாலிக்கு நான்கு கிராம் தங்கமும், 10 ஆம் வகுப்புவரை படித்தவர்களுக்கு 25,000 ரூபாயும், இன்னொரு திட்டத்தின்கீழ் நான்கு கிராம் தங்கமும், பட்டப் படிப்புப் படித்திருந்தால் 50,000 ரூபாயும் கொடுக்கிறார்கள். நீங்கள் ஆளுகிற மாநிலத்திலே ஏதாவது ஒரு மாநிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைச் சொல்லிவிட்டு நீங்கள் பேசலாம்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** நான் அந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், நீங்கள் Government schemes, subsidies and other important schemes எல்லாம் மாவட்டத்திற்கு வரவில்லையென்றால், எந்தெந்தத் திட்டங்கள் எப்பொழுது வரவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், அமைச்சர்கள் பதில் அளிப்பதற்கு வசதியாக இருக்கும். அதை விட்டுவிட்டு, பொத்தாம் பொதுவாகச் சொல்வது சரியான மரபாகாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இன்னின்ன திட்டங்கள் எங்கள் மாவட்டத்திற்கு, இந்தத் தொகுதிக்கு வரவில்லை, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் அமைச்சர்கள் பதிலளிக்க முடியும். அதை வைத்து அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். நீங்கள் பொதுவாகச் சொல்லக்கூடாது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், படித்தவர்களெல்லாம் கூலி வேலைக்குச் செல்வதாகச் சொல்கிறார்கள். “செய்யும் தொழிலே தெய்வம்; படிப்பது என்பது வேறு; செய்கிற தொழில் வேறு. எந்தத் தொழிலைச் செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, படிப்பவர்களைக் கொச்சைப்படுத்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசக்கூடாது

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அதனால்தான் கூலி வேலைக்குப் போகிறார்கள். அரசு வேலை கிடைக்கவில்லை. அதுதான் எனது குறை. அல்லாமல், படித்தவர்களைக் கொச்சைப்படுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், அப்படியானால் நீங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அரசு வேலை கிடைக்கவில்லையென்று பொதுவாகச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) எந்தத் துறையில் என்ன வேலை கிடைக்கவில்லை, யாருக்கு வேலை கிடைக்கவில்லை என்பதை முதலில் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஏ. படித்தவர்கள், எம்.ஃபில். படித்தவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்பது என்பது ஒரு விவரத்தைத் தெரிந்துகொள்வதற்கான கல்வியறிவு. அதனை வேலைக்குச் செல்வதற்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்ளக்கூடாது. படிப்பு என்பது வேறு, வேலை என்பது வேறு. சிலர் வேலைக்குச் செல்லலாம், சிலர் சுயமாகத் தொழில் செய்யலாம், சிலர் கல்வியறிவு பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு கல்வி கற்கலாம். ஆகவே, படிப்பு என்பதை, கல்வியறிவு என்பதை, வேலைக்கு ஒப்பிட்டுப் பேசக்கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். (குறுக்கீடு) Point of order கேட்டிருக்கிறார்.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தவறான கருத்து என்பது என்னுடைய கருத்து. என்னவென்று சொன்னால், குறிப்பாக ஆசிரியர் பணியிடங்களில் அதிகமாக ஆக்கிரமித்தவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜாண் ஜேக்கப், இப்படி நீங்கள் முழு பூசணிக் காயைச் சோற்றிலே மறைக்கிற வேலையைப் பண்ணாதீர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரை, இந்தியாவில் போலியோ நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பின்னர், பெரிய அளவிலான உடல் ஊனம் குறைந்துள்ளது. ஆனால், விபத்துகளால் ஏற்படும் ஊனம் அதிகரித்து உள்ளது. பிறவியிலேயே காது கேளாமை, வாய் பேசாமை, கண் தெரியாமை போன்ற தவிர்க்க இயலாத மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் அரசு அல்லது அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். வேலைவாய்ப்பில் இத்தனை சதவிகிதம் என்ற வரையறையை மாற்ற வேண்டும். துறைகளில் பணி புரிவோருக்கு இலகு பணி வழங்க வேண்டும். உயர் கல்வித் தகுதி பெற்றிருந்தால் விதிமுறைகளைத் தளர்த்தி பதவி உயர்வு வழங்க வேண்டும். சுயதொழில் செய்வோருக்கு வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டும். உடல் ஊனத்தைக் காட்டி பிச்சை எடுப்போரைக் காப்பகங்களுக்கு அழைத்துவந்து சுய தொழில் செய்ய பயிற்சி வழங்கி சமூக நீரோட்டத்தில் அவர்களைக் கலக்கச் செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியில் உள்ள புதுக்கடை உட்பட பல இடங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகள் செருப்புத் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றனர். வேலை செய்து மிகுந்த கௌரவமாக வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களை நினைத்துப் பெருமைப்படுகிறேன். மாற்றுத் திறனாளிகளின் கடைகளுக்குச் சென்று நான் பொருட்களை விரும்பி வாங்குவேன். காரணம், என்னால் அவர்களுக்கு ஒரு சிறு வியாபாரம் நடக்கட்டுமே என்ற நோக்கத்தில்தான் அவ்வாறு செய்கிறேன். ஊனத்தைக் காட்டி பிச்சை எடுப்போர்மீது தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை

மேற்கொள்ளவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இவர்களெல்லாம் மாற்றுத் திறனாளிகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். பதிலுரை, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ரெங்கராஜன் மைக் கொடுத்துவிட்டேன், திரு. ஜாண் ஜேக்கப்பை பேசச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் என்ற பெயருக்குக் களங்கம் விளைவிப்பவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு விதிமுறைகளை மீறி வாழ்வாதாரத்திற்கு உதவிகள் செய்ய வேண்டும். நான் சார்ந்த காங்கிரஸ் இயக்கம் முழு ஒத்துழைப்பையும் தரும் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேச வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தானே' புயலால் மக்களின் வாழ்வாதாரம் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைப் புரட்டிப் போட்டது. ஒருசில வாரங்களில் இயல்பு நிலைக்குத் திரும்பியதைக் கண்டு, மனித மனங்கள் எல்லாம் வாழ்த்து தெரிவித்தது. உலக நாடுகளிலெல்லாம் கரவொலி ஒலித்தது. நஞ்சை, புஞ்சை நிலங்கள் செழிப்புற, நம்மை நாடிவந்த திட்டங்கள்தான் எத்தனை! உழுதவன் பூமியில் தழைத்துயர, உதிர வியர்வைகளைத் துடைத்தெறிந்த எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) வற்றாத அன்பு தெய்வ நெறியே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில், பொன்மேனித் தலைவன் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் துறை மானியக் கோரிக்கையில் என்னையும் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்குக் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கை வைத்து, பாத மலர்களைப் பணிந்து வணங்குகிறேன், தாயே!



'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். வாரிக் கொடுத்த வள்ளலாக, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும், பிறர் உண்டு பசியாறுவதைக் கண்டு பசியாறிய மகத்தான தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த சத்துணவுத் திட்டம், வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம் என்ற அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் ஒட்டுமொத்த மக்களுக்கும் விலையில்லா அரிசி வழங்குகின்ற, பார் போற்றும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசில் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றி மலர்களைப் பாதம் பணிந்து வைத்து மீண்டும் வணங்குகின்றேன்.

தமிழக அரசியல் வரலாற்றை ஒப்பிடும்போது, வரலாற்றில் முதன்மை பெற்ற, முன்னோடியான வரலாற்றின் தலையாய இடம் பெற்ற திட்டம்தான் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சத்துணவுத் திட்டம் என்றால் அது மிகையாகாது. அப்படி ஆய்ந்து அலசிப் பார்க்கும்போது 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற வைர வரிகளுக்கு வெளிப்பாடாகத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு வழிவழியாக வந்துள்ளது என்பதை நான் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைத் தாய்மார்களுக்கு மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்குகின்ற திட்டம். ஏழை விவசாயப் பெண்களுக்கு ஆடுகள், கறவை மாடு வழங்குகின்ற திட்டம்; ஏழைப் பெண்களுடைய திருமணத்திற்குத் தாலிக்குத் தங்கம் வழங்குகின்ற திட்டம்; ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கர்ப்பிணிப் பெண்கள் உதவித் திட்டம்; ஏழை வளரிளம் பெண்களுடைய உடல்நலம் பேண சேனிட்டரி நேப்கின் வழங்குகின்ற திட்டம்; ஏழை பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்குகின்ற திட்டம்;

எல்லாவற்றிற்கும் மணிமகுடமாக, உலகமே வியந்து போற்றுகின்ற திட்டமான, 'விலையில்லா மடிக்கணினி' வழங்குகின்ற திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய, உயரிய நெறிவழியில் நடைபெறுவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு மட்டும்தான் என்பது திண்ணமாகத் தெளிவாகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 12–40*

நேற்றையதினம்கூட, அன்பிற்கினிய கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர்கள்" நாங்கள்தான் என்று குறிப்பிட்டார். அப்படி ஒருக்காலும் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசே, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விலையில்லாப் பொருட்கள் வழங்கும் திட்டங்களை அறிவித்து, இன்று ஒட்டுமொத்த மகளிரும், இல்லத்தரசிகளும் மகிழ்ச்சியடைகின்ற ஒரு நிகழ்வை நாம் கண்கூடாகக் காண்கிறோம் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

இளமையில் வறுமையைப் போக்கும் உன்னத திட்டமான, சத்துணவுத் திட்டம் 1–7–1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஊரகப் பகுதிகளில் தொடங்கப்பட்டது. 5 வயது முதல் 9 வயது வரையுள்ள, 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவ, மாணவியருக்குச் சத்துணவு வழங்கப்பட்டது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 73–வது பிறந்த தினமான 15–9–1982 ஆம் நாள், இந்தத் திட்டம் நகர்ப்புறங்களுக்கு விரிவாக்கப்பட்டது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 75–வது பிறந்த நாளில், 15–9–1984 ஆம் நாள், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் இந்தத் திட்டம் 10 வயது முதல் 15 வயது வரையுள்ள, 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் விரிவாக்கப்பட்டது என்பதைப் பெருமையுடன் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். இந்தத்



திட்டத்தின் நோக்கம் "கொடிது கொடிது, வறுமை கொடிது, அதனினும் கொடிது, இளமையில் வறுமை" என்றுரைத்தார் தமிழ் மூதாட்டி, ஔவையார் அவர்கள்.

ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்களைக் கொண்டது தமிழ்நாடு. தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவ, மாணவியர் தடையில்லாக் கல்வி கற்க வேண்டும்; உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு புரதச் சத்துள்ள உணவுகளை வழங்க வேண்டும்; அதுவும் சூடாக சுவையாக உணவு சமைத்து வழங்கப்பட வேண்டுமென்பதுதான் இத்திட்டத்தினுடைய நோக்கம். ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற உன்னதமான கண்ணோட்டத்தில்தான் இந்தத் திட்டங்களைக் கொண்டுவந்தார் சத்துணவு தந்த, சரித்திர நாயகர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், சத்துணவுத் திட்டம் மகத்தான, முத்தான திட்டமாக ஏற்றம் பெற்று, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

30 ஆண்டுக் கால சத்துணவுத் திட்ட வரலாற்றை உற்று நோக்கும்போது, எப்பொழுதெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகின்றார்களோ, அப்பொழுதெல்லாம் புதுப் பொலிவோடு சத்துணவுத் திட்டத்திற்கு வலிமை சேர்த்துள்ள பெருமை, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசைச் சாரும் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட இத்திட்டத்தின் ஒட்டுமொத்தப் பணியாளர்களுக்கு மதிப்பூதியத்தை உயர்த்தி வழங்கியது மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலிருந்த அரசுக் காலத்தில்தான். மைய அரசால் மாதத்திற்கு 750 ரூபாய்தான் வழங்கப்படுகின்றது. 10 மாதங்களுக்கு 7,500 ரூபாய் மட்டுமே மைய அரசால் சமையல் அமைப்பாளர், சமையலர், சமையல்

உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 9–4–2012 அன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உயர்த்தப்பட்ட அகவிலைப் படியின் அடிப்படையில், கூடிய மதிப்பூதியமாகச் சேர்த்து, சத்துணவு அமைப்பாளர்களுக்கு 5,050 ரூபாயும், சத்துணவு சமையலருக்கு 2,750 ரூபாயும், சத்துணவு சமையல் உதவியாளருக்கு 1,998 ரூபாய் என்ற அளவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் உயர்த்தி வழங்கப்படுகிறது என்பதை நான் மட்டற்ற மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

பிற்பகல் 12–45

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான பொற்கால ஆட்சியில் கொண்டுவரப்பட்ட முக்கிய மாற்றங்களை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் ஆகியோருக்கு மதிப்பூதியம் உயர்த்தி வழங்கப்பட்டது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவுப் பணியாளர்களுக்குப் பொங்கல் பரிசாக ரூபாய் 500 வழங்கப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 1–1–1996 முதல் தொகுப்பூதியத்திலிருந்து வரையறுக்கப்படாத காலமுறை ஊதிய விகிதம் சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

கருணை அடிப்படையில் அமைப்பாளர் பணி நியமனம் வழங்கப்படலாம் என்று ஆணையிட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு அமைப்பாளர்களுக்கு மாற்று ஏற்பாடுமூலம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சத்துணவுப் பணியாளர்களுக்கு ஒருநாள் தற்செயல் விடுப்பு வழங்கப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)



உணவில் கூடுதலாக சோயா–மொச்சை மாவு சேர்த்துக் கொண்டதும், தாளிப்பதற்கான எண்ணெயின் அளவு அதிகரிக்கப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் பெருந்தகை அண்ணா, பெருந்தலைவர் காமராஜ், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகியோரது பிறந்த நாட்களில் இனிப்புப் பொங்கல் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சீரான உடல் நிலையைப் பராமரிப்பதற்கு ஆரம்ப சுகாதார மையங்கள்மூலமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறங்களிலும், நகராட்சிகளிலும் பொதுச் சுகாதாரத் துறையினர்மூலம் குழந்தைகளுடைய உடல் நலம் பேணப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

20–9–1994 அன்று டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தின் செயல்பாடுகள், செயல்பாடுகளின் பொறுப்புகள் அனைத்தும், நகராட்சி நிருவாக இயக்குநரிடமிருந்து, சமுதாய நலன் பேணும் பொருத்தமுடைய துறையான சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநருக்கு மாற்றப்பட்டதும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோல, சத்துணவு மையத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நேரடியாக மையங்களுக்கு வழங்கப்பட்டதும், இதய தெய்வம்,

கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சத்துணவு மையங்களுக்குப் புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்க ஒவ்வோராண்டும் சுமார் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கு, ஒரு நாள் கறுப்புக் கொண்டைக்கடலை அல்லது பச்சைப் பயறு முதன்முதலாக வழங்கப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* சத்துணவைச் சாப்பிடும் குழந்தைகளுக்கு அலுமினியத் தட்டுக்குப் பதிலாக, எவர்சில்வர் தட்டு, டம்ளர் வழங்கப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதன் தொடர்ச்சியாக, சத்துணவுப் பணியாளர்களுக்கு அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி மற்றும் 3 விழுக்காடு ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட்டதும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்தின்கீழ் அரசின் பங்களிப்பு ரூபாய் 5,000/–லிருந்து, ரூபாய் 10,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பி.எட். முடித்த பட்டதாரி சத்துணவுப் பணியாளருக்கு பட்டதாரி ஆசிரியர் பணி வழங்கிட ஆணையிட்டதும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய திரு. க. தமிழழகன் அவர்கள் பேசும்போது, சத்துணவு சாப்பிடும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது என்றும், சத்துணவிற்காக ஒதுக்கப்படும் நிதி அதிகப்படியாக இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். ஒவ்வொரு வருடமும், செப்டம்பர் மாதம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தங்களது பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளைப் பார்வையிட்டு, அப்பொழுது வருகை தந்திருக்கும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் தரும் அறிக்கைகளைப் பெற்று, சத்துணவு சாப்பிடும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்படுகிறது. அதனால் சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை ஒரே எண்ணிக்கையில் இல்லாமல், ஏற்ற, இறக்கத்துடன் காணப்படுகிறது.



*பிற்பகல் 12–50*

மேலும், தற்பொழுது பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்கள் மாணவச் செல்வங்களை ஆங்கில வழிக் கல்வி பயிற்றுவிக்கும் தனியார் பள்ளிகளிலே சேர்க்கவே விரும்புகிறார்கள். இதனால் சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் எண்ணிக்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

அதற்கு அடுத்த கட்டமாக, கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நவீன எரிவாயு சமையற்கூடங்கள் அமைக்க வேண்டும் என்று கூறினார். 4,497 நவீன சமையற்கூடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,155 சமையற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இந்த அரசு, இந்த ஆண்டு வெகுவிரைவாக மீதமுள்ள நவீன எரிவாயு அடுப்புடன்கூடிய சமையற்கூடங்களை அமைத்துத் தரும் என்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின்கீழ், சத்துணவுத் திட்டத் துறை சம்பந்தமான எனது அனைத்துப் பதிலுரைகளையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு, தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், அறிவிப்புகள் செய்யவில்லையா? (குறுக்கீடு) சமூக நலத் துறை அமைச்சர் அறிவிப்புகள் செய்யப் போகிறாரா? (குறுக்கீடு) சரி. அடுத்து, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கம் சுமந்த வைரப் பேழையாய் எங்கள் அங்கமெல்லாம் நிறைந்து நிற்கும் எங்கள் தாயே!

அப்பகுதி உனக்கு, இப்பகுதி எனக்கு என்று பகுதி பகுதியாய் கொள்ளையிட்ட கூட்டத்தை தொகுதி தொகுதியாய் தோற்கடித்த தொடர் புறநானூறே! (மேசையைத் தட்டும் ஒலி)

'வடக்கும் நம் கொள்ளைக்கே; தெற்கும் நம் கொள்ளைக்கே' எனத் தேதி தவறாது கொள்ளையிட்ட கூட்டத்தைக் கூண்டோடு அழித்த பரணிப் பாட்டே! (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் தானே என்று இறுமாப்பில் எக்காளமிட்டோரை 'தானே' புயலாகித் தரையில் சாய்த்த தங்கத் தாரகையே! (மேசையைத் தட்டும் ஒலி)

அப்பறிப்பு, இப்பறிப்பு எனப் பறித்த நில அபகரிப்பு ஆர்ப்பரிப்பை வெப்பத் தீயில் வீழ்த்திய வீரத் திருவுருவே! (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் இனமே அழியும்போது ஏன் என்று கேளாத குணக்கேடர் ஆட்சிதனை கூண்டோடு வீழ்த்திய வீரத் தமிழ் மரபே! (மேசையைத் தட்டும் ஒலி)

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த முதிர் தமிழை ஆண்டுக் கணக்குச் சொல்லி அடுத்துக்கெடுக்கும் ஐந்தாம்படைகளைத் தலையில் அடித்து, தரையில் வீழ்த்தி, தமிழ்ப் புத்தாண்டு சித்திரை முதல் நாளே என முத்திரை பதித்த முத்தமிழ் தலைவியே! எங்கள் அம்மா!

சிற்பியின் கைபட்டு கல் ஒன்று வாயிற்படியானது; மற்றொன்று சிலையானது, கல்லாய்க் கிடந்த எங்களுக்கு உருவம் கொடுத்து, உயிர் கொடுத்த எங்கள் தாயே!



செடிகள் பூக்களைக் கிரீடங்களாய் சூடிக் கொண்டதைப்போல புன்னகைதான் உங்களுக்கு மிகச் சிறந்த கிரீடம்! பூக்கள் எழுதிய கவிதை நீங்கள்! உங்கள் பொன்னடிகளை வணங்கி பதிலுரையைத் தொடர்கிறேன்.

'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கம்பன் பாடினான். கம்பன் இன்று இருந்தால் 'கட்டுத்தொகை பறிகொடுத்த கட்சிகள் போல கலங்கினான்' என்று பாடியிருப்பான்.

கங்கை தங்கிய செஞ்சடையான், இளம் திங்கள் சூடிய சங்கரன், கோமதியோடு உறையும் சங்கரனார் கோயிலில் எங்கள் பராசக்தி வெல்லாமல், பத்மாசுரனும், பகாசுரனுமா வெல்ல முடியும்? எங்கள் பராசக்திதான் ஜெயித்து இருக்கிறார்! (மேசையைத் தட்டும் ஒலி)

இம்சை அரசன் 23 ஆம் புலிகேசியை, இடைத்தேர்தல் specialist என்று சொல்லி களத்தில் இறக்கினார்கள். கைப்பிடி கழன்று, உடைந்து போன உறை வாளோடு அந்த அடங்கா நெஞ்சன் களத்திலே நடுங்கிக் கொண்டே நின்றான். எங்கள் அம்மாவின் சங்கரன்கோயில் சங்க நாதம் கேட்டு, இடியோசை கேட்ட நாகம் போல ஓடி ஒளிந்து கொண்டான்.

தன் பங்குக்கு ஏதாவது செய்தாக வேண்டுமே என்பதற்காக நானும் வீரன்தான், நானும் வீரன்தான் என்ற சொல்லிக் கொண்டே வந்தார் விருது வீரர். இந்த நடிப்பிற்காகவே விருது கொடுக்கலாம். அதற்கு முன்பு Kentucky சிக்கன் விருதை வாங்கிக் கொண்டார், அடுத்து தலைப்பா கட்டி, அடுத்து முனியாண்டி விருது என்று வரிசையாக வரும்.

பிற்பகல் 12–55

ஒஞ்சுபோன வைத்தியர், ஒய்யார பண்டிதர், ஒய்யாரமாய் வந்து பார்த்தும், ஒன்றும் நடக்கலையே, ஊருசனம் மதிக்கலையே! திடீர் குண்டு போட்டார் தி.மு.க. தலைவர், தீ குளிக்கப் போகிறேன் என்று. ஈழப்போரின்போது ஒய்வெடுக்க கடற்கரை நாடகம், ஒளிந்துகொள்ள ஆஸ்பத்திரி நாடகம், சங்கரன்கோயில் தீக் குளிப்பு நாடகம், இந்தி எதிர்ப்புப் போரின்போது சின்னச்சாமி சிவலிங்கத்தோடு சேர்த்து தீக் குளிக்காதவர்கள், ஈழம் பற்றி எரியும்போது, மண்ணெண்ணெய், பெட்ரோல் கிடைக்கவில்லையே

என்று ஏமாந்தவர்கள் இப்போது தீக் குளிப்பார்களாம். தீக் குளிப்பது என்பது போராளிகள் கண்டெடுத்த மிகப் பெரிய போராட்ட வடிவம். வியட்நாமிய புத்த பிட்சுகள், இந்தி எதிர்ப்பு மாவீரர்கள், ஈழப் போராளிகள், திபெத்திய விடுதலை வீரர்கள் அனைவரையும் கொச்சைப்படுத்தி தீக் குளிப்பதாகச் சொன்னால் எப்படிக் குளிப்பார்?

முன்னே கடிவாளம் மூன்று பேர் தொட்டு இழுக்க, பின்னேயிருந்து இரண்டு பேர்கள் தள்ள, விகடராமன் குதிரை "மாதம்போம் காதவழி" என்று காளமேகப் புலவரின் பாட்டு ஒன்று உண்டு. விகடராமன் குதிரை, மாதம் காதவழி போவதற்கு, முன்னே மூன்று பேர்கள் இழுக்க வேண்டும், பின்னே இரண்டு பேர்கள் தள்ள வேண்டும். விகடராமன் குதிரையைப்போல தமிழ்நாட்டில் சில தெனாலிராமன்கள் இருக்கிறார்கள்.

இப்போது தீக் குளிப்பது என்றால் வலது பக்கம் ஒருவர், இடது பக்கம் ஒருவர் ஆக இரண்டு பேர்கள் இழுத்துப் போக வேண்டும். ஆக, மூன்று பேர்கள் அல்லவா தீக் குளித்திருக்க வேண்டும்? "காகித ஓடம் கடல் அலை மீது, போவது போலே மூவரும் போவோம்" என்று அழுகுணிப் பாட்டுப் பாடியிருக்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கை சம்பந்தப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு பெண்ணினுடைய தேவைகள் அனைத்தையுமே சமூக நலத் துறையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு அரசினுடைய திட்டம்மூலமாக பெண் குழந்தைகள் பிறக்கும்போது அந்தக் குழந்தைக்குப் பிரச்சினை என்றால், தொட்டில் குழந்தைகள் திட்டம், நல்ல குடும்பத்திலே, நல்ல சூழ்நிலையோடு வளர வேண்டுமென்று சொன்னால், கல்வி உதவி, அந்தப் பிள்ளைகளுக்குத் திருமண உதவி, தாலிக்குத் தங்கம் இவை அனைத்தையும் கொடுத்து, அதற்குப் பிறகு கல்லூரியில் படிப்பதற்கு உதவி, அதற்குப் பிறகு படித்துவிட்டு இருக்கின்ற பிள்ளைகள் அதிகமாகப் படிக்க முடியவில்லை என்றால், வீட்டிலே தொழில் செய்வதற்கு, தையல் தொழில் செய்வதற்கு இலவசமாக, விலையில்லா தையல் இயந்திரத்தைத் தந்து இப்படிப்பட்ட பல்வேறு உதவிகளை ஒரு பெண்ணினுடைய வாழ்க்கைக்கு ஒளியேற்றக்கூடிய, எங்கள் வீட்டு மகாலெட்சுமி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான்



இத்தனைத் திட்டங்களும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைவிட, இந்தச் சமூக நலத் துறை, சத்துணவுத் திட்டத் துறைக்காக கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 2006–2011 வரையிலான ஐந்து ஆண்டுகளிலே அனைத்துத் திட்டங்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 13 ஆயிரத்து 41 கோடியே 95 இலட்சம் மட்டும்தான். 13 ஆயிரத்து 41 கோடியே 95 இலட்சம் மட்டும்தான் இந்த ஐந்து வருடங்களுக்கு. ஆனால், இந்த சமூக நலத் துறை முழுக்க முழுக்க பெண்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2010–2011 ஆம் ஆண்டு, தி.மு.க. மைனாரிட்டி அரசாங்கம் ஒதுக்கிய தொகையைவிட 2011–2012, 2012–2013 இந்த பத்து மாதக் காலத்திலேயே மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை ரூ.13 ஆயிரத்து 195 கோடியே 81 இலட்சம் ஆகும்.*(மேசையைத் தட்டும் ஒலி)* ஐந்து வருடங்களில் தி.மு.க. மைனாரிட்டி சர்க்கார் இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற தொகை 13 ஆயிரத்து 41 கோடியே 95 இலட்சம். ஆனால், அம்மா ஆட்சிக்கு வந்த இந்த பத்து மாதக் காலத்திலே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை ரூ.13 ஆயிரத்து 195 கோடியே 81 இலட்சம். ஆக, ஐந்து ஆண்டுக் காலத்தில் இந்தத் துறையே எந்த அளவிற்கு மைனாரிட்டி தி.மு.க. சர்க்கார் நடத்தி இருக்கிறார்கள் என்பதற்கு இந்த நிதி ஒதுக்கீடு ஒன்றே சாட்சி.

33% இட ஒதுக்கீட்டைப் பற்றிப் பேசியவர்கள் யாரும் சபைக்கு வரவில்லை. இருந்திருந்தால், இந்தச் சமூக நலத் துறைக்கு, முழுக்க முழுக்க பெண்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு ஒதுக்கீடு செய்த இந்தத் தொகையின் இலட்சணத்தைப் பார்த்தாலே தெரியும். அதேபோல், திருமண உதவித் திட்டங்கள். தங்கம் வெட்டி எடுக்கின்ற நாட்டிலேகூட, இலவசத் தங்கம் என்பது பேச்சளவிலேகூட பேசமுடியாது. தங்கம் என்று பெயர் வைத்துக்கொள்ளலாம். தங்கமே என்று அழைத்துக்கொள்ளலாமே தவிர, தங்கத்தைப்பற்றிப் பேச முடியாது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்குத் தாலிக்குத் தங்கம், இன்றைக்குப் பெண்கள் அந்தத் தங்கத்தைப் பெற்றுக்கொண்டு செல்கின்றபோது, எவ்வளவு ஆனந்தமாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்களை எங்கள் தங்கமே என்று வாழ்த்திவிட்டுப் போகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–00*

திருமண உதவியைப் பெற்றுக்கொள்கின்றபோதும் சரி, தங்கத்தைப் பெற்றுக்கொள்கின்றபோதும் சரி, வாழ்த்திவிட்டுப் போகிறார்கள். இதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011–2012 ஆம் ஆண்டிலே 666 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து செலவிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பெண்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், திருமண உதவிக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகுத்திருக்கிறார்கள்.

அதேபோல, அம்மா அவர்களின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். மங்கையர் கற்றால் இம்மாநிலம் செழிக்கும். 1992 ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். இந்தத் திட்டத்தை, 2001–லிருந்து 2006 வரைக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், 1992–லே கொண்டுவந்த உதவித் தொகையை அதிகப்படுத்தி, ரூபாய் 15,200/– என்பதை ரூபாய் 22,200/– என்று மாற்றியமைத்து, இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் அந்தப் பெண்ணினுடைய மேற்படிப்பிற்கோ, திருமணச் செலவிற்கோ பயன்படுகிற விதத்தில் சிறப்பாக வடிவமைத்திருந்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு வந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி, இந்தத் திட்டத்திற்குப் பெயர் மாற்றம் மட்டும்தான் செய்தார்கள். இங்கேகூட, மன்றத்திலே பேசுகிறபோது மைனாரிட்டி தி.மு.க. உறுப்பினர்கள் சொன்னார்கள். மாற்றிவிட்டோம், மாற்றிவிட்டோம் என்று சொன்னார்கள். எங்கள் அம்மா 1992–இலே கொண்டுவந்தத் திட்டத்தை அதற்குப் பிறகு, 2001–2006–இலே வடிவமைக்கப்பட்ட திட்டத்தை, அதற்குப் பிறகு பெயர் மாற்றம் செய்து, "சிவகாமி அம்மையார்" என்று பெயர் மாற்றத்தைச் செய்துவிட்டு, இந்தத் திட்டத்திற்காக எந்த நிதியையும் உதவி செய்யவில்லை. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு 2011–2012 ஆம் ஆண்டிற்கு, ரூபாய் 105 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 68,859 பெண் குழந்தைகள் பயன்படுகிற விதத்தில், கடந்த ஆண்டினைவிடக் கூடுதலாக ரூபாய் 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதனால், 20,000 பெண் குழந்தைகள் இப்போது பயனடைந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இலங்கைவாழ் தமிழ் அகதிகளின் பெண் குழந்தைகளை, அவர்களின் நலனைக்கூட கருத்திலே கொண்டு, ரூபாய் 15,200/– வீதம், 30 பெண் குழந்தைகளுக்கு, ரூபாய் 4 இலட்சத்து 56 ஆயிரம் செலவிலே, இலங்கைவாழ் தமிழ் அகதிகளின் பெண்களுக்கு வைப்பீடு செய்து பயன்பெறுகிற விதத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகுத்துத் தந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*



தொட்டில் குழந்தைத் திட்டம். அன்னை தெரசா அவர்கள், எங்களின் அன்னையின் இல்லத்திற்கே வந்து, நான் நினைத்ததை, நான் செய்ய வேண்டுமென்று கனவு கண்டதை, தமிழ்நாட்டிலே, ஏன் உலகத்திலேயே யாரும் செய்யாத காரியத்தை என்னுடைய பிரதிபலிப்பாக, தமிழ்நாட்டிலே இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார் என்று, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி சென்றுவிட்ட திட்டம், இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு எங்களுடைய அம்மா அவர்கள், வாழும் தெரசாவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* பெண் குழந்தைகளுக்காக, அன்னை தெரசா மறைந்திருந்தாலும்கூட, இன்றைக்கு இந்தியாவின் தெரசாவாக அல்ல, உலகத்தின் தெரசாவாக அவருடைய பெயர் நிலைக்கிற விதத்திலே, அந்தத் திட்டத்திற்கு உயிரோட்டம் தந்தவர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அன்னை தெரசா அவர்களைப்பற்றிச் சொல்கிறபோது, 'நவீன் சாவ்லா' அவர்கள் ஒரு புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கொலை என்பது, மனித கொலை மட்டுமல்ல. கருவிலே கொலை செய்வது என்பது மிகப் பெரிய பாவச் செயல். அந்தச் செயலைத் தடுத்து நிறுத்துவதுதான் என்னுடைய முதல் வேலை என்று, 'அன்னை தெரசா' அவர்கள் குறிப்பிட்டதை 'நவீன் சாவ்லா' அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுதான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணத்திலே உதித்தது, அவர்களுடைய சிந்தனையிலே உதித்தது. தெருவிலே வீசாதீர்கள்; என்னிடத்திலே கொண்டுவந்து தாருங்கள்; அரசுத் தொட்டிலிலே போடுங்கள்; நான் வளர்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி, தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்து, இன்றைக்கு எந்த இடங்களிலே எல்லாம் பெண் குழந்தைகள் மறுக்கப்படுகிறதோ, அந்த இடங்களிலே எல்லாம் வரவேற்பு மையங்களை உருவாக்கி, இன்றைக்குப் பெண் சிசுக் கொலை முழுவதுமாக நம்முடைய தமிழ்நாட்டிலே கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1–05

அதுமட்டுமல்ல, 3,321 பெண் குழந்தைகள், 607 ஆண் குழந்தைகள், பெண்களைக் காப்பது மட்டுமல்ல, ஆண் பிள்ளைகளைக்கூட அம்மா அவர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள். 607 ஆண் குழந்தைகள் கண்டெடுக்கப்பட்டு, இன்றைக்கு நல்ல நிலையிலே தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, வெளிநாடுகளுக்குக்கூட போய், அந்தப் பிள்ளைகள் நல்ல நிலையிலே படித்து இன்றைக்கு வளர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

அதேபோல குழந்தைகள் இல்லங்கள், சேவை இல்லங்கள். ஆதரவு இல்லா குழந்தைகளுக்கும், கைவிடப்பட்ட பெண்களுக்கும், துணையில்லா பெண்களுக்கும், துன்பத்தில் இருக்கும் விதவைகளுக்கும் பெரும் துயர் துடைக்கும் முகத்தான், பெற்றவர்போல் பாச உணர்வால், அரசு ஆதரவற்றோர் இல்லங்களும், அரசு சேவை இல்லங்களும் செயல்படுகின்றன. சுத்தமான குடிநீர் வசதிக்கு சுத்திகரிப்பானுடன் சுகமாய்ப் படுத்துத் தூங்க இரண்டடுக்கு இரும்புக் கட்டில்கள், நல்ல சமையலுக்கு நவீன சமையல் அறைகள், நாப்கின், அந்த ஆதரவற்ற இல்லங்களிலே வசிக்கக்கூடிய பிள்ளைகளுக்குக்கூட என்னென்ன தேவை என்பதைக் கண்டறிந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துத் தேவைகளையும் இப்போது அறிவித்திருக்கிறார்கள், அந்தப் பிள்ளைகள் இன்றைக்குப் பயன்பெற்றிருக்கிறார்கள்.

சேவை இல்லங்களிலே தங்கிப் பயன்பெறக்கூடிய 830 கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள், அவர்களின் நலனைக் கருதி 2010–2011 ஆம் நிதியாண்டில் கடந்த தி.மு.க. மைனாரிட்டி அரசாங்கத்தால் ஒரு நபருக்கு இரண்டு சீருடைகளுக்காக 500 ரூபாய்தான் வழங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் குழந்தைகளுக்கு ரூ.756/–, பெரியவர்களுக்கு ரூ.780/– என 2011–2012 ஆம் நிதியாண்டில் ரூ.5.20 இலட்சம் இந்தத் திட்டத்திற்காகக் கூடுதலாகச் செலவு செய்ய, மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; மேல்நிலைக் கல்வி முடித்த பெண்களுக்கு, தொழில் சார்ந்த படிப்புக்கு வருடத்திற்கு ரூ.50,000/–, பட்டயப் படிப்பு படிப்பதற்கு ரூ.30,000/–, இந்த ஆண்டு 167 பெண்களுக்காக 64 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். சேவை இல்லங்களிலே, ஆதரவற்றோர் இல்லங்களிலே படிக்கக்கூடிய பிள்ளைகளைக்கூட, மனித நேயத்தோடு, கருணை உள்ளத்தோடு, அவர்கள் கல்வியிலே முன்னேற வேண்டும், அவர்களை ஆதரவற்றவர்களாகக் கருதக்கூடாது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு அந்தப் பிள்ளைகளும் இன்றைக்குச் சிறப்பாகப் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.



அதுபோல, இலவச தையல் இயந்திரம். 2011–2012 ஆம் ஆண்டில் 4,192 தையல் இயந்திரங்கள், ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவிலும், 2011–2012 ஆம் ஆண்டில் இலங்கைவாழ் தமிழர்களுக்காக மேலும் இதை விரிவுபடுத்தி 3,778 தையல் இயந்திரங்கள் ஒரு கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில், அவர்களையும் மனிதநேயத்தோடு பார்த்து மாண்புமிகு அம்மா அவர்கள் கூடுதலாக நிதியுதவி வழங்கியிருக்கிறார்கள்.

அதுபோல திருநங்கைகள் நலன். திருநங்கைகளைப் பற்றிப் பேசுகிறபோது சொன்னார்கள், திருநங்கைகளையும் மனித நேயத்தோடு பார்க்க வேண்டுமென்று. திருநங்கைகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–2006–இல் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே, ஒரு திருநங்கையான படித்த பெண்ணை மகளிர் மேம்பாட்டுக் கழகத்திலே வேலைக்கு அமர்த்தி பெருமைப்பட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; படித்த திருநங்கைப் பெண்ணை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற வேண்டுமென்பதற்காகக் கடனுதவி. கடனுதவியைப் பெற்று என்ன தொழிலைச் செய்ய வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களோ, அதைச் செய்து, அவர்களும் சமுதாயத்திலே சிறந்த ஒரு மனிதராக வாழ வேண்டுமென்பதை ஒவ்வொரு பிரிவாகப் பார்த்து, அவர்களுக்கும் 55 இலட்சம் ரூபாய் செலவிலே 412 திருநங்கைகள் பயன்பெறுவதற்கு அரசு மானியமாக அவர்களுக்கு நாற்காலி, டேபிள், மேஜை ஆகியவற்றை வாடகைக்கு விடுதல், கறவை மாடு, பால் வியாபாரம், ஜவுளி வியாபாரம், சரக்கு மற்றும் பயணிகள் ஆட்டோ, மளிகை வியாபாரம், செங்கல் சூளை, சானிட்டரி நாப்கின் தயாரித்தல், விவசாயம், கயிறு பிரித்தல், உணவு தயாரிப்பு, சமையல் பாத்திரங்களை வாடகைக்கு

விடுதல், உணவகம் போன்ற தொழில்களைச் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 1–10*

அதுமட்டுமல்ல; திருநங்கைகளுக்காக சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த சுய உதவிக் குழு பெண்களுக்காக 25 சதவிகிதம் மானியத்துடன் ரூ.15 இலட்சம் வரை கடன் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதைப்போல, முதியோர்களைப் பராமரிப்பது பற்றி இங்கே சொன்னார்கள். கேள்வி நேரத்தில் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் சொன்னார், பிள்ளைகள் அனைவரும் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்கள், அமெரிக்காவில் இருக்கிறார்கள். ஆனால், இங்கே ஆதரவற்றவர்கள் இருக்கிறார்கள் என்று. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த நாட்டிலே பிள்ளைகள் பெற்றோரை விட்டுவிட்டுச் சென்றாலும்கூட, நம்முடைய தமிழ்நாட்டிலே நான் இருக்கிறேன் தாயாக என்று சொல்லி, பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்காக முதியோர் இல்லம், அவர்களது குழந்தைகளையும் இணைத்து, மாற்றுத் திறனாளிகளையும் இணைத்து, அவர்களுக்கு உதவிட, ஒருங்கிணைந்த வளாகங்கள் 32 மாவட்டங்களிலே, 64 ஒருங்கிணைந்த சிறப்பு வளாகங்களை அமைப்பதற்குத் தொடர் செலவினமாக ரூ.18,40,000/– ஆக 75.25 என்ற வீதத்தில் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களால் பகிர்ந்துகொள்வதற்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாகத் துவக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு அது விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல், முதியோர் இல்லங்களுக்கு மானிய உதவியாக 56 இலட்சம் ரூபாய் வழங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைப்போல மகளிர் ஆணையம். இந்த மகளிர் ஆணையம் இன்றைக்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.



பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்கு 1,254 புகார்கள் இதுவரை பெறப்பட்டிருக்கின்றன. 670 மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது எந்தெந்தமாதிரி பிரச்சினை என்றால், வரதட்சணைக் கொடுமை, பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை, பெண்களுக்கு இழைக்கப்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகள், கணவன் ஒரு மனைவி இருக்கும்போது இரண்டாவது மனைவியை திருமணம் செய்தால் இதுபோன்ற புகார்கள் வருகின்றபோது, உடனடியாகக் கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய புகார்கள் பெறப்பட்டு, 670 மனுக்கள்மீது தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள்மீது தீவிரமான விசாரணை நடைபெற்று வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சமூக சட்டங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், தவறு இழைக்கப்பட்ட சிறுவர்களை காவல் துறை பிடித்து வைத்து அவர்களை விசாரித்து அதற்குப்பிறகு அவர்களைக் கொண்டுபோய் கோர்ட்டிலே நிறுத்தி, அவர்கள் தண்டனை பெறப்பட்ட காலத்தில் அவர்களைத் தங்கவைத்து, தங்கியிருக்கின்ற காலத்தில், அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளைத் தந்து அவர்கள் திருந்தி வாழ வழிவகை செய்யக்கூடிய துறை, சமூகப் பாதுகாப்புத் துறை. அந்தத் துறையின்மூலமாக இதுவரை—வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961; இந்தச் சட்டங்களை எல்லாம் ஒன்றாக இணைத்துத்தான் இன்றைக்கு சமூகப் பாதுகாப்புத் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது; இதுவரை 3,684 வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. 2011 ஆம் ஆண்டு 1,252 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 149 வழக்குகளில் இடைக்காலத் தீர்ப்புகள் பெறப்பட்டிருக்கின்றன. 344 வழக்குகளில் முடிவான தீர்வுகள் பெண்களுக்குச் சாதகமாகப் பெறப்பட்டுள்ளன என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற காரணத்தினால்தான். அதுமட்டுமல்ல; விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு அவர்களுக்குப் பல்வேறு பயிற்சிகள். அந்தப் பயிற்சிகளையெல்லாம் அளிப்பதற்கு கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே வெறும் 25 இலட்சம் ரூபாய் மட்டும்தான் செலவு செய்யப்பட்டது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்தில் மட்டும்தான் 64 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு அவர்களையும் மனிதநேயத்தோடு

கவனிக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, விலையில்லா சீருடை வழங்குகின்ற திட்டம். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது; சந்தேகமாக இருக்கிறது என்று சொன்னார். சந்தேகத்திற்குக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. சந்தேகமே வரக்கூடாது. காரணம், இது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றைக்குமே மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைப்போல சொல் ஒன்று, செயல் ஒன்று என்று செய்கிற தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இல்லை. சொல்லுவார்; கண்டிப்பாக அதைச் செய்தே காட்டுவார். அவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

இந்த விலையில்லா சீருடை என்பது 4 சீருடைகள். இந்த உடைகளை வழங்குவது, அந்த உடைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதுகூட மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணத்திலே உதித்து, அவர்களுக்காக சல்வார் கமீஸ், அரைக்கால் சட்டை, அதுகூட மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த அளவிற்கு நேசித்து, ஒவ்வொன்றையும் அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டை, மாணவிகளுக்குப் பாவாடை தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீஸ். இவையெல்லாம் பார்த்துப் பார்த்து, ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்வு செய்கின்றவர்கள்.

அதுமட்டுமல்ல; இந்தத் தைக்கக்கூடிய கூலி–சந்தேகம் வரவேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம் கடந்த தி.மு.க. ஆட்சியிலே கூலி மிகவும் கம்மியாகக் கொடுத்தார்கள். அதனால் தைப்பதற்கு யாருமே வரவில்லை. காலதாமதம் ஆனது. கொடுத்த சீருடையும் கொஞ்சம்தான். கூலி கம்மியாகக் கொடுத்ததால் வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. சங்க உறுப்பினர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரே தடவையாக, 'ஏக் தம்' ஆக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—தி.மு.க. மைனாரிட்டி ஆட்சியிலே 2007 ஆம் ஆண்டு, அரைக்கால் சட்டைக்கு 9 ரூபாய் 88 பைசா, யார் வருவார்கள்—9 ரூபாய் 88 பைசா—மேல் சட்டைக்கு 9 ரூபாய் 38 பைசா. மாண்புமிகு அம்மா அவர்கள் வந்தார்கள், பார்த்தார்கள், என்ன 9 ரூபாய் 38 பைசா? அதெல்லாம் வேண்டாம், 'ஏக் தம்' இல் 20 ரூபாய் என்று சொன்னார்கள். 20 ரூபாய்.



அதேமாதிரி அரைப் பாவாடை மற்றும் முழுப் பாவாடை. பாவாடை அரைப் பாவாடை, முழுப் பாவாடை. இதற்குப் கூலி எவ்வளவு என்று கேட்டீர்கள் என்றால், 5 ரூபாய் 88 பைசா. யார் கிடைப்பார்கள்? சங்க உறுப்பினர்கள் வருவார்களா? வரவில்லை. அதனால்தான் சீருடையைப் பற்றி நீங்கள் சந்தேகப்படுகின்ற மாதிரி கடந்த தி.மு.க. ஆட்சியிலே இருந்தது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தார்கள், அது என்ன 5 ரூபாய் 88 பைசா? உடனடியாக ஏற்றினார்கள் 15 ரூபாய். இன்றைக்கு சங்க உறுப்பினர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எங்களால் முடியும் என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். சந்தேகமே படவேண்டாம், தைத்துக் கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கையை இன்று சங்க உறுப்பினர்களுக்குத் தந்திருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோல, blouse–சோலி. 8 ரூபாய் 38 பைசா. ஒரு சோலி தைப்பதற்கு 8 ரூபாய் 38 பைசா தி.மு.க. ஆட்சியில். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தவுடனேயே 8 ரூபாய் 38 பைசா வேண்டாம், 18 ரூபாயாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். 18 ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல தாவணி. பெண் பிள்ளைகள் போடக்கூடிய தாவணி, அதற்கு கூலி எவ்வளவு என்று கேட்டீர்கள் என்றால் 3 ரூபாய் 38 பைசா. வெறும் 3 ரூபாய் 38 பைசா. ஒரு தாவணியை 3 ரூபாய்க்குத் தைக்க முடியுமா? தைக்க முடியாது. உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த 3 ரூபாய் 38 பைசாவை ஒரே தடவையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 ரூபாயாக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். ஆக, இந்தக் கூலி உயர்வு கொடுத்தவுடனேயே இன்றைக்கு சங்க உறுப்பினர்களெல்லாம் கூலி அதிகமாகிவிட்டது என்று விரும்பி வருகிறார்கள். 4 சீருடை தைத்துக் கொடுக்க முடியும் என்கின்ற நம்பிக்கை இன்றைக்கு எல்லோருக்குமே வந்திருக்கிறது. பள்ளிப் பிள்ளைகளுக்கு சந்தேகமே வராது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவர்களுக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) மன்னிக்கவும்; திரு. உலகநாதன் அவர்களுக்கு எப்படி வந்தது

என்று தெரியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும்.

அதேபோல, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள். பணத்தை வழங்குவது சமூக நலத் துறை. இதிலே பார்த்தீர்களென்றால், முதலிலே 20 ரூபாய் ஓய்வூதியத் தொகையுடன் 1962 ஆவது வருடத்தில், வெறும் 20 ரூபாய்தான் ஓய்வூதியத் தொகையாக வழங்கப்பட்டது. 1962–இலே அரசின் சார்பிலே. இது படிப்படியாக உயர்த்தப்பட்டு 16–5–2011–இலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றவுடனேயே தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்கிற வகையில் தட்டாமலேயே தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய். மாண்புமிகு அம்மா அவர்கள், 3,209.75 கோடி ரூபாய்; இந்தத் தொகை இதுவரை இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் ஒதுக்காத தொகையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல; 8 திட்டங்கள் இதிலே இருக்கிறது. இந்த 8 திட்டங்களிலே 3 திட்டங்கள் மைய அரசு திட்டம். மீதியிருக்கக்கூடிய 5 திட்டங்கள் மாநில அரசு திட்டம். இந்த மைய அரசு திட்டத்திலே 2 திட்டத்திற்கு 200, 200 ரூபாய் கொடுக்கிறார்கள். எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய சர்க்கார் கொடுத்தால் என்ன? கொடுக்கவில்லை என்றால் என்ன? தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய முதியோர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக 800 ரூபாய் ஆகச் சேர்த்து ஆயிரம் ரூபாயாகத் தந்தார், 2 திட்டத்திலே. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

இன்னொரு திட்டத்தில் அதிலே மொத்தப் பயனாளிகள் எவ்வளவு என்று கேட்டீர்கள் என்றால் மொத்தம் 12 இலட்சம் பேர். 12 இலட்சம் பேரில் மத்திய சர்க்கார் ஏமாற்றக்கூடிய விதம் எப்படி எப்படியெல்லாம் போயிருக்கிறது என்று பாருங்கள். அந்த 12 இலட்சத்தில் 69,132 பயனாளிகளுக்கு மட்டும்தான். வெறும் 69 ஆயிரம்தான். 12 இலட்சம் எங்கிருக்கிறது; 69 ஆயிரம் எங்கிருக்கிறது; 69,132 பயனாளிகளுக்கு மட்டுமே 500 ரூபாய்



கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அது 69 ஆயிரமாக இருந்தால் என்ன, ஒரு இலட்சமாக இருந்தால் என்ன, 500 ரூபாயை நான் தருகிறேன் என்று சொல்லி ஆயிரம் ரூபாய் சேர்த்துத் தந்திருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இப்போது புதியதாக அறிவித்திருக்கக்கூடிய பட்ஜெட்டில் 200 ரூபாய் கொடுக்கிறேன் என்று சொன்னதிலே. 100 ரூபாய் சேர்த்துக் கொடுத்திருக்கிறீர்கள். அறிவிப்பு வந்திருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீங்கள் என்ன கொடுத்தாலும் சரி, நான் தாய்; நான் பிள்ளைகளுக்கு கொடுப்பதைக் கொடுக்கத்தான் செய்வேன். அது முதியோராக இருந்தாலும் சரி, ஏழையாக இருந்தாலும் சரி, கணவனால் கைவிடப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, மாற்றுத் திறனாளிகளாக இருந்தாலும் சரி, நான் தருகிறேன் என்று சொல்லி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆயிரம் ரூபாயை அப்படியே தந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை எந்தப் பெரிய மாநிலத்திலும்கூட இந்தமாதிரி கொடுக்கவில்லை. ஆந்திராவில் மைய அரசினுடைய தொகை 200 ரூபாய்தான். அதே 200 ரூபாய்தான் State Government ஒன்றுமே போடவில்லை. வெறும் 200 ரூபாய்தான் ஆந்திராவிலே. வேறு எந்தப் பணமும் கிடையாது. கர்நாடகாவில் 200 ரூபாய். மாநில சர்க்கார் வெறும் 200 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆக உதவித் தொகை எவ்வளவு ரூபாய்? 400 தான். கேரளாவில் 200 ரூபாய் Central Government கொடுக்கிறது. மாநில சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறார்கள்? 50 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆக மொத்தம் 250 ரூபாய்தான் கேரளாவில். ஓய்வூதியத் தொகை, பஞ்சாப்பில் 200 ரூபாய் மத்திய சர்க்கார் கொடுக்கிறது. மாநில சர்க்கார் 250 கொடுக்கிறது. ஆக 450 ரூபாய்தான். மகாராஷ்டிராவில் 200 கொடுக்கிறீர்கள். அங்கு மாநில சர்க்கார் கொடுப்பது வெறும் 400 ரூபாய்தான். ஆக 600 ரூபாய்தான். பீகாரில் 200 ரூபாய் மட்டும்தான். வேறு எதுவுமே கிடையாது. அதே 200 ரூபாய்தான் ஓய்வூதியத் தொகை. குஜராத்தில் 200+200=400, இராஜஸ்தானில் 200+300=500 தான். உத்தரப்பிரதேசத்தில் 200+100=300 தான். மேற்கு வங்காளத்தில் ஏற்றி கொடுக்கவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கிறீர்களே இங்கு வந்து. மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எப்போது பேசினாலும் உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்கிறீர்களே தவிர, உங்கள் மேற்கு வங்காளத்தில் 200+200=400

25 வருடங்களாக நீங்கள் ஆண்ட மேற்கு வங்காளத்தில் 200+200=400 தான். ஆனால், இந்தியாவிலேயே யாரும் கேட்காமலேயே (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசின் தொகையைவிட சேர்த்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவிற்கு எல்லோரையும் பற்றி அம்மா அவர்கள் ஒவ்வொன்றையும் தீர ஆராய்ந்து பார்த்து, அத்தனைப் பேரையும் நேசித்து, அதன் அடிப்படையிலேதான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒவ்வொரு திட்டத்திற்கும் நிதியுதவிகளை அளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாற்றுத் திறனாளிகள் துறை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அன்றே பாடினார்.

“மாபெரும் சபையினில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழவேண்டும்,

ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று போற்றிப் புகழவேண்டும்”

என்று அன்றே பாடினார். அதன் அடிப்படையிலேதான், இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பாடலுக்கேற்ப இந்தியத் துணைக் கண்டத்தை அடுத்து ஆளப்போகும் பிரதமர் யார் என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விரல் அசைவிலே இந்தியத் துணைக் கண்டமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு கொள்கையை 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வகுத்துத் தந்தார். அவர் அன்றைக்கு அந்தக் கொள்கையை வகுத்துத் தராமல் இருந்திருந்தால், இன்றைக்கு மாற்றுத் திறனாளிகளுக்கு இவ்வளவு சலுகைகள் கிடைத்திருக்கவே முடியாது. அந்தச் சட்டத்தைச் செயலாக்கிக்காட்டி, அவர்களுக்கு வழிகாட்டியாக, வழித் துணையாக விளங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 3 சதவீதம் இட ஒதுக்கீட்டைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே பதிலளித்திருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய



வேலைவாய்ப்பு ஆணையை நீங்கள் அந்தப் புகைப்படத்தைப் பார்த்திருப்பீர்கள். அதேபோல எல்லாத் துறைகளுக்கும் இதைப்போல தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; மாற்றுத் திறனாளிகள் ஒவ்வொரு அலுவலகத்திலேயும் ரொம்ப சுலபமாக மாவட்ட ஆட்சித் தலைவரையோ அல்லது மாற்றுத் திறனாளிகள் அலுவலரையோ அல்லது எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, சீக்கிரமாகப் போய், எந்தச் சிரமமும் இல்லாமல் அணுகுவதற்கு சாய்வு தளம் அமைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 – 2006 இல் முதலமைச்சராக இருக்கிற காலத்திலேயே உத்தரவிட்டு, அதன்படி பல மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலே இதுபோன்ற சாய்வு தளங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு சிரமமில்லாத வேலையைச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1–25

அதைப்போல பராமரிப்பு உதவித் தொகையைப் பற்றி இங்கே சொன்னார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்களைப் பராமரிக்க முறையே ஆண்களுக்கு 7 இல்லங்களும், பெண்களுக்கு நான்கே நான்கு இல்லங்களும்தான் இருந்தன. ஆனால், மனவளர்ச்சிக் குன்றியோர் பாதுகாப்பின்றியும், பராமரிப்பு இல்லாமலும் இருக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே 20 இல்லங்கள் தொடங்கப்பட்டு, 1,000 மனவளர்ச்சிக்குன்றி, பராமரிப்பின்றி வாழக்கூடியவர்களும் பயனடையக்கூடிய விதத்திலே, இல்லங்களைத் தோற்றுவிப்பதற்கு மனிதநேயத்தோடு உத்தரவிட்டு, அதன்படி தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; அந்த மனவளர்ச்சிக் குன்றியோரை அழைத்துச் செல்வதற்கு, பார்வையற்ற குழந்தைகளை பயிற்சி மையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு, அந்த தாய்மார்களுக்குப் பயணச் செலவாக நாளொன்றுக்கு 20 ரூபாயைத்தான் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, 20 ரூபாயை 40 ரூபாயாக உயர்த்தி வழங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவிட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதைப்போல திருமண உதவித் திட்டம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து வகையான திருமண உதவி திட்டத்திலே மட்டும் தாலிக்குத் தங்கம், 50 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்கவில்லை. உடல் ஊனமுற்றவர் யாராவது ஒருவரை திருமணம் செய்திருந்தால்கூட அவர்களுக்கும் இந்த உதவித் தொகை போய்ச் சேரவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு 25 ஆயிரத்துடன் 4 கிராம் தங்கம், அவர்கள் பட்டயப் படிப்போ, பட்டப் படிப்போ படித்திருந்தால், இதேமாதிரி 50 ஆயிரம் ரூபாய், 4 கிராம் தங்கம் அவர்களுக்கு வழங்கி, 'தாயிற் சிறந்த கோயில் இல்லை' என்பதை நிரூபித்துக் காட்டுகிற விதத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்கிற வார்த்தைகளின்படி அவர்களின்மீதும் கருணைகொண்டு அவர்களுக்கும் நிதியுதவி வழங்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 3,308 pending petitions நின்று போய்விட்டன. உடல் ஊனமுற்றோரைத் திருமணம் செய்தவர்களுக்கு நிதியுதவி வழங்கக்கூடிய அந்தத் திட்டத்திலே, கொடுத்த நிதியோ கொஞ்சம்தான், ஆனால் அந்த நிதியையும்கூட கொடுக்கக்கூடாதென்று நிறுத்தி வைத்துவிட்டார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, ஆய்வு செய்து, இந்த நிதி மாற்றுத் திறனாளிகளுக்குப் போய் சேரக்கூடிய நிதி; அது நிலுவையில் இருக்கக்கூடாது என்பதற்காக 3,308 மனுக்களுக்கும் உடனடியாக, நிதியை release செய்து கொடுக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) 6 கோடியே 75 இலட்சம் ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அவர்களுக்கும் தர வேண்டுமென்று உத்தரவிட்டு, வழங்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது point of clarification கேட்பதாக இருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு, clarify செய்துகொள்ளுங்கள், please. (குறுக்கீடுகள்) உங்களுக்கு மைக் இணைப்பு கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிலே ஏறாது. தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நான் பதில் சொல்லி முடித்த பிறகு, கேளுங்கள். எந்தக் கேள்விக் கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே இரண்டு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பேட்டரிமூலம் இயங்கக்கூடிய மூன்று சக்கர வாகனம்தான் கொடுத்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுய தொழில் செய்யும் மாற்றுத் திறனாளிகள், கல்வி பயிலக்கூடிய மாணவ, மாணவிகளும் பயன்பெறக்கூடிய விதத்திலே, பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குவதற்கு இரண்டு கோடி ரூபாய் செலவிலே 400 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

அதேபோல காதொலிக் கருவிகள். 10,000 ரூபாய் மதிப்புள்ள காதொலிக் கருவிகள். அம்மா அவர்கள் பார்த்தார்கள், காதிலே போடக்கூடிய அந்த மிஷின், அது பெண் பிள்ளைகளாக இருந்தால் வெளியிலே தெரிகிறது. அந்தப் பிள்ளைகள் கூச்சப்படுவார்கள் என்பதற்காக அது வெளியிலே தெரியாத அளவுக்கு காதொலிக் கருவிகள் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் 10,000 ரூபாய் செலவில், அதாவது 4,000 ரூபாய், 3,000 ரூபாய் அளவில் இருந்தால் அந்தப் பிள்ளைகளுக்குச் சங்கடமாக இருக்கும் என்பதற்காக விலையை அதிகப்படுத்தி 10,000 ரூபாய் மதிப்புள்ள அதிகத் திறன்வாய்ந்த, காதுக்குப் பின் பகுதியில் அணியக்கூடிய காதொலிக் கருவிகள் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல 2,400 மாற்றுத் திறனாளிகளுக்கு 75 மாற்றுத் திறனாளிகள் வீதம் ஒரு மாவட்டத்திற்குப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையிலேயும் அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைப் பயிற்சிகள் மூலமாகச் செய்துதந்து, அவர்களும் வாழ்க்கையிலே முன்னேற வேண்டும் என்பதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல, வங்கிக் கடனைப் பற்றிப் பேசினார்கள். மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகத்தான் கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை ஆண்டுக்கு ரூபாய் 10 கோடி வரை மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. மாற்றுத் திறனாளிகள் அதிக அளவில் வங்கிகள்மூலம் கடன் பெற்று சுயமாகத் தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேற்றம் அடைவதை ஊக்குவிக்கக்கூடிய அளவில், கடன் தொகைக்காக வசூலிக்கப்படும் வட்டியினை முழுவதுமாக அரசே ஏற்றுக்கொள்ளும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கடன் பிரச்சினைக்குக்கூட, மாற்றுத் திறனாளிகள் கடன் சுமையிலே இருக்கக்கூடாது என்பதற்காக வட்டியைக்கூட அரசாங்கம் செலுத்தும் என்று உத்தரவிட்டு இருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னால் முடிந்த அளவிற்கு என்னுடைய பதிலுரையைத் தெரிவித்து இருக்கிறேன். எலும்பு இல்லாத நாக்குதானே, எதையும் பேசலாம் என்று எண்ணிக்கொண்டு, வாய் நீளம் காட்டியவர்கள், வாய் வீரம் பேசியவர்கள் இப்போது வாய் அடைத்துக் கிடக்கிறார்கள். சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது அம்மா அவர்கள் தனித்துப் போட்டியிட்டிருந்தால் அண்ணா தி.மு.க.வுக்கு இன்னும் கூடுதலாக சட்டமன்ற உறுப்பினர்களே கிடைத்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், ரிஷிவந்தியமேகூட சங்கரன்கோயிலாக மாறியிருக்கும், பலருக்கும் டெபாசிட் போயிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ ஒரு கிளி ஜோசியக்காரனின் செப்பபடி வார்த்தைகளை நம்பி ஏதோ ஒரு கிளி ஜோசியக்காரனின் நெல் மணி வார்த்தைகளை நம்பி, ஆட்சிக் கனவிலே பல பேர் அலைந்து கொண்டிருக்கிறார்கள். தன் முகத்தைத் தானே கண்ணாடியில் பார்த்த பிறகும் கலர் கலராகக் கனவு காண்கிறார்கள். கண்ணாடித் துண்டு வைரமாகி விடாது. விறகு வீணையாகி விடாது.



'ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்'

என்பது நாலடியார் பாடல். ஊரில் ஓடும் சாக்கடை நீர் ஆற்றில் போய்ச் சேருமானால் அதன் பெயரும் ஆற்று நீராகித் தீர்த்தம் என்ற சிறப்பைப் பெறும். தான் சேர்ந்ததால்தான் ஆற்று நீர் தீர்த்தம் என்ற பெயர் பெற்றது என்று அழுக்கு நீர் எண்ணிவிடக் கூடாது. எம்.ஜி.ஆர். ஒரு பொதுத் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) எம்.ஜி.ஆர். ஒரு பொது நிறுவனம். கோயில் என்கிறபோது யார் வேண்டுமானாலும் வரலாம் என்கிறார்கள். வரலாம்தான். பக்தியோடு வரவேண்டும். பட்டா போட வரக்கூடாது. பக்தியோடு வரவேண்டும். எம்.ஜி.ஆர்.–ஐப் பட்டா போடுவதற்கு வரக்கூடாது. முகத்திலே முதலில் வருவது மூக்கு, அதனால் மூக்கே பிரதானம் அல்ல முகத்திற்கு. வாக்குச் சீட்டில் முதலில் பெயர் இருப்பதால் முதலாவதாய் வருவோம் என்றவர்கள் உக்கிரப்பட்டார்கள் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதில் ஓரளவுக்கு உறுப்பினர்களுக்கு திருப்தியாக இருக்கும் என்று கருதுகிறேன். புதிய அறிவிப்புகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) புதிய அறிவிப்புகளை எல்லாம் படித்து முடித்த பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவிப்புகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** சமூக நலத் துறை குறித்த அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெற தற்போது வருட வருமானம் ரூ.24,000/– என்று உள்ளது. இந்த வருமான உச்ச வரம்பு, பல ஆதரவற்ற பெண்கள் இந்தத் திட்டத்தின்மூலம் பயனடைய தடையாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இந்தத் திட்டத்தின்கீழ் அதிக அளவில் ஆதரவற்ற பெண்கள் பயன்பெறும் வகையில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற

பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தில் தற்பொழுது உள்ள வருமான வரம்பு நீக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–35

**ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்துகொள்ள உதவும் “மங்கள மாலை திட்டம்” அறிமுகம் செய்தல்**

சமூக நல இயக்குநரகத்தின்கீழ் உள்ள 27 குழந்தைகள் இல்லங்களிலும், 7 சேவை இல்லங்களிலும் ஆதரவற்ற பெண்களுக்கும், ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கும் புகலிடம் அளிக்கப்படுகிறது. இப்பெண் குழந்தைகள் பள்ளிப் படிப்பை முடித்து திருமண வயதை அடையும்பொழுது, திருமணம் செய்வித்து அவர்களது குடும்ப வாழ்க்கை நிம்மதியாக அமையும் வகையில் ஆதரவு அளித்து உதவுவது அவசியமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்த ஆதரவற்ற ஏழைப் பெண்கள், தகுந்த துணையைத் தேர்ந்தெடுக்க உதவிடும் வகையில் அவர்களுக்கு ஆதரவான சேவைகள் அளிக்கப்படும். தற்பொழுது உள்ள அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் நிதி உதவியும் அளிக்கப்படும். இந்தத் திட்டம் ஆதரவற்ற பெண்களுக்குப் பொருத்தமான மணமகன் அமைவதற்கு உதவி புரிவதோடு மட்டுமின்றி, அந்தப் பெண்கள் தவறான நபர்களிடம் சிக்கிக்கொள்வதையும் தடுக்கிறது என்பதற்கான ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆதரவற்ற திருநங்கையர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் அறிமுகம் செய்தல்**

திருநங்கையர்கள் சமுதாயத்தில் மிகவும் சாதகமற்ற நிலையில் உள்ளனர். அவர்களை சமுதாய நீரோட்டத்தில் கொண்டுவரவும், அவர்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெற ஏதுவாகவும் அரசால் பல்வேறு நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

திருநங்கையர்கள் வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய ரூ.15 இலட்சம் வரை கடன் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்கெனவே ஒரு புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.



தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கையர்களுக்கு சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தேசித்துள்ளார்கள். ஆதரவற்ற திருநங்கையர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் அறிமுகம் செய்யப்படுவதன்மூலம் 40 வயதிற்கு மேற்பட்ட ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கையர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 ஓய்வூதியம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**அரசுக் குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களுக்கு சலவை இயந்திரம் வழங்குதல்**

சமூக நல இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் 27 அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் 7 சேவை இல்லங்களின்மூலம் ஆதரவற்ற மற்றும் ஏழைக் குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு உணவு, உறைவிடம், சீருடைகள் மற்றும் கல்வி வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் பயன்பெறும் குழந்தைகள் துணி துவைப்பது போன்ற பணிகளில் நேரத்தை வீணாக்காமல் அவர்களின் படிப்பு மற்றும் ஓய்வு நேரத்தினை பயனுள்ள வகையில் உபயோகிப்பது அவசியமாகிறது. இந்த இல்லங்களில் வசிக்கும் குழந்தைகளது துணி துவைக்கும் பணிச் சுமையினைக் குறைக்கவும், அவர்களது நேரத்தினை சிறந்த முறையில் படிப்பிற்காகவும் மற்றும் ஓய்விற்காகவும் செலவிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி அனைத்து அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் சேவை இல்லங்களுக்கு 1.20 கோடி ரூபாய் செலவில் சலவை இயந்திரங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் விழுப்புரத்தில் இயங்கும் அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கான புதிய கட்டடம் கட்டுதல்**

நல்ல ஆரோக்கியமான, பாதுகாப்பான குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலை வழங்குவதற்கு முறையான அனைத்து அடிப்படை உள்ளமைப்பு வசதிகளும் கொண்ட கட்டட வசதியே முதனிலைத் தேவையாகும். விழுப்புரத்தில் இயங்கிவரும் ஆண்களுக்கான குழந்தைகள் இல்லம் தனியார் வாடகைக் கட்டடத்தில் குறைவான இட வசதியுடன் தற்போது இயங்கி வருகிறது. குழந்தைகளுக்கு விளையாட

போதுமான இடவசதி அளித்தல், பாடம் சாரா செயல்பாடுகள் மற்றும் பிற கலை நிகழ்ச்சிகள் நடத்தத் தேவையான வசதிகள் செய்து தருதல் மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு குழந்தையின் உடல் மற்றும் மனரீதியான வளர்ச்சிக்குப் போதுமான இடம் மற்றும் சுகாதாரமான சுற்றுப்புறம் அவசியமாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி விழுப்புரத்தில் உள்ள குழந்தைகள் இல்லத்திற்காக நவீனமயமாக்கப்பட்ட சமையலறை, நூலகம், அகன்ற வகுப்பறைகள் மற்றும் உணவுக்கூடம் போன்ற சிறப்பு அம்சங்கள் கொண்ட புதிய கட்டடம் ஒன்று 3.40 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சமூகப் பாதுகாப்புத் துறை பணியாளர்களின் நலனை முன்னிட்டு குடியிருப்புகள் கட்டுதல்**

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்களில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் அவர்கள் தப்பித்து செல்லாதிருத்தலை உறுதி செய்ய, அலுவலர்கள் மற்றும் காவலர் ஆகியோர் இல்ல வளாகங்களுக்குள்ளேயே தங்கியிருத்தல் கட்டாயம் ஆகும். பணியாளரின் நலன் பேணுதலே மறைமுகமாக குழந்தைகளின் நலன் பேணும் என்பதால், இல்ல வளாகத்திற்குள் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் அமைத்தல் மிக அவசியமாகும்.

தற்போது, இக்குடியிருப்புகள் பாழடைந்த நிலையில் உள்ளதால் குடியிருப்பதற்குத் தகுதியற்ற நிலையில் உள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி 9 குழந்தைகள் இல்லங்களில் உள்ள அனைத்து 166 பணியாளர் குடியிருப்புகளும் மொத்தம் 15.61 கோடி ரூபாய் செலவில் மீண்டும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

**கடலூர், அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு கண்காணிப்புக்கான கருவிகள் வழங்குதல்**

சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமத்தின்முன் விசாரணைக்காக முன்னிலைப்படுத்தப்பட்டு, அக்குழுமத்தால் இல்ல நீக்க அல்லது நிறுத்தி வைத்தல் ஆணை



பிறப்பிக்கப்படும் வரை கூர்நோக்கு இல்லத்தில் தங்கவைக்கப்படுவார்கள்.

கூர்நோக்கு இல்லங்களில் குழந்தைகளின் தனிப்பட்ட உரிமைகள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த மிக நேர்த்தியான பாதுகாப்பு அமைப்பு வழங்குவது அவசியமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி கடலூர், அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இளஞ்சிறார்களின் நலன் கருதி, அவ்வில்லத்தின் பாதுகாப்பு அம்சங்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி மேலும் சீரமைக்கப்படும். நெருங்கிய கண்காணிப்புக்கான தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் மின்னணு சார்ந்து செயல்படக்கூடிய சுற்றிலும் கண்காணிப்பதற்குத் தேவையான பாதுகாப்பு அம்சங்களைக் கொண்ட உபகரணங்கள் 30 இலட்சம் ரூபாய் செலவில் கடலூர், அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு வழங்கி அதன்மூலம் மேற்கூறிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு 4 இணை சீருடை வழங்குதல்**

மாற்றுத் திறனாளிகளுக்கான 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1,720 மாணவ, மாணவிகளும் மற்றும் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூந்தமல்லியில் தொழிற்பயிற்சிப் பிரிவில் பயிலும் 55 மாணவ, மாணவிகளும் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு முதல் 4 இணை சீருடைகள் ரூ.14.31 இலட்சம் செலவில் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு மானியம் ரூ.450/-லிருந்து ரூ.650/- ஆக உயர்த்தி வழங்குதல்**

9,260 மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் 23 அரசு மற்றும் 54 அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தற்போது

உணவீட்டுச் செலவினமாக ரூ.450/– வழங்கப்படுகிறது. இவ்வுணவீட்டுச் செலவினம் ரூ.650/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ரூ.5 கோடியே 36 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவி மற்றும் காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத மாணவ, மாணவிகளுக்கும் ரொக்கப் பரிசு உயர்த்தி வழங்குதல்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலுகின்ற 12 ஆம் வகுப்பு பார்வையற்ற மாணவர்களுக்கும், காது கேளாத மற்றும் வாய் பேச முடியாத மாணவ, மாணவிகள் மாநில அளவில் முதல் இடம் பெறுவோர்க்கு ரூ.18,000/–லிருந்து ரூ.50,000/– ஆகவும் (மேசையைத் தட்டும் ஒலி) 2 ஆம் இடத்தைப் பெறுவோர்க்கு ரூ.12,000/–லிருந்து ரூ.30,000/–ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 3 ஆம் இடத்தைப் பெறும் மாணவருக்கு ரூ.9,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 10 ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் இடம் பெறும் மாணவருக்கு ரூ.12,000/–லிருந்து ரூ.25,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 2 ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.9,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 3 ஆம் இடம் பெறும் மாணவருக்கு ரூ.6,000/–லிருந்து ரூ.15,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 2012–2013 ஆம் ஆண்டு முதல் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் முன்பருவப் பள்ளிகளுக்குச் செல்லும் அனைத்து வகை மாற்றுத் திறனுடைய குழந்தைகள் மற்றும் ஒரு துணையாளருக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணச் சலுகை வழங்குதல்**

ஆரம்ப நிலை பயிற்சி பெறும் மையங்கள் மற்றும் முன் பருவ பள்ளிகளுக்குச் செல்லும் அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுடைய குழந்தைகளுடன் செல்லும் ஒரு துணையாளருக்கு 2012–2013 ஆம் அண்டு முதல் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய பயணச் சலுகை வழங்கப்படும்.



இந்தத் திட்டத்தினால் 32 ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பயன்பெறும் சுமார் 2,390 மாணவர்களுடைய பெற்றோர்கள் பயனடைவார்கள். இந்தத் திட்டத்திற்காக ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**பார்வைத் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்காக தேர்வு எழுதும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் தொகையினை உயர்த்தி வழங்குதல்**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவிகள் பள்ளித் தேர்வுகள் எழுத உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு ஒரு உதவியாளருக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.100/– வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை தேர்வுத் தாளுக்கு ரூ.250/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 500 மாணவ, மாணவியர்கள் பயனடைவார்கள். இந்தத் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.27.65 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**பத்தாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் பள்ளிப் படிப்பை இடைநிறுத்தம் செய்யாமல் இருக்க, ஊக்கத் தொகையினை வழங்குதல்**

10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாற்றுத் திறனாளிகள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகளில் சுமார் 1,400 குழந்தைகள் தங்கள் படிப்பை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படித்துப் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவருக்கு ரூ.1,500/–ம், 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவருக்கு ரூ.1,500/–ம், 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவருக்கு ரூ.2,000/–ம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்திற்காக ரூ.22.34 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

*பிற்பகல் 1–45*

**மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 1,014 சிறப்பாசிரியர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தி வழங்குதல்**

மனவளர்ச்சி குன்றியோர், செவித்திறன் பாதிக்கப்பட்டோர், பார்வைத்திறன் குறையுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் பணியாற்றும் 1,014 சிறப்பு ஆசிரியர்களுக்கும் மாதச் சம்பளமாக ரூ.5,000/– மட்டுமே இதுவரையில் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்தச் சிறப்பு ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுடைய மாதச் சம்பளம் ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ரூ.12.17 கோடி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**கை, கால் இழந்த மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன செயற்கை அவயம் வழங்குதல்**

கால் மூட்டுக்கு மேல் இழந்த 100 மாற்றுத் திறனாளிகளுக்கும், கைகளை இழந்த 100 மாற்றுத் திறனாளிகளுக்கும் நவீன செயற்கை அவயம் ரூ.70 இலட்சம் செலவில் வாங்கி வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஒளிரும் மடக்கு குச்சிகள் வழங்குதல்**

பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் நடப்பதற்கு உதவியாக ஒளிரும் மடக்குக் குச்சி 10 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 பயனாளிகளுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**குறைந்த பார்வைத் திறனுடைய மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குப் பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாக்கிப் படிக்க உதவும் கருவி (Magnifier) வழங்குதல்**

பார்வைத் திறன் குறையுடைய கல்வி பயிலும் மாணவர்களுக்கு பாட நூல்களின் எழுத்துக்களைப் பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி 50 இலட்சம் ரூபாய் செலவில் 500 மாணவ



மாணவிகளுக்கு வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவித் திட்டத்தில் மணமக்களில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருந்து பட்டம் / பட்டயம் பெற்றிருந்தால் திருமண நிதியுதவியாக ரூ.50,000/- உடன் 4 கிராமம் தங்கம் வழங்குதல்**

பட்டம் அல்லது பட்டயம் பெற்றவர்கள் நல்ல நிலையில் இருந்தாலும் அல்லது மாற்றுத் திறனாளியாக இருந்தாலும் (மணமக்களில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருத்தல்) அவர்களுடைய தியாக மனப்பான்மையைப் போற்றும் வகையில், மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் உதவித் தொகையாக ரூ.50,000/– உடன் 4 கிராம் திருமாங்கல்யம் செய்ய தங்கமும் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வேண்டுகிறேன், வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பாண்டியராஜன், என்ன?

***திரு. க. பாண்டியராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கான செயல்முறைத் திட்டத்தில் 56 திட்டங்கள் சொல்லப்பட்டுள்ளன. அந்த 56 திட்டங்களில், 16 திட்டங்களில் நிதி ஒதுக்கீடு தவறாகச் சொல்லப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு 44 ஆவது திட்டமான வழிகாட்டும் திட்டத்தை எடுத்துக்கொண்டீர்களென்றால், இதை நல்ல திட்டம் என்று அனைவரும் வரவேற்றோம். வழிகாட்டும் திட்டம் என்ற பெயரில் 17,053 நலப் பணியாளர்கள், 629 ஒருங்கிணைப்பாளர்களை சென்ற வருடம் அரசு நியமித்தது, என்.ஜி.ஓ.–க்கள் மூலமாக. அதற்கு சென்ற வருடம் அரசாங்கம் செலவு செய்த பணம் மட்டுமே 17 கோடியே 39 இலட்சம் ரூபாய். ஆனால், இந்த முறை அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.150 இலட்சங்கள் மட்டுமே. 17,053 பேர் + 629 பேருக்கு சென்ற முறை கொடுத்த சம்பளத்தைக்

கொடுத்திருந்தாலே நமக்கு இந்த வருடம் 30 கோடி ரூபாய் ஆகும். ஏனென்றால் சென்ற வருடம் பாதியில்தான் அந்த நலப் பணியாளர்கள் வந்தார்கள். அப்படி இருக்கும்போது இந்த வருடம் முழு வருடமும் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்றால். அவர்களுக்கு 30 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும். இதேமாதிரி 16 திட்டங்களில், அதாவது திட்டம் எண் 6, 7, 8, 9, 17, 25, 30, 31, 32, 33, 37, 40, 44, 46, 51, 56 ஆகிய இந்த 16 திட்டங்களிலும் சென்ற வருடம் அரசு எவ்வளவு செலவு செய்ததோ அதற்குக் குறைவாக இந்த வருடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல நேரங்களில் Computer–ல் Cut and Paste என்று சொல்வார்கள், அதுமாதிரி சென்ற வருடம் உள்ளதை அப்படியே Cut and Paste செய்தது மாதிரி இருக்கிறது. இதை நீங்கள் தயவுசெய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், இந்த சட்டமன்றத்தில் இதுமாதிரி ஒரு பட்ஜெட்டை pass செய்தது என்ற ஒரு நிலை வந்துவிடக்கூடாது. அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழிகாட்டும் திட்டத்திலேயே மிக விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் என்னென்ன கேள்விகள் கேட்கிறீர்களோ அதெல்லாம் இதிலேயே இருக்கிறது. இதோ பாருங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு என்னென்ன திட்டம், 17,053 பணியாளர்களுக்கு உள்ள திட்டம் இருக்கிறது. சென்ற ஆண்டு என்று சொன்னால், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அந்த ஆண்டையும் நீங்கள் கணக்கு வைத்துச் சொல்கிறீர்கள். அந்த ஆண்டிலே கொடுக்கப்பட்ட அந்த நிதியுதவி வேறு. இப்போது அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இந்த 10 மாதக் காலத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியுதவி வேறு. ஆக, அந்த நிதியையும் இந்த நிதியையும் நீங்கள் ஒன்றாக்கக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் கடந்த ஆண்டின் நிதியை வைத்துப் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



பிற்பகல் 1–50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் கூறுவது 17,053 நலப் பணியாளர்கள் மற்றும் 629 ஒருங்கிணைப்பாளர்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் இலக்கு ரூ.150.36 இலட்சமாகவும், சாதனையாக ரூ.1,739 இலட்சம் என்று இருக்கின்றது. (குறுக்கீடு) பொறுமையாகக் கேளுங்கள். 2012–2013 ஆம் ஆண்டில் இலக்கு ரூ.150.36 இலட்சமாக இருக்கின்றது. சாதனை, எவ்வளவு செலவழிப்பதற்கு வரையறுக்க முடியுமோ அந்த ஆண்டு முடிவிற்குள் அந்தச் சாதனை நிகழ்த்தப்படும் என்பதனை திரு. பாண்டியராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,692,46,99,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.206,11,77,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–4–2012) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

(30) 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி1)-த் துறையின் 12–10–2011 ஆம் நாளிட்ட அரசாணை எண் 126 மற்றும் வணிக வரி மற்றும் பதிவு(பி1)த் துறையின் 1–11–2011 ஆம் நாளிட்ட அரசாணை எண் 137 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(31) 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

40. மானியக் கோரிக்கை எண்45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

41. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

42. மானியக் கோரிக்கை எண்52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

43. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

44. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

*45. சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)*

*46. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)*

*****

# இணைப்பு I

*(61 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண்—45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2012—2013

### அத்தியாயம்—1

**முன்னுரை**

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின்கீழ் பெண்கள், குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள்/பாலூட்டும் தாய்மார்கள், அரவாணிகள் மற்றும் முதியோர் மகிழ்வடையும் வண்ணம் பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகம் செய்தும், ஏற்கெனவே உள்ள திட்டங்களை மேம்படுத்தியும் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, சமூக நலத் திட்டங்களை சமூக நலன், சமூக பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய மூன்று இயக்குநரகங்கள் வாயிலாக செயல்படுத்தி வருகிறது. மேலும், ஓய்வூதியம் வழங்குதல் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வருவாய்த் துறை மூலம் செயல்படுத்திட இத்துறை ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது.

சமூக நலத் துறை, பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டங்கள், குறைவான வருவாய் பெறும் பணிபுரியும் மகளிருக்குத் தங்கும் விடுதி, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், உறைவிடம் மற்றும் ஆதரவு தேவைப்படும் பெண்களுக்கு சேவை இல்லங்கள் போன்ற நலத் திட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகள் நலனுக்காக சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதின் விளைவாக தமிழ்நாட்டில் குழந்தை பாலின விகிதம் அதிகரித்துள்ளது. குழந்தை பாலின விகிதம் குறைந்துள்ளதாக அறியப்பட்ட கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு தொட்டில் குழந்தைத்

திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே இருப்பின் அக்குழந்தைக்கு வழங்கப்பட்ட வைப்புத் தொகை ரூ.22,200-லிருந்து ரூ.50,000 ஆகவும், இரு பெண் குழந்தைகள் எனில் ஒவ்வொரு குழந்தைக்கும் அளிக்கப்பட்ட வைப்புத் தொகை ரூ.15,200-லிருந்து ரூ.25,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது. செவ்வனே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திருமண நிதியுதவி திட்டங்கள் இத்துறையின் குறிப்பிடத்தக்க வெற்றிகளுள் ஒன்றாகும். 17-05-2011 முதல், 5 வகை திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் ரூ.25,000 திருமண நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு ரூ.50,000 திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

சமூகப் பாதுகாப்புத் துறைமூலம் பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்தினின்று முரண்படும் குழந்தைகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் இத்துறையின் திட்டங்களில் ஒரு மைல் கல் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் குழந்தை பாதுகாப்புக் குறித்த பொருள்களில் மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் செயல்பட்டு சமூகத்தில் எந்த ஒரு குழந்தையும் கவனிப்பின்றி விடப்படாதிருத்தலை முனைப்பாய் உறுதிசெய்கின்றது.

சத்துணவு மற்றும் குழந்தைகள் மையப் பணியாளர்கள் நல மேம்பாட்டிற்காக இவ்வரசு, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மையங்களில் ஊட்டமிகு சத்துணவு அளித்தல், மையங்களை நவீனப்படுத்தி மின்வசதி அளித்து குழந்தைகள் நலன் பேண மின்விசிறி மற்றும் குழல்விளக்கு வசதி செய்தல், குழந்தை நேய கழிப்பறைகள் அமைத்தல் போன்ற கூடுதல் வசதிகளால் சத்துணவுத் திட்டமும், இணை உணவுத் திட்டமும் மேலும் வளப்படுத்தப்பட்டுள்ளது.

முதியோருக்கு வட்டாரம்தோறும் இல்லங்கள் அமைப்பதன் மூலமாகவும், முதியோர், விதவையர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு





ரூ.500-லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கியதன் மூலமாகவும் அவர்களின் நல்வாழ்வை இவ்வரசு உறுதிப்படுத்தியுள்ளது. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலன் சட்டம் மற்றும் குழந்தைகள் திருமண தடைச் சட்டம் முதலிய சட்டங்களுக்கு இணங்க, விதிகள் வகுக்கப்பட்டு, சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரதட்சணை தடைச் சட்டம் மற்றும் குடும்ப வன்கொடுமையிலிருந்து பெண்களைக் காப்பாற்றும் சட்டம் ஆகியவற்றை செவ்வனே செயல்படுத்த நடவடிக்கைகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முயற்சி மனநிறைவினை தரும் பலன்களை தந்துள்ளது. இவ்வரசு திருநங்கையர்களின் இடர்பாடுகளை நன்கு புரிந்துகொண்டு அவற்றைச் சீர்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்ததன்மூலம் திருநங்கையர் இன்று சமூகத்தில் தலைநிமிர்ந்து நடமாடும் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

மிக நீண்ட பயணமாக இருப்பினும், பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் நலிவுற்ற மக்களின் வளமான எதிர்காலத்திற்காக, இனிவரும் காலங்களிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், மேலும் சீரிய முறையில் திறம்பட தொடர்ந்து சேவை புரிந்து சமுதாய வளர்ச்சி மற்றும் சம உரிமையை நிலைநாட்டுவதில் நாட்டிலேயே சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை அடைவோம் என்ற நம்பிக்கையை இத்துறைப் பெற்றுள்ளது.

## அத்தியாயம்—2

### மகளிர் நலம்

**2.1** தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 49.8 சதவீதம் பெண்களாக உள்ளனர். மனித வள மேம்பாடு என்பது பெண்களின் வளர்ச்சி மற்றும் அதிகாரப் பகிர்வையே பெரிதும் சார்ந்துள்ளது. எனவே, மக்களின் நலன் காக்கும் ஓர் அரசின் வளர்ச்சிக் கொள்கையில் பெண்களின் நலம் மற்றும் அதிகாரப்பகிர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது ஆட்சி காலங்களில் எல்லாம் மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக பல சிறப்பு முயற்சிகளை எடுத்து வந்துள்ளார்கள்.

[2012 ஏப்ரல் 11

ஏழை பெற்றோர் தம் மகளிரின் திருமணம் தொடர்பான அடிப்படைச் செலவுகளை மேற்கொள்வதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவுவதற்காக 2011 ஆம் ஆண்டில் அனைத்து திருமண உதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் ரூ.25,000/- நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்காக 22 காரட் 4 கிராம் தங்க நாணயம் வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் பெண்களிடையே உயர் கல்வியை ஊக்குவிப்பதற்காக பட்டம்/பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு திருமண நிதியுதவி ரூ.25,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தப்பட்டு திருமாங்கல்யம் செய்வதற்கு 22 காரட் 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகின்றது.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக வறிய நிலையில் உள்ள பெண்கள் அரசால் நடத்தப்படும் அரசு சேவை இல்லங்களில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு உணவு, தங்குமிடம், கல்வி மற்றும் எதிர்காலத்தில் பிறர் உதவியின்றி சுயமாக வாழும் வகையில் தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது. பொருளாதாரத்தில் நலிவடைந்த மகளிர், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாவதன்மூலம் கௌரவமான வருவாய் ஈட்டித் தரும் சீருடை தைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

திருநங்கைகள் சமூகத்தில் நன்மதிப்புடன் வாழும் வகையில் திருநங்கைகள் சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவீதம் மானியத்துடன் வங்கிகள்மூலம் ரூ.15.00 இலட்சம் வரை பல்வேறு தொழில்களை நடத்த ஏதுவாக கடனுதவி வழங்கப்படுகிறது. இதன் மூலம் திருநங்கைகளுக்கு நிலையான வாழ்வாதாரமும் நல்ல எதிர்காலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005 மற்றும் வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 ஆகிய சமூக சட்டங்களை செயல்படுத்தும் "ஒருங்கிணைப்பாளராக" செயல்படும் சமூக நலத் துறையானது குடும்ப வன்முறை மற்றும் வரதட்சணை தொடர்பான குடும்ப பிரச்சினைகளால் பாதிக்கப்படும் நிலையிலுள்ள பெண்களை பாதுகாக்கிறது. 1993 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மாநில மகளிர் ஆணையமானது பெண்களின் சமூக மற்றும் சட்ட ரீதியான பிரச்சினைகளையும் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்பான புகார்களையும் கையாள்கிறது.



2012 ஏப்ரல் 11]

## திருமண நிதி உதவித் திட்டங்கள்

***2.2*** திருமணம் என்பது சமுதாய அந்தஸ்து, கலாச்சாரப் பின்னணி மற்றும் ஒட்டு மொத்த சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஓர் அமைப்பாக விளங்குகிறது.

ஒரு பெண் திருமண வயதினை எய்தும்பொழுது தனக்கென ஒரு குடும்பத்தை அமைத்துக் கொள்வதற்காக திருமணம் செய்துகொள்வது சமுதாய எதிர்பார்ப்பின்படி அவசியமாகிறது. தற்போது நடைமுறைகளிலுள்ள சமூக பழக்க வழக்கங்களின்படி ஏழை பெற்றோர் திருமணம் தொடர்பான செலவினங்கள் செய்வதோடு குறிப்பாக திருமாங்கல்யத்திற்கு தங்கமும் வாங்க வேண்டியுள்ளது. இதனால் ஏழை பெற்றோர் தம் பெண் குழந்தைகளுக்கு திருமண ஏற்பாடு செய்வதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். அதிலும் கடன் சுமைகளோடு வறிய நிலையில் உள்ள பெற்றோர்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

ஏழை பெற்றோர்கள் தங்களுடைய பெண் குழந்தைகளுக்கு உரிய வயதில் திருமணம் செய்வதில் எதிர்கொள்ளும் இத்தகைய பிரச்சனைகளைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு அரசு திருமண நிதி உதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

ஏழை பெற்றோர்களின் பெண் குழந்தைகள், மறுமணம் செய்யும் விதவைகள், ஏழை விதவைகளின் பெண் குழந்தைகள், ஆதரவற்ற பெண் குழந்தைகள் மற்றும் கலப்புத் திருமணம் புரியும் தம்பதியர் ஆகியோரின் நலனுக்காக 5 திருமண நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

***2011-2012 ஆம் ஆண்டில் 1,72,000 குடும்பங்கள் திருமண நிதி உதவி திட்டங்களின்மூலம் பயனடைந்துள்ளனர். அதில் 1,20,000 குடும்பங்கள் நிதியுதவியுடன் தங்க நாணயமும் பெற்று உள்ளனர்.***

### 2.2.1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் நோக்கம், ஏழைக் குடும்பத்தை சார்ந்த, 18 வயது பூர்த்தி அடைந்த, 10 ஆம் வகுப்பு வரை படித்த

[2012 ஏப்ரல் 11

பெண்கள் மற்றும் 5 ஆம் வகுப்பு வரை படித்த பழங்குடியின பெண்களுக்கு திருமண நிதியுதவி அளித்தல் ஆகும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர்க்கு ரூ.25,000/- நிதி உதவியும் மற்றும் 22 காரட் 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. வறிய நிலையில் உள்ள பெற்றோர்களே இத்திட்டத்தின் பயனாளிகள் ஆவர். பெற்றோர்கள் இல்லாத பட்சத்தில் மணப்பெண்களே இவ்வுதவிகளைப் பெறுகின்றனர்.

இதே திட்டத்தின்கீழ் 17-05-2011 முதல் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு நிதி உதவித் தொகை ரூ.25,000/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தப்பட்டு அவர்களுக்கு திருமாங்கல்யம் செய்ய 22 காரட் 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இப்புதுமையான திட்டத்தினால் பெற்றோர் மத்தியில் தம் பெண் குழந்தைகளுக்கு உயர் கல்வி அளிக்க வேண்டும் என்ற புதிய சிந்தனை உருவாகி உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயனடைய குடும்ப ஆண்டு வருமானம் ரூ.24000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களும் இத்திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் பயனடைகிறார்கள்.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.70161.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 2.2.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்

விதவைகள் மறுமணம் என்பது கடந்த நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் சமூகத்தால் அறியப்படாத ஒரு நிகழ்வாக இருந்து வந்துள்ளது. பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகளின் முயற்சியினால் விதவைகள் மறுமணம் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மறுமணத்தால் அநேக இளம் விதவைகள் புதுவாழ்வு பெற்றுள்ளனர்.

பெண்களின் நலனில் அக்கறை உள்ள ஒரு சமூகம் விதவை மறுமணத்தை ஊக்குவிக்க வேண்டும். மறுமணம் செய்யும் ஒரு விதவைப் பெண்ணிற்கு உரிய மதிப்பும் மரியாதையும் சமூகத்தில் வழங்கப்பட வேண்டும்.



2012 ஏப்ரல் 11]

விதவை மறுமணத்திற்கு உரிய மதிப்பும் மரியாதையும் அளிக்கும் வகையில் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவைகள் மறுமண உதவித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் மறுமணம் செய்யும் இளம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கிறது. அம்மறுமணத்தை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்படும் ரூ.25,000/-க்கான நிதியுதவியானது ரூ.15,000/- காசோலையாகவும், ரூ.10,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைய குறைந்தபட்ச கல்வித் தகுதியோ அல்லது வருமான உச்சவரம்போ நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு முடித்த பெண்களுக்கு நிதியுதவியாக ரூ.50,000/- என்பது ரூ.30,000/- காசோலையாகவும், மற்றும் ரூ.20,000/- தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்படுவதுடன் 4 கிராம் 22 காரட் தங்க நாணயம் திருமாங்கல்யம் செய்யும் பொருட்டு வழங்கப்படுகிறது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.161.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 2.2.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்

விதவைகள் எனும் சிறப்பு பிரிவினர் அரசின் நலத் திட்டங்களில் எப்பொழுதும் கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் ஆவர். இந்நலத் திட்டங்களில் ஒன்று ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம் ஆகும். இத்திட்டமானது ஏழை விதவைகள் தங்கள் மகளுக்கு திருமணம் செய்து வைப்பதில் உதவி செய்து அதன் மூலம் அவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கித் தருகிறது. இத்திட்டத்தின்கீழ் 17- 05- 2011 முதல் ரூ.25,000/- நிதியுதவியோடு, 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. மேலும் பட்டம் மற்றும் பட்டயம் முடித்தவர்களுக்கு ரூ.50,000/- நிதியுதவியும், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது.

[2012 ஏப்ரல் 11

இத்திட்டத்தின்கீழ் பயனடையும் ஏழை விதவைகளின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.24,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2012- 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.3503.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்

பெற்றோர் இல்லாத ஏழை ஆதரவற்ற பெண்கள் தங்களது திருமண செலவுகளை மேற்கொள்ள மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற ஏழைப் பெண்களின் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்தகைய ஆதரவற்ற ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக ரூ.25,000/- நிதியுதவியும், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. மேலும் பட்டம் மற்றும் பட்டயம் முடித்தவர்களுக்கு ரூ.50,000/- நிதியுதவியும், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. ஏழைப் பெண்ணின் பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.373.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.5 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்

சாதீய அடிப்படையிலான வேறுபாடுகள் என்பது சமுதாய வளர்ச்சிக்கு பெரிய தடையாக உள்ளது. இதனால் ஏற்படும் எதிர்மறை விளைவுகளைக் களைந்து சமுதாயத்தில் சம நிலையினை மேம்படுத்தும்பொருட்டு தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

கலப்புத் திருமணம் புரிந்த தம்பதியர் இத் திட்டத்தின்மூலம் சமூக அங்கீகாரம் பெறுகின்றனர். இத்திட்டத்தின்மூலம் ரூ.25,000/- நிதியுதவியானது ரூ.15,000/- காசோலையாகவும் மற்றும் ரூ.10,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் அளிக்கப்படுவதுடன்



2012 ஏப்ரல் 11]

திருமாங்கல்யத்திற்காக 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற கல்வித் தகுதி ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. மேலும் பட்டம் மற்றும் பட்டயம் முடித்தவர்களுக்கு ரூ.50,000/-நிதியுதவியானது, ரூ.30,000/- காசோலையாகவும் மற்றும் ரூ.20,000/- தேசிய சேமிப்பு பத்திரமாகவும் அளிக்கப்படுவதுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் 22 காரட் தங்க நாணயமும் 17-05-2011 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

### திட்டம்–I

கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராகவும் மற்றும் ஒருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்

### திட்டம்–II

கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் இதர வகுப்பினராகவும் மற்றவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

கலப்புத் திருமணத்தில் பயனடைவோர்க்கு ஆண்டு வருமான உச்ச வரம்பு ஏதும் இல்லை

**2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.800.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3 அரசு சேவை இல்லங்கள்

தமிழக அரசின்மூலம் 7 அரசு சேவை இல்லங்கள் தலா ஒன்று வீதம் தாம்பரம், சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இந்த சேவை இல்லங்களில் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரரீதியாக பின்தங்கி உள்ள பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மேற்கண்ட பெண்களுக்கு சீரிய முறையில் இருப்பிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை அளிப்பதுடன் பாதியில் படிப்பினை நிறுத்தியவர்களுக்கு தொடர்ந்து படிக்க இச்சேவை இல்லம்மூலம் வசதிகள் அளிக்கப்படுகிறது. மேலும் இச்சேவை இல்லங்களில்

[2012 ஏப்ரல் 11

ஏற்புடைய சூழ்நிலையில் விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தங்கள் குழந்தைகளையும் வளர்க்க இயலும். அதிகபட்சமாக ஒரு தாய் மூன்று குழந்தைகளை தன்னுடன் வைத்துக்கொள்ளலாம். ஆண் குழந்தைகள் அச்சேவை இல்லங்களிலேயே 5 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கலாம். பெண் குழந்தைகள் 12 ஆம் வகுப்பு வரையும் இந்த சேவை இல்லங்களில் தங்கிப் படிக்கலாம். இவர்கள் பொருளாதார தன்னிறைவு பெறுவதற்காக தொழில் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தனித் திறமைகளான கணினிப் பயிற்சி, ஆங்கில பேச்சுத் திறமை பயிற்சி, உயர்கல்விக்கான ஆலோசனை மற்றும் எதிர்கால வாழ்விற்கான வழிகாட்டுதல் ஆகியவையும் இந்த சேவை இல்லங்களில் வழங்கப்படுகிறது.

**2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.482.67 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.4 பெண்களுக்கான உயர் கல்விக்கு உதவுதல்

இளம் பெண்களின் உயர் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 7 அரசு சேவை இல்லங்கள் மற்றும் 27 அரசு குழந்தைகள் காப்பகங்களில் தங்கி +2 படிப்பினை முடித்த முன்னாள் மாணவிகள் தம் மேற்கல்வியைத் தொடர கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித் தொகையானது தொழிற்கல்விக்கு ரூ.50,000/-ம் மற்றும் பட்டம்/பட்டய படிப்பிற்கு ரூ.30,000/-ம் 2011 ஆம் ஆண்டு முதல் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.64.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 167 மாணவிகள் பயனடைந்துவருகின்றனர்.

**2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.64.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.5 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

மாநிலம் முழுவதுமுள்ள 7 அரசு சேவை இல்லங்கள் மற்றும் 27 அரசு குழந்தைகள் காப்பகங்களில் தங்கிப் பயின்ற முன்னாள் மாணவிகளுக்கு உதவும் வகையில் சென்னை, தாம்பரம் அரசு சேவை இல்ல வளாகத்தில் இடை நிலை ஆசிரியர் பயிற்சி



2012 ஏப்ரல் 11]

நிறுவனம் இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவியர் இரண்டு ஆண்டு கால ஆசிரியை பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். முதன் முறையாக 2011-2012 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி நிறுவன மாணவிகளை சரித்திரப் புகழ் வாய்ந்த இடங்கள், அருங்காட்சியகங்கள், அறிவியல் கண்காட்சிகள், விலங்கியல் பூங்காக்கள், கேளிக்கை பூங்காக்கள் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று தேவையான தகவல்களை சேகரிக்கவும் அனுபவ பூர்வமான அறிவினைப் பெறவும் ஏதுவாக கல்விச் சுற்றுலா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.9.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.6 பணிபுரியும் மகளிர் விடுதிகள்

தற்போதைய சமுதாய சூழ்நிலையில், பெண்களுக்கான வாய்ப்புகள் அதிக அளவில் உருவாகி உள்ளதன் காரணமாக பெண் கல்வி விகிதம் உயர்ந்து உயர் கல்வி கற்கும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மகளிரின் கல்வி நிலை உயர்ந்ததால் அவர்கள் அதிக வேலை வாய்ப்புகளைப் பெறும் நிலை உருவாகியுள்ளது. மேலும் தற்போதைய விலைவாசி உயர்வு மற்றும் குடும்ப வாழ்க்கைத் தர உயர்வின் காரணமாக ஆண் பெண் இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் பணிபுரியும் பெண்களுக்கு உதவும் வகையில் 8 பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகளை அரசு நடத்தி வருகிறது. சென்னையில் இரண்டும், கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரில் தலா ஒரு விடுதியும் செயல்பட்டு வருகின்றன. ஒரு இடைக்கால தங்கும் விடுதியும் சென்னையில் இயங்கி வருகிறது.

சென்னையில் மாதம் ரூ.25,000/-மும் பிற மாவட்டங்களில் மாதம் ரூ.15,000/-மும் வருமானம் பெறும் மகளிர், அரசு பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகளில் தங்க தகுதியுடையவர்களாவர். தங்கும் விடுதியின் மாத வாடகையாக சென்னையில் ரூ.300/-ம் பிற

[2012 ஏப்ரல் 11

மாவட்டங்களில் ரூ.200/-ம் செலுத்த வேண்டும். உணவு, மின்சாரம் மற்றும் ஏனைய கட்டணங்களுக்கு விடுதியில் தங்கியிருப்போரிடமிருந்து பகிர்ந்து அளிக்கும் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அரசு பணிபுரியும் மகளிர் விடுதி பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் அளிக்கப்படுகிறது.

**2012—2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.78.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.7 மகளிரை சமூக பொருளாதார ரீதியாக அதிகாரப்படுத்தலுக்கான திட்டங்கள்**

பொருளாதார சுதந்திரத்தின்மூலமே பெண்களை ஆற்றல் மிக்கவர்களாக ஆக்க முடியும். ஒரு பெண்ணின் பொருளாதாரத் தேவைகள் பூர்த்தியானால் மட்டுமே அவள் ஆற்றல் மிக்கவளாக உணர முடியும். இதனைக் கருத்தில்கொண்டு, சமூக நல இயக்ககம், சமூகப் பொருளாதார திட்டங்களை மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக செயல்படுத்தி வருகிறது. கூட்டு முயற்சியின் அடிப்படையிலான கூட்டுறவு தத்துவமானது கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பெண்களின் சமூகப் பொருளாதார உயர்விற்கு உண்மையிலேயே உதவுவதாக உள்ளது. சமூகத்தில் நலிவுற்ற நிலையில் உள்ள பெண்களுக்காக மட்டுமே இந்த தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. வறுமை கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாகி, கௌரவமான வருவாய் பெற்றுத்தரும் தொழில் வாய்ப்புகளை பெறுகின்றனர்.

சமூக நல இயக்ககத்தின்கீழ் 98 மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 80 மகளிர் தையற் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கும் சீருடைகள் தைத்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.



2012 ஏப்ரல் 11]

25 மகளிர் இணை உணவு தயாரிக்கும் சங்கங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட சிறப்பு ஆணையரின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இதர சங்கங்கள், பதிவேடுகள், குறிப்பேடுகள், சாக்குக் கட்டிகள் மற்றும் கயிற்றினால் ஆன பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளன.

**கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பெண் உறுப்பினர்களின் விவரம்**

| வ. எண் | கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பெண்கள் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் | 80 | 50000 |
| 2. | பெண்கள் எழுதுபொருள் கூட்டுறவு சங்கங்கள் | 15 | 768 |
| 3. | இணை உணவு தயாரிக்கும் பெண்கள் தொழில் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1450 |
| 4. | இதர சங்கங்கள் | 3 | 1015 |
| | மொத்தம் | **123** | **53233** |

2012-2013 ஆம் கல்வி ஆண்டு முதல் நான்கு இணை சீருடைகளை 46.85 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், இதே 2012-2013 கல்வி ஆண்டில், 6 ஆம் வகுப்பு முதலான மற்றும் அதற்கு மேலும் பயிலும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டையும், மாணவிகளுக்கு பாவாடை தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீசும் வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பெண் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் சீருடை தைத்தல் மற்றும் வழங்குதல் பணியானது அவர்களுக்கு குறிப்பிடத்தக்க வருவாயை ஈட்டித் தருகிறது. 2011-2012 ஆம் கல்வி ஆண்டில் இரண்டு இணை சீருடைகள் பள்ளிக் குழந்தைகளுக்கு தைத்து வழங்கப்பட்டது. இதன் மூலம் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பயனளிக்கக்கூடிய வருவாய் ஈட்டித்

[2012 ஏப்ரல் 11

தருகிறது. 2012-2013 ஆம் கல்வி ஆண்டில், நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்படும்போது இந்த வருமானம் நான்கு மடங்காக உயரும். இது சங்கத்தின் பெண் உறுப்பினர்கள் இடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

மேலும் தற்போது வெளிச் சந்தையில் நடைமுறையில் உள்ள தையல் கூலிக்கு இணையாக பெண் உறுப்பினர்களின் தையற்கூலித் தொகையினை அரசு உயர்த்தி உள்ளது. இதன் மூலமாக பெண் உறுப்பினர்கள் வருடம் முழுவதும் நிரந்தர வருமானம் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது. பல ஏழைக் குடும்பங்களில் மகளிர் வருமானம் மட்டுமே முழு குடும்பத்திற்கான வருமானமாக உள்ளது. சீருடைகளின் எண்ணிக்கை கூடுதலாக்கப்பட்டதும், தையல் கூலி உயர்வும், 50,000 பெண் உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, அவர்கள் சார்ந்த 50,000 குடும்பங்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்துள்ளது.

நான்கு இணை சீருடைகளைத் தைக்க ஏதுவாக தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் தேவையான அளவில் இணை உறுப்பினர்களை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சல்வார் கமீசு மற்றும் முழுக்கால் சட்டையினை தைக்கும் வகையில் தைக்கும் திறனை மேம்படுத்த சங்க பெண் உறுப்பினர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

- ➢ மாநிலத்தில் 19 மாவட்டங்களில் வருடந்தோறும் 500 பெண்கள் பயன்பெறும் வகையில் 25 தையல் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சேலம், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள மூன்று தையல் பயிற்சி மையங்கள் பழங்குடியின பெண்களுக்கு பிரத்யேகமாக பயிற்சி வழங்குகின்றன. இதில் ஒவ்வோர் ஆண்டும் 45 பழங்குடி இன பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள்.
- ➢ 15 மகளிர் எழுது பொருட்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பாட்டில் உள்ளன. அரசு துறைகள், அரசு தொழிற் துறை பிரிவுகள் மற்றும் இதர நிறுவனங்கள் கோரும் தேவைப்பட்டியலின் அடிப்படையில் இச்சங்க பெண் உறுப்பினர்கள்மூலம், பல்வேறு வகையான பதிவேடுகள் மற்றும் குறிப்பேடுகள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.



2012 ஏப்ரல் 11]

## 2.8 சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர், பொருளாதாரத்தில் நலிவுற்ற மகளிர், மாற்று திறனாளிகளான ஆண்கள் (ம) பெண்கள் மற்றும் சமூகத்தில் பாதிக்கப்பட்ட பிற மகளிர் பயன் பெறுகிறார்கள். பெண்கள் சுய தொழில்மூலம் பொருளாதார மேம்பாடு அடைந்து தங்களது குடும்ப வருமானத்தை பெருக்கிக்கொள்ள இத்திட்டம் உதவுகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 4,192 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

***2011-2012 ஆம் ஆண்டு முதன் முறையாக இத்திட்டமானது முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 3778 இலங்கைத் தமிழர்கள் பயனடைந்துள்ளனர்.***

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.135.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 2.9 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

1993 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பெண்களின் நலன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகள் மற்றும் பெண்களின் நிலை தொடர்பான பொதுவான விவகாரங்கள் குறித்து ஆய்வு செய்கிறது. இவ்வாணையம் தலைவர் மற்றும் 9 உறுப்பினர்களைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆணையத்தின் குறிக்கோள்கள்

- பெண்களுக்கு பாதுகாப்பு அளித்தல் மற்றும் பெண்களுக்கான நலன்களை உறுதி செய்தல்.
- பெண்களின் நிலைபாட்டினை உறுதி செய்யும் பொருட்டு பாலின விவகாரங்களைக் கையாளுதல்.
- பெண்களின் நலன் தொடர்பான விவகாரங்களில் எடுக்கப்பட வேண்டிய தேவையான நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்.

[2012 ஏப்ரல் 11

### 2.9.1 மகளிர் ஆணையத்தின் செயல்பாடுகள்

1. பெண்களுக்கான சட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விவரங்களை கவனித்தல்.
2. பெண்கள் பாதுகாப்பு உரிமைகள் பல்வேறு நிறுவனங்களால் சரிவர நடைமுறைபடுத்தப்படாதபோது அரசுக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல்.
3. பெண்களுக்கு தேவையான உரிமைகள் மறுக்கப்பட்டு சட்ட மீறல்கள் ஏற்படும்பொழுது தேவையான தீர்வுகளைப் பெற தக்க பரிந்துரைகள் அனுப்புதல்
4. பெண் உரிமைகள் மீறப்படுவது குறித்த விவகாரங்கள் மீது தொடர்புடைய உயர் அலுவலர்களை அணுகி தேவையான தொடர் நடவடிக்கை எடுத்தல்

அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் மகளிருக்கான உரிமைகள் மறுக்கப்படும்போது அல்லது மகளிர் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளில் சட்ட மீறல்கள் ஏற்படும்போது பெண்களே நேரிடையாக மாநில மகளிர் ஆணையத்தை அணுகி தீர்வுகள் பெறலாம்.

பெண்களுக்கு சமநிலை மற்றும் வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க ஏதுவாக கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்ட சட்ட பூர்வ அமைப்பாக மகளிர் ஆணையம் உள்ளது. மகளிர் ஆணையமானது பெண்களின் குறிப்பான பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து பெண்கள் தொடர்பான குறிப்பான நிகழ்வுகளில் ஆராய்ச்சிகளும் மேற்கொண்டு வருகிறது

இவ்வாணையம், பெண்களுக்கான பணிபுரியும் விடுதிகள், குறுகிய கால பெண்கள் தங்கும் விடுதிகள் மற்றும் பெண்களுக்கான தனிச்சிறைகள் ஆகியவற்றினை ஆய்வு செய்யும் பணிகளை மேற்கொள்கிறது. ஆணையத்தின் மூலமாக பெண்கள் தொடர்புடைய விழிப்புணர்வு பணிகளும் நடைபெறுகின்றன.

### 2.10 தமிழ்நாடு சமூக நல வாரியம்

1954 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியமானது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் மகளிர் (ம) குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வருகிறது.



2012 ஏப்ரல் 11]

**வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

1. மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்.
2. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் சேவையின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்துதல்.
3. மாநில மற்றும் மத்திய சமூக நல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணித்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம் ஒரு அலுவல் சாரா தலைவரையும், மத்திய சமூக நல வாரியத்தால் நியமிக்கப்படும் 15 அலுவல் சாரா உறுப்பினர்களையும் மற்றும் தமிழக அரசால் நியமிக்கப்படும் 15 அலுவல் சாரா உறுப்பினர்களையும், ஆக மொத்தம் 30 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. கல்வி மற்றும் பயிற்சி மூலமாக பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், கூட்டு முயற்சி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்திற்கு வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை தனது சேவைகளின்மூலம் தமிழ்நாடு சமூக நல வாரியம் ஊக்கப்படுத்தி உதவி செய்கிறது.

### 2.10.1 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் வழங்கப்படும் நிதியுதவி விவரம்

| நிதியுதவி | தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை | மொத்த அலகுகள் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநில அரசு | 206 | 206 | 16.60 இலட்சம் | 1,91,875 |
| மத்திய சமூக நல வாரியம் | 474 | 1146 | 496.37 இலட்சம் | |

### 2.10.2 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியம்

மகளிர் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் குழந்தைகள்

காப்பகங்கள், பொழுது போக்கு மையங்கள், பாலர் பள்ளிகள் போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ.5,000/-ஒரு முறை அரசு மானியமாக 50:50 பங்களித்தல் அடிப்படையில், பதிவு செய்யப்பட்ட 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் சமூக நல வாரியத்தால் வழங்கப்படுகிறது. இதற்கென 2011-2012 ஆம் ஆண்டிற்கு ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.11 குடும்ப ஆலோசனை மையம்

தம்பதிகளுக்கும் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கி, சமூகத்தின் அடிப்படை அங்கமான குடும்பங்கள் பிரிந்து விடாமல் பாதுகாத்து, குடும்ப ஒற்றுமையை மேம்படுத்துவதே குடும்ப ஆலோசனை மையங்களின் முக்கிய நோக்கமாகும். அதிவேகமான மற்றும் இயந்திரமயமான தற்போதைய வாழ்க்கை முறையில், தம்பதியரிடையே அதிக அளவில் காணப்படும் மன அழுத்தமானது பல்வேறு குடும்ப பிரச்சனைகளுக்கு காரணமாகிறது. இது குடும்ப ஆலோசனை மையங்களின் தேவைகளை வலியுறுத்துவதாக உள்ளது. மூன்றாம் நபர் தலையீட்டின் பேரில் தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரும்புவோர் இம்மையங்களை அணுகலாம்.

சகிப்புத்தன்மையற்ற குடும்பங்களால் பாதிக்கப்படும் பெண்கள் குறிப்பாக வன்முறைக்கு ஆளாகும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆலோசனைகள் வழங்கியும், உரிய துறைகளுக்கு பரிந்துரைத்தும், மறுவாழ்வு அளிக்கும் பணிகளை குடும்ப ஆலோசனை மையங்கள் தகுதி வாய்ந்த ஆலோசகர்கள் மூலம் மேற்கொண்டு வருகின்றன.

வரதட்சணைக் கொடுமைகள் மற்றும் குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்ப பிரச்சினைகளால் பாதிக்கப்படும் பெண்களும் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளும், இம்மையங்களை அணுகி தக்க ஆலோசனைகளையும் உரிய வழிகாட்டுதல்களையும் பெறுகின்றனர்.

- ➢ சென்னை, திருவள்ளூர், திருவாரூர், விழுப்புரம், தேனி, மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 6 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் குடும்ப ஆலோசனை மையங்களுக்கு, தமிழக அரசு, தமிழ்நாடு சமூகநல வாரியம் மூலமாக மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மையத்திற்கும் மானிய உதவியாக தலா ரூ.80,000/- வீதம் வழங்கி வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.7.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





### 2.12 தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம்

திருநங்கைகள் குடும்பம் மற்றும் சமூகத்தினால் ஒதுக்கப்படுவதுடன் பல்வேறு வன்முறைகளுக்கும் ஆளாகின்றனர். சமூகத்தில் வேறுபடுத்திப் பார்க்கப்படுவதன் காரணமாக கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் திருநங்கைகளுக்கு மறுக்கப்படுகிறது.

சொந்த குடும்பங்களாலும் உறவினர்களாலும் மற்றும் அக்கம் பக்கத்தினராலும் திருநங்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. பொதுவாக சமூகத்தில் காட்டப்படும் இந்த வேறுபாட்டினால் அவர்கள் கல்வியை இடையில் விட்டுவிட்டு வீட்டிலிருந்து வெளியேறும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். மேலும் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை மற்றும் அடையாள அட்டை போன்ற அத்தியாவசியமான சான்றுகளை வீட்டை விட்டு வெளியேறும்போது அவர்களால் எடுக்க முடிவதில்லை. திருநங்கைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் அரசு திருநங்கைகள் நல வாரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருநங்கைகளுக்கான பொருளாதார மேம்பாட்டிற்காக வங்கிகள் மூலம் ரூ.15 இலட்சம் வரையிலான கடனுதவி வழங்கவும் அதில் 25 சதவீதம் மானியமாக வழங்கி திருநங்கைகள் சுய உதவிக் குழுக்கள்மூலம் வருவாய் ஈட்டும் தொழில்களைத் துவங்க தொழிற்கடன் வழங்கும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி திருநங்கைகளுக்கான 51 சுய உதவிக் குழுக்களின் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பாக மொத்த ரூபாய் 2.20 கோடி மதிப்புள்ள பல்வேறு தொழிற் திட்டங்களைச் செயல்படுத்த ரூ.55.00 இலட்சம் செலவில் 25 சதவீதம் மானியமாகவும் ரூபாய் 1.65 கோடி வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

[2012 ஏப்ரல் 11

திருநங்கைகள் சுய உதவி குழுக்கள்மூலம் மளிகைக் கடை, கால்நடை வளர்த்தல், உணவு விடுதி, சோப்பு, நாப்கின், பால் பொருட்கள் தொடர்பான தயாரிப்பு நிலையங்கள், பயணிகள் ஆட்டோ, மற்றும் சரக்கு ஆட்டோ ஓட்டுதல் மற்றும் துணி, கயிறு, அரிசி தொடர்பான வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**2.13 பெண்கள் நலம் பேணும் முக்கியச் சட்டங்கள்**

சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படும் நிலையிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புச் சட்டங்களின் ஷரத்துக்கள் இயற்றப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் சமூக நல இயக்குனரகம் “ஒருங்கிணைப்பாளர்” என்ற நிலையில் பெண்களுக்கான சமூக சட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

**சமூக சட்டங்கள் பின்வருமாறு**

1. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005

2. வரதட்சனை தடுப்புச் சட்டம், 1961

**2.13.1 குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005**

இச்சட்டம் குற்றவியல் நடைமுறைகளைப் பின்பற்றிய போதிலும் உரிமையியல் தீர்வுகளை வழங்குகிறது. வன்முறையால் பாதிக்கப்பட்டோர் நீதிமன்றத்தை அணுகி 60 நாட்களுக்குள் நியாயம் பெற்றுக்கொள்வது இச்சட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இச்சட்டத்தின்கீழ் குடும்ப வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண்கள் மட்டுமே குடும்ப ரீதியாக தொடர்பில் உள்ள ஆண்கள்மீது வழக்கு தொடரலாம். இது தவிர கணவரின் உறவினர்கள் மற்றும் அவரைச் சார்ந்த உறவினர்கள் அல்லது திருமணம் போன்ற உறவு முறையில் வாழ்பவர்கள் மீதும் நிவாரணம் கோரி வழக்கு தொடரலாம்.



2012 ஏப்ரல் 11]

**குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005—ன்படி கீழ்க்காணும் நிவாரணங்களைப் பெறலாம்**

பிரிவு —18—பாதுகாப்பு ஆணைகள்

பிரிவு —19—வசிப்பிட ஆணைகள் (புகுந்த வீட்டில்)

பிரிவு —20—வாழ்க்கைப் பொருள் உதவி ஆணை (மனுதாரருக்கும் மனுதாரரின் குழந்தைகளுக்கும்.)

பிரிவு —21—தற்காலிகமாக தன்னுடன் குழந்தையை வைத்துக் கொள்வதற்கான ஆணை

பிரிவு —22—வன்முறைகளுக்கான இழப்பீட்டு ஆணைகள்.

பெண்களுக்கு வன்முறையற்ற வீட்டில் வசிப்பதற்கான தார்மீக உரிமையை நிலை நாட்டுவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**2.13.2 பாதுகாப்பு அலுவலர்கள்**

பாதிக்கப்பட்ட பெண்களின் சார்பாக அவர்களின் கணவர் அல்லது அவர்களுடன் குடும்ப உறவு முறையில் வாழும் ஆண் நபர்கள்மீது வழக்கு பதிவு செய்வதற்காக சிறப்பு ஏற்பாடாக “பாதுகாப்பு அலுவலர்கள்” நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

குடும்ப நிகழ்வு அறிக்கைகள் பாதுகாப்பு அலுவலர்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் சார்பாக பதிவு செய்யப்பட்டு அவர்கள் நீதிமன்றத்தை அணுகுவதற்கு உரிய உதவிகளும் செய்து தரப்படுகிறது.

சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதிமன்றத்தில் வழங்கும் தீர்வுகளை நிறைவேற்றும் பணிகளையும் மேற்கொள்வது பாதுகாப்பு அலுவலர்களின் கடமையாகும்.

பாதுகாப்பு அலுவலர்கள் இச் சட்டத்தினை செயல்படுத்துவதில் நீதித் துறை நடுவர்களுக்கு உதவியாக பணிபுரிந்து வருகிறார்கள்.

**2.13.3 சேவை அளிப்பவர்கள்**

இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த சேவைப் பணியாளர்கள் இச்

[2012 ஏப்ரல் 11

சட்டத்தை செயல்படுத்தும் துறை அலுவலர்களுக்கு தேவையான ஒத்துழைப்பை அளித்து வருகின்றனர். அவர்கள் குடும்ப வன்முறை நிகழ்வு படிவத்தை பாதிக்கப்பட்ட பெண்களின் சார்பாக பூர்த்தி செய்தும், அவர்களுக்கு பாதுகாப்பான உறைவிடமும் குறுகிய கால தங்கும் விடுதியில் அவர்களின் குழந்தைகளுடன் தங்குவதற்கு ஏற்பாடு செய்தும், தேவையான ஆலோசனைகள் வழங்கியும் தேவை ஏற்படும்போது மருத்துவ உதவியும் வழங்கி வருகின்றனர். சேவைப் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதோடு, நிரந்தர வருமானம் பெற தொழிற் கல்வியும் அளிக்கின்றனர்.

**2.13.4 பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் மருத்துவ வசதிகள்**

குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005-ன்கீழ் 98 பாதுகாப்பு இல்லங்கள் அறிவிக்கை செய்யப்பட்டு மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் இதர மருத்துவமனைகளுடன் சேர்த்து மொத்தம் 1849 மருத்துவமனைகள் மருத்துவ வசதி மையங்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**2.14 வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961**

இச்சட்டம் 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. தமிழக அரசால் தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள் 2004 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்டன. இச்சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவதன்மூலம் மாவட்ட சமூக நல அலுவலர்கள் வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இச்சட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக தேவையான பயிற்சிகள் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

சமீப காலங்களில் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட வரதட்சணை தொடர்பான வழக்குகள்மீது நடவடிக்கை தொடர்வதற்கு மாவட்ட சமூக நல அலுவலர்களின் விசாரணைக்குப்பின் வழக்குகளின் உண்மைத் தன்மையை அறிந்து அதன் அடிப்படையில் வழக்குகள் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



2012 ஏப்ரல் 11]

ஆண்டுதோறும் நவம்பர் 26 ஆம் நாள் வரதட்சணை தடுப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. மாவட்ட சமூக நல அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வரதட்சணை தடுப்புச் சட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றனர்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் மூலமாக இளைய சமுதாயத்தினரிடையே வரதட்சணை கொடுமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரதட்சணை வாங்கமாட்டோம்" என்ற உயரிய எண்ணம் இளம் உள்ளங்களில் விதைக்கப்படுகிறது.

**அத்தியாயம்–3**

**குழந்தைகள் நலம்**

***3.1*** ஒரு நாட்டின் மிக முக்கியமான சொத்து குழந்தைகளாவர். குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைப் பொறுத்தே ஒரு நாட்டின் நல்ல எதிர்காலம் அமைகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையிலான தமிழக அரசு குழந்தைகளின் நலனை உறுதிபடுத்தும் அரசின் செயலாக்க திட்டத்தில் குழந்தைகளின் பாதுகாப்பினையே ஒரு முக்கிய அங்கமாக எப்போதும் கருதுகிறது. தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள் அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதோடு எந்த ஒரு குழந்தையும் சமூகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு வளையத்திலிருந்து விடுபட்டுவிடாமல் காக்கிறது.

குழந்தைகளின் மிக அத்தியாவசிய தேவைகளான தாய் சேய் நலம், ஊட்டச்சத்து மற்றும் கல்வி, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, நலன் மற்றும் முன்னேற்றம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் வகுக்கப்படுவதன்மூலம் அவர்கள் ஆரோக்கியமாகவும், உரிய மதிப்புடனும் வளர்வதற்கு தக்க வாய்ப்புகளும் வசதிகளும் உருவாக்கித் தரப்படுகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற காலங்களிலெல்லாம் குழந்தைகளின், குறிப்பாக பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக பல புதுமையான திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக இத்திட்டங்களினால் குடும்பங்களில் பெண் குழந்தை குறித்து நேர்மறையான எண்ணங்கள் உருவாகியுள்ளன.

[2012 ஏப்ரல் 11

## 3.2 தொட்டில் குழந்தைத் திட்டம்

தமிழகத்தின் சில பகுதிகளில் பரவலாக நடைபெற்று வந்த பெண் சிசுக்கொலை என்னும் கொடுமையை அறவே ஒழித்து பெண் குழந்தைகளை இறப்பின் பிடியிலிருந்து காக்கும்பொருட்டு சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தைத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு முதன்முதலாக ஆரம்பித்தார்கள். பல்வேறு சமூக மற்றும் பொருளாதார நிர்பந்தங்களின் காரணமாக பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்ட பெண் குழந்தைகளை மீட்க இத்திட்டத்தின்கீழ் முக்கிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளன.

பெண் சிசுக்கொலை வழக்கத்தில் இருந்த மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. தேவையான பணியாளர்கள் மற்றும் வெப்ப அளிப்பான் கருவிகள், குளிர்சாதன பெட்டிகள், பாலூட்டும் புட்டிகள், துடைப்பான் போன்ற அனைத்து வசதிகளுடன் குழந்தை வரவேற்பு மையங்கள் இம்மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டன. உலகளாவிய அளவில் வரவேற்புகளைப் பெற்ற இத்திட்டத்தின்மூலம் 31-12-2011 வரை 3,321 பெண் குழந்தைளும், 607 ஆண் குழந்தைகளும் மீட்கப்பட்டுள்ளனர்.

புதுமையான இத்திட்டம் மாநிலத்தின் சுகாதார குறியீடுகளில் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு 1,000 ஆண் குழந்தைகளுக்கு 942 பெண் குழந்தைகள் என்று இருந்த குழந்தை பாலின விகிதமானது, 2011 ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு, 946 பெண் குழந்தைகளாக உயர்ந்துள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்புடன் 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பினை ஒப்பிடுகையில் மேற்கண்ட ஐந்து மாவட்டங்களில் குழந்தைகளின் பாலின விகிதம் நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தில் உதித்த விடிவெள்ளி திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டம், சமூகத்தில் நிலவி வந்த மிகக் கொடுமையான பெண் சிசுக் கொலை பழக்கத்தை அறவே ஒழித்துள்ளது.



2012 ஏப்ரல் 11]

### 3.2.1 2011 ஆம் ஆண்டில் தொட்டில் குழந்தைத் திட்டம் மேலும் ஐந்து மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படுதல்

பல்வேறு சமூகப் பொருளாதார காரணங்களினால், கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதம், கவனிக்கத்தக்க வகையில் குறைந்துள்ளதாக 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்துக் காட்டியது. இதனை கவனத்தில்கொண்டு இந்த எதிர்மறையான விளைவை சரிசெய்யும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இம் மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தைத் திட்டத்தினை விரிவுபடுத்தி உத்தரவிட்டுள்ளார்கள். 2011 ஆம் ஆண்டு மேற்கண்ட ஐந்து மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளில் முழு வசதிகளுடன் கூடிய வரவேற்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழான வரவேற்பு மையங்களில் பெறப்படும் குழந்தைகள் உறுதியான எதிர்காலத்தை பெற முழு தகுதியுடையவர்களாவர். இது மட்டுமின்றி ஒவ்வொரு குழந்தைக்கும் குடும்ப சூழலில் வளர்வதற்கு உரிமை உள்ளது என்பதால், அக்குழந்தை மகிழ்ச்சி, அன்பு மற்றும் புரிதல் சூழலில் ஒரு குடும்பத்தில் வளர்க்கப்பட வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் குழந்தைகள் தத்து திட்டத்தின்கீழ் பிறிதொரு குடும்பத்தில் மறுவாழ்வு பெறுகின்றனர்.

**2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.47.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 3.3 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், நாட்டில் பெண் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களுக்கெல்லாம் முன்னோடியாகும். புதுமையான இத்திட்டத்தின் நோக்கமானது பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழித்தல் மற்றும் பெண் கல்வியினை மேம்படுத்துதல் ஆகும்.

பெண் குழந்தைகளுக்கு அதிக நிதிப்பயன் கிடைத்திடும் வகையில் 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது.

[2012 ஏப்ரல் 11

***3.3.1* இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வைப்புத் தொகை விவரம்**

**திட்டம்–1:** இத்திட்டத்தின்கீழ் குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் இருபது ஆண்டுகளுக்கு ரூ.22,200/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. தற்போது இத்தொகையானது 01-08-2011 அன்றோ அதற்கு பிறகோ பிறக்கும் குழந்தைகளுக்கு ரூ.50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**திட்டம்–2**: குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண்குழந்தையின் பெயரிலும் இருபது ஆண்டுகளுக்கு தலா ரூ.15,200/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. தற்போது இத்தொகையானது 1-08-2011 அன்றோ அதற்கு பிறகோ பிறக்கும் குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### 3.3.2 தகுதிகள்

- குடும்பத்தில் ஆண் குழந்தைகள் இல்லாது, ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்கும் குடும்பமே இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்ய தகுதி உடையதாகும். பின்னாளில் இப்பெற்றோர் ஆண் குழந்தையை தத்தெடுத்துக் கொள்ளக் கூடாது.
- குடும்பத்தின் ஆண்டு வருமானம் திட்டம்-1ற்கு ரூ.50,000/-க்கு குறைவாகவும், திட்டம்-2ற்கு ரூ.24,000/-த்திற்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும்.
- பெற்றோரில் ஒருவர் 35 வயதுக்குள் கருத்தடை செய்திருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் நாளில் பெற்றோர் / அவர்களின் பெற்றோர்கள் தமிழகத்தில் பத்தாண்டுகள் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

வைப்புத் தொகை முதலீடு செய்யப்பட்ட ஐந்தாமாண்டு முடிவிலிருந்து இருபதாம் ஆண்டு வரை அப்பெண் குழந்தைகளின் கல்விக்காக ஆண்டுதோறும் ஊக்கத் தொகையாக ரூ.1800/- தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அப்பெண் குழந்தை பத்தாம்



2012 ஏப்ரல் 11]

வகுப்பு வரை படித்து பொதுத் தேர்வு எழுதியிருந்தால் மட்டுமே வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட திரளான வட்டி விகிதத்துடன் கூடிய நிலை வைப்புத் தொகை, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்' முதலீடு செய்யப்படுகிறது.

**இருபதாம் ஆண்டு நிறைவில் கிடைக்கும் முதிர்வுத் தொகை விவரம்:–**

| வ. எண் | திட்டங்கள் | ஆரம்ப வைப்பீட்டு தொகை (ரூ.) | 20 ஆம் ஆண்டில் முதிர்வு தொகை ஆண்டு ஊக்கத் தொகை ரூ.1,800/-சேர்த்து தோராயாமாக (ரூ.) |
|---|---|---|---|
| 1 | திட்டம்-1 | 22,200/-<br>50,000/- | 1,00,000/-<br>3,34,025/- |
| 2 | திட்டம்-2 | 15,200/- (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) | 60,000/- (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) |
| | | 25,000/- (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) | 1,50,827/- (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) |

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.10,500.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 3.4 குழந்தை தத்தெடுத்தல் திட்டம்

ஏழ்மையான சமூகப் பொருளாதார நிலைகளின் காரணமாகவும், பிறழ் நீதி எண்ணங்களாலும், சமூகத்தில் சில குடும்பங்கள் சிதைகின்றன. இதனால் பெற்றோரில் சிலர் தாங்கள் பெற்ற குழந்தைகளை கைவிடுவதால், அக்குழந்தைகள் புறக்கணிப்பு, தவறாக பயன்படுத்தப்படல் மற்றும் நிராதரவற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் இக்குழந்தைகள் தமது வாழ்வை

[2012 ஏப்ரல் 11

காப்பகங்களில் கழிக்கும் நிலைக்கு ஆளாகின்றனர். குழந்தைகள் குடும்ப சூழ்நிலையில் பராமரிக்கப்படுவதே முதல் தேர்வாகவும், காப்பகங்களில் வளர்க்கப்படுவது கடைசி தேர்வாகவும் இருக்க வேண்டும் என்பதே அனைவராலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

மத்திய தத்துவள ஆதார மையத்தின் கூற்றுப்படி, தத்தெடுத்தல் என்பது பெற்றோர்களிடமிருந்து நிரந்தரமாக பிரிய நேரிட்ட ஒரு குழந்தை வளர்ப்பு பெற்றோர் என்று அழைக்கப்படும் புதிய பெற்றோரின் உறவு முறையோடு இணைந்து அனைத்து தார்மீக உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளோடு அவர்களது சட்டப்பூர்வமான குழந்தையாக மாறும் செயல்முறையைக் குறிப்பதாகும்.

தத்தெடுத்தல் திட்டத்திற்கென ஒழுங்கு முறையான உரிமையியல் சட்ட தொகுப்பு ஏதும் இல்லாத நிலையில் புது தில்லி மத்திய தத்துவள ஆதார மையத்தின் வழிகாட்டுதல்களே தத்தெடுப்பு திட்டத்தின் சம்பந்தப்பட்டவர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளையும், செயல்முறைகளையும் வகுப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இதனால் தத்தெடுப்பு திட்டமானது செவ்வனே செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்டவற்றிலிருந்து தத்தெடுப்பு தொடர்பான வழிகாட்டுதல்கள் பெறப்பட்டுள்ளன.

- இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000
- திரு. L.K. பாண்டே என்பவர் யூனியன் ஆப் இந்தியாவிற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு எண் 1171/1982 மீது மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆணை.
- குழந்தைகளின் உரிமை மீதான ஐக்கிய நாட்டு சபையின் மாநாட்டு தீர்மானம்-1989
- வெளிநாடு தத்தெடுத்தலில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு மீதான ஹேக் மாநாட்டு தீர்மானம்-1993

தத்தெடுப்பு திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்நாட்டில் தத்து வழங்கிட தற்போது 15 தன்னார்வ தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 5 நிறுவனங்களுக்கு வெளி



2012 ஏப்ரல் 11]

நாடுகளுக்கு தத்து கொடுக்கும் அங்கீகாரம் புதுடெல்லியில் உள்ள மத்திய தத்து வள ஆதார நிறுவனத்தால் (Central Adoption Resource Authority-CARA) வழங்கப்பட்டுள்ளது. இந்த 15 தத்து நிறுவனங்களும் முறையே சென்னை (2), கோயம்புத்தூர் (1), சேலம் (2), மதுரை (2), காஞ்சிபுரம் (2) மற்றும் கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக அமைந்துள்ளன. உரிய நீதிமன்றங்களால் பின்வரும் சட்டங்களின் படி, சட்டப்பூர்வமாக குழந்தைகள் தத்தெடுக்கப்படுகின்றனர்.

- இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 (HAMA)
- பாதுகாவலர் மற்றும் முதுகணாளர் சட்டம், 1890 (GAWA)
- இளைஞர் நீதிச் சட்டம் 2000, திருத்தப்பட்ட சட்டம், 2006 (Juvenile Justice Act 2000, as amended in 2006)

இத்திட்டத்தின்கீழ் தத்து கொடுக்க இயலாத நிலையில் உடல் ரீதியான மற்றும் மருத்துவ ரீதியான பிரச்சினைகளைக் கொண்ட சிறப்புக் கவனம் தேவைப்படும் நிலையில் உள்ள குழந்தைகள் அரசு மானிய உதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் நான்கு சிறப்பு காப்பகங்களில் ஒப்படைக்கப்பட்டு அங்கு சிறப்புக் கவனம் மற்றும் பாதுகாப்பு பெற்றுவருகின்றனர்.

தத்து திட்டத்தினை செயல்படுத்திவரும் நிறுவனத்தினருக்கு தத்தெடுத்தல் குறித்தான விழிப்புணர்வினை ஏற்படுத்திட முகாம்கள் மற்றும் கருத்துபட்டறைகளை தொடர்ந்து தமிழக அரசு நடத்தி வருகிறது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.36.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 3.5 பணிபுரியும் பெண்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகங்கள்

ஏழைக் குடும்பங்களில் குடும்ப வருவாயைப் பெருக்க கட்டாயம் வேலைக்கு செல்ல வேண்டிய நிலையில் பெண்கள் இருப்பதாலும், கூட்டு குடும்ப முறை சிதைந்து வருவதாலும், வேலைக்கு செல்லும் ஏழை பெண்கள் தாம் பணிக்கு செல்லும் போது தங்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள உதவி தேவைப்படுபவர்களாக உள்ளனர்.

[2012 ஏப்ரல் 11

வேலைக்கு செல்லும் தாய்மார்களுக்கு மட்டுமல்லாது நோய்வாய்ப்பட்ட பெண்களுக்கும் குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பகல் நேர சேவைகள் அவசியமாகிறது.

கூடுதல் பணி சார்ந்த நடவடிக்கைகளின் காரணமாக வீட்டிற்கு வெளியேயும், நோய்வாய்ப்பட்டிருக்கும் காரணத்தினால் வீட்டிற்குள்ளேயும் கூட பெண்கள் தங்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள உறுதுணையும் உதவியும் எதிர்நோக்கியுள்ளனர்.

குடும்பத்தில் மூத்த குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகள் பள்ளிக்கு செல்லாமல் தங்களது இளைய சகோதர, சகோதரிகளை கவனிக்கும் பொறுப்பை ஏற்பதைத் தவிர்த்து அவர்கள் பள்ளிக்கு செல்வதற்கு இத்திட்டம் வழி வகை செய்கிறது. பணி புரியும் பெண்கள் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களுக்கு உதவும் வகையில் இத்திட்டத்தை அரசு, தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் காப்பகங்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெற்றோர்களின் 0-5 வயதிலான குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்கு சத்தான இணை உணவுடன் கல்வியும் இக்காப்பகங்களில் வழங்கப்படுகிறது.

தற்போது தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 15 குழந்தைகள் காப்பகங்களுக்கு அரசால் மானியம் வழங்கப்படுகிறது. 25 குழந்தைகளுடன் இயங்கும் ஒரு காப்பகத்திற்கு மானியமாக ஆண்டொன்றிற்கு ரூ.25,410/- அரசால் வழங்கப்படுகிறது.

**2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.6 மாநில அரசு மானிய உதவியுடன் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள்

ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களின் தன்னார்வ முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக மாநில அரசு தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்து



2012 ஏப்ரல் 11]

வருகிறது. இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள் கீழ்வருமாறு:

அ. 5 முதல் 18 வயது வரையுள்ள தாய் அல்லது தந்தை இல்லாத குழந்தைகள்

ஆ. பெற்றோர் இருவரும் இல்லாத குழந்தைகள்

இ. கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் குழந்தைகள்

ஈ. நீண்டநாள் நோய்வாய்ப்பட்ட பெற்றோர்களின் குழந்தைகள்

உ. நீண்டநாள் சிறையில் இருக்கும் பெற்றோர்களின் குழந்தைகள் ஆகியோர் இத்திட்டத்தின்கீழ் பயனடைய தகுதியுடையவர் ஆவர்

ஊ. பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ₹24000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒரு இல்லத் தாய்/ தந்தை மற்றும் ஒரு உதவியாளரால் கவனிக்கப்படும் 25 குழந்தைகள் கொண்ட குழுக்களாக குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றனர்.

ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு உணவூட்டு செலவினமாக ரூ.450/- மாநில அரசால் வழங்கப்படுகிறது. பிற நிர்வாக செலவினங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் அனுமதிக்கப்பட்ட 13,405 குழந்தைகளைப் பராமரிப்பதற்காக 170 குழந்தைகள் இல்லங்கள் மானியங்கள் பெற்று வருகின்றன.

**2012-2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.604.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3.7 சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்கள்

தமிழக அரசால் மாநிலம் முழுவதும் நடத்தப்படும் 27 அரசு குழந்தைகள் காப்பகங்கள் மூலம் நிராதரவான மற்றும் தாய் தந்தையற்ற குழந்தைகளுக்கு தங்குமிடத்தோடு உணவு, உடை, மருத்துவ வசதிகளுடன் பள்ளி கல்வி மற்றும் உயர் கல்வி ஆகியவையும் வழங்கப்படுகிறது.

[2012 ஏப்ரல் 11

இந்த குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகளை சேர்ப்பதற்கான விதி முறைகள் கீழ்வருமாறு:

- தாய், தந்தையற்ற குழந்தைகள்
- தாயோ தந்தையோ இறந்து விட்ட நிலையில் தனித்து வாழும் பெற்றோரின் குழந்தைகள்
- சிறையில் இருக்கும் பெற்றோரின் குழந்தைகள்
- தீராத நோய் அல்லது மனநலம் குன்றிய பெற்றோரினால் பாதுகாக்க இயலாத நிலையில் உள்ள குழந்தைகள், தொழுநோயாளி மற்றும்
- மாற்றுத் திறனாளிகளின் குழந்தைகள் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 24,000/-க்குள் இருக்க வேண்டும்.

**அரசு குழந்தைகள் காப்பகம்மூலம் அளிக்கப்படும் சலுகைகள்**

- 1 முதல் 5-ஆம் வகுப்பு வரையில் காப்பகங்களிலேயே பள்ளிக் கல்வி மற்றும் 6-ஆம் வகுப்பு முதல் வெளிப்பள்ளிகளில் கல்வி பயிலுதல்
- உணவு, உறைவிடம், சீருடை, காலணிகள், மருத்துவ வசதிகள், விளையாட்டு மற்றும் தொழிற் பயிற்சி.
- +2 முடித்த மாணவிகளுக்கு தொழிற்கல்வி, பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு போன்ற உயர் கல்விக்கு உதவித் தொகை
- அரசு குழந்தை காப்பகங்களுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம், சுகாதார அணை ஆடைகளை எரியூட்டும் இயந்திரம், இரண்டு அடுக்கு இரும்பு கட்டில்கள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.
- 18 வயது வரை ஒரு குழந்தைக்கு பிரதி மாதம் ரூ.450/- வீதம் உணவூட்டு செலவினமும் 18 வயதிற்கு மேல் ரூ.550/- உணவூட்டு செலவினமும் வழங்கப்படுகிறது.
- வளரிளம் பெண்களுக்கு தன் சுத்தத்தைப் பேணும்வகையில் மாதவிடாய் காலங்களுக்கு சுகாதார அணைஆடைகள் வழங்கப்படுகின்றன.



2012 ஏப்ரல் 11]

- குழந்தைகளுக்கு பாடநூல் மற்றும் நோட்டு புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.
- ஆண்டு தோறும் பள்ளி குழந்தைகள் கல்வி சுற்றுலாஅழைத்து செல்லப்படுகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தைகள் காப்பக செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக மாவட்ட அளவிலான குழு செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டக் குழுவில் மாவட்ட ஆட்சியர் "தலைவர்" ஆகவும், சுகாதாரத் துறையின் துணை இயக்குநர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்ட தன்னார்வ சமூக சேவையாளர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

2011 ஆம் ஆண்டு முதல், மாவட்டங்களிலிருந்து உயர்கல்விக்கான நிதி உதவி கோரி வரப்பெறும் கருத்துருக்களை ஆராய்ந்து தொழில் நுட்ப படிப்பிற்கான மொத்த தொகை ரூ.50,000/- மற்றும் பட்டம் / பட்டயப் படிப்பிற்கான மொத்த தொகை ரூ.30,000/-ஐ ஒப்பளிப்பு செய்வதற்காக இந்தக் குழு சமூக நல இயக்குனருக்கு உரிய பரிந்துரைகளை செய்கிறது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூ.1108.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 3.8 குழந்தைத் திருமண தடைச் சட்டம்—2006

குழந்தைகளின் அடிப்படை உரிமைகளான ஆரோக்கியம், ஊட்டச்சத்து, கல்வி, வன்முறை கொடுமை மற்றும் தவறாக பயன்படுத்தப்படுவதிலிருந்து விடுதலை ஆகியன குழந்தைகளின் உரிமைகளில் தலையானதாகும். குழந்தைத் திருமணத்தால் இவ்வுரிமைகள் மறுக்கப்படுவதோடு அக்குழந்தைகள் முழு அதிகாரம் அளிக்கப்பட்ட தனி மனிதர்களாக உருவாகும் வாய்ப்பும் அக்குழந்தைகளுக்கு மறுக்கப்படுகிறது.

இந்த சமூக கொடிய பழக்கத்தால் இள வயது திருமணம் மற்றும் இள வயதிலேயே கருவுறுதல் போன்ற ஒன்றுடன் ஒன்று பிணைந்த அவல சூழ்நிலைகளுக்கு குழந்தைகள் தள்ளப்படுகின்றனர். இதுவே பிரசவத்தின் போது தாய் மற்றும் சேய் இறத்தல் மற்றும் தொடர்ச்சியான ஊட்டச்சத்து

[2012 ஏப்ரல் 11

குறைபாடுகள் ஆகியவற்றிற்கும் முக்கிய காரணியாகிறது. குழந்தை திருமணத்தால் உடல், மனம் மற்றும் உணர்வு ரீதியாக குழந்தைகள் தங்கள் பொறுப்புகளை ஏற்க தயாராவதற்கு முன்பாகவே சமூகத்தில் முக்கிய முடிவுகளை எடுக்க தள்ளப்படுகின்றனர்.

குழந்தை திருமணங்களை தடுக்கும் முகமாக இந்திய அரசாங்கத்தால் குழந்தை திருமண தடைச் சட்டம்-2006, 1929 ஆம் வருடத்தில் இயற்றப்பட்ட சட்டத்திற்கு பதிலாக இயற்றப்பட்டது. குழந்தைத் திருமணங்களை தடுப்பதோடு மட்டுமல்லாது அதில் பாதிக்கப்படும் குழந்தைகளைக் காத்து நிவாரணம் அளித்து மேலும் குழந்தைத் திருமணங்களை நடத்துவோர்கள், ஊக்குவிப்போர்கள் மற்றும் மறைப்போர்களுக்கும் அதிக தண்டனை பெற்றுத் தரும் கடுமையான சட்டப் பிரிவுகள் இச்சட்டத்தில் உள்ளன.

➢ குழந்தை திருமணங்களை முற்றிலும் தடை செய்யும் பொருட்டு, இச்சட்டத்திற்கென மாநில விதிகள் ஏற்படுத்தப்பட்டு அதிகாரமாக்கப்பட்டுள்ளன.

➢ இச்சட்டத்தை திறம்பட செயல்படுத்திட ஏதுவாக, மாவட்ட சமூக நல அலுவலர்களே அந்தந்த மாவட்டத்தின் குழந்தை திருமண தடுப்பு அதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

➢ குழந்தை திருமணம் நடைபெறுவதாக எவ்வகையில் தகவல் கிடைக்கப்பெற்றாலும் உடனே அதனை ஏற்று, குழந்தை திருமணத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கவும், குற்றத்தை பதிவு செய்யவும், மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்து, நடைபெற்ற குழந்தை திருமணத்தை செல்லாததாக்கவும், அந்தக் குழந்தை திருமணத்தில் ஈடுபடுத்தப்பட்ட குழந்தைகளை காவல் பாதுகாப்பில் எடுத்து பராமரிக்கவும், இக்குழந்தை திருமண தடுப்பு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

➢ கிராமப்புறங்களில் நடைபெறும் குழந்தை திருமணங்களை தடுக்கவும் அது குறித்து அறிக்கை செய்யவும் பஞ்சாயத்து தலைவர் தலைமையிலான பஞ்சாயத்து அளவிலான குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

➢ தமிழகத்தில், 2008 முதல் 31-12-2011 வரை சுமார் 197 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.



2012 ஏப்ரல் 11]

## அத்தியாயம்–4

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

***4.1*** ஒரு நாட்டின் எதிர்காலமே குழந்தைகள் என்பதால் அவர்கள் சுகாதாரமான சூழ்நிலையில் நல்ல உணவும் கல்வியும் அளிக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்தோடு நல்ல கல்வியையும் பெறும் சூழ்நிலையை உருவாக்குவது அரசின் முக்கிய கடமையாகும். குழந்தைகள் கல்வி பெற்றால் மட்டுமே எதிர்காலத்தில் நாட்டின் மதிப்புமிகு மனித வளமாக உருவாக இயலும். ஏழ்மையினாலோ அல்லது பசியினாலோ ஒரு குழந்தை கல்வி கற்கும் வாய்ப்பை இழக்கக்கூடாது. பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு தேவையான அளவில் சத்தான உணவை அளிப்பதன் மூலம் அவர்களது தரத்தினை உயர்த்தி கல்வி கற்பதை ஊக்குவித்து அதன்மூலம் கல்வி விகிதாசாரத்தை உயர்த்துவதுடன் ஊட்டச்சத்து குறைபாட்டினையும் நீக்குவது சத்துணவுத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமானது பள்ளி இடைநிற்றலை குறைப்பதோடு, பொருளாதார, சமூக ரீதியாக பின்தங்கிய குடும்பங்களின் குழந்தைகள் தாங்கள் பயிலும் பள்ளிகளில் தினமும் சூடான சமைத்த உணவு பெறுவதை உறுதி செய்யும் உயரிய நோக்கத்தைக் கொண்டுள்ளது. இவ்வாறு இத்திட்டம் குழந்தைகளுக்கிடையே உள்ள சத்து குறைபாட்டை நீக்குவதுடன் கல்வி அறிவு பெற்ற குழந்தைகளின் விகிதத்தையும் கூட்டி இரட்டை சாதனைகளை எய்தியுள்ளது.

1-07-1982 அன்று தொடங்கப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமானது முதலில் 2 முதல் 5 வயது வரையான முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு குழந்தைகள் மையங்களிலும் 5 முதல் 9 வயதுள்ள ஊரக பகுதிகளைச் சேர்ந்த ஆரம்ப பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 முதல் இத்திட்டமானது நகர்ப்புறத்திலுள்ள சத்துணவு மையங்களுக்கும் அதைத் தொடர்ந்து 1984 செப்டம்பர் மாதத்திலிருந்து 10 முதல் 15 வயது வரை உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

[2012 ஏப்ரல் 11

### 4.1.1 திட்டத்தின் உள்ளடக்கங்கள்

அ. 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும் மற்றும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்க்கும் வருடம் முழுவதும் (365 நாட்களும்) சத்துணவு வழங்கப்படுகிறது.

ஆ. 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்க்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் (220 நாட்கள்) சத்துணவு வழங்கப்படுகிறது.

இ. குழந்தைகளின் புரதச்சத்து, வைட்டமின் சத்து மற்றும் கலோரிச் சக்தி போன்ற தேவைகளை கருத்தில் கொண்டு அனைத்து செவ்வாய் கிழமைகளிலும் வேகவைத்த கறுப்பு கொண்டைக் கடலை அல்லது பச்சைப் பயிறு வழங்கப்பட்டு வருகிறது.

ஈ. கார்போஹைட்ரேட் தேவையை சமன்செய்ய அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் வேகவைத்த உருளைக் கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது.

உ. வாரத்தின் ஐந்து நாட்களும் முட்டை வழங்கப்படுகிறது. முட்டை உண்ணாத மாணவ / மாணவியர்க்கு வாழைப்பழம் வழங்கப்படுகிறது.

### 4.2 நிருவாகக் கட்டுப்பாடு

சமூக நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்களும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் ஆணையரின் கட்டுப்பாட்டில் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கான குழந்தைகள் மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

### 4.3 பயனாளிகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்தல்

ஒவ்வொரு கல்வி ஆண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பள்ளிகளில் சத்துணவு உண்ணும் மாணவர்களின் வருகை பதிவேட்டின்படி அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களால் வழங்கப்படும் அறிக்கையின் அடிப்படையில், சத்துணவு மைய பயனாளிகளின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டின் செப்டம்பர் மாதத்திலும் வட்டார அளவில், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் உள்ள



2012 ஏப்ரல் 11]

பணியாளர்கள் அடங்கிய குழு ஒன்று ஒவ்வொரு மையத்தையும் மூன்று நாட்கள் நேரடி ஆய்வு செய்து பயனாளிகளின் எண்ணிக்கையை கணக்கீடு செய்து வருகிறது. அந்த மூன்று நாட்களின் பயனாளிகளின் சராசரியே அந்த பள்ளியின் உணவு உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கையாக கணக்கிடப்படுகிறது.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகள் மையங்கள் மற்றும் பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகள் குழந்தைகள் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறும் சத்துணவுப் பயனாளிகள் ஆகியோரின் விவரங்கள் கீழ்வரும் அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4.4 குழந்தைகள் மையப் பயனாளிகள்

| வ. எண் | பயனாளிகளின் வகைப்பாடு | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | குழந்தைகள் மையங்களில் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள் (25 முதல் 60 மாதங்கள் வரை) | 54,439<br>49,499 (குழந்தைகள் மையங்கள்- (அங்கன்வாடி மையங்கள்) + 4,940 குறு மையங்கள்) | 11,30,252 |
| 2 | சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதிய பயனாளிகள் | | 18,414 |
| | மொத்தம் | | 11,48,666 |

### 4.5. பள்ளி சத்துணவு மையப் பயனாளிகள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | *41,171 | 45,71,730* |
| 2 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | *2,616 | 4,42,515* |
| | மொத்தம் | 43,787 | 50,14,245 |

*தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட மையங்கள் மற்றும் குழந்தைகள் உட்பட.

[2012 ஏப்ரல் 11

**4.6 வகுப்பு வாரியாக பயனடையும் மாணவ / மாணவிகள்**

| வகுப்பு | கிராமப்புறம் | நகர்ப்புறம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 முதல் 5 | 23,28,901 | 2,05,165 | 25,34,066 |
| 6 முதல் 8 | 14,88,622 | 1,49,783 | 16,38,405 |
| 9 மற்றும் 10 | 7,44,639 | 84,264 | 8,28,903 |
| தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் | 9,568 | 3,303 | 12,871 |
| மொத்தம் | 45,71,730 | 4,42,515 | 50,14,245 |

**4.7 மொத்த பயனாளிகள்**

| | | |
|---|---|---|
| 1 | குழந்தைகள் மையங்கள் (2 முதல் 5 வயது வரை) | 11,30,252 |
| 2 | பள்ளி சத்துணவு மையங்கள் (தேசிய குழந்தை தொழிலாளர் பள்ளிகளில் உட்பட) | 50,14,245 |
| 3 | சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதியப் பயனாளிகள் | 18,414 |
| | மொத்தம் | 61,62,911 |

**4.8 நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் தொடக்கக் கல்வி பள்ளி மையங்கள்

| வ. எண் | உணவுப் பொருட்கள் | 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு | 5 முதல் 9 வயது (1 முதல் 5-வது வகுப்பு) வரையுள்ள மாணவ/ மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு |
|---|---|---|---|
| 1 | அரிசி | 80 கிராம் | 100 கிராம் |
| 2 | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் |
| 3 | எண்ணெய் | 2 கிராம் | 3 கிராம் |
| 4 | உப்பு | 1.9 கிராம் | 1.9 கிராம் |
| 5 | காய்கறிகள், தாளிதம், மற்றும் எரிபொருள் | 56 பைசா | 70 பைசா |
| 6 | முட்டை* | 46 கிராம் / முட்டை (வாரத்தில் 3 நாட்கள்) | 46 கிராம் / முட்டை (வாரத்தில் 5 நாட்கள்) |
| 7 | பச்சைப் பயறு / கொண்டைக் கடலை | 20 கிராம் (செவ்வாய்க் கிழமை தோறும்) | 20 கிராம் (செவ்வாய்க் கிழமை தோறும்) |
| 8 | உருளைக் கிழங்கு | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) |



2012 ஏப்ரல் 11]

*முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப் பழம் வழங்கப்படுகிறது.

10-12 வயது (6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு) மற்றும் (9 மற்றும் 10 ஆம் வகுப்பு) மாணவ / மாணவியர்

| வ. எண் | உணவுப் பொருட்கள் | 10 முதல் 12 வயது (6 முதல் 8-வது வகுப்பு) வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு | 13 முதல் 15 வயது (9 முதல் 10-வது வகுப்பு) வரையுள்ள மாணவ/ மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு |
|---|---|---|---|
| 1 | அரிசி | 150 கிராம் | 150 கிராம் |
| 2 | பருப்பு | 15 கிராம் | 15 கிராம் |
| 3 | எண்ணெய் | 3 கிராம் | 3 கிராம் |
| 4 | உப்பு | 1.9 கிராம் | 1.9 கிராம் |

| | | | |
|---|---|---|---|
| 5 | காய்கறிகள், தாளிதம், மற்றும் எரிபொருள் | 80 பைசா | 80 பைசா |
| 6 | முட்டை* | 46 கிராம் / முட்டை (வாரத்தில் 5 நாட்கள்) | 46 கிராம் / முட்டை (வாரத்தில் 5 நாட்கள்) |
| 7 | பச்சைப் பயறு / கொண்டைக் கடலை | 20 கிராம் (செவ்வாய்க் கிழமை தோறும்) | 20 கிராம் (செவ்வாய்க் கிழமை தோறும்) |
| 8 | உருளைக் கிழங்கு | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) | 20 கிராம் (வெள்ளிக் கிழமை தோறும்) |

* முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப் பழம் வழங்கப்படுகிறது.

### 4.9 சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதிய பயனாளிகள்

| வ. எண் | உணவுப் பொருட்கள் | சத்துணவு பெறும் முதியோர் ஓய்வூதிய பயனாளிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருளின் அளவு |
|---|---|---|
| 1 | அரிசி | 200 கிராம் |
| 2 | பருப்பு | 15 கிராம் |
| 3 | எண்ணெய் | 1 கிராம் |
| 4 | உப்பு | 1.9 கிராம் |
| 5 | காய்கறிகள், தாளிதம் மற்றும் எரிபொருள் | 44 பைசா |

### 4.10 இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு (Double Fortified Salt)

முன் கழுத்துக் கழலை நோய் அதிகமாக காணப்பட்ட திருச்சிராப்பள்ளி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், கரூர்,



பெரம்பலூர் மற்றும் நீலகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் சத்துணவு சமைப்பதில் இருமுறை செரிவூட்டப்பட்ட உப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டுவருகிறது. இது அயோடின் குறைபாட்டை நீக்குவதுடன் குழந்தைகளுக்கு முன் கழுத்துக் கழலை நோய் வருவதை தடுக்கவும் உதவுகிறது.

### 4.11 உணவுப் பொருட்கள் விநியோகம்

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தரும் தேவைப்பட்டியலின்படி சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை விநியோகம் செய்யும் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் 10 ஆம் நாளிலிருந்து 25 ஆம் நாளுக்குள் சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனது மண்டலக் கிடங்குகளிலிருந்து சத்துணவு மையங்களுக்கு நேரடியாக விநியோகிக்கிறது. ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து பெறப்படும் உணவுப் பொருட்களுக்கான பட்டியலுக்கான தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நேரடியாக செலுத்துகின்றனர். சத்துணவு அமைப்பாளர்களால் சத்துணவு தயாரிக்கத் தேவையான காய்கறிகள், தாளிதப் பொருட்கள் மற்றும் எரிபொருள் ஆகியவை இதற்கென ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து உள்ளூரிலேயே வாங்கப்பட்டு வருகின்றன.

### 4.12 சில்லரைச் செலவினம்

சில்லரைச் செலவினமானது துப்புரவுப் பொருட்களான சோப்பு, துடைப்பம் மற்றும் பினாயில் போன்றவற்றை வாங்குவதை உள்ளடக்கியது. 500 குழந்தைகளுக்குட்பட்ட பயனாளிகளை உடைய ஒரு மையத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.20/-ம் மற்றும் 500 குழந்தைகளுக்கு மேற்பட்ட பயனாளிகளை உடைய ஒரு மையத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.30/-ம் சில்லரைச் செலவினத்திற்காக வழங்கப்படுகிறது.

### 4.13 பள்ளிகளில் தேசிய மதிய உணவுத் திட்டம்

அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், உள்ளாட்சித் துறை பள்ளிகள் மற்றும் கல்வி காப்புறுதித் திட்டம் / மாற்று

[2012 ஏப்ரல் 11

வழி புதுமைக் கல்வி போதனை மையங்களில் பயிலும் தொடக்கக் கல்வி மற்றும் உயர் தொடக்கக் கல்வி மாணவ / மாணவிகளுக்கு மத்திய அரசின் ஆதரவுடனான தேசிய மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு உணவு வழங்க ஒரு பயனாளிக்கு நாளொன்றுக்கு ரூ.2.33 வீதமும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு உணவு வழங்க ஒரு பயனாளிக்கு ஒரு நாளொன்றுக்கு ரூ.3.49 வீதமும் சமையல் செலவினமாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும் வைப்பறையுடன் கூடிய சமையல் அறை கட்டுவதற்கும் மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது.

**4.14 சத்துணவுப் பணியாளர்கள்**

சத்துணவு மையங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர். 500 குழந்தைகளுக்கு மேலாக உள்ள மையத்தில் கூடுதலாக ஒரு சமையலரும், சமையல் உதவியாளரும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்மூலம் ஊரக மற்றும் நகர்புற பெண்கள் அதிக அளவில் வேலைவாய்ப்பை பெறுகின்றனர். இவ்வேலைவாய்ப்பில் விதவைகளுக்கும், ஆதரவற்ற மகளிருக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

நாட்டின் அநேக மாநிலங்கள் மதிய உணவுத் திட்டத்தினை அரசு சாரா நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்திவரும் சூழ்நிலையில் சிறப்பு காலமுறை அடிப்படையில் ஊதியம் பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்களைக் கொண்டு குழந்தைகளுக்கு உணவிடும் இந்த புனிதமான பணியினை செயல்படுத்தும் மிகச் சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும்.

**4.14.1 சத்துணவுப் பணியாளர்களுக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பட்டுள்ள உயரிய நிலை**

- சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களுக்கு ரூ.2500-5000 + ரூ.500 தர ஊதியம், சமையலர்களுக்கு ரூ.1300-3000 + ரூ.300 தர ஊதியம் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ.950-2000 + ரூ.200 தர ஊதியம், மாத ஊதியமாக வழங்கப்படுகிறது.



2012 ஏப்ரல் 11]

- அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி மற்றும் மருத்துவப் படி போன்ற படிகளும் அத்துடன் 3 விழுக்காடு ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்படுகிறது.
- 01-04-2005 முதல் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.50,000/-மும், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ.20,000/-மும் அவர்கள் ஓய்வு பெறும்போது ஒட்டுமொத்தத் தொகையாக வழங்கப்படுகிறது.
- சத்துணவு அமைப்பாளர், சமையலர், சமையல் உதவியாளர்கள் ஓய்வு பெறும்போது மாதமொன்றிற்கு முறையே ரூ.700/-, ரூ.600/-, ரூ.500/- சிறப்பு ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

**தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக 2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1510.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.**

## அத்தியாயம் –5

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

**5.1** மக்கள் நலனில் ஊட்டச்சத்தும், சுகாதாரமும் பெரும்பங்கு வகிக்கின்றன. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் தாய் சேய் நலத்திற்கு வழிகாட்டும் திட்டமாக, தமிழகத்தில் 434 திட்டப் பகுதிகளில், 4,940 குறு மையங்கள் உட்பட 54,439 குழந்தைகள் மையங்கள் (அங்கன்வாடி மையங்கள்) செயல்படுகின்றன. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்மூலம் குழந்தைகளின் ஒட்டுமொத்த ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 0-3 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

பிறந்தது முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அமைந்துள்ளது. இது மத்திய அரசின் நிதி உதவிமூலம் செயல்படுகிறது. இத்திட்டம் ஊரகம், நகர்ப்புறம் மற்றும் மலைப் பகுதிகளில் வாழும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களின் நலனுக்காகவும், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின்

[2012 ஏப்ரல் 11

வளர்ச்சிக்காகவும், பராமரிப்பிற்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் குழந்தைகளை மையப்படுத்திப் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் குழந்தைகளின் ஆரோக்கியம், ஊட்டச்சத்து நிலை அவர்களின் அறிவு வளர்ச்சி, மற்றும் மனவளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் வகையில் அமைந்துள்ளது.

**5.2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- ஒருங்கிணைந்த நலப் பணிகள்
- அனைத்து பயனாளிகளுக்கும் நலப் பணிகள் சென்றடைதல்
- அதிகாரப் பகிர்வளித்தல்
- ஒத்துழைப்புடன் செயல்படுதல்
- ஒன்றிணைந்த நலப் பணிகள்
- ஒருங்கிணைந்த அணுகுமுறை
- சீரிய பயிற்சி அமைப்பு
- ஒட்டுமொத்த குழந்தை நல மேம்பாடு
- சமுதாயப் பங்கேற்பு
- குழந்தை உரிமைகள் பாதுகாத்தல்
- பாலின சமன்பாடு

**5.3 நோக்கங்கள்**

1. குழந்தைகளின் மனம், உடல் மற்றும் சமூக ரீதியான வளர்ச்சிக்கு முறையாக அடித்தளம் அமைத்தல்.
2. பிறந்தது முதல் 6 வயதுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.
3. சிசு இறப்பு விகிதம், நோயுறும் தன்மையின் விகிதம், ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் பள்ளிக் கல்வியை இடை நிறுத்துதல் ஆகியவற்றைக் குறைத்தல்.



2012 ஏப்ரல் 11]

4. சிறப்பாக திட்டங்களை வகுத்தலும், பல்வேறு துறைகளின் மூலம் அமல்படுத்தலும்.
5. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வியின் மூலமாக, குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தொடர்பான தேவைகளை அறிந்து செயல்படத்தக்க வகையில் தாய்மார்களின் திறனை மேம்படுத்துதல்.

**5.4 நலப் பணிகள்**

- இத்திட்டத்தின்மூலம் குழந்தைகளுக்குத் தேவையான ஒருங்கிணைந்த நலப் பணிகள் விரிவான அளவிலும் குறைந்த செலவிலும் வழங்குதல்.
- பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து, சுகாதாரம், குழந்தை நலம் மற்றும் கல்வி தொடர்பான பணிகள் அளித்தல். மேலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரக் கல்வி, மகளிர் நல மேம்பாடு மற்றும் கல்விப் பணிகள் வழங்குதல்.
- திட்டத்தின் நலப் பணிகள், குறித்த நேரத்தில் பயனாளிகளைச் சென்றடைதல். அதாவது குழந்தைகளுக்கும், அவர்களின் குடும்பத்தார்க்கும் நலப் பணிகள் சரியான முறையில் உரிய நேரத்திற்கு வழங்குதல்.

**5.5 ஒருங்கிணைந்த நலப் பணிகள்**

**அ) ஊட்டச்சத்து**

- இணை உணவு
- 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் மற்றும் ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கு சூடான மதிய உணவு
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி

[2012 ஏப்ரல் 11

**ஆ) குழந்தைகள் நலன் மற்றும் முன்பருவக் கல்வி**

- *3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான முன் கவனிப்பு மற்றும் தூண்டுதல் செயல்கள்*
- *2 வயது முதல் 5+ வயதுள்ள குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி வழங்குதல்*

**இ) சுகாதாரம்**

- *மருத்துவப் பரிசோதனைகள்*
- *தடுப்பூசி வழங்குதல்*
- *குழந்தைகளுக்கு ஏற்படும் பொதுவான மற்றும் சிறு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல்*

**ஈ) ஒன்றிணைந்த ஆதரவு நலப் பணிகள்**

- *பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுற்றுப்புற சுகாதாரம், மகளிருக்கு தன்னுரிமை மேம்பாடு மற்றும் வாழ்க்கைத் திறன் கல்வி அளித்தல்.*

**5.6 பயனாளிகள்**

- *பிறந்த குழந்தை முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள்*
- *கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்*
- *வளரிளம் பெண்கள் (11-18 வயது வரை)*
- *முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்*

**5.7 அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான அளவுகோல்**

*மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் 400-800 வரையிலான மக்கள் தொகைக்கு ஒரு குழந்தைகள் மையமும், 150-400 வரையிலான மக்கள் தொகைக்கு ஒரு குறு மையமும்; மலைப் பகுதியில் 300-800 வரையிலான மக்கள் தொகைக்கு ஒரு குழந்தைகள் மையமும், 150-300 வரையிலான மக்கள் தொகைக்கு ஒரு குறு மையமும் அமைக்கப்பட்டுள்ளது.*



2012 ஏப்ரல் 11]

**5.8 தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் அமைப்பு**

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**மாநில அரசு**

↓

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை (மாநில அளவில்)**

**மாவட்டம் 32**

↓

**மாவட்ட திட்ட அலுவலகம்**

**385–ஊரகப் பகுதி, 47–நகர்ப்புறம், 2 பழங்குடியினர் வட்டாரங்கள்**

**434 வட்டாரங்கள் /திட்டங்கள்**

↓

**குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம்**

**தொகுதி**

↓

**அங்கன்வாடி மையங்கள் 54,439 (முதன்மை மையம் 49,499 மற்றும் குறு மையம் 4,940)**

[2012 ஏப்ரல் 11

## 5.9 இணை உணவு

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வருடத்தில் 300 நாட்களுக்கு இணை உணவு வழங்கப்படுகிறது. இணை உணவு வழங்குவதன் மூலம் பரிந்துரைக்கப்பட்ட உணவூட்டு அளவு, குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய சராசரி உணவில் உள்ள புரதச்சத்தின் இடைவெளியை குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. எளிதில் செரிமானம் ஆகக்கூடிய தன்மை உள்ள உயிர்ச் சத்துக்கள் நிறைந்த இணை உணவு பயனாளிகளுக்கு பின்வருமாறு வழங்கப்படுகின்றன:

**இணை உணவின் கலவை**

| வ .எண் | •பொருட்கள் | கிராம் |
|---|---|---|
| 1 | கோதுமை/சோளம்/கம்பு | 52 |
| 2. | கேழ்வரகு | 5 |
| 3. | தூளாக்கப்பட்ட வெல்லம் | 30 |
| 4. | கடலைப் பருப்பு | 12 |
| 5. | வைட்டமின் கலவை | 1 |
| | மொத்தம் | 100 |

100 கிராம் அளவுள்ள இணை உணவு குறைந்தபட்சம் 8.50 கிராம் புரதம் மற்றும் 350 கலோரி சக்தி அளிக்கிறது. பயனாளிகளுக்கு வழங்கப்படும் இணை உணவின் அளவு மற்றும் ஊட்டச்சத்தின் அளவுகளும் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:



2012 ஏப்ரல் 11]

| பயனாளிகளின் வகைப்பாடு | இணை உணவின் அளவு (நாள் ஒன்றுக்கு கிராமில்) | *ஒரு பயனாளிக் கான தொகை ரூ. | *புரதம் (கிராமில்) ரூ. | *சக்தி (கலோரி யில்) | *வைட்டமின் மற்றும் தாது உப்புக்கள் பரிந்துரைக் கப்பட்ட ஊட்டச்சத்து அளவு சதவிகிதத்தில் |
|---|---|---|---|---|---|
| 6-36 மாதக் குழந்தைகள் | 130 | 5.00 (4.00) | 11 (12-15) | 455 (500) | 50 |
| 6-36 மாதக் குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை) | 190 | 7.50 (6.00) | 16 (20-25) | 665 (800) | 50 |
| கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 160 | 6.32 (5.00) | 13.5 (18-20) | 560 (600) | 50 |
| 9 மாவட்டத்தில் “சப்ளா” திட்டத்தின்கீழ் பயன்பெறும் வளரிளம் பெண்கள் | 130 | 5.00 (5.00) | 11 (18-20) | 455 (600) | 50 |

* மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி

2011-2012 ஆம் ஆண்டில் குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்க ரூ.245.00 கோடி செலவினம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள 6 மாதம் முதல் 3 வயதுடைய குழந்தைகளுக்கு 130 கிராம் இணை உணவிற்குப் பதிலாக 190 கிராம் இணை உணவு வீட்டிற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தும் வகையில் வழங்கப்படுகிறது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கு ரூ.245.00 கோடி செலவினம் மேற்கொள்ள வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

[2012 ஏப்ரல் 11

**5.10 அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படும் உணவு மற்றும் பயனாளிகளின் விவரம்**

**(ஜனவரி 2012)**

| வழங்கப்படும் உணவு வகை | பயனாளிகளின் வகைப்பாடு | வயது | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இணை உணவு (*) | 1. குழந்தைகள் | 6 மாதம் முதல் 3 வயது வரை | 15,78,230 |
| | 2. கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | — | 6,19,845 |
| | 3. வளரிளம் பெண்கள் (சப்ளா) | பள்ளி செல்லா மற்றும் பள்ளி செல்லும் வளரிளம் பெண்கள் (15-18) | 3,82,050 |
| இணை உணவு மற்றும் வாரத்தில் ஒரு நாள் (புதன்கிழமை) வேக வைத்த முட்டை | குழந்தைகள் | 1 வயது முதல் 2 வயது வரை | 6,12,332 |



2012 ஏப்ரல் 11]

| வழங்கப்படும் உணவு வகை | பயனாளிகளின் வகைப்பாடு | வயது | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இணை உணவு, சூடான சமைத்த உணவு, வாரத்தில் மூன்று (திங்கள், புதன், வியாழன்) வேகவைத்த முட்டைகள் அல்லது முட்டை வழங்கப்படும் நாட்களில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு ஒரு வாழைப் பழம், வாரம் ஒரு முறை 20 கிராம் வேகவைத்த பச்சைப் பயறு அல்லது கொண்டைக் கடலை (செவ்வாய்க் கிழமை), வாரம் ஒரு முறை 20 கிராம் வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) | குழந்தைகள் | 2 வயது முதல் 3 வயது வரை | 6,19,114 |

[2012 ஏப்ரல் 11

| வழங்கப்படும் உணவு வகை | பயனாளிகளின் வகைப்பாடு | வயது | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சூடான சமைத்த உணவு, வாரத்தில் மூன்று (திங்கள், புதன், வியாழன்) வேகவைத்த முட்டைகள் அல்லது முட்டை வழங்கப்படும் நாட்களில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு ஒரு வாழைப் பழம், வாரம் ஒரு முறை 20 கிராம் வேகவைத்த பச்சைப் பயறு அல்லது கொண்டைக் கடலை (செவ்வாய்க் கிழமை), வாரம் ஒரு முறை 20 கிராம் வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) | குழந்தைகள் | 3 வயது முதல் 5 வயது வரை | 5,11,138 |
| சூடான சமைத்த உணவு | ஓய்வூதியம் பெறும் முதியோர் (**) | 60 வயதுக்கு மேல் | 18,414 |
| மொத்தம் | | | 31,09,677 |

(*) அங்கன்வாடி மையத்திற்கு வர இயலாத பயனாளிகளுக்கு இணை உணவினை வீட்டிற்கு எடுத்துச் சென்று உண்ண அனுமதித்தல்.

(**) இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு சமைக்கப்பட்ட சூடான மதிய உணவு, அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படுகிறது.



2012 ஏப்ரல் 11]

## 5.11 வளரிளம் பெண்களுக்கான திட்டங்கள்

மாநில அரசு 2001 ஆம் ஆண்டு முதல் வளரிளம் பெண்களுக்கான திட்டங்களை மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகிறது. இதன்படி வளரிளம் பெண்களுக்கான ஊட்டச்சத்துத் திட்டம், வளரிளம் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் (கிஷோரி சக்தி யோஜனா) மற்றும் இராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்ளா) போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வளரிளம் பெண்களுக்கான மேம்பாட்டுத் திட்டம் 2001 ஆம் ஆண்டு 11 மாவட்டங்களில் 37 திட்டப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 32 மாவட்டங்களிலும் உள்ள 434 திட்டப் பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு, 2010 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 11-18 வயதுடைய வளரிளம் பெண்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையினை உயர்த்தி, அவர்கள் வாழ்க்கையில் அனைத்து அம்சங்களிலும் அதாவது மனையியல் சார்ந்த தொழிற்திறன் மேம்பாடு, சுகாதாரம், தன் தூய்மை, ஊட்டச்சத்து நிலை, குடும்ப நல மேலாண்மை போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களை மேம்படுத்துவதே அத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இந்த இரண்டு திட்டங்களிலும் வளரிளம் பெண்களுக்கு மேலும் முன்னேற்றத்தை பெருக்கி சிறப்பிக்கும் வகையில், மத்திய அரசு இவற்றை ஒருங்கிணைத்து, ராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டத்தினை (சப்ளா) உருவாக்கியது. இத்திட்டம், சென்னை, கோயம்புத்தூர், கடலூர், இராமநாதபுரம், திருவண்ணாமலை, மதுரை, சேலம், கன்னியாகுமரி மற்றும் திருச்சிராப்பள்ளி என 9 மாவட்டங்களில் உள்ள 139 திட்டப் பகுதிகளில் முன்னோடித் திட்டமாக தொடங்கப்பட்டுள்ளது. இதர 23 மாவட்டங்களில் உள்ள 295 திட்டங்களில் வளரிளம் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் (கிஷோரி சக்தி யோஜனா) செயல்பட்டு வருகிறது.

### கிஷோரி சக்தி யோஜனா

இந்தத் திட்டம் செயல்பட்டுவரும் 23 மாவட்டங்களில் உள்ள 295 திட்டப் பகுதிகளுக்கு தலா ரூ.1.10 இலட்சம் வீதம் மொத்தம்

[2012 ஏப்ரல் 11

ரூ.3.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 16 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பெண்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் தொழிற் பயிற்சி போன்றவை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

**ராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம்**

வளரிளம் பெண்களின் மேம்பாட்டிற்கு மேலும் சீரிய நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தில் இரண்டு விதமான பிரிவின்கீழ் நலப் பணிகள் வழங்கப்படுகின்றன. அதாவது இணை உணவு வழங்குதல் மற்றும் இதர உதவிகள் வழங்குதல். இணை உணவு வழங்கும் நலப் பணியானது பள்ளிச் செல்லாத 11-14 வயதுடையவர்களுக்கும், 15 வயது முதல் 18 வயதுடைய இதர அனைத்து வளரிளம் பெண்களுக்கும் வழங்கப்படுகின்றது. ஒவ்வொருவருக்கும் வருடத்தில் 300 நாட்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.5/- மதிப்புள்ள இணை உணவு வழங்கப்படுகிறது. இவ்வாறு உதவி பெறும் 3.82 இலட்சம் வளரிளம் பெண்களுக்காக ரூ.55/- கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதவிகித செலவினை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. இவையல்லாது, வளரிளம் பெண்களுக்கு வழங்கப்படும் இதர உதவிகளான-இரும்புச் சத்து மற்றும் போஃலிக் அமிலம் மாத்திரைகளை வழங்குதல், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், உடல் பரிசோதனை செய்தல், தொழிற் பயிற்சி அளித்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக ஒவ்வொரு திட்டத்திற்கும் தலா ரூ3.80 இலட்சம் நிதி ஒதுக்கீடுச் செய்யப்பட்டுள்ளது.

**5.12 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய திட்டங்கள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், குழந்தைகள் மையத்தின் தரத்தினை மேம்படுத்தி, நல்ல சூழலை உருவாக்கும் வகையில், மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் தேவையான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். இதனை செயல்படுத்தும் வகையில்,

1. அரசு கட்டடங்களில் செயல்பட்டுவரும் 9,873 மையங்களுக்கு, ரூ.46.15 கோடி செலவில் சிறிய பழுதுகளை மேற்கொள்ளவும், 6,202 மையங்களில் ரூ.39.14 கோடி செலவில் பெரிய அளவிலான பழுதுகளை மேற்கொள்ளவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



2012 ஏப்ரல் 11]

2. 20,558 மையங்களில் ரூ.12.34 கோடி செலவில் 1 மின் விசிறி, 1 குழல் விளக்கு பொருத்தி மின்மயமாக்கப்படும்.
3. 20,244 மையங்களில் ரூ.36.44 கோடி செலவில் குழந்தைகளுக்கு ஏற்ற கழிப்பிடம் கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. வாடகைக் கட்டங்களில் செயல்பட்டுவரும் 15,313 மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட பல்வேறு திட்டங்களிலுள்ள நிதியினை ஒருங்கிணைத்து ஒவ்வொரு கட்டமாக திட்டம் செயல்படுத்தப்படும்.

**5.13 பயிற்சி**

ஒரு பணியாளருக்கு வேலை செய்யும் முறை மற்றும் பணிச் செயலாக்க நிலையை மேம்படுத்திடவும், பணியாளருக்குப் பயிற்சி அடிப்படைத் தேவையாக அமைகிறது. திட்டத்தின் அன்றாட நிலவரத்தினை தெரிந்துகொள்ளவும் பயிற்சி உதவுகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பயிற்சி முக்கிய அடிப்படை அம்சமாக அமைகிறது. சமுதாயத்தில் குழந்தை பராமரிப்பு முறைகளை மேம்படுத்துவதற்கு பிற துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன்மூலம் திட்டத்தின் இலக்குகளை அடைய முடியும். இவ்வாறு இலக்குகளை அடைவதென்பது, களப்பணியாளர்களின் செயல்திறமையை பொறுத்தே அமைகிறது.

தமிழ்நாட்டில் மாநில அளவில் மட்டுமின்றி, மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும், ஆங்காங்கே (Decentralised pattern of training) பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. மாநில பயிற்சி நிறுவனத்தில் வட்டார அளவில் திட்ட அலுவலராகிய குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் உதவியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு ஒவ்வொரு திட்டப் பகுதியும் பயிற்சி மையமாக செயல்படுகிறது. இந்த வகைப் பயிற்சி அமைப்பு மிகவும் சிறந்ததாக உள்ளது. ஏனெனில் களப்பணியாளர்கள் உடனுக்குடன் சமீபத்திய கொள்கைகள், விதிகள் மற்றும் அரசு ஆணைகள் போன்றவைகளை அறிந்து கொண்டு அதனை கிராம அளவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தெளிவுபடுத்திட உதவியாக உள்ளது.

**5.14 தகவல், கல்வி தொடர்புப் பணிகள்**

சமுதாயத்தில் மக்களிடையே நல்ல எண்ணங்களையும், நல்ல மனமாற்றங்களையும், நல்ல பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்துவதற்குத் தேவையான செய்திகளை தெரிவிப்பதே தகவல், கல்வி தொடர்புப் பணிகளின் தலையாய நோக்கமாகும்.

## 5.15 நெறிப்படுத்தும் பிரிவு

*உலக சுகாதார நிறுவனத்தின் நெறிமுறைகளின்படி 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் எடை எடுத்து வளர்ச்சியைக் கண்காணித்தல் முறை செப்டம்பர் 2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.*

## 5.16 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கான நலன்கள்

*பிற மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாட்டில் மட்டும்தான் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு அதிகப்படியான ஊதியம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு, ஆண்டொன்றிற்கு 3 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு சிறப்பு ஊதிய விகிதத்தில் சம்பளமும் வழங்கப்படுகிறது. இது தவிர, அகவிலைப் படி, வீட்டு வாடகைப்படி, நகரஈட்டுப் படி, மருத்துவப் படி ஆகியவைகள் வழங்கப்படுகின்றன.*

*அங்கன்வாடி பணியாளர்களுக்கு ரூ.50,000/-மும் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ.20,000/-மும் ஒட்டுமொத்தத் தொகையாக அவர்கள் ஓய்வுப் பெறும்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குழந்தைகள் குறுமையப் பணியாளர்கள் உள்ளிட்ட மையப் பணியாளர்கள், குழந்தைகள் மைய உதவியாளர்கள்-நிலை 1 மற்றும் நிலை 2 ஆகியோர் பணியில் இருந்து ஓய்வு பெறும்போது அவர்களுக்கு முறையே ரூ.700/-, ரூ.600/- மற்றும் ரூ.500/- சிறப்பு ஓய்வூதியம் மாதாமாதம் வழங்கப்படுகிறது.*

*அரசு, திட்டத்தின் வளர்ச்சிக்காகவும், செயல்திறனை மேம்படுத்தவும், தரமான நலப் பணிகளை மக்களுக்கு முழுமையாக வழங்க உறுதியுடன் செயல்படுகிறது. பிறந்தது முதல் 3 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைகளைப் போக்க முழுக்கவனம் செலுத்துவதுடன், 3 வயது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து, சுகாதார நிலையினை மேம்படுத்த பல்வேறு வகையான செயல்பாடுகளை விரைவாக செய்ய வழிவகை செய்கிறது. வாழ்க்கை சுழற்சி அணுகுமுறையின்மூலம் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோரின் தேவைக்கேற்ப ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்த, தொடர்ந்து முழுக்கவனம் செலுத்தி அவர்களின் நலனைப் பேணிக்காக்கிறது.*





## அத்தியாயம்–6

## சமூகப் பாதுகாப்புத் துறை

***6.1*** *நாம் ‘உரிமைகளுக்கான காலக் கட்டத்தில்’ வாழ்ந்து கொண்டு இருப்பதால், ஐக்கிய நாடுகள் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கையின்படி அதில் கொடுக்கப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், குழந்தைகளின் கனவுகள் மெய்ப்பட பாதுகாக்கப்பட்ட எதிர்காலத்தை தரக்கூடிய ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிப்படுத்த இந்த உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஒரு ஜனநாயகத்தின் முக்கிய அடித்தளமானது பாதுகாக்கப்பட்ட, சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்ட, கல்வி அறிவு பெற்ற கவலையற்ற மகிழ்ச்சியான சூழலில் சுதந்திரமாக வளரக்கூடிய குழந்தைகளுடைய நலனால் அமைவதாகும்.*

*ஒவ்வொரு குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் போதுமான வாய்ப்புகளும், வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். அடிப்படை வசதிகள், கல்வி, ஆரோக்கியம் உள்ளிட்ட அனைத்து வகையிலும் வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டும் என்றால் அவர்களது பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் கண்ணியம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்கும் காலக்கட்டங்களில் எல்லாம், பெண்கள் மட்டுமல்லாது குழந்தைகளின் நலனுக்காகவும் பல சீரிய திட்டங்களை வகுத்து அளித்துள்ளார்கள்.*

*சமூகப் பாதுகாப்புத் துறை கீழ்க்காணும் இரண்டு சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது:—*

(i) *2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்*

(ii) *1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம்.*

*இளைஞர் நீதிச் சட்டம் குழந்தைகளை இருவகைப்படுத்துகிறது. தவறிழைத்ததாகக் கருதப்படும் இளஞ்சிறார்கள், சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட குழந்தைகள் என்ற வகையின்கீழ் வருகின்றனர். மேலும், அவர்களுக்கு பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்காக எடுக்கப்படும் மறுவாழ்வு நடவடிக்கைகளிலிருந்து சற்றே மாறுபட்ட சீரிய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.*

[2012 ஏப்ரல் 11

## 6.2 2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்

இந்தியா தன்னகத்தே கொண்டுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் முகத்தான் பல்வேறு கொள்கைகளை வடிவமைத்துள்ளது. அதன் முதற்படியாக 1986—ல் இளைஞர் நீதிச் சட்டம் இயற்றப்பட்டு, 2000 ஆம் ஆண்டில் அச்சட்டத்தில் பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளில் உள்ள சீரிய கொள்கைகளை உள்ளடக்கி புதிய வடிவில் மாற்றி அமல்படுத்தப்பட்டது. அதேபோன்று, சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுடைய பல்வேறு தேவைகளான உரிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பைப் பூர்த்தி செய்யும் விதமாக 2006 ஆம் ஆண்டில் இச்சட்டம் திருத்தப்பட்டது.

ஒவ்வொரு மாநிலமும் மாநிலத்திற்கென இச்சட்டத்தின்கீழ் தனியாக விதிகளை உருவாக்க வேண்டும். இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000-த்தின் கீழ் விரிவான விதிகளை 14-02-2002 அன்று அறிவிக்கையாக முதலாவதாக வெளியிட்ட முதல் மாநிலம் தமிழகம்தான். 2006 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட இளைஞர் நீதிச் சட்டத்தினைத் தொடர்ந்து, மாநிலங்கள் மாநில விதிகளை உருவாக்குவதற்கு ஏதுவாக, மத்திய அரசு மாதிரி விதிகளை அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது. இம்மாநில அரசு ஏற்கெனவே இச்சட்டத்தின் கீழ் விதிகளை வெளியிட்டுள்ள நிலையில், தற்போது இவ்விதிகளுக்கு உரிய திருத்தங்களை அறிவிக்கை செய்வதற்கு உரிய ஆணை பிறப்பித்துள்ளது.

இளைஞர் நீதிச் சட்டத்தின்படி குழந்தைகள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அதாவது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட குழந்தைகள்.

## 6.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத, அவர்களை பராமரிப்பதற்காக உற்றார் மற்றும் உறவினர் எவரும் இல்லாத, வாழ்வதற்கான எந்த ஆதாரமும் இல்லாத குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் பிரிவின்கீழ் அடங்குவர்.



2012 ஏப்ரல் 11]

### 6.3.1 குழந்தை நலக் குழுக்கள்

இளைஞர் நீதிச் சட்டத்தின் பிரிவு 29(1)-ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தை நலக் குழுக்கள் இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டில் 18 குழந்தை நலக் குழுக்கள் இயங்கிவருகின்றன.

ஒன்பது குழந்தை நலக் குழுக்கள் வட மாவட்டங்களான சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, வேலூர், விழுப்புரம், தருமபுரி, ஈரோடு, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலும் அதேபோல், திண்டுக்கல், காரைக்குடி, தூத்துக்குடி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, நாகப்பட்டினம் மற்றும் விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் 9 குழந்தை நலக் குழுக்கள் இயங்கிவருகின்றன.

குழந்தை நலக் குழுவானது பல நடுவர்களைக் கொண்ட ஒரு குழுமமாக செயல்படுகிறது. இக்குழுவில், ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் இருப்பார்கள். அதில் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். இந்தக் குழுவிற்கு, குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஆகியோருக்கு உள்ள அதிகாரத்தை ஒத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நீதிச் சட்டத்தின்படி, இத்தகு குழந்தை நலக் குழுக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் சம்மந்தமான பிரச்சனைகளைத் தீர்வு செய்யும் அமைப்பாகும்.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.122.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.3.2 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

2006 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு (ம) பாதுகாப்பு) சட்டத்தின்படி, தமிழ்நாட்டில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக 30 குழந்தைகள் இல்லங்கள் செயல்பட்டுவருகின்றன. இவற்றில் 10 குழந்தைகள் இல்லங்கள் அரசாலும், 20 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலமும் இயங்கிவருகின்றன.

[2012 ஏப்ரல் 11

தனியார் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்களுக்கு தமிழக அரசின்மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. மேலும் சிறப்புப் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கென சென்னையில் பாலவிஹார் மற்றும் ஸ்ரீ அருணோதயம் என்ற இரண்டு நிறுவனங்களும், மயிலாடுதுறையில் அறிவகம் என்ற நிறுவனமும் இயங்கி வருகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1737.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.3.3 சிறப்புப் பராமரிப்பு மையம்

பெற்றோர் இல்லாத மற்றும் கைவிடப்பட்ட நிலையில் உள்ள பெண் குழந்தைகளுக்கு சென்னையில் உள்ள மரியாலயா என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் அரசு நிதி உதவியுடன் இயங்கும் சிறப்புப் பராமரிப்பு மையத்தின்மூலம் பராமரிப்பு அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் 30 பெண் குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றனர்.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.0.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 6.4 சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்ட குழந்தைகள்

18 வயது நிறைவடையாத குழந்தைகள் சட்டத்திற்கு முரண்பாடான செயல்களை செய்ததாக கருதப்பட்டால் அவர்கள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட குழந்தைகள் என்ற பிரிவின் கீழ் அடங்குவர்.

### 6.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இளைஞர் நீதிக் குழுமங்களை ஏற்படுத்தும்பொருட்டு ஏற்கெனவே இளைஞர் நீதிக் குழுமங்கள் இயங்கிவரும் சென்னை, கடலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 8 மாவட்டங்களுடன் கூடுதலாக ஏனைய 24 மாவட்டங்களிலும் இளைஞர் நீதிச் சட்டப் பிரிவு 4(1)-ன்படி, புதிய இளைஞர் நீதிக் குழுமங்கள் ஏற்படுத்த தமிழக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



2012 ஏப்ரல் 11]

இக்குழுமங்களுக்கு, பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் தலைவராக உள்ளார். ஒவ்வொரு குழுமத்திலும் இரண்டு சமூகப் பணியாளர் உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். இக்குழுமங்களுக்கு, குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஆகியோருக்கு உள்ள அதிகாரத்தை ஒத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இக்குழுமங்கள், திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் எந்த கூர்நோக்கு இல்லத்தோடு இணைக்கப்பட்டுள்ளதோ அக்கூர்நோக்கு இல்ல வளாகத்தில் கூடுகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.81.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.4.2 கூர்நோக்கு இல்லங்கள்

கூர்நோக்கு இல்லங்கள், சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்பட்டு இளைஞர் நீதிக் குழுமங்கள் முன்பாக விசாரணையை எதிர்நோக்கி இருக்கும் குழந்தைகள் குழும ஆணையின் பேரில் தங்க வைக்கப்படும் இல்லம் ஆகும். தற்போது தமிழகத்தில் 6 அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் 2 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்கீழ் செயல்படும் கூர்நோக்கு இல்லங்கள் உள்ளன. கூர்நோக்கு இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகளான உறைவிடம், உணவு, உடை மற்றும் படுக்கைகள் மட்டுமல்லாது குறுகிய கால மறுவாழ்வு உதவியாக கல்வி (முறை மற்றும் முறை சாரா கல்வி), தொழிற்கல்வி, மருத்துவ வசதி மற்றும் ஆற்றுபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன. சமீப காலமாக கூர்நோக்கு இல்லங்களில் மாணவர்கள் வெளியேறிச் செல்லும் நிகழ்வுகள் சில நடந்துள்ளதால், இல்லக் குழந்தைகளை நெருங்கிய கண்காணிப்பு செய்வது அவசியமாகிறது. மேற்குறிப்பிட்டவாறு குழந்தைகள் மீதான கண்காணிப்பை / மேற்பார்வையை உறுதி செய்யும் பொருட்டு சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் நெருங்கிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை கூர்நோக்கு இல்லத்திற்கு தடையில்லா மின்சேவை அளிக்க 100 KVA திறன் கொண்ட தானியங்கி டீசல் மின்னாக்கியும் வழங்கப்பட்டுள்ளது.

[2012 ஏப்ரல் 11

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.261.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.4.3 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்பட்ட சிறார்களுக்கு நீண்டகால மறுவாழ்வு அவசிய தேவையாகும். இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலம் தவறிழைத்தாக கண்டறியப்படும் குழந்தைகள் இளைஞர் நீதிக் குழும ஆணையின்படி சிறப்பு இல்லங்களில் தங்க வைக்கப்படுகிறார்கள். அவ்வாறு நீதி குழுமத்தின் ஆணையின்படி தங்கவைக்கப்படும் காலம் மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. சிறப்பு இல்லங்களில் குழந்தைகளின் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுவதன்மூலம் அவர்கள் நல்ல மனிதராக உருவாக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு கல்வி, தொழிற்கல்வி ஆற்றுபடுத்துதல் மற்றும் பாடம் சார்ந்த செயல்பாடுகள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. பெண் குழந்தைகளுக்காக சென்னையில் அரசினர் சிறப்பு இல்லமும், ஆண் குழந்தைகளுக்காக செங்கல்பட்டில் அரசினர் சிறப்பு இல்லமும் இயங்கிவருகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.155.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 6.5 குழந்தைகள் நலனுக்கான மறுவாழ்வுத் திட்ட நடவடிக்கைகள்

### 6.5.1 அரசினர் பிற்காப்பு நிறுவனங்கள்

குழந்தைகள் 18 வயதுவரை இல்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்கள் 18 வயதை நிறைவு செய்தபிறகு குழந்தைகள் இல்லங்களில் உள்ள சிறுவர் மற்றும் சிறுமியர் மற்றும் சிறப்பு இல்லங்களிலிருந்து விட்டாகும் சிறுவர் மற்றும் சிறுமியர்கள் பிற்காப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். சிறுவர்களுக்கென காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் மற்றும் மதுரையிலும், பெண்களுக்கென வேலூர் மாவட்டத்திலும் செயல்பட்டுவரும் 3 பிற்காப்பு நிறுவனங்களில் அவர்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



2012 ஏப்ரல் 11]

இம்மூன்று அரசு பிற்காப்பு நிறுவனங்கள் தவிர மனவளர்ச்சி குன்றிய, வயது வந்த பெண்களுக்காக தொழிற் பயிற்சியுடன் கூடிய புகலிடம் அரசு உதவியுடன் சென்னை பாலவிஹாரில் (தன்னார்வத் தொண்டு நிறுவனம்) செயல்பட்டுவருகிறது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.83.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.5.2 வள மையங்கள்

நிறுவனங்களின் பராமரிப்பில் வைக்கப்படும் குழந்தைகளிடையே பெரும்பாலும் உள மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே, இவர்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிடம் அளிப்பதோடு, இவர்களுடைய உணர்வு ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முறையான ஆற்றுபடுத்துதல் அவசியமாக உள்ளது. வள மையங்கள் இளைஞர் நீதிக் குழுமம், குழந்தை நலக் குழுக்கள் மற்றும் குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளர்மூலம் பரிந்துரைக்கப்படும் குழந்தைகளுக்கு, ஆற்றுபடுத்துதல் அளிப்பதோடு, குழந்தைகள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்களுக்கு தொழில் சார்ந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. அனைத்து வள மையங்களும் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டுவருகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.5.3 கல்வி வசதிகள்

இத்துறையின் கீழியங்கும் அனைத்து குழந்தைகள் இல்லங்களில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் 8 ஆம் வகுப்பு வரை முறையான கல்வியும், தேவைப்படும் குழந்தைகளுக்கு முறை சாராக் கல்வியும் வழங்கப்படுவதை இத்துறை உறுதிச் செய்கிறது. செங்கல்பட்டில் உள்ள சிறுவருக்கான அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னையிலுள்ள சிறுமியருக்கான அரசினர் சிறப்பு / குழந்தைகள் இல்லத்திலும் 10 ஆம் வகுப்பு வரை முறையான கல்வியும், தொழிற் பயிற்சியும் வழங்கப்படுகின்றன.

[2012 ஏப்ரல் 11

பள்ளிக் கல்வி முடித்த குழந்தைகளை தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்த்து அவர்கள் உயர்க் கல்வி பெற தேவையான நடவடிக்கைகளும் துறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.5.4 தொழிற்கல்வி

நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு, நிரந்தர பணியாளர்கள் மூலம், தையல், தச்சு, வாத்திய இசை, புத்தகம் கட்டுதல் போன்ற தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவை தவிர தனியார் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் கீழ்க்காணும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன:

- தையல் பயிற்சி, தொழிற்சாலை சார்ந்த தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி (MS Office), கைபேசி பழுது பார்த்தல், செயற்கைப் பூ தயாரித்தல், உரு படம் எடுத்தல், புகைப்படம் எடுத்தல், ஒருங்கிணைந்த செய்தொழில், துரித உணவு தயாரித்தல், அழகுக்கலை பயிற்சி போன்ற பயிற்சிகள் மக்கள் தொண்டு நிறுவனம்மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 120 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

- சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் உற்பத்தியுடன் பயிற்சி அளிக்கக்கூடிய அடுமனை அலகு குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த திட்டம் சென்னை மிஷன் (ஹாட் பிரட்ஸ்) என்ற நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிரிவில் ஒரு வகுப்பில் 10 குழந்தைகள் வீதம் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

- புல்தரை அமைத்தல், தோட்டக்கலை, காளான் வளர்ப்பு, வடிவ அச்சு / ஊடு அச்சு, செயற்கை பூக்கள் தயாரித்தல் / பூங்கொத்து தயாரித்தல் ஆகிய பயிற்சிகள் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவன நிதி உதவியுடன் ரூ.73,000/- செலவில் நடத்தப்பட்டன. இதன் மூலம் 113 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.



2012 ஏப்ரல் 11]

- ஒயர் கூடை தயாரித்தல், கம்பளி பின்னலாடை செய்தல், பாய் மற்றும் சிகை அலங்கார பொருட்கள் செய்தல் ஆகிய பயிற்சிகள் தொழிற்கல்வித் துறையின் கீழியங்கும் “சமூதாய தொழிற்பயிற்சி திட்டம்” மூலம் வழங்கப்பட்டது. இதன்மூலம் 21 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

- துறையின்கீழ் இயங்கும் இல்லங்களில் இருந்து விட்டாகும் குழந்தைகள் / பெண்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய நவீன தொழிற்பயிற்சிகளான கைபேசி பழுது பார்த்தல், கணினி பயிற்சி, துரித உணவு தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதன்மூலம் நிறுவனத்தை விட்டுச் செல்லும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் அவர்கள் சுய திறன் பெற்று விளங்கவும் வழி வகை செய்யப்படுகிறது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.17.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 6.5.5 நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பராமரிப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளி புகலிடங்கள்

தமிழ்நாட்டில் நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பராமரிப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான 13 திறந்தவெளி புகலிடங்கள் செயல்படுகின்றன. பிச்சையெடுப்பவர், சாலையோரத்தில் வசிப்பவர், வேலை செய்யும் சிறார்கள், குப்பை பொறுக்குபவர், சிறு வணிகம் செய்பவர், சாலையில் கழைக் கூத்தாடுபவர், அனாதை/ கைவிடப்பட்டவர், கடத்தப்பட்டவர், வீட்டைவிட்டு வெளியேறியவர், இடம் பெயர்ந்தவர் மற்றும் மற்ற தாக்குதலுக்குள்ளாகக்கூடிய பிறவகை குழந்தைகளுக்காக இப்புகலிடங்கள் செயல்படுகின்றன. வடசென்னையில் 300 குழந்தைகள் பயன் அடையும் வகையில் கூடுதலாக ஒரு திறந்தவெளி புகலிடத்தைத் தொடங்க சமீபத்தில் அரசு ஆணையிட்டுள்ளது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.57.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

[2012 ஏப்ரல் 11

### 6.5.6 குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி உதவித் திட்டம் (Child Line)

'சைல்ட் லைன்' என்பது தேசிய அளவிலான குழந்தைகளுக்கான இலவச அவசர கால தொலைபேசி சேவை ஆகும். இந்த அமைப்பு இந்தியக் குழந்தைகளின் இலவச தொலைபேசி அமைப்பினால் (CIF) ஜுன் மாதம் 1996 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தியா முழுவதும் குழந்தைகளுக்கான பொது இலவச தொலைபேசி எண் 1098. குழந்தைகளுக்கு இலவச தொலைபேசி சேவை தனியார் தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டாலும் அதற்கான நிதியுதவி மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இதன் மூலம், 0-18 வயதுடைய குழந்தைகளுக்கு மீட்பு, உறைவிடம், குடும்பத்துடன் இணைத்து வைத்தல் மற்றும் தொழில் சார்ந்த வழிகாட்டுதல் போன்ற சேவைகள் அளிக்கப்படுகின்றன.

இச்சேவை தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் (மாமல்லபுரம்) ஆகிய 10 நகரங்களில் செயல்படுகிறது.

### 6.6 ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் (ICPS)

இந்திய அரசியலமைப்புச் சட்டம், எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகும் சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் மற்றும் அவர்களது உரிமைகளையும் பாதுகாப்பதைக் கருத்தில் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 15, சிறப்பு சட்டங்கள், கொள்கைகள் மூலம் குழந்தைகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்கிறது.

**குழந்தை பாதுகாப்பு என்பது;**

- குழந்தைகளின் இயல்பான நிலைமைக்கோ உயிருக்கோ அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தடுத்தல்.
- குழந்தைகளை எத்தகைய பாதிப்பு / அச்சுறுத்தலுக்கும் உட்படாமல் பாதுகாத்து, அவர்கள் எளிதில் பாதிக்கப்படுவதைக் குறைத்தல்.



2012 ஏப்ரல் 11]

- எந்தக் குழந்தையும் சமூகப் பாதுகாப்பு வலையிலிருந்து விலகிச் செல்லாதவாறு பார்த்துக்கொள்ளுதல், அவ்வாறு சென்ற குழந்தைகளுக்கு உரிய பராமரிப்பு அளித்து அவர்களை மீண்டும் சமூகப் பாதுகாப்பு வலையில் கொணர்தல்.

குழந்தைகளுக்காகச் செயல்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் கீழ்க்காணும் திட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தினை இந்திய அரசு அறிவித்துள்ளது:

1. இளைஞர் நீதிக்கான திட்டம்
2. சாலையோர சிறார்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம்
3. பாலர் இல்ல உதவித் திட்டம்

இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த மாநில அரசு மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:-

1. பராமரிப்பு, உதவி மற்றும் மறுவாழ்வு பணிகள்
2. சட்ட உதவிகள்
3. மத்திய, மண்டல, மாநில மற்றும் மாவட்ட அளவிலான சேவை வழங்கும் அமைப்புகளை ஏற்படுத்துதல்
4. மாவட்ட, மாநில மற்றும் மத்திய அளவிலான ஆற்றுப்படுத்துதல், பயிற்சி மற்றும் பணியாளர் திறன் மேம்படுத்துதல், ஆலோசனை வழங்குதல், பொதுமக்களுக்கு குழந்தை நலன் சார்ந்த தொடர்புகளை ஏற்படுத்துதல் மற்றும் கணிப்பாய்வு செய்தல் போன்றவற்றை வளப்படுத்தும் ஏனைய செயல்பாடுகள்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, சமீபத்தில் மீதமுள்ள 24 மாவட்டங்களில் இளைஞர் நீதிக் குழுமங்களை ஏற்படுத்தவும், மீதமுள்ள 14 மாவட்டங்களில் குழந்தை நலக் குழுக்கள் ஏற்படுத்தவும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மேலும் பின்வரும் அமைப்புகளை ஏற்படுத்தவும் அரசாணை வழங்கப்பட்டுள்ளது:—

[2012 ஏப்ரல் 11

1. மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம்

2. மாவட்ட குழந்தை பாதுகாப்புச் சங்கங்கள்

3. மாநில தத்து வள முகமை

மேலும், கீழ்க்காணும் அமைப்புகள் விரைவில் அமைக்கப்பட உள்ளன:—

1. இளஞ்சிறார்களுக்கான சிறப்புக் காவல் பிரிவு

2. சிறப்பு தத்தெடுப்பு மையங்கள்

3. மாநில தத்து ஒருங்கிணைப்பு முகமை

சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்கள், குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி சேவை ஆகியவை குழந்தை நலக் குழுவுடன் இணைந்து செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் பயன் அடைவார்கள். இத்திட்டம் சமூகப் பாதுகாப்புத் துறை மற்றும் சமூக நலத் துறை மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

**ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உள்ள சட்டப்பூர்வ அமைப்புகள்**

தமிழக அரசு சமீபத்தில் மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கத்தை ஏற்படுத்துவதற்கான ஆணை பிறப்பித்துள்ளது. இச்சங்கம் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்துவதற்கான மாநில அளவிலான அடிப்படை அலகு ஆகும். மேலும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட குழந்தை பாதுகாப்புச் சங்கங்கள் ஏற்படுத்தவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1262.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***



2012 ஏப்ரல் 11]

**6.6.1 அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களையும் இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்தல்**

குழந்தைகள் இல்லங்களில் முறைகேடுகளைத் தவிர்க்கவும், சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காகவும், 2006 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டப் பிரிவு 34(3)-ன்படி, பதிவு செய்வதை மாநில அரசு கட்டாயமாக்கியுள்ளது.

பதிவு செய்யப்பட வேண்டிய நிறுவனங்கள் தங்களுடைய விண்ணப்பங்களை இளைஞர் நீதிச் சட்ட மாதிரி விதிகளில் மத்திய அரசு அறிவிக்கை செய்துள்ளபடி, உரிய படிவத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் / நன்னடத்தை அலுவலர்களுக்கு ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**6.7 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம்**

**6.7.1 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் நோக்கமும் குறிக்கோள்களும்**

(i) பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு எதிரான வணிக நோக்கிலான பாலியல் வன் கொடுமைகளையும் கடத்துதலையும் தடுத்தல்

(ii) கடத்தல் தொழிலில் ஈடுபடுபவர்கள், பாலியல் தொழிலில் மகளிரை ஈடுபடுத்தும் நபர்கள் மற்றும் பாலியல் தொழில் சந்தையை ஏற்படுத்துபவர்களை நீதியின் முன் நிறுத்துதல்.

(iii) பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பெண்கள் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டங்கள் அளித்தல்.

**6.7.2 மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள்**

மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளான மகளிர் தங்க வைக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு ) சட்டத்தின்கீழ் நீதிமன்ற ஆணையின்படி மீட்கப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிர் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில் அவர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கையின் நோக்கத்துடன் அடிப்படை வசதிகளான பராமரிப்பு, மருத்துவ

[2012 ஏப்ரல் 11

உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவை ஆகியவை வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் சென்னை, சேலம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து இடங்களில் பாதுகாப்பு இல்லங்கள் செயல்படுகின்றன.

அனைத்து இல்லங்களிலும் விளையாட்டு முதலான ஆக்கப்பூர்வமான செயல்பாட்டில் அவர்கள் தங்களை ஈடுபாட்டுடன் பங்கெடுத்துக்கொள்ளத் தேவையான பொருட்கள் வழங்கப்படுகின்றன.

**6.7.3 மீட்பு புகலிடங்கள்**

1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மீட்கப்பட்ட சிறுமியர் மற்றும் மகளிருக்கான 6 மீட்பு புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமன்ற ஆணையின்படி தற்காலிகமாக வழக்குகள் முடியும் வரை பாதிக்கப்பட்ட பெண்கள் இங்கு தங்க வைக்கப்படுகின்றனர். இத்தகைய புகலிடங்கள், மகளிர் காப்பக வளாகத்திலும், வேலூர், பிற்காப்பு நிறுவனத்திலும் இயங்கி வருகின்றன.

**6.7.4 மணமாகாத தாய்மார்கள் இல்லம்**

சென்னை, அரசினர் மகளிர் காப்பக ஸ்தீரி சாதனா வளாகத்தில் இயங்கும் மணமாகாத தாய்மார்கள் இல்லம், பாலியல் கொடுமையினால் தாய்மையடைந்த மகளிர் மற்றும் சிறுமியர்களின் நலனுக்காக இயங்கிவருகிறது.

இத்திட்டத்திற்காக கூடுலாக ஒரு இல்லம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அடைக்கலாபுரத்தில் புனித பிரான்சிஸ் மீட்பு இல்லம், தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மகளிர் காப்பகங்கள்/ பாதுகாப்பு இல்லங்கள், மீட்பு புகலிடங்கள் மற்றும் மணமாகாத தாய்மார்கள் இல்லம் ஆகிய இல்லங்களை பராமரிக்க ரூ.188.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**6.8 மறுவாழ்வுக்கான திட்டங்கள்**

மாநில அரசானது சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களிலிருந்து வெளியேறும் சிறார்கள் / இல்லவாசிகளின் பல்வேறு நலன்களில் அக்கறை காட்டி வருகிறது.



2012 ஏப்ரல் 11]

தமிழ்நாட்டில் மாநில அரசால் மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கான பல மறுவாழ்வு மற்றும் நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்றாக 'பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி' உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் ஆதரவற்ற குழந்தைகளின் கல்வி வசதி, ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான வசதி வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகியவை ஆகும். மேலும், குழந்தைகள் இல்லங்கள் / சிறப்பு இல்லங்களிலிருந்து வெளியேறும் சிறார்கள் பொருளாதார ரீதியில் சுதந்திரமாகச் செயல்பட இந்நிதியிலிருந்து ரூ.5,000/- வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. தொழிற்கல்வி பயின்ற சிறார்களுக்கு கருவிகள் மற்றும் மூலப் பொருள்கள் வாங்க ரூ.10,000/- வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்துறையின்கீழ் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தச்சு வேலை, நெசவு, புத்தகம் கட்டுதல், தோட்டக்கலை, கொத்துவேலை, தையல், பூத்தையல், உலோக வேலை, பாய் பின்னுதல், குழாய் இணைப்பு, மின் பற்ற வைப்பு போன்ற தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. பயிற்சிக்குப் பின்னர், இல்லங்களிலிருந்து வீடேகிய பிறகு, தாங்களாக பயிற்சி பெற்ற தொழிற்பிரிவில், சொந்தமாக தொழில் தொடங்க தேவையான உபகரணங்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இது போன்றே, மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களிலிருந்து வீடேகும் மகளிருக்கும் சொந்தமாகத் தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**6.8.1 மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடை செய்ய மாநில அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

மூன்றடுக்கு கண்காணிப்பு அமைப்புகளான மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழு மற்றும் கிராம அளவிலான கண்காணிப்புக் குழு ஆகியவை கடத்தல் தொடர்பான பிரச்சினைகளை அணுகுவதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான உயர்மட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதல், அவர்களை பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுவதைத் தடுத்தல் தொடர்பான

[2012 ஏப்ரல் 11

கொள்கை முடிவுகளை எடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்துதலைக் கண்காணிக்கவும் தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகம், காவல் துறை மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து மனிதக் கடத்தலைத் தடுப்பதற்காகச் செயல்படும் முன்னோடித் திட்டத்தினைச் செயல்படுத்த, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, சேலம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**6.8.2 எளிதில் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் சூழலில் உள்ள மகளிருக்கான பிற திட்டங்கள்**

கீழ்க்கண்ட திட்டங்கள் மத்திய அரசின் நிதியுதவியுடன் சமூகப் பாதுகாப்புத் துறையை பற்றாளராகக் கொண்டு தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன:—

எளிதில் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் சூழலில் உள்ள பெண்களுக்கு அவர்கள் தன்னாற்றல் மிக்கவர்களாகவும் சுதந்திரமாகவும் திகழ அவர்களுக்கு உறைவிடம், தொழிற்பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்க 13 ‘ஸ்வதார்’ இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டுவருகின்றன.

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுத்தல், பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், மறுவாழ்வு அளித்தல், அவர்களை குடும்பத்தாரோடு சேர்த்தல், எல்லை கடந்து வந்து பாதிப்பிற்குள்ளான மகளிரை தங்கள் நாட்டிற்கே அனுப்பி வைத்தல் ஆகியவற்றிக்காக இந்திய அரசால் 2007 ஆம் ஆண்டில் ‘உஜ்ஜவாலா’ என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

போதைத் தடுப்புத் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் நிதியுதவியுடன், 29 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் போதை பொருட்களுக்கு அடிமையானோர் ஒருங்கிணைந்த மறுவாழ்வு மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் குடி/ போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் இம்மையங்களில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சுமார் 21 நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.



2012 ஏப்ரல் 11]

## அத்தியாயம் 7

## முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன்

**7.1** மருத்துவ வசதிகள் பெருகியதன் காரணமாக வாழ்நாள் அதிகரித்து வருவதால் மக்கள் தொகையில் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் மற்றும் அவர்கள் பாதுகாப்பான கௌரவம் மிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை மூத்த குடிமக்களின் நலனுக்காகச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களில் மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ.500/-லிருந்து ரூ.1000/-ஆக உயர்த்தியதனால் அவர்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டு மேலும் கூடுதலான பாதுகாப்பு உணர்வை மூத்த குடிமக்கள் பெற்றுள்ளார்கள்.

**7.2 முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் தங்குவதற்காக சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைத்தல்**

முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் தங்குவதற்காக சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்துவது குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு முதியோர்களின் நலனைக் காக்கும் மாநில அரசின் அக்கறையில் ஒரு மைல் கல்லை எட்டியுள்ளது. ஏற்கெனவே அவதியுறும் நிலையிலுள்ள மூத்த குடிமக்கள் தற்போது தங்கும் இடம், உணவு, மருத்துவ வசதிகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை பெறுவது மட்டுமல்லாமல் அவர்கள் நீண்ட நாளாக ஏங்கித் தவிக்கும் அன்பு மற்றும் அரவணைப்பை அவர்களோடு அதே வளாகங்களில் தங்கும் குழந்தைகளோடு பகிர்ந்து கொள்ள முடியும். இச்சிறப்பு இல்லங்களில் முதியோர்களும் ஆதரவற்ற குழந்தைகளும் ஒரே வளாகத்தில் அருகருகே தங்க வைக்கப்படுவர். மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளின் மன ரீதியான தேவைகளை உணர்ந்து இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதால், இது முதன் முதலாக வகுக்கப்பட்ட ஒரு தன்னிகரில்லாத் திட்டம் என்ற வகையில்

[2012 ஏப்ரல் 11

மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை உடல் ரீதியாகவும் மற்றும் மன ரீதியாகவும் பராமரிப்பதில் இத்திட்டம் பெரும் பங்காற்றுகிறது.

மாற்றுத் திறனாளி மூத்த குடிமக்களுக்கான இல்லமும் இந்த ஒருங்கிணைந்த வளாகத்தின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும். சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களது தார்மீக சமூகக் கடமையின் பங்காக அவர்களது உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முதற்கட்டமாக 32 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு இரண்டு வட்டாரங்கள் வீதம் 64 வளர்ச்சி வட்டாரங்களில் இம்முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஒரு ஒருங்கிணைந்த வளாகத்திற்கு ரூ.2.75 இலட்சம் வீதம் முதற்கட்ட தொடராச் செலவினத்தை அரசின் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூ.18.40 இலட்சம் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பங்காக 75:25 என்ற விகிதத்தில் அளிக்கப்படவுள்ளது.

### 7.3 மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

மாநில அரசு முதியோர் இல்லங்கள் நடத்துவதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்து வருகிறது. இம்முதியோர் இல்லங்களில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற முதியோர் பயனடைகின்றனர். இவ்வில்லங்களில் உணவு, தங்குமிடம், உடை, மருத்துவ கவனிப்பு, பொழுதுபோக்கு வசதிகள் முதலியன அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் 28 முதியோர் இல்லங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்கள் முதியோர் இல்லங்கள் நடத்துவதற்காக மாநில அரசின் மானியம் பெற்று வருகின்றன. ஒரு முதியோர் இல்லத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ.2.00 இலட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு முதியோர் இல்லத்திலும் அதிகபட்சமாக 40 முதியோர் பராமரிக்கப்படுகின்றனர். மொத்தம் 1,120 மூத்த குடிமக்கள் இத்திட்டத்தால் பயனடைகின்றனர்.



2012 ஏப்ரல் 11]

மத்திய அரசும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் அளிக்கிறது. நமது மாநிலத்தில் 50 முதியோர் இல்லங்கள் இம்மானியத் தொகையைப் பெறுகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.64.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 7.4 சர்வதேச முதியோர் தினவிழா

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், அவர்களிடமுள்ள திறமைகளை வெளிக்கொணரவும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் நாள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சர்வதேச முதியோர் தினவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

மூத்த குடிமக்களை ஊக்குவிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி உறுப்பினர்கள், மூத்த குடிமக்கள், மாவட்ட அளவிலான அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். மூத்த குடிமக்களைப் பராமரிப்பது தொடர்பாக இளம் தலைமுறையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இவ்விழாவிற்கு இளைய தலைமுறையினர் குறிப்பாக அழைக்கப்படுகின்றனர்.

முதியோர்களை மதித்தல் தொடர்பாக விழாவில் பங்கேற்பவர்கள் உறுதிமொழி எடுக்கின்றனர். முதியோர்களுக்கான உணவு சம்பந்தமான பொருட்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. மூத்த குடிமக்கள் நலன் குறித்தும் அவர்களுக்கு அளிக்க வேண்டிய மரியாதைக் குறித்தும் அவர்கள் சமுதாயத்திற்கு அளிக்கும் மேன்மையான பங்களிப்பு குறித்தும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்படுகின்றன. இலவச மருத்துவ முகாம்கள் மற்றும் முதியோர்களுக்கான போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

இவ்விழாவில் முதியோர்களின் நலனுக்காக சேவை புரிந்த சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். இவ்விழாவில் காதொலி கருவிகள், சக்கர நாற்காலிகள், கண் கண்ணாடிகள் போன்ற பல்வேறு கருவிகள் மூத்த குடிமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

[2012 ஏப்ரல் 11

***2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

### 7.5 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

*நமது அரசியல் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட பெற்றோர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான பராமரிப்பு மற்றும் நலன் குறித்த நேர்வுகளையும், அது தொடர்பாக அவ்வப்போது எழும் நிகழ்வுகளையும் செம்மையான முறையில் செயல்படுத்துவதே பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தின் தலையாய நோக்கமாகும்.*

*ஒரு மூத்த குடிமகன் அல்லது பெற்றோர் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துக்களிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னை பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருப்பின் தன்னுடைய பிள்ளைகள் அல்லது சட்டப் பூர்வ வாரிசுகளிடமிருந்து உதவி பெற பிரிவு 5-ன்கீழ் விண்ணப்பம் அளிக்க இச்சட்டத்தில் வழிவகை உள்ளது. இச்சட்டத்தின்கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.*

*இச்சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின்கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும் சமரச அலுவலர்களாகவும் செயல்படுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகக் கொண்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மேல்முறையீட்டு தீர்ப்பாயம் கோட்டாட்சியர் தலைமையிலான தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்கும்.*

*மூத்த குடிமக்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்த தவறினால் ஆணையை மீறும் ஒவ்வொரு செயலுக்கும் அபராதம் மற்றும் சிறைத்தண்டனை*



2012 ஏப்ரல் 11]

*முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவுக்கு ஏற்றாற் போன்றோ வழங்க தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரையோ சிறைத்தண்டனை அளிக்கலாம்.*

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள் கீழ்க்கண்டவாறு:**

- *இச்சட்டத்தின்கீழ் மாதம் ரூ.10,000/- வரை பராமரிப்புத் தொகை வழங்க ஆணையிடலாம்.*
- *விசாரணை நிலுவையில் இருக்கும்போதே மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்குமாறு அவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்கு தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம்.*
- *மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால் மூன்று மாத சிறைத்தண்டனை அல்லது ரூ.5,000/- வரை அபராதத் தொகை அல்லது இரண்டுமோ தண்டனையாக அளிக்கப்படலாம்.*

### 7.6 முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக் குழுக்கள்

*மூத்த குடிமக்களின் நலன் குறித்து பல்வேறு கொள்கை ரீதியான திட்டங்களை அளிப்பதற்காக தலைமைச் செயலரை தலைவராகவும், 16 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்ட மாநில அளவிலான மூத்த குடிமக்களுக்கான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்கள் சட்டத்தை செம்மையாகவும் ஒருங்கிணைந்தும் செயல்படுத்த ஏதுவாக ஆலோசனை வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரை தலைவராகவும் மூன்று அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் இரண்டு மூத்த குடிமக்கள் உட்பட நான்கு அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்ட மாவட்ட அளவிலான குழு செயல்பட்டுவருகின்றது.*

[2012 ஏப்ரல் 11

## அத்தியாயம்–8

### சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

**8.1** தமிழக அரசு சமூகத்தில் உள்ள நலிவடைந்த மக்களை வறுமையிலிருந்து பாதுகாப்பதற்காக சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கீழ்க்காணும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் மூலம் முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதிற்கு மேலும் திருமணமாகாத ஏழைப் பெண்கள் மற்றும் ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுவருகிறது.

29-02-2012 வரை சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் 26.41 இலட்சம் பயனாளிகள் பின்வருமாறு பயனடைந்து வருகின்றனர்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 12,04,245 |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 45,180 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 3,35,103 |
| 4. | ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 1,33,188 |
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,24,367 |
| 6. | கணவனால் கைவிடப்பட்ட/ ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,20,849 |
| 7. | 50 வயது எய்தியும் வாய்ப்பு வசதியில்லாததால் திருமணமாகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற ஏழை பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம். | 16,768 |
| 8. | ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் | 3,61,421 |
| | மொத்தம் | 26,41,121 |



2012 ஏப்ரல் 11]

ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் முதன்முதலாக பிறப்பித்த ஆணைகளுள் ஓர் ஆணையாக, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ரூ.500/- என்பதிலிருந்து ரூ.1000/- ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். உயர்த்தப்பட்ட மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1000/- மே 2011 மாதம் முதல் வழங்கப்பட்டுவருகிறது.

**இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3209.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 8.2 தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் உள்ள ஓய்வூதியத் திட்டங்கள்

மேற்கூறியவாறு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் எட்டு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களில், கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு மட்டும் மைய அரசு பயனாளி ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/-வீதம் நிதி உதவி செய்கிறது. மீதமுள்ள 800/- ரூபாயை மாநில அரசு வழங்கிவருகிறது.

1. இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்.
2. இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்.
3. இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம்.

மேற்கண்ட திட்டங்கள் போக, மீதமுள்ள ஓய்வூதியத் திட்டங்களுக்கு முழு தொகையையும் தமிழக அரசே செலவிடுகிறது.

மைய அரசின் 30-06-2011 நாளிட்ட குறிப்பாணையின்படி, இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத் தேசியத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஓய்வூதியதாரர்களின் குறைந்தபட்ச வயது வரம்பினை 65 லிருந்து 60 ஆக குறைத்துள்ளது. மேலும், 80 வயதிற்கு

[2012 ஏப்ரல் 11

மேற்பட்டோருக்கு இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத் தேசியத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்களிப்பு உதவித் தொகையை ரூ.200/-லிருந்து ரூ.500/-ஆக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. அதன்படியே மாநில அரசும் ஆணை பிறப்பித்துள்ளது.

மைய அரசின் 2012-2013 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் மற்றும் இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை பயனாளி ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.200/-லிருந்து ரூ.300/-ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை மாநில அரசால் வழங்கப்படும்.

மைய அரசின் தேசிய சமூக உதவி திட்டத்தின்கீழ் உள்ள மூன்று ஓய்வூதியத் திட்டங்களில் பயனடைவதற்கான தகுதிகள் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | திட்டம் | தகுதிகள் |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் அதற்கு மேற்பட்ட | வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் 60 வயது மற்றும் வயதுடைய முதியோர்கள். |
| 2 | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம். | வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் 40 வயது முதல் 59 வயது வரையுள்ள விதவைகள். |
| 3 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம். | குறைந்தபட்சம் 80 விழுக்காடு கடுமையான அல்லது பலவகைப்பட்ட ஊனமுடைய, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள 18 வயது முதல் 59 வயது வரையிலான மாற்றுத் திறனுடையோர். |



2012 ஏப்ரல் 11]

மாநில அரசால் செயல்படுத்தப்படும் ஓய்வூதியத் திட்டங்களில் பயனடைவதற்கான தகுதிகள் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | திட்டம் | தகுதிகள் |
|---|---|---|
| 1 | ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம். | • 60 விழுக்காட்டிற்கு மேல் ஊனமுள்ள, 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது உடைய ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர்கள்.<br>• மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, வயது வரம்பினைத் தளர்வு செய்யலாம். |
| 2 | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | • 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மறுமணமாகாத ஆதரவற்ற விதவைகள். |
| 3 | கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | • 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய கணவனால் கைவிடப்பட்ட/ ஆதரவற்ற பெண்கள்.<br>• உரிய நீதிமன்றம்மூலம் விவாகரத்து சான்று பெற்றவர்கள் அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கணவனைப் பிரிந்து வாழ்பவர்கள். |
| 4 | 50 வயது எய்தியும், வாய்ப்பு வசதி இல்லாததால், திருமணம் ஆகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம். | • 50 வயது எய்தியும், திருமணமாகாத பிழைப்பூதியத்திற்கு வழியற்ற ஏழைப் பெண்கள் |
| 5 | ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் | • 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள். |

[2012 ஏப்ரல் 11

ஒய்வூதியம் விரைவாக வழங்கும் பொருட்டு, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்ட மனுக்களை பரிசீலனை செய்வதற்கு சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் ஆகியோர் அடங்கிய குழுவினை ஒவ்வொரு வட்டத்திலும் அரசு அமைத்துள்ளது. மனுதாரர், ஒவ்வொரு திங்கட்கிழமையும் கிராமத்திலேயே கிராம நிர்வாக அலுவலரிடமே மனுவைக் கொடுக்கலாம். தகுதியான நபருக்கு 30 தினங்களுக்குள் ஓய்வூதியம் வழங்கப்படும்.

**8.3 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் பயன்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டித்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் பயன்களை தமிழகத்தில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தி ஆணையிட்டுள்ளார்கள். 4,416 முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் இதன்மூலம் பயனடைந்து வருகின்றனர்.

**8.4 பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையை உபயோகப்படுத்தி வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்குதல்**

2011 ஆம் ஆண்டு, மேதகு ஆளுநர் உரையில், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகை பயனாளிகள் பெயரில், குறைந்தபட்ச இருப்புத் தேவையில்லா வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, வங்கிகள் மூலமாக பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையை உபயோகப்படுத்தி, வங்கிச் சேவையாளரால் கிராமங்களில் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கிணங்க, முதற்கட்டமாக, கடலூர் மாவட்டத்தில், காட்டுமன்னார் கோயில் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், மணப்பாறை வட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை வட்டம் ஆகிய வட்டங்களில் இத்திட்டம் முன்னோடித் திட்டமாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் இப்பகுதிகளில் இருக்கக் கூடிய பொதுத் துறை வங்கிகளின் கிளைகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு வங்கியும் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கிராமங்களில் வங்கிச் சேவையாளர்களை நியமித்து சேவையைத் துவங்கி உள்ளது. வங்கிச் சேவையாளர்கள் பயனாளிகளின் வசிப்பிடங்களுக்கு நேரில் சென்று சாதாரணமாக மக்கள் கூடும், எளிதில் அணுகக்கூடிய இடங்களில் ஓய்வூதியத்தை வழங்கி வருகின்றனர். வங்கிச் சேவையாளர் அச்சுப்பொறியுடன்



2012 ஏப்ரல் 11]

(Printer) கூடிய பயோமெட்ரிக் மற்றும் பயனாளியின் கைவிரல் ரேகையை அடையாளம் காட்டக்கூடிய இயந்திரத்தை எடுத்துச் செல்கின்றனர். பயனாளியின் பயோமெட்ரிக் தகவல்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்த பின்னர், ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

தற்போது, இம்முன்னோடித் திட்டத்தினை மாநிலத்திலுள்ள மற்ற பகுதிகளுக்கும் மூன்று கட்டங்களாக விரிவுபடுத்த அரசாணை (நிலை) எண் 14, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 25-01-2012 இல் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி,

(1) முதற்கட்டமாக 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 2,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகள்மூலம் ஓய்வூதியத் தொகையை வழங்கும் திட்டம் 30-06-2012-க்குள் செயல்படுத்தப்படும்.

(2) இரண்டாம் கட்டமாக, 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1000 முதல் 2,000 வரை மக்கள் தொகை கொண்ட அனைத்து கிராமங்களில் பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகள்மூலம் ஓய்வூதியத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

(3) மூன்றாம் கட்டமாக, இதர கிராமங்களிலும், நகரப் பகுதிகளிலும் பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகள்மூலம் ஓய்வூதியத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

முதற்கட்டத்தில், 4,176 கிராமங்களில் சுமார் 7 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

**8.5 ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயனடைவதற்கான வயது வரம்பு குறைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் வயது வரம்பினை 45 லிருந்து 18 ஆகக் குறைத்து ஆணையிட்டுள்ளார்கள்.

## 8.6 தேசிய குடும்ப நலத் திட்டம்

தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களின் வருவாய் ஈட்டும் நபர் இறந்துவிட்டால், அக்குடும்பத்திற்கு ரூ.10,000/- மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் பயனாளிகள் விபத்து நிவாரணத் திட்டம், நலிந்தோர் நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பயன் பெறுகின்றனர்.

### 8.6.1 விபத்து நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கிராம கைவினைஞர்கள் உட்பட அறிவிக்கை செய்யப்பட்டுள்ள 44 வகை தொழிலாளர்களுக்கு தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து மூலம் இறப்பின், ரூ.15,000/- நிவாரணத் தொகையாக வழங்கப் படுகிறது. மேலும், காயம் ஏற்படினும் மற்றும் அவயங்களை இழப்பினும் அதன் தன்மைக்கேற்ப ரூ.7,500/-லிருந்து ரூ.15,000/- வரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டமும், தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. வழங்கப்படும் நிவாரணத் தொகையில், மத்திய அரசின் பங்கு ரூ.10,000/-மும், மாநில அரசு தனது பங்காக ரூ.5,000/-மும் வழங்குகின்றன.

**இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.74.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 8.6.2 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களில் பிரதான வருவாய் ஈட்டும் நபர் இயற்கையாக இறப்பின், அக்குடும்பத்திற்கு, மத்திய அரசால் ரூ.10,000/- நிவாரணத் தொகையாக வழங்கப் படுகிறது. இத்திட்டம் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு மைய அரசால் வழங்கப்படும் கூடுதல் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மைய அரசின் 2012-2013 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் உதவித் தொகையை ரூ.10,000/-லிருந்து ரூ.20,000/- ஆக பயனாளி ஒருவருக்கு உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, 2012-2013 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**





## சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை 2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்

**(ரூபாய் இலட்சங்களில்)**

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| **தலைமைச் செயலகம்** | | |
| 1 | இரண்டு கணினிகள் மற்றும் உபரி பாகங்கள், இருபக்க அச்செடுக்கும் திறன் கொண்ட இரண்டு ஒளியச்சு இயந்திரங்கள் மற்றும் ஒரு கிழிப்பான் இயந்திரம் வாங்குதல் | 1.61 |
| **சமூக நல இயக்குநரகம்** | | |
| 2 | 25 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு மற்றும் 4 அரசு சேவை இல்லங்களுக்கு நாப்கின் எரியூட்டு கருவிகள் வழங்குதல் | 42.34 |
| 3 | 22 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கும் மற்றும் 7 சேவை இல்லங்களுக்கும் நீர் சுத்திகரிப்பான் இயந்திரங்கள் வழங்குதல் | 32.03 |
| 4 | 6 அரசு குழந்தைகள் காப்பகங்களில் நவீன சமையலறை அமைத்தல். | 37.50 |
| 5 | தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 மின் ஆக்கிகள், 10 காஜா / பட்டன் பொருத்தும் இயந்திரம் மற்றும் இரும்பு அலமாரிகள் முதலியன வழங்குதல். | 46.10 |
| 6 | மாவட்ட சமூக அலுவலர்கள் மற்றும் பிரிவுகளுக்கு மடிக்கணினிகள் வாங்குதல் | 17.73 |
| **சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம்** | | |
| 7 | இயக்குநரகம் மற்றும் 25 இல்லங்களுக்கு 26 தண்ணீர் சுத்திகரிப்பான் கருவிகள் வழங்குதல். | 26.00 |
| 8 | சென்னையில் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் சமையலறை கட்டுதல். | 12.00 |

[2012 ஏப்ரல் 11

| | | |
|---|---|---|
| 9 | கடலூர் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் சமையலறை கட்டுதல். | 12.00 |
| 10 | 10 அரசு இல்லங்களுக்கு நவீன சமையலறை உபகரணங்கள் வழங்குதல் | 40.00 |
| 11 | பஞ்சப்பள்ளியிலுள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு கம்பளிப் போர்வை வழங்குதல் | 1.10 |
| 12 | சென்னையிலுள்ள சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம், அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் வேலூர் அரசினர் பெண்கள் பிற்காப்பு இல்லம் ஆகியவற்றுக்கு சுகாதாரத் துண்டுகளின் எரிதொட்டி மற்றும் தானாகப் பகிர்ந்தளிக்கும் கருவி வழங்குதல் | 4.38 |
| 13 | செங்கல்பட்டு சிறுவர்களுக்கான அரசினர் சிறப்பு இல்லத்திற்கு 100 கே.வி.ஏ. தானியங்கி டீசல் ஜெனரேட்டர் வழங்குதல் | 13.36 |
| 14 | சென்னை இராயபுரத்தில் உள்ள அரசினர் சிறுவர்களுக்கான குழந்தைகள் இல்லத்தில் அறிவியல் ஆராய்ச்சிக் கூடம் கட்டுதல் | 20.00 |
| 15 | 25 நிறுவனங்கள் மற்றும் மதுரை, மண்டல அலுவலகத்திற்கு ஒளி வருடி மற்றும் நகல் பெருக்கி வழங்குதல் | 7.80 |
| 16 | 30 நன்னடத்தை அலுவலர்களுக்கு கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல். | 16.20 |
| 17 | திருச்சிராப்பள்ளி அரசினர் மகளிர் காப்பகத்தில் கண்காணிப்பாளருக்கான குடியிருப்பு கட்டுதல். | 12.00 |
| **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரகம்** | | |
| 18 | 2000 அங்கன்வாடி மையங்களுக்கு சீரான வண்ணம் தீட்டுதல். | 40.00 |



2012 ஏப்ரல் 11]

| | | |
|---|---|---|
| 19 | 6800 மையங்களுக்கு உணவுப் பொருட்களை பாதுகாக்க இரண்டு எவர்சில்வர் சேமிப்புக் கலன்கள் வழங்குதல். | 108.80 |
| 20 | 21 மாவட்டங்களுக்கு, நகல் இயந்திரத்துடன் கூடிய ஸ்கேனர் வழங்குதல். | 10.50 |
| 21 | ஆணையரகத்திற்கு ஒரு மடிக்கணினி வழங்குதல் | 0.70 |
| | மொத்தம் | 502.15 |

**வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013**

**மானியக் கோரிக்கை எண் 45**

**சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ரூ.369247.07 இலட்சம். இதில் திட்ட பணிகளுக்கு மட்டும் ரூ.355212.11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.***

**2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

**(ரூபாய் இலட்சத்தில்)**

| கணக்குத் தலைப்பு | திட்டத்தில் சேராதது | திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|
| வருவாய் பகுதி | | | |
| 2059 பொதுப் பணிகள் | 275.00 | | 275.00 |
| 2225 சமூக நல இயக்ககம் | 20.81 | | 20.81 |
| 2235 சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 2131.97 | 1712.74 | 3844.71 |
| 2235 சமூக நல இயக்ககம் | 5729.07 | 88849.46 | 94578.53 |
| 2235 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரகம் | 3065.20 | | 3065.20 |
| 2236 தலைமைச் செயலகம் | 12.62 | | 12.62 |

| | | | |
|---|---|---|---|
| *2236 சமூக நல இயக்ககம்* | *2496.03* | *146020.90* | *148516.93* |
| *2236 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையரகம்* | | *118628.98* | *118628.98* |
| *2251 தலைமைச் செயலகம்* | *304.24* | | *304.24* |
| *2551 சமூக நல இயக்ககம்* | | *0.01* | *0.01* |
| **வருவாய் பகுதி மொத்தம்** | ***14034.94*** | ***355212.09*** | ***369247.03*** |
| **மூலதனப் பகுதி** | | | |
| *4235 சமூகப் பாதுகாப்பு இயக்ககம்* | | *0.01* | *0.01* |
| *4236 சமூக நல இயக்ககம்* | | *0.01* | *0.01* |
| **மூலதனப் பகுதி மொத்தம்** | | *0.02* | *0.02* |
| *அரசு பணியாளர் முதலியோருக்கு கடன்கள்* | | | |
| *7610 தலைமைச் செயலகம்* | *0.02* | | *0.02* |
| **கடன் பகுதி மொத்தம்** | *0.02* | | *0.02* |
| **பெரு மொத்தம்** | *14034.96* | *355212.11* | *369247.07* |

**பெரு மொத்தம் :**

| | | |
|---|---|---|
| *வருவாய் பகுதி* | : | *ரூ.369247.03 இலட்சம்* |
| *மூலதனப் பகுதி* | : | *ரூ.0.02 இலட்சம்* |
| *கடன் பகுதி* | : | *ரூ.0.02 இலட்சம்* |
| *மொத்தம்* | : | *ரூ.369247.07 இலட்சம் (அ)* |
| | | *ரூ.3692.47 கோடி* |

***2012-2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 41-ன்கீழ் ரூ.3333.23 கோடி சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## இணைப்பு—II

*(61 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 52—மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2012—2013

**முன்னுரை:**

தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்டங்களை அளிப்பதில் இந்த அரசு எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்த 1993 ஆம் ஆண்டிலேயே இந்த அரசு ஊனமுற்றோருக்கான தனி இயக்ககத்தை சமூக நல இயக்ககத்திலிருந்து பிரித்து ஏற்படுத்தியது. மேலும், 1994 ஆம் ஆண்டு முதன் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கென விரிவான மாநிலக் கொள்கையையும் வெளியிட்டுள்ளது. இத்துறை ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ன்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகமாக 1999 ஆம் ஆண்டு நிலை உயர்த்தப்பட்டு, இந்திய ஆட்சிப் பணி நிலையிலுள்ள உயர் அலுவலர் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமிக்கப்பட்டார்.

மாற்றுத் திறனாளிகள் சமூகத்தில் ஏனையோருக்கு இணையாக வாழ உதவும் வகையில் தமிழக அரசு அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும், அமல்படுத்தி வருகிறது. இதற்கென அரசால் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**மாற்றுத் திறனாளிகளுக்கான தடையற்ற சூழ்நிலை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் முந்தைய ஆட்சிக் காலத்தில் சென்னைப் பெருநகர் பகுதி வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளில் உரிய மாறுதல்களைச் செய்து

[2012 ஏப்ரல் 11

மாற்றுத் திறனாளிகள் எல்லா இடங்களுக்கும் சிரமமின்றி சென்றுவர கட்டட விதிமுறைகளில் மாற்றம் செய்து 2003 ஆம் ஆண்டிலேயே ஆணை வழங்கியுள்ளது.

தேவையான சட்டத் திருத்தங்களின் மூலம், தமிழகத்தின் மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகளின் கட்டட விதிகளில் சாய்வுதளம் மற்றும் தேசிய கட்டட விதியின்படி கழிப்பிடங்கள் மற்றும் மின்தூக்கிகளை அமைக்க தேவையான மாற்றங்கள் கொண்டுவர இந்த அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

**மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல்:**

வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்வதில் இவ்வரசு முனைப்புடன் உள்ளது. இதற்கென அரசு தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ், பல்துறை செயலாளர்களைக் கொண்ட ஒரு குழு இவ்வரசால் அமைக்கப்பட்டு, அனைத்து அரசுப் பணிகளிலும் மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கிறது. இதன்படி ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தனியார் துறையில் பணியமர்த்த முயற்சிகள் மேற்கொள்ள இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

**அரசின் முன்னுரிமைத் திட்டங்கள் பின்வருமாறு:**

* உடல் அவயங்கள் மற்றும் அதன் செயல்பாட்டுக் குறைபாடுகள் ஏற்படுவதைத் தடுத்தல்;
* குழந்தைகளின் உடற் கூறுபாடுகளின் குறைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்தல்;
* மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ளுதல்;
* சிறப்புக் கல்வி அளித்தல்



2012 ஏப்ரல் 11]

* மறுவாழ்வுப் பணிகளுக்கென நிபுணர்களை ஆயத்தம் செய்தல் / தயார்படுத்துதல்;
* உதவி உபகரணங்களை வழங்குதல்;
* கல்வி, வேலைவாய்ப்புக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்கி பொருளாதார மேம்பாடு அடையச் செய்தல்;
* தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல்; மற்றும்
* சமூகப் பாதுகாப்பு.

**முன்னுரிமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள்:**

* மாற்றுத் திறனாளிகள் பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுத்தல்.
* கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
* சலுகையுடன்கூடிய கட்டாய ஆரம்பக் கல்வி அளித்தல்
* தொழிற் பயிற்சி வழங்கி தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல் மற்றும்;
* விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**மாநிலத்தில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை**

2001 ஆம் ஆண்டு மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 2,19,06,769 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். அதில் தமிழகத்தில் மட்டும் 16,42,497 மாற்றுத் திறனாளிகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டது.

2011-ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து தமிழகத்திலுள்ள மாற்றுத் திறனாளிகள் பற்றிய சரியான புள்ளிவிவரம் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

**2. மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995—ன் அமலாக்கம்:**

தேசிய அளவில் மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ஐ அமல்படுத்துவதில் தமிழ்நாடு இதர மாநிலங்களை விட முன்னிலை வகித்து வருகிறது.

[2012 ஏப்ரல் 11

மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பு அளிக்கவும், அவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைத்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், சமுதாய வாழ்க்கை நிலையில் அவர்கள் முழு பங்கேற்பதை உறுதி செய்யவென மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995 இயற்றப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர் மாற்றுத் திறனாளிகள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995-ஐ அமல்படுத்தப்படுவதை கண்காணிப்பதுடன், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் துறைத் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார்.

**3. மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென பணியாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்குதல்:**

**அ) மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்:**

தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் சட்டம், 1973-ன் படி, மாற்றுத் திறன் படைத்த மாணவ, மாணவிகளுக்கென நடத்தப்படும் தனியார் சிறப்புப் பள்ளிகளுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரால் சிறப்புப் பள்ளி துவக்க அனுமதி ஆணையும், பின்னர் சிறப்புப் பள்ளிக்கான அங்கீகாரமும் வழங்கப்படுகிறது. இதுவரை 294 நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்றுள்ளன.

**ஆ) மாற்றுத் திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்களை, மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995—ன்கீழ் பதிவு செய்தல்:**

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென பல்வகையான சேவை புரிந்து வரும் அரசு சாரா நிறுவனங்கள் அனைத்தும் மாற்றுத் திறனாளிகள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ன்கீழ் பதிவு செய்தல் மிகவும் அவசியமாகும். மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், இச்சட்டத்தின் பிரிவு 52-ன்கீழ் அரசு சாரா நிறுவனங்களை பதிவு செய்ய அதிகாரம் படைத்தவராவார். இதுவரை 185 நிறுவனங்கள் பதிவு செய்து சான்றிதழ்கள் பெற்றுள்ளன.



2012 ஏப்ரல் 11]

**இ) மனநோயினால் பாதிக்கப்பட்டவருக்கான மறுவாழ்வு மையங்கள் பதிவு:**

மனநோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான மறுவாழ்வு மையங்களை நடத்துவதற்கென, தமிழ்நாடு மனநோய் மறுவாழ்வு மையங்களுக்கான பதிவு விதிகள், 2002 பிறப்பிக்கப்பட்டது. இவ்விதிகளின்படி மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்கள் அவசியம் பதிவு செய்தல் வேண்டும். இவ்விதியை தவறாமல் கடைபிடிப்பதன் மூலம் மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான தகுதியற்ற மறுவாழ்வு மையங்கள் ஆரம்பிப்பதை தடுப்பதுடன், அரசின் அங்கீகாரமானது பொதுமக்கள் மத்தியில் அந்த நிறுவனங்கள் பற்றி சரியாக கணிக்கவும் உதவுகிறது.

**4. மாற்றுத் திறனாளிகள் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தம்:**

மாற்றுத் திறனாளிகளின் உரிமைக்கான ஐக்கிய நாடுகளின் இணக்க ஒப்பந்தத்தில் இந்தியா 30-3-2007 அன்று கையொப்பம் இட்டு 3-5-2008 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த இணக்க ஒப்பந்தத்தில் சம வாய்ப்பு, பாகுபாடு இன்மை மற்றும் சட்டத்தின் முன் சமமான அங்கீகாரம், சுதந்திரம் மற்றும் தனி மனிதப் பாதுகாப்பு, தடையற்ற சூழ்நிலை, சுய நடமாட்டம், சுதந்திரமான வாழ்வு, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்கான உரிமை, அரசியல் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் பங்கேற்பதில் உறுதி செய்தல் போன்றவை உள்ளடங்கியுள்ளன. ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பல கருத்துகளை இந்தியா ஏற்றுக்கொண்டு, மாற்றுத் திறனாளிகளுக்கு வசதி, வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்கள் சுயமரியாதையுடன் வாழ வழிவகை செய்கிறது. ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தத்தில் உள்ள பல உயரிய நோக்கங்களை நடைமுறைப்படுத்திட இவ்வரசு தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**5. தேசிய அறக்கட்டளை:**

புறஉலக சிந்தனையற்றவர்கள் (ஆட்டிசம்), மூளைமுடக்குவாதம், மனவளர்ச்சி குன்றிய தன்மை மற்றும் பல்வகை பாதிப்புக்குள்ளான நபர்களுக்காக தேசிய அறக்கட்டளைச் சட்டம், 1999-ல்

[2012 ஏப்ரல் 11

அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் மூலம் அவர்கள் சுயமாகவும், சார்ந்துள்ள சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து வாழவும் வழிவகை செய்வதை உறுதி செய்வதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்டு 'உள்ளூர் அளவிலான குழுக்கள்' அமைக்கப்பட்டு தேசிய அறக்கட்டளையின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாதுகாவலர்களை நியமித்தல், தொண்டு நிறுவனங்களுக்கு தேசிய அறக்கட்டளை பற்றி எடுத்துரைத்தல் மற்றும் தேசிய அறக்கட்டளையின் முக்கிய நோக்கங்களைப் பரப்புதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென ஒவ்வோர் ஆண்டும் ரூ.10,000/- ஒவ்வோர் உள்ளூர் அளவிலான குழுவிற்கும் வழங்கப்படுகிறது. இதுவரை தமிழகத்தில் 32 உள்ளூர் அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**6. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, மருத்துவச் சான்றிதழுடன் கூடிய புத்தகம்**

**1) ஊனத்தின் சான்றிதழ் வழங்க எளிய நடைமுறை:**

தமிழகத்திலுள்ள, தகுதி வாய்ந்த அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும், தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பணிக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துள்ளது.

தமிழக அரசு, தமிழ் நாடு மாற்றுத் திறனாளிகள் (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) விதி, 2002-ல் சில திருத்தங்களை 17-06-2011-ல் வெளியிட்டுள்ளது. இதன் இரண்டாவது அத்தியாயத்தில் செய்துள்ள திருத்தத்தின்படி, தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஊனத்தின் சான்றிதழ் பெறுவதற்கு நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு நிறுவனங்கள், உள்ளூர் மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் பணிபுரிந்துவரும் மருத்துவர்கள் மருத்துவச் சான்றிதழ் அளிக்கும்வகையில் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு அதன் மூலம் மிக விரைவாக தேசிய அடையாள அட்டை மற்றும் மருத்துவச் சான்றிதழுடன் கூடிய புத்தகம், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2012 ஏப்ரல் 11]

இவ்விதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள திருத்தங்களின்படி, ஊனமுற்றோர் சான்றிதழ் வழங்கத் தகுதியான மருத்துவ நிபுணர்கள் மற்றும் நபர்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஊனத்தின் வகைகள் | ஊனத்தின் சான்றிதழ் வழங்கும் மருத்துவ அலுவலகம் | ஊனத்தின் சான்றிதழ் வழங்கும் அதிகாரி |
|---|---|---|---|
| 1. | உடல் இயக்க குறைபாடு அல்லது முற்றிலும் கை, கால் இயக்கமின்மை | மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/அரசு நிறுவனங்கள்/உள்ளூர் மருத்துவமனைகள் | மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ அரசு நிறுவனங்கள்/ உள்ளூர் மருத்துவமனைகள் ஆகியவற்றில் பணியாற்றும் மருத்துவர்கள் |
| 2. | பல்வகை ஊனம் | மாவட்ட மருத்துவமனை/ மற்ற மருத்துவமனைகள்/ அரசு மருத்துவ மனைகள், உள்ளூர் மருத்துவமனைகள்/ மருத்துவ நிபுணர் மற்றும் பரிசோதனை செய்ய வசதியுள்ள மருத்துவமனைகள் | மூன்று பேர் அடங்கிய மருத்துவக் குழு, அதில் ஒருவர் அந்தத் துறையில் சிறப்பு மருத்துவராக இருத்தல் வேண்டும். |
| 3. | வ. எண் 1 மற்றும் 2-ல் குறிப்பிடாத ஊனம் | மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ அரசு நிறுவனங்கள்/உள்ளூர் மருத்துவமனைகள் | அந்தத் துறையில் சிறப்பு மருத்துவராக இருத்தல் வேண்டும். |

[2012 ஏப்ரல் 11

மேலே குறிப்பிட்ட வ. எண் 1 மற்றும் 2-ல் குறிப்பிடப்படாத ஊனங்களுக்கு, ஊனத்தின் சான்றிதழ் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு மருத்துவர்கள் வழங்குவார்கள்.

| வ. எண் | ஊனத்தின் வகைகள் | சிறப்பு மருத்துவர்கள் |
|---|---|---|
| 1. | மூளை முடக்குவாதம் | உடலியல் மற்றும் மறுவாழ்வு மருத்துவர் அல்லது முடநீக்கு மருத்துவர் அல்லது குழந்தை நரம்பியல் மருத்துவர் அல்லது மனநல மருத்துவர், குழந்தை நல மருத்துவர் |
| 2. | காது கேளாமை | காது, மூக்கு, தொண்டை மருத்துவர் |
| 3. | தொழுநோய் குணமடைந்தவர் | உடலியல் மற்றும் மறுவாழ்வு மருத்துவர் அல்லது முடநீக்கு மருத்துவர் அல்லது தோல் நோய் மருத்துவர் |
| 4. | உடல் இயக்க குறைபாடு அல்லது முற்றிலும் கை, கால் இயக்கமின்மை | உடலியல் மற்றும் மறுவாழ்வு மருத்துவர் அல்லது முடநீக்கு மருத்துவர் |
| 5. | மனநலமின்மை | மனநோய் மருத்துவர் |
| 6. | மனநலம் குன்றியோர் | 12 வயதுக்குட்பட்ட மனநலம் குன்றியோர்—குழந்தை நல மருத்துவர், குழந்தை நல நரம்பியல் மருத்துவர், மனநல மருத்துவர்<br>12 வயதுக்கு மேற்பட்ட மனநலம் குன்றியோர்—மனநல மருத்துவர் |
| 7. | குறை பார்வை / பார்வையின்மை | கண் மருத்துவர் |



2012 ஏப்ரல் 11]

| வ. எண் | ஊனத்தின் வகைகள் | சிறப்பு மருத்துவர்கள் |
|---|---|---|
| 8. | புறகு உலகு சிந்தனையற்றவர் | மனநல மருத்துவர் அல்லது குழந்தை நல மருத்துவர் அல்லது நரம்பியல் மருத்துவர் |

### 2) தேசிய அடையாள அட்டை மற்றும் உதவிகள் பதிவு புத்தகம் வழங்கும் நடைமுறை

40% மற்றும் அதற்குமேல் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகள், ஊனத்தின் சான்றிதழ் பெற்றவுடன், அவர்கள் வசிக்கும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அந்தச் சான்றிதழை பதிவு செய்து, குடும்ப அட்டையில் முத்திரையைப் பதித்து விட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் உதவிகள் பதிவுப் புத்தகம் வழங்குவார். இந்த தேசிய அடையாள அட்டை பெற்றவர்கள் நல வாரிய உறுப்பினராகப் பதிவு செய்து உறுப்பினர் ஆகலாம். இந்த உறுப்பினர்கள் அனைவருக்கும், நல வாரிய சலுகைகள் வழங்கப்படும்.

இது வரை, தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு 8,52,555 மருத்துவச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 7. செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆரம்ப நிலையில் கண்டறியும் பரிசோதனை மையங்கள்

தென் மாவட்டங்களில் உள்ளோர் பயனடையும் வகையில் தூத்துக்குடியிலும், சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் உள்ளோர் பயனடையும் வகையில் மாநில வளம் மற்றும் பயிற்சி மையத்திலும், செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறியும் ஆரம்ப நிலை பரிசோதனை மையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலமாக 4,000 செவித்திறன் குறையுடைய இளஞ்சிறார்கள் பயனடைந்து வருகிறார்கள்.

[2012 ஏப்ரல் 11

**மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்**

**8. செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த குழந்தைகள் மற்றும் இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்:**

*செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த இளஞ்சிறார்களுக்கென ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் தொண்டு நிறுவனங்கள் மூலம் 32 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளை இளம் வயதிலேயே கண்டறிந்து, பெற்றோர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் ஆரம்ப நிலை குறைபாட்டின் கடுமையைக் குறைத்து, அதன் மூலம் அக்குழந்தைகளின் முழுத் திறனையும் வெளிக் கொணர்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதர குறைபாடுகள் இல்லாமல் செவித்திறன் பாதிக்கப்பட்ட 2½ வயதுக்குட்பட்ட குழந்தைகள் மட்டும் இம்மையங்களில் சேர்க்கப்பட்டு, அதிகபட்சம் 5 வயது அடையும்போது அவர்களின் பேச்சு மற்றும் மொழித் திறனை வளர்த்து, பின்னர் சாதாரணப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பில் சேர்த்து பிற மாணவர்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றனர்.*

*செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு கற்றல், கற்பித்தல் கருவிகள் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*இம்மையங்களில் பயிற்சி பெற்று வரும் குழந்தைகளுக்கு இரு காதுகளுக்கும் தேவையான காதொலிக் கருவிகள் வழங்கப்படுகின்றன. இதுவரை 0-3 வயதுடைய 517 செவித்திறன் குறையுடைய இளஞ்சிறார்கள் இத்திட்டத்தில் பயனடைந்து வருகிறார்கள்.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.93.98 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**9. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்**

*மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் 32 மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு*



2012 ஏப்ரல் 11]

*மாவட்டத்திலும், 0-6 வயதுக்குட்பட்ட தலா 50 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்கள் பயன்பெறும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்பட்டு வருகின்றன. மனவளர்ச்சி குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய பயிற்சிகள் அளிப்பதன் மூலம் அவர்களின் செயல்திறனை அதிகரித்து, அவர்களை மறுவாழ்வு அடையச் செய்திட அவர்களின் பெற்றோர் / குடும்பத்தினரைப் பயிற்றுவித்து, ஆலோசனைகளை வழங்கி அதன் மூலம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இயக்கம், தொடர்பு, சுய வளர்ச்சி, சமூகமயமாக்குதல் மற்றும் புரிந்து கொள்ளுதல் ஆகிய திறன்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.*

*மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் குழந்தைகளுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் கருவிகள் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*மேலும், மன வளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றி வரும் சிறப்பு ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.*

*இதன்மூலம் 1,491 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயன் பெற்று வருகிறார்கள்.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 170.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**10. பார்வை குறைபாடுடைய ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள்**

*இதுவரை 5 மாவட்டங்களில் மட்டும் பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வந்தன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் மேலும் 20 மாவட்டங்களில் இந்த ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தற்போது 25 மாவட்டங்களில், பார்வைத்திறன் குறைபாடு உடைய ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறார்களுக்காக ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுகின்றன.*

[2012 ஏப்ரல் 11

பார்வையற்ற சிறார்கள், மற்ற குழந்தைகள் போல சாதாரண பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயில தேவையான திறன்களை வளர்ப்பதும், மாற்றுத் திறனாளிகளின் பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும் தக்க ஆலோசனைகள் வழங்குவதும் இந்த மையங்களின் நோக்கம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 460 பார்வையற்ற குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.16.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி உதவிகள்**

## 11. சிறப்புக் கல்வி:

அரசு 23 சிறப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இதில் 10 பள்ளிகள் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கும், 11 பள்ளிகள் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கும், ஒரு பள்ளி கடுமையாக கை, கால் பாதிக்கப்பட்டோருக்கும், ஒரு நிறுவனம் மனவளர்ச்சி குன்றியோருக்கும் நடத்தப்பட்டு வருகிறது. பார்வை குறைபாடு, செவித் திறன் குறைபாடு, கடுமையான கற்றல் குறைபாடு, உடல் குறைபாடு அல்லது நடமாடும் குறைபாடு உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கு தனிப்பட்ட முறையில் சிறப்புப் பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது.

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறன் படைத்த மாணவ, மாணவிகளுக்கு சிறப்புக் கல்வி, பாடப் புத்தகங்கள், உணவு, உறைவிடம் மற்றும் இரண்டு இணை சீருடைகள் ஆகியவை அளிக்கப்பட்டுவருகின்றன.

அரசு சிறப்புப் பள்ளிகள் அனைத்திற்கும் கல்வி பயிற்றுவிக்கும் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் அறைகலன்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

அரசு நிதியுதவி பெறும் 54 சிறப்புப் பள்ளிகளில் மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆசிரியர் ஊதியம், உணவூட்டுச் செலவினம் மற்றும் கட்டணமின்றி புத்தகங்கள் அனைத்தும் அரசால் சிறப்புக் கல்விக்கென மாநிலம் முழுவதும் வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான மாதாந்திர உணவூட்டுச் செலவினமாக ரூ.450/- வழங்கப்படுகிறது.

***2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 3344.43 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***



2012 ஏப்ரல் 11]

## 12. வாசிப்பாளர் உதவித் தொகை:

பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு உதவிடும் வகையில், 9ஆம் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவியர்களுக்கு உதவிடும் வாசிப்பாளர்களுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை, கல்வி உதவித் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| வ. எண் | வகுப்பு | வாசிப்பாளர் உதவித் தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை | ரூ.1,500/- |
| 2 | பட்டப்படிப்பு | ரூ.2,500/- |
| 3 | தொழிற்கல்வி / பட்ட மேற்படிப்பு | ரூ.3,000/- |

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.19.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

## 13. கல்வி உதவித் தொகை:

அனைத்து வகை மாற்றுத்திறன் படைத்த மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் பட்ட மேற்படிப்பு வரை பயில்பவர்களுக்கு பின்வருமாறு கல்வி உதவித் தொகை வழங்கிவருகிறது.

| வ. எண் | வகுப்பு | கல்வி உதவித தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | 1 ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை | ரூ.500/- |
| 2 | 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை | ரூ.1,500/- |
| 3 | 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை | ரூ.2,000/- |
| 4 | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.3,000/- |
| 5 | தொழிற்கல்வி / பட்ட மேற்படிப்பு | ரூ.3,500/- |

[2012 ஏப்ரல் 11

*2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.306.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**14. பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று நிலைகளைப் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு:**

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டு பயின்று மாநில / மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, உயர் கல்வி பெற உதவித் தொகை ஆகியன பின்வருமாறு வழங்கப்படுகிறுது:—

**மாநில அளவில்:**

| நிலை | ரொக்கப் பரிசு | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பிற்கு | 12 ஆம் வகுப்பிற்கு |
| முதல் இடம் | ரூ.12,000/- | ரூ.18,000/- |
| இரண்டாம் இடம் | ரூ.9,000/- | ரூ.12,000/- |
| மூன்றாம் இடம் | ரூ.6,000/- | ரூ.9,000/- |

**மாவட்ட அளவில்:**

| நிலை | ரொக்கப் பரிசு | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பிற்கு | 12 ஆம் வகுப்பிற்கு |
| முதல் இடம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| இரண்டாம் இடம் | ரூ.4,500/- | ரூ.7,500/- |
| மூன்றாம் இடம் | ரூ.3,000/- | ரூ.4,500/- |

**உயர் கல்விக்கு நிதியுதவி**

| உதவித் தொகையின் தன்மை | 10 ஆம் வகுப்பிற்கு | 12 ஆம் வகுப்பிற்கு |
|---|---|---|
| உயர் கல்வி பயில | ரூ.4,000/- | ரூ.6,000/- |
| பிரெய்ல் புத்தகங்கள் வாங்க | ரூ.3,000/- | ரூ.4,000/- |
| விடுதிக் கட்டணம் (10 மாதங்களுக்கு) | ரூ.20,000/- | ரூ.30,000/- |



2012 ஏப்ரல் 11]

**2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 67.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**15. பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று நிலைகளைப் பெறும் செவித் திறன்பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு:**

இதுவரை பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த ரொக்கப் பரிசுத் திட்டம் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாநில / மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெறும் செவித் திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியருக்கும், 2011-2012 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு நீட்டித்து அவர்களுக்கு ரொக்கப் பரிசு, உயர் கல்வி பெற உதவித் தொகை வழங்கப்படுகிறது:—

**மாநில அளவில்:**

| நிலை | ரொக்கப் பரிசு | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பிற்கு | 12 ஆம் வகுப்பிற்கு |
| முதல் இடம் | ரூ.12,000/- | ரூ.18,000/- |
| இரண்டாம் இடம் | ரூ.9,000/- | ரூ.12,000/- |
| மூன்றாம் இடம் | ரூ.6,000/- | ரூ.9,000/- |

**மாவட்ட அளவில்:**

| நிலை | ரொக்கப் பரிசு | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பிற்கு | 12 ஆம் வகுப்பிற்கு |
| முதல் இடம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| இரண்டாம் இடம் | ரூ.4,500/- | ரூ.7,500/- |
| மூன்றாம் இடம் | ரூ.3,000/- | ரூ.4,500/- |

**உயர் கல்விக்கு நிதியுதவி**

| உதவித் தொகையின் தன்மை | 10 ஆம் வகுப்பிற்கு | 12 ஆம் வகுப்பிற்கு |
|---|---|---|
| பாடபுத்தகங்கள் வாங்க | ரூ.1,000/- | ரூ.3,000/- |
| விடுதிக் கட்டணம் (10 மாதங்களுக்கு) | ரூ.10,000/- | ரூ.10,000/- |

[2012 ஏப்ரல் 11

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.35.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**16. பார்வையற்ற மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை:**

*பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவிகள், பள்ளித் தேர்வுகள் எழுத உதவியாளர் ஒருவரை அமர்த்திக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கு ஓர் உதவியாளருக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.100/- வீதம் வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தில் கீழ்க்குறிப்பிட்ட பள்ளிகளில் பயிலும் 500 பார்வையற்ற மாணவ, மாணவியர்கள் பயனடைந்து வருகிறார்கள்:*

*அ) பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை;*

*ஆ) பார்வையற்ற மகளிருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி;*

*இ) பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்;*

*ஈ) சிறுமலர் பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை;*

*உ) புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை;*

*ஊ) பார்வையற்றோருக்கான இந்திய சங்கத்தின் மேல்நிலைப் பள்ளி, மதுரை.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.11.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**17. பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு பாடங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள் மற்றும் குறுந்தகடு இயக்கும் கருவிகள்:**

*பூவிருந்தவல்லி, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூரில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் 10 மற்றும்*



2012 ஏப்ரல் 11]

*12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில், பாடங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகளும், குறுந்தகடு இயக்கும் கருவிகளும் தலை ஒலி வாங்கியுடன் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 149 பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட மாணவ / மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 4.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**18. ஆசிரியர்களுக்கான சிறப்புப் பட்டயப் பயிற்சி:**

*அனைத்து வகை மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது. மாணவ, மாணவிகளின் ஊனங்களின் தன்மை மற்றும் வீரியத்தின் அடிப்படையில் கற்றுத் தருவதற்கு தனித் திறமைகளை அளிக்க வேண்டியது அவசியம் என்பதால், இவ்வாசிரியர்களுக்குத் தேவையான திறமைகளை வளர்க்க பிரத்தியேக பயிற்சி அளிக்கப்படுகிறது. பத்து மாதங்களுக்கு அளிக்கப்படும் இந்த பயிற்சிகளின் விவரங்கள் பின்வருமாறு:*

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சிபெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றோருக்கான அரசு மேல் நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை. | பார்வையற்றோருக்கு போதிக்கும் இளநிலை பட்டயம் | 20 |
| 2 | பாலவிகார் பயிற்சிப் பள்ளி, கீழ்ப்பாக்கம், சென்னை. | மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிக்கும் இளநிலை / முதுநிலை பட்டயம் | 20 |
| 3 | சிறுமலர் காது கேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை. | காதுகேளாதோருக்கு போதிக்கும் இளநிலை/முதுநிலை பட்டயம் | 50 |

[2012 ஏப்ரல் 11

இப்பயிற்சியாளர்களுக்கு மாத உதவித் தொகையாக ரூ.400/- வழங்கப்படுகிறது.

அரசு நடத்தும் மேற்கண்ட பயிற்சிகள் தவிர, இந்திய மறுவாழ்வுக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகளும் சிறப்பாசிரியர்களுக்கு பட்டயப் பயிற்சிகளை அளிக்கின்றன.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 12.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**19. சட்டப் படிப்பு முடித்த மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி:**

சட்டப் படிப்பு முடித்த, 25 மாற்றுத் திறனாளிகள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொரு பட்டதாரிக்கும் தலா ரூ.3,000/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.0.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சித் திட்டங்கள்:**

**20. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சி:**

சுயவேலைவாய்ப்புக்கான வாய்ப்புகளை மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட பயிற்சிகள் கட்டணம் ஏதுமின்றி வழங்கப்பட்டுவருகின்றன:—

| வ. எண். | பயிற்சி | காலம் | மாற்றுத் திறன் வகை | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | பயிற்சி அளிக்கும் இடம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | மருத்துவ ஆய்வுக் கூட தொழில் நுட்ப பட்டயப் பயிற்சி | 2 ஆண்டு கள் | கை, கால் பாதிக்கப் பட்டோர் மற்றும் செவித்திறன் குறையுடை யோர் | 48 | 12 அரசு மருத்துவக் கல்லூரிகள் |



2012 ஏப்ரல் 11]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | செல் போன் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | 3 மாதங் கள் | கை, கால் பாதிக்கப் பட்டோர் | 456 | அரசு/ தனியார் பாலிடெக்னிக் |
| 3 | கணினி பயிற்சி | 6 மாதங் கள் | பார்வைத் திறன் பாதிக்கப் | 10 | பார்வையற் றோருக்கான தேசிய பட்டோர் நிலையத்தின் மண்டல மையம், பூவிருந்த வல்லி. |

பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.300/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 26.33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**21. பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோருக்கான தொழிற்பயிற்சி:**

பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பூவிருந்தவல்லி அரசு தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டுநர் பிரிவில் ஓர் ஆண்டு பயிற்சி வழங்கப்படுகிறது. பார்வைத்திறன் குறைபாடுடைய 22 மாற்றுத் திறனாளிகளுக்கு உணவு மற்றும் விடுதி வசதியுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி முடித்த 76 பார்வையற்ற நபர்களுக்கு அரசு அச்சகங்களில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**22. செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பொருத்துநர் பயிற்சி:**

செவித்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் வாய் பேச இயலாத 19 மாற்றுத் திறனாளிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக சிறப்பு பயிற்சிப்

[2012 ஏப்ரல் 11

பிரிவு ஒன்று, கிண்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பொருத்துநர் பிரிவில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் உதவித்தொகையும் வழங்கப்பட்டுவருகிறது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.58 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**23. உணவு மற்றும் விடுதி வசதியுடன்கூடிய தொழிற்பயிற்சி:**

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் பொருட்டு குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் தொண்டு நிறுவனங்கள் மூலம் 12 மாவட்டங்களில் இப்பயிற்சி நடத்தப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2011-2012 ஆம் ஆண்டு முதல் மீதமுள்ள 20 மாவட்டங்களிலும் இத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2,400 பேர் அந்தந்த மாவட்டத்திலேயே பயனடைவார்கள்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.38.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**24. கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இடைநிலை ஆசிரியர் பட்டயப் பயிற்சி:**

பூவிருந்தவல்லி, பார்வை பாதிக்கப்பட்டோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் இரண்டு ஆண்டு கால இடைநிலை ஆசிரியர் பயிற்சி, 50 நபர்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 6.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**25. பார்வையற்ற மாற்றுத் திறனாளி மகளிருக்கான அரசு மறுவாழ்வு இல்லம் மற்றும் தங்குமிடத்துடன்கூடிய பணிக்கூடம், பூவிருந்தவல்லி:**

18 வயதிலிருந்து 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு 45 வயது வரை) உள்ள ஆதரவற்ற, பார்வையற்ற பெண் இல்லவாசிகளுக்கு நெசவு, சாக்பீஸ் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சி அளித்து, பயிற்சிக்குப் பின்னர் இதே இல்லத்தில் உணவு மற்றும் தங்குமிடம் வழங்கி வேலை வாய்ப்பு அளித்து, அவர்கள் உற்பத்தி செய்யும் திறமைக்கேற்ப ஊதியமும் வழங்கப்படுகிறது. இதில் ஆண்டுதோறும் 40 பெண்கள் பயன்பெற்று வருகின்றனர்.



2012 ஏப்ரல் 11]

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.18.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**26. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையம்**

அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் மறுவாழ்வு சேவைகள், தகவல்கள் மற்றும் பயிற்சிகளை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஒரே இடத்தில் வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையம் சென்னையில் இயங்கி வருகிறது. அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும், ஊனத்திற்கான சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை மற்றும் பிற சலுகைகளான ரயில் பயண சலுகைக்கான சான்றிதழ், வருமான வரி விலக்கு பெறுவதற்கான சான்றிதழ், 75 சதவிகித பேருந்து பயணச் சலுகை (உதவியாளருக்கானது) பெறுவதற்கான சான்றிதழ் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற பல்வேறு சான்றிதழ்கள் இம்மையத்தில் கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படுகிறது.

கடந்த நிதியாண்டில் (2011-12) 7,378 நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மையத்தில் 0-5 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் செவித்திறன் பாதிக்கப்பட்டோர், மனவளர்ச்சி குன்றியோர், பார்வைத்திறன் பாதிக்கப்பட்டோர் மற்றும் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் என 4 வகையான மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையத்தில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. செவித் திறன் குறையுடையோருக்கான ஆரம்ப நிலை பரிசோதனை மையம் ஒன்றும் இம்மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. 93 குழந்தைகள் இம்மையத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

[2012 ஏப்ரல் 11

இம்மையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தொலைபேசி தகவல் மையமும் இயங்கி வருகிறது. மாற்றுத் திறனாளிகள் தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற 24744737 / 24745233 என்ற தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம். இத்தொலைபேசி தகவல் மையம், மும்பையிலுள்ள செவித்திறன் குறையுடையோருக்கான தேசிய நிறுவனத்தின் மூலம், நிறுவப்பட்டுள்ளது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.24.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**27. பணி நியமனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கை:**

தமிழக அரசு மாற்றுத் திறனாளிகளுக்கான 3% இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை திறம்படச் செயல்படுத்துவதற்கு முனைப்பாக உள்ளது. அரசு / அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில்) எழும் பணியிடங்கள் / பயிற்சியிடங்களில் 3 சதவிகிதம் மாற்றுத் திறனாளிகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1 சதவிகிதம் பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கும், 1 சதவிகிதம் செவித்திறன் மற்றும் பேச்சுத் திறன் பாதிக்கப்பட்டோருக்கும், 1 சதவிகிதம் கை, கால் இயக்கம் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. கல்வித் துறையில், ஆசிரியர் பணியிடங்களில் 2 சதவிகிதம் பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் 2 சதவிகிதம் செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

அரசுத் துறை மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான 3 சதவிகித பணியிடங்களை நிரப்பும்போது மத்திய அரசு கடைப்பிடிக்கும் இனசுழற்சி முறையினை இம்மாநிலம் பின்பற்றுகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கென உகந்த பணியிடங்களாகக் கண்டறியப்பட்ட பணியிடங்கள், தக்க மாற்றுத் திறனாளிகள் அந்த ஆண்டில் இல்லாதபட்சத்தில், அப்பணியிடங்களை 3 ஆண்டுகள் முன் கொணர வழிவகையும் செய்யப்பட்டுள்ளது.



2012 ஏப்ரல் 11]

**28. சிறப்பு நியமன நடவடிக்கை:**

சிறப்பு நியமன நடவடிக்கைகளின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கென கண்டறியப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்வதை கண்காணிக்கவென சிறப்பு நியமன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயல்பாட்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன:—

1) மாற்றுத் திறனாளிகளுக்கு, 3 சதவிகித பணியிடங்களை தவறாமல் அளிக்குமாறு கோரி அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுத் துறை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு அறிவுரை வழங்குதல்;

2) நிரப்பப்படாமல் காலியாகவுள்ள பணியிடங்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்தல்;

3) காலிப் பணியிடங்கள் பற்றிய தகவல்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆகியவற்றிற்கு தெரிவித்தல்;

4) பணி நியமனம் செய்யும் நிறுவனங்களை, காலியிடங்கள் பற்றி விளம்பரம் செய்து மாற்றுத் திறனாளிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கக் கோருதல்;

5) பணி நியமனம் செய்யும் நிறுவனங்கள் பட்டியலை இறுதி செய்து, பணிக்கான ஆட்களைத் தேர்ந்தெடுத்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்தல்;

6) சம்பந்தப்பட்ட துறைகள் பணி நியமன ஆணைகள் வழங்குதல்;

அனைத்து பணி நியமன நிறுவனங்களும் மேற்குறிப்பிட்ட செயல் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். இதன் வழியே விரைவில் சிறப்பு நியமன நடவடிக்கைகள் முழுமை அடையும். இவற்றை உறுதி செய்து செயலாக்கவென சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தொடர்பு கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பற்றாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

[2012 ஏப்ரல் 11

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு, 325 மாற்றுத் திறனாளிகளுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பராமரிப்பு உதவித் தொகை:**

**29. கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை:**

கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாத பராமரிப்பு உதவித் தொகை ரூ.1,000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. பராமரிப்பு உதவித் தொகையானது பயனாளிகளின் இல்லங்களுக்கே பணவிடை அஞ்சல் மூலம் நேரடியாக அனுப்பப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 11,269 ஆகும்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1386.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**30. தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை:**

கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோரைப் போலவே தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கும் மாத பராமரிப்பு உதவித் தொகை ரூ.1,000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. பராமரிப்பு உதவித் தொகை தற்போது பயனாளிகளின் இல்லங்களுக்கு பணவிடை அஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,000 ஆகும்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.120.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**31. மனவளர்ச்சி குன்றியோருக்கான பராமரிப்பு உதவித் தொகை:**

60 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மனவளர்ச்சி குன்றிய அனைவருக்கும் எவ்வித வயது, வருமானம் மற்றும் எண்ணிக்கை



2012 ஏப்ரல் 11]

உச்சவரம்பின்றி மாத பராமரிப்பு உதவித் தொகை ரூ.1,000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. பராமரிப்பு உதவித் தொகை பயனாளிகளின் இல்லங்களுக்கே பணவிடை அஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டு 12,974 நபர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 77,112 ஆகும்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.9107.18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**32. வேலை வாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை:**

அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு வழங்கப்படுகின்றது:—

| | கல்வித் தகுதி | வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத்தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | பட்டதாரிகள் / முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.450/- |
| 2. | 12ஆம் வகுப்பு | ரூ.375/- |
| 3. | பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு குறைவாக | ரூ.300/- |

**தகுதிகள்:**

அ) **வயது:** 18 முதல் 40 வயதிற்குள் (பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும் அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படும்.

ஆ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்தபட்சம் ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

[2012 ஏப்ரல் 11

*2011-2012-ல் இத்திட்டத்தின் மூலமாக 22,235 நபர்கள் பயனடைந்துள்ளனர்.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1150.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**33. திருமண நிதி உதவித் திட்டம்:**

*மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்து கொள்பவர்களை ஊக்குவிக்கும் வண்ணம், அரசால் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை ரூ.25,000/-த்துடன் கூடுதலாக மணப் பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், பட்டயம் மற்றும் பட்டப் படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு திருமண உதவித் தொகை ரூ.50,000/- த்துடன் கூடுதலாக மணப் பெண்ணிற்கு திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது.*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்பட்டு வரும் திருமண உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | பட்டயம் / பட்டப் படிப்பு படித்தவர்கள் | மற்றவர்கள் |
| 1 | பார்வையற்றவரைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.25,000/- 2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.25,000/- 3) தங்க நாணயம் 4 கிராம் | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.12,500/- 2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.12,500/- 3) தங்க நாணயம் 4 கிராம் |
| 2 | ஒரு கை அல்லது கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.25,000/- 2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.25,000/- 3) தங்க நாணயம் 4 கிராம் | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.12,500/- 2) தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.12,500/- 3) தங்க நாணயம் 4 கிராம் |
| 3 | காதுகேளாதோரை திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.25,000/- 2) தேசிய சேமிப்புப் ரூ.25,000/- 3) தங்க நாணயம் 4 கிராம் | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.12,500/- 2) தேசிய சேமிப்புப் ரூ.12,500/- 3) தங்க நாணயம் 4 கிராம் |
| 4 | மாற்றுத் திறனாளியை திருமணம் செய்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகளுக்கான நிதியுதவி | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.25,000/- 2) தேசிய சேமிப்புப் ரூ.25,000/- 3) தங்க நாணயம் 4 கிராம் | 1) திருமணச் செலவிற்கு ரொக்கத்தொகை ரூ.12,500/- 2) தேசிய சேமிப்புப் ரூ.12,500/- 3) தங்க நாணயம் 4 கிராம் |



2012 ஏப்ரல் 11]

*இதுவரை இத்திட்டத்தின் கீழ் 490 பயனாளிகளே பயன்பெறும் வகையில் உச்சவரம்பு இருந்தது. இத்திட்டத்தின் கீழ் ஏராளமான விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தன. இதனை ஒரு சிறப்பு நேர்வாக 2002-2003 முதல் 2011-2012 ஆம் ஆண்டு வரை நிலுவையில் இருந்த 3,308 விண்ணப்பங்களுக்கு திருமண நிதியுதவித் தொகையை வழங்க ரூ.6.75 கோடி கூடுதலாக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.*

[2012 ஏப்ரல் 11

*மேலும் திருமண உதவித் தொகை பெறுவதற்காக விதித்திருந்த எண்ணிக்கை உச்சவரம்பு குறித்தான இலக்கை முழுமையாக நீக்கி உத்தரவிட்டுள்ளதன் மூலம் இனிவரும் காலங்களில் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் தாமதமின்றி நிதியுதவி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 219.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**34. மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான இல்லங்கள்:**

*14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்கள்/ பெண்களை பராமரிப்பதற்கான, தொழிற்பயிற்சி வசதிகள் மற்றும் தங்கும் வசதிகளுடன் கூடிய 7 இல்லங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசு நடத்தி வருகிறது. மேலும் ஆண்களுக்கென தனியாக 10 இல்லங்கள், 2011-2012 ஆம் ஆண்டு முதல் 1) சென்னை 2) கடலூர் 3) இராமநாதபுரம் 4) சேலம் 5) சிவகங்கை 6) தஞ்சாவூர் 7) நாமக்கல் 8) ஈரோடு 9) தூத்துக்குடி மற்றும் 10) கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இல்லத்திலும் 40 ஆண்கள் என்ற எண்ணிக்கையில் தங்கியிருந்து சில குறிப்பிட்ட பிரிவுகளில் தொழில்கள் பயில இத்திட்டம் வழி வகுக்கின்றது. இவ்வில்லங்களின் மூலம் 750 மன வளர்ச்சி குன்றியோர் பயனடைவார்கள்.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 204.44 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**35. மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான இல்லங்கள்:**

*மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான 4 இல்லங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசு நடத்தி வருகிறது மேலும், 10 இல்லங்கள் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 1) சென்னை 2) திண்டுக்கல் 3) கோயம்புத்தூர் 4) கிருஷ்ணகிரி 5) திருச்சி 6) திருநெல்வேலி 7) தேனி 8) திருவண்ணாமலை 9) காஞ்சிபுரம் 10) மதுரை ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இல்லத்திலும் 40 மன வளர்ச்சி குன்றிய பெண்கள் தங்கியிருந்து தொழில்கள் பயில இத்திட்டம் வழிவகுக்கிறது.*



2012 ஏப்ரல் 11]

*இவ்வில்லங்களின்மூலம் 520 மன வளர்ச்சி குன்றியோர் பயனடைவார்கள்.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.152.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**36. அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி:**

*மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் காட்டுமன்னார்கோவில் மற்றும் தேனி ஆகிய இடங்களில் சிறப்புப் பள்ளிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 85 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் சிறப்புக் கல்வி பெற்று வருகிறார்கள்*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.45.39 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**37. மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள்/ தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியத் தொகை:**

*தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வியும், பயிற்சியும் அளித்து வரும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்கள் உட்பட 600 நபர்களுக்கு தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் ஊதியம் போக, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/- அரசு சார்பில் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.360.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**38. மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களை நடத்தும் பதிவு பெற்ற அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி:**

*மனவளர்ச்சி குன்றிய நபர்களைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளுக்கு தேவைக்கேற்ப கட்டடம், கட்ட நிதியுதவி அல்லது வாடகையும், மாணவர்களுக்கு உணவூட்டுச் செலவினம் வழங்கப்படுகின்றன. தன்னார்வத்*

[2012 ஏப்ரல் 11

*தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 4,245 மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கு உணவூட்டு மானியமும், 47 சிறப்புப் பள்ளிகளுக்கு வாடகை மானியமும், 18 சிறப்புப் பள்ளிகளுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் கட்டட மானியமும் 2011-2012ல் வழங்கப்பட்டது.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**39. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள்:**

*தேனி மாவட்டத்தில், 90 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் 3 பகல் நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசு வழங்கும் மானிய உதவியைக் கொண்டு அரசு சாரா அமைப்புகள் இம்மையங்களை நடத்திவருகின்றன.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.9.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**40. மனநோயால் பாதிக்கப்பட்டோர்களை மீட்டு மனநல மருத்துவமனைகள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கும் "மீட்புத் திட்டம்"**

*சாலையோரங்கள் மற்றும் இதர பொது இடங்களில் ஆதரவற்ற நிலையில் திரிந்து கொண்டிருக்கும் மன நோயாளிகளைக் கண்டறிந்து உரிய விதிமுறைகளைப் பின்பற்றி மனநல மருத்துவமனையிலோ அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசால் நடத்தப்படும் மறுவாழ்வு இல்லங்களில் சேர்ப்பதில் உள்ள பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஒரு "மீட்புத் திட்டம்" வகுத்து செயல்படுத்தப்படுகிறது. மன நோயால் பாதிக்கப்பட்டோரின் நலன் காக்க இந்த "மீட்புத் திட்டம்", அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் 500 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு மனநல மருத்துவமனைகளில் / மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*



2012 ஏப்ரல் 11]

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.12.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**41. மனநலம் பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வு இல்லங்கள்:**

*மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, தங்கும் வசதி, மருத்துவ ஆலோசனை மற்றும் மறுவாழ்வு சேவைகள் ஆகியவற்றை அளிக்கும் வகையில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் 11 மறுவாழ்வு இல்லங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வில்லங்கள் திருவள்ளூர், வேலூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் இவ்வில்லங்களில் 530 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெற வழிவகுக்கிறது.*

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**42. தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு மையங்கள்:**

*மரபுவழி நோய்களில் ஒன்றான தசைச் சிதைவு நோய் பாதிக்கப்பட்டவர்களின் தசைச் செயல்பாட்டை படிப்படியாகக் குறைத்து, அவர்களை முழுமையாக முடக்கிவிடுகிறது. இந்நோயின் தாக்கத்தை முறையான தசைப் பயிற்சியின் மூலமே கட்டுக்குள் வைக்க முடியும். எனவே இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான தசைப் பயிற்சி அளிக்கவும், ஆலோசனை வழங்கவும், பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் இந்த பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் அரசின் நிதி உதவியுடன் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மையங்கள் மூலம் 141 தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.*

[2012 ஏப்ரல் 11

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.38.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**43. உதவி உபகரணங்கள்:**

பல்வேறு வகையில் உடல் பாதிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட, தேவையுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு, இத்துறை மூலம் கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள், மாற்றுத் திறனின் ஊனத்தின் தன்மை, அவயங்களின் உபயோகத்தன்மை, திறன் மற்றும் தேவைக்கேற்ப மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன:

| வ. எண் | உதவி உபகரணம் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | மூன்று சக்கர சைக்கிள் | 518 |
| 2 | மடக்கு சக்கர நாற்காலி | 548 |
| 3 | கருப்புக் கண்ணாடி | 1,108 |
| 4 | காதொலிக் கருவி | 650 |
| 5 | சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய மின்கலன் | 650 |
| 6 | மடக்கு ஊன்றுகோல் | 1,108 |
| 7 | பிரெய்ல் கைக் கடிகாரம் (ஆண் / பெண்) | 988 |
| 8 | கால்தாங்கி | 229 |
| 9 | தோள்பட்டை தாங்கி | 614 |
| 10 | செயற்கை அவயம் | 102 |
| 11 | நவீன செயற்கை அவயம் | 176 |
| 12 | மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி | 666 |
| | மொத்தம் | 7,357 |



2012 ஏப்ரல் 11]

மாற்றுத் திறனாளிகள் தங்களது உடற்குறைபாட்டை எதிர்கொண்டு, தங்களது அன்றாடப் பணிகளை தன்னிச்சையாக மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.110.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**44. மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள்:**

இரு கால்களும் பாதிக்கப்பட்ட கல்வி பயிலும் மாற்றுத் திறனாளிகள், சுயவேலை புரிபவர்கள் மற்றும் பணிபுரிபவர்களுக்கு பேட்டரியால் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வந்தன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் பேட்டரியால் இயங்கும் ஸ்கூட்டர்களுக்குப் பதில் பெட்ரோலால் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.80.00 இலட்சம் போக, இத்திட்டத்திற்கு கூடுதலாக ரூ.120.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 400 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 80.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**45. செவித்திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள்:**

தற்போது செவித்திறன் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு உடலில் அணியும் காதொலிக் கருவிகள் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. உடலில் அணியும் காதொலிக் கருவியை அணிந்துகொள்ள செவித்திறன் குறையுடைய மாணவ, மாணவிகள் தயங்குகிறார்கள். இதனால் அவர்களின் கேட்கும் திறன் பாதிக்கப்படுகிறது. எனவே, காதுக்குப் பின்னால் அணியும் காதொலி கருவிகள் 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் செலவில் 1,000 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் 6ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேல் பள்ளி / கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

[2012 ஏப்ரல் 11

**46. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணம் ஏதுமின்றி பயணச் சலுகை:**

மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வண்ணம் அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், கட்டணம் ஏதுமின்றி பயணச் சலுகைகள் மாநில அரசால் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:—

(1) பார்வையற்றோர் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி, தமது இருப்பிடத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் வரை, அரசுப் பேருந்துகளில் கட்டணம் ஏதுமின்றி பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

(2) ஏனைய மாற்றுத் திறனாளிகளுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மையம் மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர இச்சலுகை வழங்கப்படுகிறது.

(3) பார்வையற்றவரும், கால் பாதிக்கப்பட்டோரும், அரசு விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை தமது சொந்த ஊருக்குச் சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர்.

(4) மனவளர்ச்சி குன்றியவர்கள், எவ்வித வருமான வரம்புமின்றி, துணையாளர் ஒருவருடன் பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

(5) அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் மாநிலத்தின் அனைத்து இடங்களுக்கும், அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் குளிர்சாதன வசதியுள்ள பேருந்தினைத் தவிர்த்து, பிற வகைப் பேருந்துகள் அனைத்திலும் எத்தனை முறை வேண்டுமானாலும் 75% பேருந்து கட்டணச் சலுகையுடன் சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாதவர்கள் 75 சதவிகித பேருந்துக் கட்டணச் சலுகையில் துணையாளருடன் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

பேருந்து பயணச் சலுகைத் திட்டத்தின் கீழ் 10,23,752 முறைகள் பயணங்கள் மாற்றுத் திறனாளிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2012 ஏப்ரல் 11]

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.708.21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்:**

**47. சுய வேலைவாய்ப்பு:**

மாற்றுத் திறனாளிகள் பெட்டிக் கடை வைத்து நடத்துவது உட்பட சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக்கொள்ள இத்துறை சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ரூ.3000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பகுதிகள் தவிர, இதர பொது இடங்களில், பெட்டிக் கடை வைக்க விரும்பும் மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5,000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ அது பெட்டிக் கடை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 1,050 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துவருகின்றனர்.

மேலும், மத்திய அரசின் தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்படும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலம், மாற்றுத் திறனாளிகள் அதிக அளவில் சுய வேலைவாய்ப்பு பெற மாநில அரசு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தவென தமிழக அரசு ரூ. 8.00 கோடிக்கான முழு அரசு உத்திரவாதத்தை வழங்கியுள்ளது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 40.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**48. பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய விளிம்புத் தொகையை 100 சதவிகிதம் அரசே செலுத்துதல்:**

பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்பினை உருவாக்கும் திட்டம் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் சிறு, குறு தொழில்கள் தொடங்க வாய்ப்பளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் உற்பத்திப் பிரிவிற்கு ரூ.25.00

[2012 ஏப்ரல் 11

இலட்சமும், வணிகம் / சேவைப் பிரிவிற்கு ரூ.10.00 இலட்சமும் அதிகபட்ச கடன் தொகையாக அளிக்கப்படுகிறது. கடனுதவிப் பெறும் மாற்றுத் திறனாளி 5 சதவிகித கடன் தொகையினை விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டும். இந்த விளிம்புத் தொகை முழுவதும் மானியமாக அரசே செலுத்திவிடும்.

விளிம்புத் தொகை பெறும் பயனாளிகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழான தேர்வுக் குழுவின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள், மாற்றுத் திறனாளிகளின் சுயதொழில் புரிய விரும்பும் விண்ணப்பங்களைப் பெற்று தேர்வுக் குழுவிற்கு பரிந்துரை செய்வர். தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு 5 சதவிகித விளிம்புத் தொகை முழுவதும் சலுகையாக வழங்கப்படும். இந்த 5 சதவிகித விளிம்புத் தொகை மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் பெறப்பட்டு மாவட்ட தொழில் மையம் / காதி கிராம தொழில் ஆணையம்மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் 38 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**49. மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள்:**

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் பொருட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான சுய வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட 1,593 மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.73.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**50. மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுக்கான “வழிகாட்டும் திட்டம்”:**

மாற்றுத் திறனாளிகளுக்கு நல்ல மறுவாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 32 மாவட்டங்களிலும்



2012 ஏப்ரல் 11]

அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் ஒரு மாற்றுத் திறனாளி நலப் பணியாளரும், மற்ற இடங்களில் 6,000 மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒரு மாற்றுத் திறனாளி நலப் பணியாளரும், ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒரு மாற்றுத் திறனாளி ஒருங்கிணைப்பாளரும் நியமிக்கப்படுகின்றனர். மாற்றுத் திறனாளிகளுக்கு, அரசுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிவதும் அவர்களுக்குத் தேவையான சேவைகளை செய்வதும் மாற்றுத் திறனாளி நலப் பணியாளருக்கும், மாற்றுத் திறனாளி ஒருங்கிணைப்பாளருக்கும் வழங்கப்பட்ட பணிகளாகும்.

17,053 மாற்றுத் திறனாளி நலப் பணியாளர்கள் மற்றும் 629 மாற்றுத் திறனாளி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் தொண்டு நிறுவனங்கள் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.150.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**51. துயர் உறுவோர் நிவாரண நிதி:**

வன்முறைகளால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்த மாற்றுத் திறனாளியின் வாரிசுதாரர், கற்பழிப்பு, படுகாயம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தில் பயனடையலாம். இதற்காக “குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான துயர் உறுவோர் நிவாரண நிதி” துவக்கப்பட்டு, அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளியின் வாரிசுதாரருக்கு ரூ.10,000/-மும் படுகாயம் அடைந்து பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5,000/-மும், கற்பழிப்பு போன்ற குற்றங்களினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5,000/-மும் வழங்கப்படுகின்றன.

(அ) வழக்குகள் நடக்கும்போது மாற்றுத் திறனாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/-ம், ஒரு வழக்குக்கு அதிகபட்சமாக ரூ.2,000/-மும் உதவித் தொகையாக வழங்கப்படும்.

(ஆ) மாற்றுத் திறனாளிக்காக இலவச சட்ட உதவி செய்யும் வழக்கறிஞருக்கு வழக்கிற்காக நீதிமன்றம் வரும் காலங்களில் நாளொன்றுக்கு பயணப் படியாக ரூ.500/-ம், நாளொன்றுக்கு வழக்கு கேட்புக் கட்டணமாக ரூ.300/-ம் வழங்கப்படுகிறது.

(இ) செவித்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் பேச இயலாத மாற்றுத் திறனாளிகளுக்கு நீதிமன்றம் / காவல் நிலையம் ஆகியவற்றில் விசாரணை செய்யப்படும் போது சிறப்புப் பள்ளி ஆசிரியர்கள் சைகை மொழி பெயர்ப்பாளர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர். சைகை மொழி பெயர்ப்பு செய்பவருக்கு மொழி பெயர்ப்பு படியாக நாளொன்றுக்கு ரூ.300/— (இதர படிகள் தவிர) வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் "குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான துயர் உறுவோர் நிவாரண நிதி" துவக்கப்பட்டுள்ளது. இந்நிதியைக் கையாள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்/ மாநகர காவல் ஆணையர் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஆகியோர் உறுப்பினராகவும் செயல்படுவர்.

**52. தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம்:**

தமிழக சட்டப் பேரவையின் ஒப்புதலுடன் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் அமைக்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின்மூலம் கீழ்க்குறிப்பிட்ட சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| (1) | தனி நபர் விபத்து நிவாரணம் | | |
| | இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு: | | |
| | (அ) | இறப்பு | ரூ.1,00,000//- |
| | (ஆ) | கை அல்லது கால் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ.1,00,000//- |
| | (இ) | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வையில் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ.50,000/- |



| | | | | |
|---|---|---|---|---|
| | (ஈ) | | நிரந்தரம், மொத்த ஊனம் ('ஆ' அல்லது 'இ' தவிர்த்து) | ரூ.25,000/- |
| (2) | மாற்றுத் திறனாளி நபருக்கான இறுதிச் சடங்கிற்கு | | | ரூ.2,000/- |
| (3) | மாற்றுத் திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கு | | | ரூ.15,000/- |
| (4) | மாற்றுத் திறனாளியின் மகன் அல்லது மகள் கல்வி பயில உதவித் தொகை | | | |
| | (அ) | (i) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | ரூ.1,000/- |
| | | (ii) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு பயின்று, தேறிய மகன் அல்லது மகளுக்கு | ரூ.1,000/- |
| | (ஆ) | (i) | விண்ணப்பதாரரின் +1 வகுப்பு பயிலும் மகளுக்கு | ரூ.1,000/- |
| | (இ) | (i) | விண்ணப்பதாரரின் +2 பயிலும் மகளுக்கு | ரூ.1,500/- |
| | | (ii) | விண்ணப்பதாரரின் +2 தேர்வு தேறிய மகன் அல்லது மகளுக்கு | ரூ.1,500/- |
| | (ஈ) | (i) | விண்ணப்பதாரரின் முறையான பட்டப் படிப்பு பயின்றுவரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ.1,500/- |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.1,750/- |
| | | (iii) | விண்ணப்பதாரரின் முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ.2,000/- |
| | | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.3,000/- |

[2012 ஏப்ரல் 11

| | | | |
|---|---|---|---|
| (உ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் சட்டம் அல்லது பொறியியல் அல்லது மருத்துவம் அல்லது கால்நடை அறிவியல் அல்லது தொடர்பான தொழிற்கல்விப் படிப்புகள் ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | ரூ. 2,000/- |
| | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 4,000/- |
| | (iii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்கல்வி, பட்ட மேற்படிப்பு படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 4,000/- |
| | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 6,000/- |
| (ஊ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்குகளில் படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 1,000/- |
| | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 1,200/- |
| (5) | | திருமண உதவித் தொகை கணவன் அல்லது மனைவி இருவரும் விண்ணப்பித்தாலும் ரூ. 2,000/- ஒருவருக்கு மட்டுமே இவ்வுதவி வழங்கப்படும். | |
| (6) | | வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு பிரசவம் அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கு நிதியுதவி | |
| | | 1. மகப்பேறு | ரூ.6,000/- (ரூ.1000/- வீதம் 6 மாதங் களுக்கு) |
| | | 2. கருச்சிதைவு | ரூ. 3,000/- |
| | | 3. கருக்கலைப்பு | ரூ. 3,000/- |
| (7) | | மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க நிதியுதவி | ரூ. 500/- |



2012 ஏப்ரல் 11]

***2012-2013* ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**53. சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள்:**

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் "சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாளாக" மாநில அரசால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகளின் கலை மற்றும் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஊக்குவிப்பதே, இந்த நாளைக் கடைப்பிடிப்பதன் முக்கிய நோக்கமாகும். சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாளை முன்னிட்டு, மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்காக மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 5,000 மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் கலந்து கொள்கின்றனர். பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், மற்றவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. டிசம்பர் 3 ஆம் நாளன்று மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவ்விழாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த வேலை வாய்ப்பு அளித்தவர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர் மற்றும் சிறந்த நிறுவனத்திற்கான மாநில விருதுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரிந்ததற்காக வழங்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. அரசு/அரசு நிதி உதவிபெறும் நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தைக் கொண்டாடுவதற்காக சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கி ஆணையிட்டுள்ளது. இச்சலுகை அனைத்து போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளி பணியாளர்களுக்கும் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது.

[2012 ஏப்ரல் 11

**சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாளன்று (டிசம்பர் மாதம் 3–ம் தேதி) வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:**

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்த தொழிலதிபர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | மாற்றுத் திறனாளிகளில் மிகச் சிறந்த பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | சிறந்த தொண்டு நிறுவனம் (மாற்றுத் திறனாளிகள் நலன்) | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | சிறந்த தொண்டு நிறுவனம் (அனைவருக்கும் கல்வித் திட்டம்) | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.7.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**54. மாநில விருதுகள்:**

மாற்றுத் திறனாளிகளுக்கான சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களைப் பாராட்டி, ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மாநில அரசால் சுதந்திர தினத்தன்றும், கீழ்க்கண்ட மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன.

**சுதந்திரத் திருநாள் அன்று வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:**

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/- ரொக்கப் பரிசு |
| 3 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைபுரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைபுரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும் பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், ரூ.25,000/- ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 6 | சிறந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |



2012 ஏப்ரல் 11]

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**55. தேசிய விருதுகள்:**

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள் விழாவின்போது மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம்மூலம், தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

சிறந்த மாற்றுத் திறன் படைத்த பணியாளர், தொழிலதிபர், பணியமர்த்தும் அலுவலர், தொண்டு நிறுவனம், தனி நபர், தனித்திறன் பெற்ற மாற்றுத் திறனாளி, தனித்திறன் பெற்ற மாற்றுத் திறன் குழந்தைகள், முன்னோடி மாற்றுத் திறனாளி, மாற்றுத் திறனாளிகளுக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் நிறுவனம், சிறந்த பிரெய்ல் அச்சகம், தேசிய மாற்றுத் திறனாளிகள்

[2012 ஏப்ரல் 11

பொருளாதார மேம்பாட்டுக் கழக திட்டத்தினைச் செயல்படுத்தும் நிறுவனம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையிலான சிறந்த தொழில் நுட்பங்கள் ஆகிய பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம், ஒவ்வோர் ஆண்டும், 13 பிரிவுகளில், 70 தேசிய விருதுகளை வழங்குகிறது.

### 56. அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் இயங்கி வருகின்றன. தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு உதவிகள் கீழ்க்காணும் அரசு மறுவாழ்வு இல்லங்கள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் |
|---|---|
| 1. | பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. | உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் |
| 3. | பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 4. | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் |
| 5. | மனையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் |
| 6. | யா.புதுப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 7. | மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம் |
| 8. | செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 9. | தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம் |
| 10. | விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் |

ஒவ்வோர் அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாக சேர முன்வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர்



2012 ஏப்ரல் 11]

உறுதிப்படுத்திய பின், இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட, தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். நோயாளிகள் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இல்லங்களில் தங்குவோர் முழுமையாக குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது அவர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ இல்லத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவற்றுடன் பொழுதுபோக்கு வசதிகளான விளையாட்டு, நூலகம், இசைக் கருவிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவை செய்து தரப்பட்டுள்ளன. உடற்தகுதி உள்ள இல்லவாசிகளுக்கு பாய் முடைதல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணிகள் தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளுக்கு தற்போது நாளொன்றுக்கு பெரியவர்களுக்கு ரூ.25/- செலவிலும், குழந்தைகளுக்கு ரூ.15/- செலவிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களான பொங்கல், தீபாவளி மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய தினங்களில் நபர் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.5/- செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வோர் இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன், பொங்கல் அன்று வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் பாய்கள் மற்றும் நுண்ணிய துளை இரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், போர்வைகள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகின்றன. 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும், இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

[2012 ஏப்ரல் 11

இல்லவாசிகளுக்கு மருத்துவ அலுவலர்களின்மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வோர் இல்லத்திற்கும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது:—

| வ. எண் | விவரம் | செலவினம் ஆண்டு ஒன்றிற்கு |
|---|---|---|
| 1. | பிரத்யேகமான காலணிகள் மற்றும் செயற்கை கால் அவயவங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | ரூ.1,000/- |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | ரூ.2,000/- |
| 3. | பற்பொடி மற்றும் பல்துலக்கும் பிரஷ் வாங்குவதற்கு | ரூ.2,500/- |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் | ரூ.1,200/- |
| 5. | இசைக்கருவிகள் | ரூ.400/- |
| 6. | ஈமச் சடங்கு செலவினத்திற்கு | ரூ.500/- |

பரனூர், மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய 3 இடங்களில் இயங்கிவரும் அரசு மறுவாழ்வு இல்லங்களின் கட்டடங்கள் மிகமோசமான நிலையில் இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இவ்விடங்களில் புதிய கட்டடங்கள் கட்ட ரூ. 522 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.768.57 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

**57. இரவலர்கள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்:**

தமிழ்நாட்டில் பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் 1945 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மேல்பாக்கத்திலுள்ள அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் 950 நபர்கள் தங்கும் வகையில் (ஆண்கள் 770 மற்றும் பெண்கள் 180) 1-3-1954 அன்று தொடங்கப்பட்டது.



2012 ஏப்ரல் 11]

இச்சட்டத்தின்கீழ் நீதித் துறை நடுவர் மூலமாக தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள், இந்த இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இவ்வில்லத்தில் உணவு, தங்குமிடம், உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மண்பாண்டத் தொழில் மற்றும் தையல் போன்ற பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

மேலும், இல்லத்திலுள்ள ஆண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டுகள், இரண்டு சட்டைகள் மற்றும் இரண்டு கால் சட்டைகளும், பெண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு சேலைகள் மற்றும் இரண்டு ரவிக்கைகள் வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, பொங்கல் நாளன்று வேட்டி / சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, குவளைகள், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன், சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி இவ்வில்லத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட ரூ.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.67.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.***

[2012 ஏப்ரல் 11

## இணைப்பு

## பகுதி–2 புதிய திட்டங்கள்

## 2012–2013

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **I** | **தலைமைச் செயலகத் துறை** | |
| 1 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் அரசு துணைச் செயலாளர் மற்றும் அரசு சார்புச் செயலாளர் அவர்களின் அறைகளுக்கு அறைகலன்கள் வாங்குதல், அரசு துணைச் செயலாளர் அறையில் பணிபுரியும் நேர்முக எழுத்தருக்கு புதிதாக ஒரு கணினி மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் உள்ள அனைத்துப் பிரிவுகளின் தேவைக்காக ஒரு நகலெடுக்கும் இயந்திரம் ((Photo Copier Machine) மற்றும் ஒரு படியெடுப்புப் பொறி (Duplicator) வாங்குதல் | 6.69 |
| **II** | **மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம்** | |
| 1 | பூவிருந்தவல்லியில் வேலை பார்க்கும் மாற்றுத் திறனாளிகளுக்காக விடுதி கட்டுதல் | 80.00 |
| 2 | திருச்சிராப்பள்ளியில் தொண்டு நிறுவனம் மூலம், வெளி நிறுவனத்தின் மூலம் (Outsourcing) மண்டல மாநில வள மற்றும் பயிற்சி மையம் துவக்குதல். | 60.51 |
| 3 | தாம்பரம் சானடோரியத்தில் அமைந்துள்ள மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்திற்கு தொழிற் பயிற்சி பிரிவிற்காக கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல். | 60.00 |
| 4 | கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டத்தில் செவித் திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான மண்டல பரிசோதனை மையம் | 39.00 |
| 5 | மாநில வளம் மற்றும் பயிற்சி மையத்தில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 28.80 |
| 6 | சூரிய ஒளியின் மூலம் தண்ணீரை சூடேற்றும் கருவியினை அனைத்து அரசு சிறப்புப் பள்ளிகளுக்கும் வழங்குதல் | 15.00 |
| 7 | மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் பயன்பாட்டிற்கு புதிய கார் வாங்குதல் | 10.00 |
| | **மொத்தம்** | 300.00 |



2012 ஏப்ரல் 11]